திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த

திருநெடுந்தாண்டகம்

பாசுரங்களும் விளக்கமும்



பேராசிரியர் முனைவர்
கலியன் எதிராசன்

கங்கை புத்தக நிலையம்

திருமங்கை ஆழ்வார் அருளிச்செய்த

திருநெடுந்தாண்டகம்

(பாசுரங்களும் விளக்கமும்)

பேராசிரியர் முனைவர்
கலியன் எதிராசன்

கங்கை புத்தக நிலையம்

23, தீனதயாளு தெரு,
தியாகராய நகர், சென்னை – 600 017.

முதற் பதிப்பு : டிசம்பர், 2013

கங்கை வெளியீடு

விலை : ரூ. 100.00

- Title : THIRUNEDUNTHANDAKAM
- Author : Kaliyan Ethirasan
- Language : Tamil
- Subject : Short Stories
- Edition : First Edition, Dec - 2013
- Pages : 280
- Published By : GANGAI PUTHAKA NILAYAM
  23, Deenadayalu Street,
  T.Nagar, Chennai-600 017.
  Ph: 24342810 / 24310769
- Price : Rs : 100.00

Laser Typeset by: Sivaa Graphics, Ph: 8939475707

Printed at : Bala Offset, Chennai - 42. Ph: 2243 1730, 4303 7730

முன்னுரை

நாலாயிர திவ்ய பிரபந்தங்களில் நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழியும், திருமங்கை ஆழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழியும், ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாசுரங்களைக் கொண்டவை. ஆண்டாள் நாச்சியார் அருளிச்செய்த திருப்பாவையும், திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த திருநெடுந்தாண்டகமும் முப்பது பாசுரங்களைக் கொண்டவை. விசிஷ்டாத்வைதத் தத்துவத்திற்கு புத்துயிர் அளித்த சுவாமி இராமானுஜர் திருப்பாவையில் அதிக ஈடுபாடு கொண்டு, திருப்பாவை ஜீயர் என்று அழைக்கப் பட்டார். பட்டர் என்று பொதுவாக அழைக்கப்பட்ட ஆச்சாரியர், பராசர பட்டர், திருநெடுந்தாண்டகத்தில் அதிக ஈடுபாடு கொண்டு, அதனைத் திருநெடுந்தாண்டக சாத்திரம்' என்று பாராட்டினார். அதுமட்டுமின்றி, திருவரங்கத்தில் ஆண்டு தோறும் நடைபெறுகின்ற திருவத்யயனத் திருவிழாவில் பகல் பத்துக்கு முதல் நாள் திருநெடுந்தாண்டகத் திருவிழாவாக நடக்க ஏற்பாடு செய்து, இன்றுவரை அதன்படியே நடந்து வருகின்றது.

அடியேனும், ஏறத்தாழ முப்பது ஆண்டுகளாக திருநெடுந்தாண்டகத்தில் ஈடுபட்டு அப்பிரபந்தத்தை மனப்பாடம் செய்தது மட்டுமின்றி ஒரு சில சபைகளில் உபன்யாசம் செய்கின்ற பாக்கியத்தையும் பெற்றேன்.

அடியேன் பிற தலைப்புகளில் செய்த உரைகளைத் தொகுத்து 'வைணவ இலக்கியம்' என்ற பெயரில் வானதி பதிப்பகத்தாரால் சில ஆண்டுகளுக்கு முன்பு வெளியிடப்பட்டது. இருந்த போதிலும், அதைப்போல, திருநெடுந்தாண்டகத்தை, எல்லோருக்கும் எளிதில் விளங்கக்கூடிய வகையில் எழுதி வெளியிடவேண்டும் என்று பெருமுயற்சி செய்து "திருநெடுந்தாண்டகம் பாசுரங்களும் விளக்கமும்" என்ற பெயரில் இந்த நூல் வெளிவருகிறது. இந்தப் பிரபந்தத்திற்கு பரமகாருணிகரான பெரியவாச்சான்பிள்ளை மணிப்ரவாள நடையிலும், அதனைத் தழுவி புத்தூர் சுவாமிகளால் வெளியிடப்பட்ட "திருநெடுந்தாண்டக விவரணம்" என்ற விரிவுரையும் இருக்கின்றன. புத்தூர் சுவாமிகளின் 'விவாரணம்' மிக விரிவாக இருப்பதுடன் 'மை வண்ண நறுங்குஞ்சி' என்று தொடங்கும் 21ஆம் பாட்டுக்கு, ஏறக்குறைய 90 பக்கங்கொண்ட 'பட்டர்படி வ்யாக்யானத்தின் விவரணம்' என்ற பகுதியும் அடங்கியதாகும். ஆனாலும், வடமொழி ப்ரமாணங்கள் இடையிடையே மிக அதிகமாகக் கொண்டிருப்பதால் தமிழ் மட்டுமே தெரிந்தவர்களால் அத்தனை எளிதாக படித்துப் பாராட்ட இயலாது.

இதை மனதில் கொண்டு இந்த நூலில், வால்மீகி இராமாயணப் பாடல்கள் வருமிடங்களில் கூடியவரை கம்பராமாயணப் பாடல்களும், மற்றைய ஆழ்வார்களின் பாசுரங்களும், திருக்குறட் பாக்களும் பயன்படுத்தப் பட்டுள்ளன. அதுமட்டுமில்லாமல், சில பாடல்களுக்கு (3.5) தற்கால அறிவியலுக்கேற்ப பழைய விளக்கங்களோடு, ஆசிரியரின் விளக்கங்கள், ஆழ்வாரின் பாடலுக்கும் ஏற்றபடி தரப்பட்டுள்ளன. நூல் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு. முதல் பகுதியில், திருநெடுந்தாண்டகத்தின் உதவிக்கொண்டு

பட்டர், மாதவாச்சாரியார் என்று அழைக்கப்பட்ட நஞ்சீயரைத் தம் வழிக்கு மாற்றிய விவரம், ஸ்ரீ உ.வே. வேளுக்குடி கிருஷ்ணன் ஸ்வாமிகள் அவர்களின் உபன்யாசத்தின் அடிப்படையில் தரப்பட்டு, அத்துடன் திருநெடுந்தாண்டகம் மூன்று பத்துக்களாகப் பிரிக்கப்பட்டு. ஒவ்வொரு பத்தும் எப்படி வெவ்வேறு மந்திரப் பகுதிகளாகக் கொள்ளலாம் என்பது தரப்பட்டுள்ளது. இரண்டாவது பகுதியில். திருநெடுந்தாண்டகத்திலுள்ள முப்பது பாசுரங்களும், முறையே, பாசுரம், பதஉரை, பொழிப்புரை மற்றும் விளக்கவுரையுடன் தரப்பட்டுள்ளன. மூன்றாவது பகுதியில் முப்பது பாசுரங்களின் விளக்கங்களின் அடிப்படையில், ஒவ்வொரு பத்து பாசுரங்களும் எப்படி வெவ்வேறு மந்திர சப்தார்த்தங்களாகக் கருதலாம் என்று தரப்பட்டுள்ளது.

இந்த நூல் "திருநெடுந்தாண்டகம் சாத்திரம்" என்று பட்டரால் ஏன் அழைக்கப்பட்டது என்பதற்கு ஒரு விளக்கமாக இருக்கும் என்று உறுதியாக நம்புகிறேன். தவிரவும், இப்பிரபந்தத்தின் மேன்மையை அடியார்கள் புரிந்துக் கொள்ளப் பேருதவியாக இருக்கும் என்று நம்புகிறேன்.

இந்த நூலை எழுதுவதற்கு எனக்கு ஊக்கமளித்தது மட்டுமின்றி பிழை திருத்தியும் கொடுத்த புதுச்சேரி, தமிழ்மாமணி, பாவலர்மணி சித்தன் ஐயா அவர்களுக்கு நான் எப்பொழுதும் கடமைப்பட்டவன். இந்நூலுக்கு அணிந்துரை யாரிடம் வாங்கினால் பொருத்தமாக இருக்கும் என்று எண்ணிய உடன் முதலில் நினைவுக்கு வந்தவர் திருச்சித்திரகூடம் ஏ.வி.ஆர். சுவாமிகள் தான். அவரை

அணுகிக் கேட்டவுடன் எந்தவித தயக்கமும் காட்டாமல் ஒத்துக்கொண்டது மட்டுமல்லாமல், மிக குறுகிய காலத்தில் எழுதிக் கொடுத்தார் 'உதவிக் கைம்மாறு என்னுயிர் என்றுற் றெண்ணில் அதுவும் மற்றாங்கவன் தன்னது' என்றபடி, அவருக்கு அநேக கோடி வணக்கங்கள், வழக்கப்படி, கங்கைப் புத்தக நிலையம் இந்த நூலை நல்ல முறையில் அச்சடித்து வெளியிட்டிருக்கிறார்கள். திரு.இராமநாதன் அவர்களை அமெரிக்காவிலிருந்து அகால வேளைகளில் தொந்தரவு செய்திருக்கிறேன். அவருக்கு எனது உளங்கனிந்த நன்றிகள்.

அடியேன்
கலியன் எத்திராசன்

புதுச்சேரி
19.11.2013

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

Dr.A.V. ரங்காசாரி
தில்லைத்திருச்சித்ரகூடம்

151, மேல வீதி,
சிதம்பரம் - 608 001.
தமிழ்நாடு, போன்: 04144 - 220425

திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த திருநெடுந்தாண்டகம்

(பாசுரங்களும் விளக்கமும்)

ஆசிரியர்: பேராசிரியர் முனைவர் கலியன் எதிராசன் அவர்கள்

அணிந்துரை

ஆலி நாட்டரசரான திருமங்கை மன்னன், தெய்வங்களுக்கு அரசரான அரங்கனிடம், மரங்களுக்கு அரசனான திருவரசின் அடியில், மந்திரங்களுக்கு அரசனான திருமந்திரத்தை வாள் வலியால் உபதேசம் பெற்று, எம்பெருமானுடைய திவ்ய மங்கள விக்ரஹத்தை ஸேவித்து, கணையாழியைக் கழற்றும்போது திருவடி ஸம்பந்தம் பெற்று, மயர்வற மதிநலம் அருளப்பெற்று, அர்ச்சாவதார திவ்ய தேசங்களையும், அங்குக் கோயில் கொண்டுள்ள எம்பெருமான்களையும் பூரணமாக அநுபவித்து, அவ்வநுபவம் வெளிப்படப் பனுவல்கள் பாடியவர்.

இவர் இருந்தமிழ் நூற்புலவர். சொல்லாற்றல் மிக்கவர். அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் இவரை "உதாரர்" என்று போற்றுகின்றார். இவர் அருளிச் செய்த பிரபந்தங்கள்

ஆறு, அவை முறையே பெரிய திருமொழி, திருக்குறுந் தாண்டகம், திரு எழுகூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல், திருநெடுந்தாண்டகம் என்பன. இந்த ஆறு பிரபந்தங்களும் நம்மாழ்வாரின் நான்கு பிரபந்தங்களுக்கு ஆறு அங்கங்களாகும்.

நாராயண மந்திரத்தில் நிலையுற்ற பெரிய திருமொழியில், திவ்ய தேசங்கள் மற்றும் தசாவதார அநுபவங்களை நிறைவு செய்து, தேஹ ஸம்பந்தத்தை அறுத்து தர வேண்டும் என்று பிரார்த்தித்தார்.

இரண்டாவது பிரபந்தமான திருக்குறுந் தாண்டகத்தில், தன்னைஅநுபவிக்க மேலும் ஈடுபாடு வளரட்டும் என்று விரும்பிய எம் பெருமான் முகம் காட்ட வில்லை. இவரோ அவனை விட்டுக் கணமும் தரிக்க முடியாமல் எம்பெருமானை வாயாலே பேசியும், தலையாலே வணங்கியும் நெஞ்சாலே நினைத்தும் தரிக்கப் பார்த்தார்.

இந்த அநுபவம் விடாயை மேலும் மிகுதியாகப் பிறப் பித்தது. அதனால் திருவெழு கூற்றிருக்கையில் ஆராவ முதனை ஆர்த்தியோடு சரணம் புகுந்தார்.

இப்படிச் சரணம் புகுந்தும் அவனைப் பெறாமையால், மடல் எடுத்தும், மடலூர்வன் என்று அவதாரங்களில் உண்டான நீர்மையை அழிக்கிறேன் என்று இவர் சொல்லியும் பராமுகமாயிருந்தான் ஸர்வேச்வரன்.

அதனால் பெரிய அஸ்திரத்தை விடுவோம் என்று பெரிய திருமடலைப் பாடி, நீர்மைக்கு எல்லை நிலமான திவ்ய தேசங்களில் நின்ற நீர்மையை அழிக்கிறேன் என்றார்.

இனி முகம் காட்டா விட்டாவிடில் மக்கள் ஈச்வரன் உண்டு என்ற நம்பிக்கையை இழந்து விடுவார்கள் என்று எண்ணிய, எம்பெருமான் முகம் காட்டித், தாம் அவனைப் பெற்ற படியைச் சொல்லி தமது பிரபந்தங்களைத் தலைக்கட்டுகிறார் திருநெடுந்தாண்டகத்தில்.

இந்த பிரபந்தத்தில் திருமங்கை ஆழ்வாருக்குள் காட்சியளித்த பெருமாள் "ஒரு கையில் சங்கு ஒருகை மற்றாழி ஏந்தி, உலகுண்ட பெருவாயர் இங்கே வந்து, என் பொருகயல் கண் நீரரும்பப் புலவி தந்து புனலரங்கம் ஊரென்று போயினாரே" (25) என்றும்.

"மின்னிலங்கு திருவுருவும் பெரியதோளும் கரிமுனிந்தகைத் தலமும் கண்ணும் வாயும் தன்னலர்ந்த, நறுந்துழாய் மலரின் கிழே தாழ்ந்திலங்கு மகரம் சேர்க்குழையும் காட்டி, என்னலனும் என்னிறையும் என் சிந்தையும் என்வளையும் கொண்டு என்னையாளும் கொண்டு பொன்னலர்ந்த நறுஞ்செருந்திப் பொழிலினூடே புனலரங்கம் ஊரென்று போயினாரே" (25) என்ற படியாய் ஆழ்வார் ஸ்ரீரங்கத்திற்குச் சென்று நித்யவாஸம் செய்து, மண்டபக் கோபுர பிரகாரங்களின் திருப்பணியைச் செய்து கொண்டிருந்தார் அப்போது ஒரு கார்த்திகையில் கார்த்திகை நாளில், பெரிய பெருமாள் முன்பு திருநெடுந் தாண்டகத்தைத் தேவகானத்தில் மனமுருகப் பாடினார். இதனைக்கேட்டு உகந்த பெரிய பெருமாள் இவருக்குச் சிறப்புகள் செய்து, உமக்கு வேண்டிய வரம் கேளும்" என்றார். ஆழ்வார் மார்கழி மாத அத்யயன உத்ஸவத்தில் வேதங்களோடு திராவிட வேதமான திருவாய் மொழியையும் திருச்செவி சார்த்தி அருளவேண்டும். அதற்கு வேத சாம்யம் தந்தருள வேண்டும் என்று பிரார்த்தித்தார் என்று கோயில் ஒழுகு தெரிவிக்கிறது.

இதனால், இந்த பிரபந்தம் பெரிய பெருமாள் முன்பு பாடப்பட்ட தனிப் பெருமையை உடையது. என்ற வரலாற்றை இந்நூலின் ஆசிரியர் பக்கம் 4-5ல் வெகு அழகாகக் கொடுத்து, ஆழ்வார் நடத்திய தமிழ்ப் பெருவிழாவான அத்யயன உத்ஸவத்தின் விவரத்தையும் அளித்துள்ளார். மேலும் இந்த பிரபந்தத்தைக் கொண்டு அத்வைதியான மாதவாசாரியரை பட்டர் திருத்திப் பணிக் கொண்ட நிகழ்ச்சியையும் வர்ணித்துள்ளது இப்பிரபந்தத்தின் சிறப்பினை நன்கு அறிவிக்கிறது.

திருநெடுந்தாண்டக சாத்திரம் என்ற இயல் இப்பிரபந்தத்தின் அமைப்பு, மூன்று பத்துப் பாசுரங்களாக அமைந்ததின் விளக்கம், இந்த 30 பாசுரங்கள் வெவ்வேறு மந்திரங்களின் விளக்கமாக உரை செய்யப்பட்டுள்ளது. மேலும் பகவத் கீதையில் கண்ணன் அருளிச் செய்த அடியார் இலக்கணமான என்னையே நினைப்பவர்கள், என்னிடத்திலேயே உயிரை வைத்துள்ளவர்கள், எப்போதும் என் குணங்களையே பேசிக் களிப்பவர்கள் என்பதையே திருநெடுந்தாண்டகம் விளக்குகிறது என்பதும், பிரணவத்தின் மூன்றெழுத்தின் விவரணம் என்றும், திருமந்திரத்தின் மூன்று பதங்களின் விவரணம் என்றும், திருமந்திரம், துவயம், சரமச்லோகத்தின் விவரணம் என்றும் பக்தி, பிரபத்தி, புருஷகாரம் ஆகியவற்றின் விளக்கமே திருநெடுந்தாண்டகம் என்ற சீரிய கருத்துக்களை ஆசிரியர் மிக எளிமையாக விவரித்து விளக்கமும் அளித்துள்ளது. படிப்பவர்களுக்கு விருந்தாக அமைந்துள்ளது.

இரண்டாம் இயலில் பாசுரப் பொருள் விளக்கம் அளிக்கப்படுகிறது. அதில் பதவுரை பொழிப்புரை விளக்க

உரை, ஆகியவை கொண்டு கடினமானப் பிரபந்தத்தின் ஆழ்ந்த பொருள் கள் அனைத்தையும், உரை அமைப்பிலேயே சென்று மிகவும் எளிமையாக விரிவுரை அளித்துள்ளது, மேற்கோள்களின் எளிய விளக்கம் ஆகியவைப் பேராசிரியரின் நுண்மாண் நுழைபுலமைக்கு ஒவ்வொரு பாசுர விளக்கமும் சான்று பகருகின்றது.

எம்பெருமான் இவ்வாழ்வாருக்கு மட்டும் தன்னுடைய திருமேனியை காட்டிக் கொடுத்தான். வேறு எவரும் காண முடியாது. ''யாரொருவர் காண்கிற்பாரே'' என்பதை ஆழ்வாரே தெரிவிப்பதற்கும் பேராசிரியர் அளித்துள்ள விளக்கம் படித்து இன்புறத் தக்கது.

அடியார்கள் தன்னை அநுபவிக்கும்படி திருமால் அடியார் குணத்திற்குத் தக்கபடி திருமேனி மற்றும் நிறம் கொள்கிறான் என்ற விவரம் பக்கம் 41-42ல் ஆசிரியரால் முழுமையாக விளக்கப்பட்டுள்ளது.

ஆழ்வார் தமிழோசைதான் வடமொழி என்றும், அதனாலே வேதங்களை முடிவில் வைக்காமல் தமிழோசையை முதலில் வைத்துப் பாடியதின் காரணத்தை ஆறு விளக்கங்களைக் கொண்டு நூலாசிரியர் காட்டியுள்ளது பேராசிரியரின் ஆழ்ந்த புலமையை வெளிப்படுத்துகிறது.

பக்கம் 58ல் மலைநாட்டுத் பகுதியில் வாமனாவதாரப் பெருமை மற்றும் எண்மதியும் கடந்து'' என்ற சொற்களுக்கு பேராசிரியர் தற்கால அறிவியல் அடிப்படையில் விளக்கம் அளித்துள்ளது மிகவும் புதிய செய்தியாகவும், பயனுள்ள தாகவும் உள்ளன.

முதல் பத்துப் பாசுரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ள தத்துவ அர்த்தங்களை பக்கம் 103. 104ல் தொகுத்து வழங்கியுள்ளது இப் பேராசிரியருக்கு உள்ள தனிச் சிறப்பாகும்.

மாணவனை ஆசிரியர் கை கூப்பி வணங்கலாமா என்ற இடத்து (பக்கம் 136) பேராசிரியர், இராமானுசரின் வரலாறு மூலமாக விளக்கம் அளித்துள்ளது இதன் அநுஷ்டானத்தை பேராசிரியர் காட்டியுள்ளது. பொருத்தமாக உள்ளது.

கீதை தெரிவிக்கும் அடியார் இலக்கணமான "மத்கத ப்ராணா" என்பதின் விளக்கமே திருநெடுந்தாண்டகத்தின் 11லிருந்து 20 வரையிலும் உள்ள பாசுரங்கள் எனவும் 21 முதல் 30 வரையிலான போதயந்த பரஸ்பரம் என்பதன் விளக்கம் என்பதும் பக்கம் 182 - 183ல் அளிக்கப்பட்டுள்ளது அனைவரும் படித்து உணரத்தக்கது.

பகுதி 3ல் திருநெடுந்தாண்டகம் சாத்திரம் என்றும் அ, உ. ம, ஆகிய பிரணவத்தின் விளக்கம் என்றும், கீதையில் கூறப்பட்ட அடியார் இலக்கண விளக்கம் என்றும், திருமந்திரம், துவயம், சரமச்லோகம் ஆகியவற்றின் விளக்கம் என்றும், பக்தி, பிரபத்தி, புருஷகாரம் ஆகியவற்றின் விளக்கம் என்று தெரிவித்ததை, அவற்றுக்குண்டான அகச் சான்று கொண்டு பேராசிரியர் விளக்கம் அளித்து, நிறைவில் இந்நூலில் தெரிவிக்கப்பட்ட சீரிய கருத்துக்களைத் தொகுத்து வழங்கியிருப்பது பேராசிரியப் பெருந்தகையின் பரந்த, ஆழ்ந்த அறிவும், பேராசிரியப் பணியின் பயனும் இந்நூலுக்கு மெருகூட்டியுள்ளன. (இதற்கு மேலும் விபரம் வேண்டுவோர் ஸெப்டம்பர் 2009 ஸ்ரீ நரஸிம்ம பிரியா. பத்திரிகையைப் பார்க்கலாம்.)

திருநெடுந்தாண்டகத்தினால் வெளிப்படும் ஆழ்வாரின் பரபக்தி பரஞானத்தை பேராசிரியர் அவர்கள் இந்நூலில்

தனித்தன்மை வாய்ந்த தம் உரையின் மூலம் நன்கு படம் பிடித்துக் காட்டி, படிப்பவர்களைத் திருமங்கையாழ்வார் காலத்திற்கே கொண்டு போய், நேராக அநுபவிக்கும் அனுபவத்தை வழங்கியுள்ளார். இந்நூல் எளிய தமிழ் நடையில், தெள்ளத் தெளிவாகவும் கம்ப ராமாயணம், திருக்குறள், அறிவியல் ஆகியவற்றின் துணையோடு பாசுர விளக்கங்களும் அமைந்துள்ளதால் படித்து இன்புறும்படி உள்ளது. மேலும் ஆய்வு நோக்கில் அந்தந்த இடத்திற்குத் தேவையான வரலாற்றுச் செய்திகள், பிற சான்று நூல்களில் உள்ள செய்திகள் ஆகிய அனைத்தையும் தன்னுள்ளே கொண்டு இந்நூலை வளமாக்கியுள்ளார் நமது பேராசிரியைப் பெரும்தகை இந்த அழகிய நடை இந்நூலாசிரியருக்கே உரிய தனிச்சிறப்பாகும்.

இராமாநுசரின் ஆயிரமாவது ஆண்டு விழாவினைக் கொண்டாடும் வகையில் இராமாநுசர் மிகவும் ஈடுபட்ட திருமங்கையாழ்வாரின் திருநெடுந்தாண்டகப் பாசுர விளக்கமான இந்நூல் வைணவ உலகத்திற்குக் கிடைத்த பெரும் பொக்கிஷமாகும் இந்நூலை அனைவரும் வாங்கிப் படிப்பதே பேராசிரியருக்கு நாம் செய்ய வேண்டிய கைமாறாகும், இந்நூலைப் படைத்துத் தந்துள்ள பேராசிரியர், முனைவர், முதல்வர் கலியன் எதிராசன் சுவாமிகளுக்கு ஒரு கைம்மாறு மாயனும் காணகில்லான். போற்றியும் தந்து, புந்தியில் கொண்டு, பல்லாண்டு பாடுவதே நமது கடமையாகும். இந்நூலாசிரியர் கலியன் என்ற தம் பெயருக்கு ஏற்ப, கலியனின் மற்ற பிரபந்தங்களுக்கும் விரிவுரை அளிக்க வேண்டி திருமங்கை ஆழ்வார் திருவடிகளில் பிரார்த்திக்கிறேன். பொலிக பொலிக பொலிக.

அ.வே.ரங்காசாரி

பொருளடக்கம்

ஓம் நமோ நாராயணாய

எம் பெருமானார் அருளிச் செய்தது

வாழி பரகாலன் வாழி கலிகன்றி
வாழி குறையலூர் வாழ்வேந்தன்-வாழியரோ
மாயோனை வாள்வலியால் மந்திரங்கொள் மங்கையர் கோன்
தூயோன் சுடர்மான வேல்

ஆழ்வான் அருளிச் செய்தது

நெஞ்சுக்கிருள் கடிதீபம் அடங்கா நெடும்பிறவி
நஞ்சுக்கு நல்லமுதம் தமிழ் நன்னூல் துறைகள்
அஞ்சுக்கு இலக்கியம் ஆரணசாரம் பரசமய
பஞ்சுக்கு அனலின்பொறி பரகாலன்பனுவல்களே

பெருமாள் சீயர் அருளிச் செய்தது

ஊழிதொரும் ஊழிதொரும் உலகமுய்ய
உம்பர்களும் கேட்டுய்ய அன்பினாலே
வாழியெனும் பூதம் பேய் பொய்கை மாறன்
மழிசையர்கோன் பட்டர் பிரான் மங்கைவேந்தன்
கோழியர்கோன் தொண்டர் துகள் பாணன்கோதை
குலமுனிவன் கூறியநூல் ஓதி வீதி
வாழியென வருந்திரளை வாழ்த்துவோர்தம்
மலரடி எம் சென்னிக்கு மலர்ந்த பூவே!

பகுதி - 1

மாறன் பணித்த தமிழ்மறைக்கு மங்கையர்கோன்
ஆறங்கங்கூற அவதரித்த-வீறுடைய
கார்த்திகையில் கார்த்திகை நாள்.

என்று உபதேசரத்தின மாலையில் மணவாள மாமுனிகள் குறிப்பிட்ட படி சோழநாட்டின் ஒரு பகுதியான ஆலி நாட்டில் திருக்குறையலூர் என்னும் புண்ணிய பூமியில் நீலன் என்னும் பெயரோடு கார்த்திகை மாதத்தில் கார்த்திகை நாளில் திருஅவதாரம் செய்தவர் திருமங்கை யாழ்வார்.

ஆழ்வார்களின் அருளிச்செயல்களாகிய நாலாயிர திவ்யப்ரபந்தங்களில் ஆயிரம் பாசுங்களுக்கு அதிகமாக அருளிச் செய்தவர்கள் 'வேதம் தமிழ் செய்த மாறன்' என்று போற்றப் படுகின்ற நம்மாழ்வாரும், பெருமாளாலே கலியன் என்று அழைக்கப்பட்ட திருமங்கை ஆழ்வாருமே ஆவர். நம்மாழ்வார் அருளிச் செய்த திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழியும் முறையே ரிக், யசுர், அதர்வண மற்றும் சாமவேதங்களின் சாரங்களாக போற்றப்படுகின்றன.

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த திவ்யப்ரபந்தங்கள் ஆறு. அவை பெரியதிருமொழி, திருக்குறுந்தாண்டகம் திருவெழு கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல், திருநெடுந்தாண்டகம் ஆகியவை யாகும். இந்த ஆறு திவ்யப்ரபந்தங்களும் வேதங்களின் ஆறு அங்கங்களாகிய சீக்ஷா, வ்யாகரணம், சந்தஸ், நிருத்தம், ஜோதிஷம், கல்பம். என்று மாறன் பணித்த தமிழ் மறைக்கு திருமங்கை ஆழ்வார் கூறிய ஆறு அங்கங்கள் என்று கருதப்படு கின்றன. இவற்றுள் திருநெடுந்தாண்டகம் ஆழ்வார் அருளிச் செய்த கடைசி (சரம) ப்ரபந்தமாகும். திருமங்கை ஆழ்வார், ஆழ்வார்களில்

கடைசி ஆழ்வார். அவர் அருளிச்செய்த கடைசி திவ்யப்ரபந்தம் திருநெடுந்தாண்டகம். அதனால் பொய்கை ஆழ்வார் அருளிச் செய்த முதல் திருவந்தாதி நாலாயிர திவ்யப்ரபந்தங்களின் முதல் ப்ரபந்தமாகவும்,

திருநெடுந்தாண்டகம் நாலாயிர திவ்யப்ரபந்தங்களின் கடைசி ப்ரபந்தமாகவும் கருதப்படுகின்றன. பிற்காலத்தில் கவிச்சக்ரவர்த்தி கம்பர் இயற்றிய இராமாவதாரம் திருவரங் கத்தில் அரங்கேற்றம் செய்யப்பட்டதைப் போல், மங்கைமன் னரும் தமது ஆறு திவ்யப்ரபந்தங்களையும் அருளிச் செய்த பின்பு திருவரங்கத்திற்கு எழந்தருளி திருநெடுந்தாண்டகத்தை தேவகானத்தில் இசைத்துப்பாட அதனால் திருவுள்ளமுகந்த பெரியபெருமாள், 'உமக்கு வேண்டிய வரம் பெற்றுக் கொள்ளும்' என்று நியமித்தருளினார். ஆழ்வாரும் 'தேவரீர் மார்கழி மாதத்தில் கண்டருளுகின்ற அத்யயந உத்ஸவத்தில், நம்மாழ்வார் அருளிச் செய்த திராவிட வேதத்தையும் திருச்செவி சாத்தியருளி வேணும்' என்று ப்ரார்த்திக்க பெரிய பெருமாளும் அவ்வண்ணமே அருள் புரிந்தார். அவ்வாணையின் படி மங்கை மன்னன் ஆழ்வார் திருநகரியி லிருந்து அர்ச்சாரூபியான நம்மாழ்வாரை வருடந்தோறும் திருவரங்கத்திற்கு எழுந்தருளச்செய்து அவர் முன்னிலையில் உபய வேத பாராயணத்தையும் சிறப்பாக நடக்கச் செய்து பத்துநாள் திருவிழாவாகக் கொண்டாட ஏற்பாடு செய்தார்.

இப்படி பத்துநாள் விழாவாகத் தொடங்கிய திரு அத்யயந உத்சவம் நாதமுனிகள் காலத்தில் மற்றைய ஆழ்வார்களுடைய திவ்யப்ரபந்தங்களுக்காக பத்துநாள் பகல் பத்து உற்சவமும் இருபது நாள் உத்சவம் முடிந்த பின்பு இயற்பா உத்சவமும். சேர்க்கப்பட்டு 21 நாள் உத்சவமாக வளர்ந்தது. பட்டர்காலத்தில் திருநெடுந்தாண்டகத்திற்குள்ள சிறப்பை நோக்கிப் பகல் பத்து உத்சவத்துக்கு முந்தினநாள்

திருநெடுந்தாண்டக உத்சவமும் சேர்க்கப்பட்டு இப்பொழுது உள்ளபடி நடந்து வருகின்றது.

பட்டர் இராமானுஜருக்குப் பிறகு வந்த ஆச்சாரியர்களில் மிக முக்கியமானவர். இவருடைய முழுப்பெயர் பராசர பட்டர் என்பது. இராமானுசருக்குப் பிறகு எம்பாரும் எம்பாருக்கு பிறகு பராசரபட்டரும், நஞ்சீயர், நம்பிள்ளை. பெரிய வாச்சான் பிள்ளை, திருவாய் மொழிப் பிள்ளை மணவாள மாமுனிகள் என்று தென்னாச் சாரியர்களின் பரம்பரையாகும். இராமானுசருக்கு எப்படி திருப்பாவையில் அதிக ஈடுபாடு இருந்ததோ அதே போல பராசர பட்டருக்கு திருநெடுந்தாண்டகத்தில் மிகவும் ஈடுபாடு இருந்தது.

நஞ்சீயர் பிறக்கும் போதே விசிஷ்டாத்வைதியாக பிறக்க வில்லை. அவர் மேலக்கோட்டையில் (இப்பொழுது கர்நாடக மாநிலத்தில் உள்ளது) பிறந்தவர். அவரது இயற் பெயர் மாதவாச்சாரியார். மாதவாச்சாரி ஒரு பெரும் அத்வைதியாக இருந்தவர். வடமொழியில் விற்பன்னர் நியாயம், மீமாம்சை வியாகரணம் என்று எல்லா சாத்திரங்களும் கற்றவர். தவிரவும் பெரும் செல்வந்தராக இருந்தது மட்டுமின்றி உதாரகுணம் படைத்தவர். தினம் ஆயிரம் பிராமணர்களுக்கு அமுது செய்விப்பதை நித்ய கருமமாகச் செய்து வந்தார்.

மேலக்கோட்டையில் இராமானுஜர் பல ஆண்டுகள் தங்கியிருந்து திருநாராயணபுரம் திருக்கோவிலை புனருத் தாரணம் செய்து அங்கு வைணவத்திற்கு வித்திட்டு வந்த தோடல்லாமல், அங்கு இராமானுசர் 'தமருகந்த திருமேனி'' ஆராதனையில் உள்ளபடியால், மேலக்கோட்டை வைணவர்களுக்கு ஒரு புண்ணிய க்ஷேத்திரமாக இருந்தது. அதனால் ஸ்ரீரங்கத்திலிருந்து ஸ்ரீவைஷ்ணவர்கள் கூட்டமாக

மேல்கோட்டை செல்வதும் அங்கிருந்த வைணவர்கள் திருவரங்கம் வருவதும் வழக்கமாக இருந்தது. மேலக் கோட்டையிலிருந்து வந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் பட்டரைப் பார்த்த போது மேலக்கோட்டையிலிருந்த மாதவாச் சாரியாரின் கீர்த்தி பிரபாவங்களை மிக விரிவாக பட்டருக்கு எடுத்து சொன்னார்கள். அதே போன்று மேலக் கோட்டை சென்ற ஸ்ரீவைணவர்கள் பராசரபட்டரின் ப்ரபாவங்களை யெல்லாம் மாதவாச்சாரியாரிடம் சொன்னார்கள். இப்படி ஒருமுறை மேலக்கோட்டை செல்ல இருந்த வைணவர்கள் பட்டரை சந்தித்தபோது அவர்களிடம் பட்டர் , மாதவாச் சாரியரிடம் தமது சார்பில் அவர் திருநெடுந்தாண்டக சாத்திரம் படித்திருக்கிறாரா?, என்று கேட்கச் சொல்லி அனுப்பி வைத்தார். அப்படியே அவர்கள் மேலக்கோட்டை சென்று மாதவாச்சாரியாரைச் சந்தித்த போது 'நீர் திருநெடுந்தாண்டக சாத்திரம் கற்றிருக்கிறீரா என்று பட்டர் கேட்டார்' என்று சொன்னார்கள்.

மாதவாச்சாரியர் வடமொழியில் வல்லவர் என்றாலும் தமிழ் தெரியாத காரணம், திவ்யபிரபந்தங்களையும் திருநெடுந்தாண்டகத்தையும் பற்றிக் கேள்விப்பட்டிருக்க வில்லை. அதனால் அவர் அப்படி ஒருசாத்திரமா இருக்கிறது? நான் அதைப் படித்ததில்லை என்று சொன்னார். ஆனாலும் அதைப்பற்றி மனதில் குறிப்பு வைத்துக் கொண்டார்.

இப்படி சில காலம் சென்ற பின்பு மாதவாச்சாரியாரை விசிஷ்டாத்வைத தத்துவத்திற்கு மாற்ற சமயம் வந்து விட்டது என்று நினைத்த பட்டர், மேல்கோட்டைக்குப் புறப்பட்டுச் சென்றார்.

அங்கு மாதவாச்சாரியாரைப் பார்ப்பது என்பது அவ்வளவு எளிதான செயல் இல்லை. ஆனால் அதிதிகளுக்கு

ததியாராதனை செய்து அமுது செய்விக்கும் போது, எல்லாம் சரியாக நடைபெறுகிறதா என்பதைத் தானே தெரிந்து கொள்ள சாப்பாட்டுக் கூடத்திற்கு நாள் தோறும் மாதவாச்சாரியார் வரும்போது அவரை எதிர்க்கொள்ள நிச்சயம் செய்து, பட்டர் பரிமாறப்பட்ட ஒரு இலையின் பின்புறம் சென்று, சாப்பிடாமல் நின்ற வண்ணம் இருந்தார். ஒவ்வொருவராக கேட்டுக்கொண்டு வந்த மாதவாச்சாரியார் பட்டர் சாப்பிடாமல் நிற்பதைப் பார்த்து உமக்கு என்ன வேண்டும் என்று பொருள்படும்படி வடமொழியில் ‘காபிக்ஷா?’ என்று கேட்டார். அதற்காகவே காத்துக் கொண்டிருந்த பட்டரும் ‘தர்க்க பிக்ஷா’ என்றார். அதாவது தங்களுடன் வாதம் செய்ய விரும்புகிறேன் என்றார். அதைக் கேட்டவுடன், மாதவாச்சாரியார் பட்டரைப் பார்த்து ‘நீர்தான் அந்த திருநெடுந்தாண்டகம் வல்லீரோ’ என்று கேட்டார். எப்படிக் கண்டுபிடித்தீர்கள் என்று பட்டர் கேட்கவும், என்னுடன் ஒருவன் வாதம் செய்யவந்தால் எனக்குத் தெரியாத ஒன்றைத் தெரிந்து வைத்திருக்கிறான் என்று பொருள். அப்படி எனக்குத் தெரியாத ஒரு சாத்திரம் ‘திருநெடுந் தாண்டக’ சாத்திரந்தான். நீர் அதில் வல்லவராக இருப்பதனால் தான் என்னுடன் வாதம் செய்ய வந்திருக்கிறீர் என்று சொல்லி தர்க்கத்திற்கு ஒத்துக்கொண்டு பல நாட்கள் தர்க்கம் நடந்து முடிவில் மாதவாச்சாரியார் தன் தோல்வியை ஒத்துக் கொண்டது மட்டுமின்றி மேலக்கோட்டையை விட்டு திருவரங்கத்திற்கு வந்து பட்டரிடம் சீடராகி தமிழையும் எல்லா திவ்யப்பிரபந்தங்களையும் கற்று நஞ்சீயர் என்று பட்டருக்குப் பிறகு ஓராண்வழி சம்பிரதாயத்தில் ஆச்சாரியராக விசிஷ்டாத்வைதத்தை வளர்த்தார் என்று குருபரம்பரை நூல்கள் குறிப்பிடுகின்றன.

திருநெடுந்தாண்டக சாத்திரம்

தமிழ் இலக்கிய வரலாற்றில், திவ்யப்ரபந்தங்களில் திருமங்கையாழ்வார், திருநெடுந்தாண்டகம் என்று 30 பாசுரங்களைக் கொண்ட திவ்யப்ரபந்தத்தையும், திருக்குறுந் தாண்டகம் என்று இருபது பாசுரங்களைக் கொண்ட திவ்யப்ரபந்தத்தையும் அருளிச் செய்திருக்கிறார். அது போன்று சைவக் குரவர்களில் அப்பர் சுவாமிகள் ஆறாந்திரு முறையில் உள்ள 98 பதிகங்களை நெடுந்தாண்டகங்களாக, திருத்தாண்டகம் என்ற பெயரில் அருளிச்செய்து தாண்டக வேந்தர் என்ற சிறப்புப்பெயரும் பெற்றிருக்கிறார். இரண்டு காய்ச்சீர், இரண்டு மாச்சீர் இரட்டித்து வரும் எண்சீர்கழி நெடிலடி ஆசிரிய விருத்தப்பாக்கள் 'தாண்டகம்' என்று அழைக்கப்படுகின்றன.

மங்கை மன்னன் தமது தாண்டகங்களைத் திருநெடுந் தாண்டகம் என்றும் திருக்குறுந்தாண்டகம் என்றும் பெயரிட்டிருக்கிறார். அப்பர் இயற்றிய தாண்டகங்கள் பாடல் பெற்ற ஊர்ப்பெயருடன் அந்த ஊரில் அர்ச்சாவதாரமாக எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானைப் பற்றிய 10 பாடல்களாக தேவாரம் ஆறாந்திருமுறையில் வகைப்படுத்தப் பட்டுள்ளன.

திருநெடுந்தாண்டகம் சாத்திரம் என்று பட்டரால் ஏன் அழைக்கப்பட்டது? சாத்திரம் என்ற வடமொழிச்சொல்

பொதுவாக அறிவியல் என்று மொழி பெயர்க்கப்படலாம் எடுத்துக்காட்டாக கௌடில்யரின் அர்த்தசாத்திரம் என்பது பொருள் பற்றிய அறிவியல் ஆகும். அதைப்போல வாஸ்து சாஸ்திரம், மனை சாஸ்திரம் போன்ற சொற்கள் கட்டிடவியலின் பகுதிகளாகக் காணப்படுகின்றன. பதஞ்சலியின் நிருத்திய சாஸ்திரம் நடனத்தின் பல தன்மைகளை விளக்குகின்றது. இருந்தாலும் சாஸ்திரம் என்ற சொல், நான்மறைகளையும், அவற்றை விளக்குகின்ற உபநிடதங்களையும் குறிக்கப்படுகின்ற ஒரு சொல்லாகவே அதிகம் பயன்படுத்தப்படுகிறது. 'திருநெடுந்தாண்டக சாஸ்திரம்' என்று பட்டர் குறிப்பிட்டது திருநெடுந்தாண்டகம், வேதத்தின் உட்பொருளை விளக்கிச் சொல்கின்ற ஒரு ப்ரபந்தம் என்பது காரணமாக இருக்கலாம். அதிலும் குறிப்பாக, திருநெடுந்தாண்டகம் விசிட்டாத்வைத தத்துவத்தை விளக்குகின்ற ஒரு நூலாக, பூர்வாசாரியர்களால் வியாக்கினங்களில் சொல்லப்பட்டுள்ளது.

திருநெடுந்தாண்டகத்திலுள்ள முப்பது பாசுரங்களையும் மூன்றுப் பத்துப் பாசுரங்களாகப் பிரித்துக் கொண்டால் முதல் பத்துப் பாசுரங்கள் ஆழ்வார் தாமான தன்மையில் அருளிச் செய்த பாடல்கள், ''ஞானத்தில் தன் பேச்சு பிரேமத்தில் பெண் பேச்சு'' என்று சொல்லப்படுகின்றது. ஞானம் முற்றிய நிலையில், இறைவனை முற்றும் உணர்ந்து கொண்ட ஞான நிலையில், அவன் திருவடியில் சரணாகதி எப்படியும் அடைந்துவிட வேண்டும் என்ற பிரேமம் (காதல்) தலைதூக்குகிறது. அந்த நிலையில் ஆழ்வார்கள் பெருமாளைத் தலைவனாகவும், தங்களைத் தலைவியாகவும் உருவகம் செய்து கொண்டு பாசுரங்களை அருளிச் செய்திருக்கிறார்கள்.நம்மாழ்வார் பெண்

பாவத்தில் தன்னைப் பராங்குச நாயகி என்று கூறிக் கொண்டது போல திருமங்கையாழ்வாரும் தன்னைப் பரகாலநாயகி ஆக்கிக்கொண்டு, சிறிய திருமடல், பெரிய திருமடல் என்ற இரண்டு ஒப்பற்ற திவ்யப்ரபந்தங்களை அருளிச் செய்து, ஆண்கள் மடலேறுவது என்ற கொள்கை தென்மொழியிலே வழக்கிலிருக்க, முதன் முதலாக, பெண் மடலேறுவதாக ஆழ்வார் பரகால நாயகியாகப் பாடியது பெரியதிருமடல். பெரிய திருமொழியிலும் அவர் பரகாலநாயகியாகப் பாசுரங்களை அருளிச் செய்திருக்கிறார்.

தமிழ் இலக்கியங்களில் உள்ள பாடல்களில் தலைவனைப் பிரிந்து தவிக்கின்ற தலைவியின் நிலைகண்டு ஆற்றாமல் தாய் ஊராரிடம் பேசுவதைப் போலவும், தாய் தோழியிடம் பேசுவதாகவும், தலைவி தோழியிடம் பேசுவதைப் போலவும், தலைவி தானே பேசிக்கொள்வது போலவும் பல நிலைகளில் பாடல்கள் இயற்றப்பட்டுள்ளன. அந்த வழியில் திருநெடுந்தாண்டகத்தில் 11ஆவது பாசுரத்திலிருந்து 20ஆவது பாசுரம் வரை தாய்ப் பாசுரங்களாகவும், 21ஆவது பாசுரத் திலிருந்து 30ஆவது பாசுரம் வரை தலைவி தோழியிடம் பேசுவதைப்போலவும் அமைக்கப்பட்டுள்ளன. ஆக, முதல்பத்து பாசுரங்கள் ஆழ்வார் ஆண்பாவத்தில் பாடுகின்ற ஞான நிலைப் பாசுரங்கள். இரண்டாவது பத்துப் பாசுரங்கள் தாய்ப்பாசுரங்கள். மூன்றாவது பத்துப்பாசுரங்கள் தலைவியின் நிலையில் பாடிய பாசுரங்கள் என்று மூன்று பிரிவுகளாக அருளிச்செய்யப்பட்டுள்ளன. இதைத்தவிர பூர்வாச்சாரி யர்கள் இந்த முப்பது பாசுரங்களை பல்வேறு மந்திர விளக்கங் களாகவும் உரை செய்திருக்கிறார்கள்.

1. கண்ணன் அருளிச்செய்த பகவத்கீதையில் தன்னுடைய அடியவர்கள் எப்படியிருப்பார்கள் என்பதனை.

'மச்சித்தா மத்கதப்ராணா போதயந்த: பரஸ்பரம்
கதயந்தச்ச மாம் நித்யம் துஷ்யந்திச ரமந்திச'(ப.கீதை:10.9)

''என்னிடம் மனதை ஈடுபடுத்தி என்னிடமே வாழ்வமைந்தவர்களாகி என்னைப் பற்றிய தத்தம் அனுபவங்களை தங்களுக்குள் ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்ளுபவர்களாகி என்னையும் என்னுடைய புனித லீலைகளையும் பற்றி எப்போதும் என் குணங்களைப் பேசிக்களிப்பவர்களாகித் தமக்குத்தாமே பேசுபவரும் கேட்பவரும் இன்பக் களிப்பை அடைவர்' என்கிறார்.

திருநெடுந்தாண்டகத்தின் முதல் பத்து பாசுரங்கள் மேற்கண்ட கீதை வாசகத்தில் 'மச்சித்தா' அதாவது. மனத்தை என்னிடத்தில் ஈடுபடுத்தியிருப்பவர்கள் என்பதன் விளக்க மாகவும். இரண்டாவது பத்து பாசுரங்கள் 'மத்கதப்ராணா' அதாவது என்னை விட்டுப் பிரிந்தால் உயிர் வாழ இயலாத வர்கள் என்பதின் விளக்கமாகவும், மூன்றாம் பத்து பாசுரங்கள் 'போதயந்த: பரஸ்பரம்' என்னைப் பற்றிய தத்தம் அனுபவங்களை ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொண்டு அதில் மகிழ்ச்சி அடைபவர்கள் என்பதன் விளக்கமாகவும் அமைக்கப்பட்டுள்ளது.

2. திருநெடுந்தாண்டகம் திருமந்திரத்தின் மூன்று பதங்களின் விளக்கமாகவும், அதாவது திருமந்திரத்தின்

ஓம் நமோ நாராயணாய என்று மூன்று பதங்களில் முதல் பதமாகிய பிரணவத்தின் விளக்கமாகத் திருநெடுந் தாண்டகத்தின் முதல் பத்துப்பாசரங்களும்,

'நமோ' என்ற நடுப்பதத்தின் விளக்கமாக இரண்டாவது பத்துப் பாசுரங்களும், மூன்றாவது பதமான நாராயணாய என்பதின் விளக்கமாக மூன்றாவது பத்துப் பாசுரங்களும் நிர்வாகம் செய்யபப்பட்டுள்ளன.

3. ப்ரணவமாகிய ஓம் என்ற சப்தம் அ, உ, ம என்ற மூன்று 'எழுத்துக்களாக பிரிக்கப்படும்பொழுது, திருநெடுந் தாண்டகத்தின் முதல் பத்து பாசுரங்கள் 'அ' காரத்தின் விளக்க மாகவும், இரண்டாவது பத்து பாசுரங்கள் 'உ' காரத்தின் விளக்கமாகவும், மூன்றாவது பத்து பாசுரங்கள்

'ம' எழுத்தின் விளக்கமாகவும் நிர்வாகம் செய்யப் பட்டுள்ளது.

4. இதைத்தவிர வைணவர்களுக்கு மிக முக்கியமாகிய மந்தரத்திரயத்தின் விளக்கமாக அதாவது 'ஓம் நமோ நாராயணாய' என்ற திருமந்திரம்.

'ஸ்ரீமந்நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே
ஸ்ரீமதே நாராயணாய' என்ற த்வய மந்திரம்.
'சர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ:
அஹம்த்வாம் சர்வ பாபேப்யோ
மோக்ஷயிஷ்யாமி மா சுச:'

என்ற சரமச்லோகம் ஆகிய மூன்று மந்திரங்களின் விளக்கமாகவும் , அதாவது திருநெடுந்தாண்டகத்தின் முதல் பத்து பாசுரங்கள். திருமந்திரார்த்த விளக்கமாகவும் இரண்டாவது பத்து பாசுரங்கள் த்வய மந்திர விளக்கமாகவும், மூன்றாவது பத்து பாசுரங்கள் சரமச்லோகத்தின் விளக்கமாகவும் நிர்வாகம் செய்யப்பட்டுள்ளன.

5. முதல்பத்துப் பாசுரங்களாலே ‘பக்தி’ சொல்லப் பட்டது. இரண்டாவது பத்து பாசுரங்களில் ‘ப்ரபத்தி’ சொல்லப் பட்டது. மூன்றாவது பத்து பாசுரங்களில் ‘புருஷகாரம்’ சொல்லப்பட்டது.

6. முதல் பத்தாலே காதலியின் முதல் நிலையான அவளைக் காண ஆசைப்படுகின்ற நிலையும், இரண்டாம் பத்தாலே காதலியைக் கண்டதும் அவளைத் தழுவிக்கொள்ளும் தவிப்பு சொல்லப் படுகிறது. மூன்றாம் பத்தாலே அவளைத் தழுவியதும் ஈருடல்களும் ஒன்றாக விழைகின்ற காதலின் மூன்றாம் நிலை சொல்லப் படுகிறது.

இவ்வாறாக திருநெடுந்தாண்டகத்தின் முப்பது பாசுரங் களும் மூன்று பத்துக்களாக வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பத்துக்கும் வெவ்வேறு விளக்கங்கள் பூர்வாசார்யர்களால் நிர்வாகம் செய்யப்பட்டுள்ளன. முதலில் பாசுரங்களின் பொருள் விளக்கங்களை விரிவாகப்பார்த்து அதற்குப் பிறகு மேலே சொல்லப்பட்ட தத்துவ விளக்கங்கள் பாசுரங்களின் அடிகளின் அடிப்படையில் எப்படிப் பொருந்துகின்றன என்ற விளக்கத்தை மூன்றாம் பகுதியில் பார்க்கலாம்.

பகுதி இரண்டு
(பாசுரப் பொருள் விளக்கங்கள்)

முதல் பாசுரம்

மின்னுருவாய் முன்னுருவில் வேதம் நான்காய்
விளக்கொளியாய் முளைத்தெழுந்த திங்கள் தானாய்
பின்னுருவாய் முன்னுருவில் பிணிமூப்பில்லாப்
பிறப்பிலியாய் இறப்பதற்கே எண்ணாது எண்ணும்
பொன்னுருவாய் மணியுருவில் பூதமைந்தாய்ப்
புனலுருவாய் அனலுருவில் திகழுஞ் சோதி
தன்னுருவாய் என்னுருவில் நின்ற எந்தை
தளிர்புரையும் திருவடியென் தலைமேலவே.

பதஉரை:

முன் உருவில்: *கண்ணால் காணத்தக்க அசேதனப் பொருள்களில், - நம் கண்முன் இருக்கும் உயிரற்ற பொருள் களில்*

மின் உருவாய்: *மின்னல் போல நிலையற்ற தன்மையை எனக்கு வெளிப்படுத்தினாய்- மின்னலைப் போல நிலையற்ற தன்மை யாகவும்*

வேதம் நான்காய்: *நான்கு வேதங்களை அளித்தவனாய்-ரிக், யஜுர், சாம, அதர்வண என்னும் நான்கு வேதங்களாகவும்.*

விளக்கு ஒளியாய்: *சாஸ்திரங்களாலே உண்டாகும் அறிவை எனக்கு அளித்தவனாய் - நான்மறைகளிலிருந்து கிடைக்கின்ற அறிவாகவும் அந்த அறிவை எனக்கு அளித்தவனாகவும். (விளக்கு-சூரியன்)*

முளைத்து எழுந்த திங்கள்தானாய்- மலையுச்சியில் தோன்றும் சந்திரனைப் போல மனத்தால் வந்த அறிவையும், ஆகாசத்திலே மேலே கிளம்பிய சந்திரனைப் போலேயுள்ள தியானத்தின் அறிவையும், களங்கமற்ற சந்திரனைப் போலேயுள்ள நேரே காணும் அறிவையும் (ஆத்ம விஷயத்தில் எனக்கு அளித்தவனாய்.)

பின்னுருவாய்: ஆத்மா, ப்ரக்ருதியைக் காட்டிலும் வேறுபட்டது என்னும் அறிவை அளித்தவனாய், - பின்னான தத்துவமாய், இருபத்து நான்கு இயற்கை தத்துவங்களுக்கு பின்னான ஆத்ம தத்துவமாகவும்.

முன்னுருவில் பிணிமுப்பில்லா பிறப்பிலியாய்: கண்ணால் காணப்படும் அசேதனப் பொருள்களில் உள்ள துன்பம், கிழத்தனம், பிறப்பு, முதலான தாழ்வுகள் ஆத்மா விடம் இல்லை என்பதை (எனக்கு) அறிவித்தவனாய்- உலகத்தில் காணப்படுகின்ற அழிகின்ற பொருள்களில் காணப்படுகின்ற நோய், கிழத்தனம் இவையெல்லாம் இல்லாத பிறப்பற்ற வனாகவும்.

இறப்பதற்கே எண்ணாது: (பகவதநுபவம் என்றும் இல்லாமை யாலே) சாவை ஒத்த கைவல்யத்தை (எனக்குக் கொடுக்க) நினைக்காமல்-என்றும் அழிவில்லாதவனாகவும்.

எண்ணும் பொன்னுருவாய்: காலமெல்லாம் எண்ணினாலும் எண்ணி முடிக்க முடியாததாய், பொன் போல ஆசைப்படத் தக்க தனது ஸ்வருபத்தை எனக்குக் காட்டிய வனாய்,

மணிஉருவில் பூதம் ஐந்தாய்- அப்ராக்ருதமான பஞ்சோபநிஷத்துக்களாலான திருமேனியை (எனக்குக்) காட்டியவனாய்,

புனலுருவாய் : அடியார்களுக்கு நீர்போல் எளியவனாய் **அனலுருவில் திகழும் :** எதிரிகளுக்கு நெருப்புப் போலே அணுகவொண்ணாதவனாய்.

சோதி தன்னுருவாய் : சோதிகளுக்கெல்லாம் ஒளியளிப்ப வனாய், சோதி போன்ற ஒளி மயமான உருவுள்ளவனாகவும்.

என் உருவில் நின்ற: என்னுடைய சரீரத்தில் தரித்து நின்ற என்னுடைய உடலின் உள்ளொளியாகவும் இருக்கின்ற

எந்தை : என் தலைவனுடைய, எனக்கு தந்தை போன்ற எம்பெருமானின்

தளிர்புரையும் திருவடி-வாட்டம் நீங்கி செவ்வி பெற்ற திருவடிகள், மலர்போன்ற திருவடிகள்,

என்தலைமேலவே- என் தலைக்கு அலங்காரமாயின என்னுடைய தலைபடும்படி வணங்குகின்றேன்.

பூதம் ஐந்தாய் புனலுருவாய் - காற்றினை புனலை தீயை குறுந்தாண்டகம்.

பொழிப்புரை

இந்த பாசுரத்தால் சித், அசித்-ஈச்வரன் என்ற மூன்றுதத்துவங்களுடைய தன்மையை விளக்கி சொல்கிறார். அசித், -அசையாப்பொருள்களாகிய ஜடப்பொருள்கள், மின்னலைப்போன்ற நிலையுள்ள தன்மையுடையவை.

அசைகின்ற பொருள்களில் உள்ள இருபத்தைந்தாவது தத்துவமாகிய ஆன்மா முன்னால் இருக்கின்ற பொருள்களின் இயற்கைத் தத்துவங்களான பிறப்பும், அதனால் வருகின்ற பிணி, மூப்பு, இறப்பு ஆகிய குணங்கள் இல்லாத இருபத்தைந்தாவது தத்துவமாகிய ஆன்மாகவும், பொன்னின்

தன்மையுடைய வனாகவும் ஒளிமயமான உருவத்துடன் பஞ்ச பூதங்களில் நிறைந்திருப்பவனாகவும், எளிவந்த பிரானாகவும், எரிகின்ற நெருப்பைப் போன்ற சோதியைப் போன்ற மேனியை உடைய எம்பெருமானுடைய திருவடி களில் என்னுடைய தலைபடும்படி வணங்குகின்றேன்.

விளக்கவுரை

முன்னுருவில் மின்னுருவாய்: நேரே கண்களால் காணப் படுகின்ற பொருள்களாலான, இயற்கையின் மின்னலைப் போன்று தோன்றி மறைகின்ற நிலையாமையை, எனக்குக் காட்டினாய்.பஞ்சபூதங்களுக்கும் ஆன்மாவிற்கும் உள்ள தொடர்பு இரண்டு நிலைகளை உடையது. ஒன்று ஆன்மாவின் கர்மபலன்களால் அவனைக் கட்டுவது, அப்படிக்கட்டும் பொழுது அவற்றிற்கும் அவனுக்கும் உள்ள தொடர்பு நிலையானதாக அவனுக்குத் தோன்றும் இரண்டாவது எம்பெருமானுடைய கிருபை ஜீவனுக்குக் கிடைத்த பிறகு அவனுக்கும் இந்த ஜடப்பொருள்களுக்கும் உள்ள தொடர்பு மின்னைலைப் போன்ற நிலையற்ற தன்மையுடையது என்பதை ஆன்மா அறிகின்றது. ஜடப்பொருள்களான உடலின் தொடர்பு, ஆன்மாவின் கர்மபலனை அனுபவிப்பதற்காக அவனுடன் ஏற்படுத்தப் பட்ட நிலையற்ற தொடர்பு என்று அவன் இறைவன் அருளால் அறிந்த பிறகு, அதன்மீதுள்ள பற்று அவனுக்குக் குறைந்து போகிறது. அதை வெளிப்படுத்திய இறைவனுடைய தொடர்பில் அவனுக்கு ஆர்வம் அதிகமாகின்றது. அதனால் 'முன்னுருவில் மின்னுருவாய் நின்ற எந்தை' என்று அந்த நிலையில்லாத தொடர்பை எனக்குக்காட்டி தன்னுடனான நிலையான தன்மையை இறைவன் எனக்கு வெளிப்படுத்

தினான். அதனாலே அவனே நிலையானவன் என்பவற்றை ஜடப்பொருள்களின் நிலையற்ற தன்மையாக நின்று காட்டினான் என்றும் பொருள் கொள்ளத் தக்கதாகும்.

வேதம் நான்காய்: ஆன்மா ஞானானந்த மயமானது. எம்பெருமானுக்கு அடிமைப்பட்டது என்பதைக்காட்டுகின்ற நான்கு (ரிக், யஜுர், சாம, அதர்வண) வேதங்களானான். அவனே வேதமானான் என்பது எப்படிப் பொருந்தும் என்றால், வேதம், அசைவன (சித்) அசையாதன(அசித்) ஈஸ்வரன் என்ற மூன்று தத்துவங்களைப் பற்றிச் சொல்வது அறிந்ததே. அப்படியிருக்க வேதங்கள் ஆன்மாவைப் பற்றியே பேசுகின்றன என்றால் எப்படிப் பொருந்தும் என்றால் ஆன்மாவிற்கு கைக்கொள்ளத் தக்கது ஈச்வர தத்துவம் என்பதையும், கைவிடத்தக்கது அசித் தத்துவம் என்பதைக் காட்டுவதற்காகவே மூன்று தத்துவங்களைப் பற்றியும் வேதம் சொல்லுகிறது. அதனால் வேதம் குறிப்பாக ஆன்மாவைப்பற்றிச் சொல்கின்றது என்பது சரியெனக் கொள்ளலாம் (பின்னால் பார்க்க) முன்னுருவில் மின்னுருவாய், வேதம் நான்காய், விளக்கொளியாய், முளைத் தெழுந்த திங்கள் தானாய் எண்ணும் பொன்னுருவாய், மணியுருவில் பூதமைந்தாய் இறப்பதற்கே எண்ணாது பிறப்பிலியாய் என்று பதம் பிரித்தால் பொருள் எளிதாகக் கொள்ளலாம்.

ஆன்மாவைப் பற்றி விரிவாகத் தெரிந்தால்தான் அதற்கு கைவிடத்தக்கது எது? கைக்கொள்ளத் தக்கது எது என்று புலப்படும். அதனால் ஆன்ம தத்துவம் விரிவாக அறியப்பட வேண்டும் என்பதால் வேதம் அதையே குறிப்பாக அறிவிக் கிறது. அப்படி அதைப்பற்றிய விளக்கங்கள் சாத்திரத்தில்

விளக்கப்பட வில்லையானால், உடலும் உயிரும் (ஆன்மா) ஒன்று என்ற எண்ணம் வந்துவிடும். அப்படியானால் (அசித்) (அசையாப் பொருள்கள்) (மாடு, மனை, உணவு) கைக்கொள்ளத்தக்கதாக எண்ணப்படும். அதனால் உடலை விட்ட பின்பு சென்றடையும் சொர்க்கம் கைக்கொள்ளத் தக்கதாகவும், ஈசுவரனும் கைக்கொள்ளத் தக்கவனாவான். அதனால், எம்பெருமான் வேதங்களை சேதனனுக்காக ஏற்படுத்தி அதில் சேதனனை முன்வைத்துக் காட்டுகிறான். சாத்திரங்களின் தேவை எம்பெருமானுக்கு இல்லை. உயிரற்றப் பொருட்களுக்கும் இல்லை. அதனால், அவை சேதனனுக்காகவே உண்டு பண்ணப்பட்டன. அப்படி அவனுக்காகப் பிறந்த சாத்திரங்களில் பரமாத்மா தன்னைச் சேதனனுக்குக் காட்டிக்கொடுப்பதால் எம்பெருமான் நான்கு வேதங்களுமானான் என்று சொல்வதில் பிழையில்லை. (சீக்கியர்கள் மறைநூலையே எம்பெருமானாகக் கும்பிடுகிறார்கள்.)

ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி, ஸ்ந்நிவிஷ்டோ மத்த:
ஸ்ம்ருதிர் ஜ்ஞாநம போஹநம் ச
வேதைஸ்ச ஸர்வைர ஹமேவ வேத்ய: வேதாந்தக்ருத்
வேத விதேவ சாஹம் (ப.கீ.15-15)

(நான் எல்லாச் சேதனர்களின் இதயத்திலும் வாழ்கிறேன். அனைவருடைய நினைவும், பொருள்களைப் பற்றிய தெளிவும், மறதியும் என்னிடமிருந்தே உண்டாகின்றன. எல்லா வேதங்களாலும் நானே அறியப் படுகிறேன்.

வேதத்தில் சொல்லப்பட்டுள்ள பயனை அளிப்பவனும், வேதத்தை அறிந்தவனும் நானே) என்று பகவான் கண்ணன் பகவத்கீதையில் சொல்வதால் அவனே வேதங்களானான் என்று சொல்வதில் பிழையில்லை.

விளக்கொளியாய்: விளக்கொளியின் தன்மையுடைத்த தனால் சாத்திரத்தினால் உண்டாகின்ற அறிவைச் சொல்கிறது. வேதங்களைப் படித்தோ அவற்றைக்கேட்டோ ஜீவாத்மா-பரமாத்மாக்களைப் பற்றி அறிவது வேதங்கள் என்ற விளக்கிலிருந்து கிடைக்கின்ற அறிவு என்ற ஒளியாகவும், அந்த அறிவைத் தந்தவனாகவும், அந்த அறிவாகவும் அவனே இருக்கிறான். இங்கே விளக்கு என்பதற்கு சூரியன் என்ற பொருளையும் விளக்கொளி என்பதற்கு கதிர் ஒளியாகவும் அவனே இருக்கிறான். 'வெய்ய கதிரோன் விளக்காக' என்றாரல்லவா பொய்கையார். தவிரவும் அடுத்து வரும் சொல்லால் 'முளைத் தெழுந்த திங்கள்' என்று சந்திரனைப் பற்றிச் சொல்வதால் சந்திரனைப் பற்றி சொல்வதற்கு முன்பு சூரியனைப் பற்றிப் பேசுவது உலக இயல்பு. ஆழ்வார்களும் அப்படியே (கதிர் மதியம் போல் முகத்தன்) ,(திங்களும் ஆதித்யனும் எழுந்தாற் போல்) என்று ஆண்டாள் பாசுரம் சொல்வதாலும், விளக்கு என்பதற்குக் கதிரவன் என்று பொருள் கொள்வது சரியென்று படுகின்றது. விளக்கொளி என்பதற்கு சூரியனிலிருந்து வருகின்ற ஒளியைப் போன்று சாத்திரங்களிலிருந்து கிடைக்கின்ற அறிவாகவும்,

முளைத்தெழுந்த திங்கள்தானாய்: விளக்கு என்பதற்கு சாதாரண விளக்கு என்று பொருள் கொண்டு விளக்கொளி என்பதற்கு சாத்திரங்களைக் கேட்பதனால் வருகின்ற அறிவு என்ற பொருளைக் கொள்வோமானால், முளைத்த திங்களுக்கும், முளைத்து எழுந்த சந்திரனுக்கும் உள்ள ஒளி அதிகம் என்பது போல், வேதங்களை மனதில் பதியவைத்து (மனனம் செய்து) முளைத்து, எழுந்த திங்கள் தொடு வானத்தை விட்டு உச்சிக்கு வந்த சந்திரனுக்கு அதைவிட அதிக ஒளி கிடைப்பது போல், மனநிலையை விட உயர்வான

தியான நிலையாகவும் இருப்பவன். அந்த தியான நிலையில் யோகிகளால் காணப்படுபவன் என்று ஒரு பொருளையும், விளக்கு என்பதற்கு வேதம் என்ற பொருளைக் கொண்டோ மானால் அந்த வேதத்தின் அடிப்படையாகத் தோன்றி வளர்ந்து வேதத்திற்கு விளக்கங்களாகச் சொல்லப்படுகின்ற உபநிடதங்களிலே பேசப்படுகின்ற பரமாத்மாவாவும் என்றும் பொருள் கொள்ளலாம்.

முன்னுருவில் பிணி மூப்பில்லாப் பின்னுருவாய்: மூன்றாக இருக்கின்ற உப தத்துவங்களிலும் பொதுவான, அவற்றாலான உடலுக்கு ஏற்படுகின்ற நோய், கிழடு போன்ற தன்மைகள் இல்லாத, அவைகளுக்குப் பின்னால் இருபத்தைந்தாவது தத்துவமாக இருக்கின்ற ஆத்மாவாகவும், அவனே இருக்கிறான்.

நிலம், நீர், எரி, கால், விசும்பு என்ற பூதங்கள் 5;

மெய், வாய், கண், செவி, மூக்கு என்ற 5;

தொடுதல்,சுவைத்தல்,பார்த்தல்,கேட்டல், நுகர்தல் ,என்ற தன்மாத்திரங்கள் 5;

நாக்கு, கை, கால், குதம் குறி என்ற கர்மேந்திரியங்கள் 5,

பிரக்ருதி,மஹத்,அகங்காரம்என்ற தத்துவங்கள் 3, மனது என்ற 24ஆவது தத்துவம். ஆன்மா என்பது 25ஆவது தத்துவம். அ, உ, ம என்ற மூன்றெழுத்துக்களுடைய பிரணவமந்திரத்தில் 'ம' என்ற எழுத்து ஜீவாத்மாவைக் குறிப்பது. வடமொழி எழுத்துக்களில் அது இருப்பத்தைந்தாவது எழுத்து. உயிரைக் குறிக்கின்ற ம என்ற எழுத்தாகவும்.

இறப்பதற்கே எண்ணாது பிறப்பிலியாய்: பிறப்பு, இறப்பு என்ற கர்மங்கள், உடலுக்கு உள்ளதன்றி ஆன்மாவிற்கு இல்லை.

ஆன்மா பிறப்பதுமில்லை, இறப்பதுமில்லை. இறந்தால் தானே பிறப்பதற்கு என்பதனால் பிறப்பு இறப்பற்ற, 1.தேய்தல் 2. அழிதல் 3. மாற்றமடைதல் 4. வளர்தல் 5. பிறத்தல் 6. சிலசமயமே இருத்தல் என்னும் ஆறு நிலைகளற்ற, எப்பொழுதும் இருக்கிறான் என்று சொல்லத்தக்கவனாகிய ஆன்மாகவும்,

'நிர்வாணமய ஏவாயமாத்மா ஞானமயோஹமல' என்று விஷ்ணுபுராணத்தில் ஸ்ரீ பராசரரால் (இந்தஜீவாத்மா இன்பமே வடிவெடுத்தவன்; ஞானமயமாய் இருப்பவன், அழுக்கற்றவன்) ஆன்மா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இறப்பதற்கே எண்ணாது: ஐச்வர்யம், கைவல்யம், பகவத்ப்ராப்தி என்று மூன்று புருஷார்த்தங்களில் ஜீவன் சுகரூபமான, தன்னைத்தானே அனுபவித்துக் கொண்டிருக்கும் இரண்டாம் நிலை: இப்படிப்பட்ட ஒரு மோட்ச நிலையை, இறப்பதற்கு ஒப்பிடலாமா என்றால் ஜீவன் தனக்கு ஆத்மாவான பரமாத்மாவை விட்டு பிரிந்து தன்னைத் தானே அனுபவித்துக் கொண்டிருக்கின்ற நிலை ஜீவனைப் பொறுத்த மட்டில் இறக்கின்ற நிலை என்று கொள்ளலாம். அப்படிப் பட்ட நிலையை எனக்குத் தர எண்ணாமல், பரமாத்மா ஜீவனைத் தன்னோடு இணைத்துக் கொள் வதையே ஆழ்வார் விரும்புவதாகக் கொள்ள வேண்டும். அப்படி ஆழ்வார் விரும்பும்படி பரமாத்மா தன்னுடைய உருவைக் காட்டித்தந்தான் என்று மேற்பகுதிகளில் அறிய முடிகிறது.

எண்ணும் பொன்னுருவாய் : -தலைசிறந்த, அளவிட முடியாத, பொன்மயமான தன்னுடைய உருவமாகவும், பொன்னிற்கும் அவருடைய உருவிற்கும் உள்ள ஒற்றுமைகள்:

1. ஆசைப்படத் தக்கதாயிருத்தல் 2. இதை இழந்தவன் உயிரிழந்தவன் போல் ஆகி,திரும்பப் பெற்றவுடன் உயிர் பெற்றவன் போல் ஆகுதல். 3. இதைக்கொண்டு தனக்கு வேண்டிய தெல்லாம் சாதித்துக்கொல்ளலாம் படி இருத்தல் 4. இதை உடையவன் காலில் மற்றவர் யாவரும் விழும்படி இருத்தல்.

மணியுருவில் பூதம் ஐந்தாய்: மணியின் தன்மைகளை உடைய திருமேனி- மணிக்கும் திருமேனிக்கும் உள்ள ஒற்றுமைகள் 1) ஒளிமயமான உருவையுடையதாய் இருத்தல்

2. அனைத்திலும் இனிதாய் இருக்கும் மணி போல் தான் செய்யப்பட்டிருக்கும் பொருளைக் காட்டிலும் இனிதாயிருக்கும் தன்மை.

பூதம் ஐந்தாய்: பஞ்ச பூதங்களில் ஒன்றாகக் கலந்திருப்பவன். அந்த பஞ்ச பூதங்களாலான மனித உடலினுள்ளும் இருப்பவன் என்று ஒரு பொருளாலும் அவனது உரு மனித உருபோல உலகத்திலுள்ள பஞ்சபூதங்களால் செய்யப்படாத, பரமேட்டி, புமான், விசுவன், நிவருத்தன், சர்வன் என்றும் பஞ்சோப நிஷத்துக்களாலான திருமேனி என்றும் விளக்கப்பட்டது.

புனலுருவாய்; புனல் என்பதற்கு நீர் என்று பொருள் கொள்ளலாம் என்றாலும் நீர், பஞ்ச பூதங்களில் ஒன்று என்பதலாலும், முன்பே குறிப்பிடப்பட்டது என்பதனால் நீர் என்று நேர்ப்பொருளைக் கொள்ளாமல் அவனுடைய அனைவருக்கும் எளியவனாய் இருக்கின்ற நீர்மையை ஆழ்வார் இங்கு குறிப்பிடுகிறார் என்று கொள்ளலாம்.

அனலுருவில் திகழும்:-அடியவர்க்கு நீர்மையைக் காண்பிப்பவன் எதிரிகளுக்கு நெருப்புப் போல் நெருங்க முடியாதவனாக இருக்கிறான் என்று கொள்வதே சரியாக

இருக்கும் சோதி தன்னுருவாய் பொன்னுரு என்று முன்பு குறிப்பிட்ட மேனியே இங்கு சோதி (ஒளி) வடிவமான மேனியை உடையவன் என்று பொருள் கொள்ளலாம். ஒளிவிடுகின்ற, சூரியன் சந்திரன் நெருப்பு ஆகிய எல்லாவற்றிற்கும் அவனே காரணமாக இருக்கிறான்.

என் உருவில் நின்ற எந்தை: அழியக்கூடிய பொருள்களால் ஆகிய ஆழ்வாருடைய திருமேனியிலும் அவனே வந்து நின்றான். அவனே காரணன் என்பதால் அவனை தந்தை என்று கூறுகிறார். தந்தையின் உருபோன்று அவற்றில் சில தத்துவங்களை எடுத்துக்கொண்டு பிள்ளையின் மேனியிருப் பதை என் உருவில் நின்ற எந்தை என்று ஆழ்வார் அருளிச் செய்கிறார்.

தளிர்புரையும் திருவடி என் தலைமேலவே: அப்படிப் பட்ட குணாதிசயங்களை உடைய எம்பெருமானின் திருவடிகளில் நான் தலையை வைத்து வணங்கினேன். அப்படி ஆழ்வாருடைய தலை அவன் திருவடியில் பட்ட உடன், அதுவரை வாட்டமுற்றிருந்த திருவடிகள், திருவடித் தாமரை களாக தளிர்விட்டு மலர்ந்தன என்றும் பொருள் கொள்வர் பூர்வர்கள். 'அமரர் சென்னிப் பூ' வாகிய எம்பெருமானின் திருவடிகள் என் தலையிலும் மலர்ந்து எனக்கு அமரத்து வத்தை அளித்தது.

இரண்டாம் பாசுரம்

பாருருவில் நீரெரிகால் விசும்பு மாகிப்
பல்வேறு சமயமுமாய்ப் பரந்து நின்ற
ஏருருவில் மூவருமே என்ன நின்ற
இமையவர்தம் திருவுருவே றெண்ணும் போது
ஒருருவம் பொன்னுருவம் ஒன்று செந்தீ
ஒன்றுமா கடலுருவம் ஒத்துநின்ற
மூவுருவங் கண்டபோது ஒன்றாஞ் சோதி
முகிலுருவம் எம்மடிகள் உருவந் தானே.

பதவுரை:

ஏருருவில் : அழகிய சரீரங்களில்- ஏற்றம் மிக்க உருவங்களாக மூவருமே என்ன நின்ற - மும்மூர்த்திகளே (முக்கியமானவர் என்னும் படியிருக்கிற- பிரம்மா. திருமால் -சிவன் என்ற மூன்று உருவங்கள் என்னும் படியாக இருக்கின்ற.

இமையவர்தம் திருஉரு- ப்ரம்மா, விஷ்ணு, ருத்ரர் களுடைய தன்மைகளை- கடவுள்களின் அழகிய உருவங் களின் தன்மைகளை வேறு எண்ணும்போது--வேறாகப் பிரித்துப் பார்க்கும்போது தனித்தனியாக ஆராய்ந்து பார்க்கும் போது,

ஓர் உருவம் - ஒருவனுடைய (பிரமனின்) தன்மை
பிரம்மனுடைய உருவம்

பொன் உருவம் - பொன்னின் தன்மையை உடையது
- பொன்னின் தன்மையை உடைய உருவம்.

ஒன்று - ஒருவனான உருத்திரனின் தன்மை
- ஒருவனான சிவனின் உருவம்

செந்தீ - சிவந்த தீயின் தன்மையுடையது.
- சிவந்தநெருப்பின்தன்மையுடையது.

ஒன்று - ஒருவனான விஷ்ணுவின் தன்மை.
- ஒருவனான திருமாலின் உருவம்

மாகடல்
உருவம் - பெரிய கடலின் தன்மையை உடையது. நீலநிறமுடைய பெரிய கடலின் தன்மையை உடையது.

ஒத்துநின்ற - சேர்ந்து நிற்கின்ற

மூவுருவும் - மூன்று தத்துவங்களின் தன்மைகளையும் சேர்ந்த நிலையில்.

கண்ட போது - (ப்ரமாணத்தாலே) ஆராய்ந்த போது பார்க்கும் போது

பார் உருவில் நீர் எரி, கால் விசும்புமாகி கடினமான பூமி, நிலம், அக்னி-காற்று ஆகாயம். ஆகியவற்றைப் படைத்தும் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்று பஞ்ச பூதங்களாகவும்.

பல்வேறு சமயமுமாய் : பலவாய், வேறுபட்ட நிலைகளையுடைய உலகைப் படைத்தும், பலவான வேறுபட்ட சமயங்களின் தத்துவங்களாகவும், பல்வேறு உலகங்

களாகவும். பரந்து நின்ற அனைத்திலும் வியாபித்து நின்று விளங்கும்.

பரந்து நின்ற இவையாவுமாகப் பரந்து நின்ற,

ஆம் சோதி - பரஞ்சோதி

ஒன்று - ஒருவனே, இவையாவுமாகப் பரந்து நின்ற பரஞ்சுடர் ஒன்று. ஒன்றேயாகும். அப்படி நின்ற முகில் உருவம் எம்மடிகள் உருவந்தான். நிலமேக சியாமள வண்ணமாக நின்ற எங்கள் தலைவன் ஸ்ரீமந் நாராயணனின் உருவமேயாகும்.

பொழிப்புரை : பிரம்மன் சிவன் விஷ்ணு ஆகிய பிறப்பு, இறப்பு, காப்பு என்ற மூன்று தத்துவங்களாகவும், நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்று பஞ்ச பூதங்களாகவும், பல்வேறு உலகங்களாகவும் பரந்து நின்றது நீலமேக வண்ணனாகிய ஸ்ரீமந் நாராயணனின் திருவுருவமேயாகும்.

விளக்கவுரை:

பார் உருவி(ல்) நீர் எரி கால் விசும்புமாகி

1. பார்-பூமி (உலகம்) நீர்-தண்ணீர், எரி-நெருப்பு, கால்-காற்று விசும்பு- ஆகாயம்

கடினமான, உருவமுள்ள, மண்ணாகவும் (நிலமாகவும், பூமியாகவும், உலகமாகவும்) மற்றும் திடமான உருவமில்லாத நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்ற ஐந்து இயற்கைக் கூறுகளை (பஞ்ச பூதங்கள்) உண்டாக்கி, அவைகளில் நீக்கமற நிறைந்திருப்பவனும்.

2. உருவில் பார், நீர், எரி, கால், விசும்பாகி

காணத்தக்க- கண்களால் பார்க்கக் கூடிய
பஞ்சபூதங்களைத் தோற்று வித்து அவற்றைத் தன்
உருவமாகவும் அவையாவற்றிலும் நிறைந்தும்
(சமஷ்டி ஸ்ருஷ்டி)

பல்வேறு சமயமாய் - பலவாய வேறுபட்ட சமயத்தையுடைத் தாயிருக்கும் உலகத்தைத் தோற்றுவித்து (ஸ்ருஷ்டித்து) இது வியஷ்டி ஸ்ருஷ்டி யாகையால்-எண்ணிலடங்காத ஆத்மாக் களைத் தோற்று விப்பதால் இது 'பல்' எனப்பட்டது.

வேறு படுதலாவது, தேவதைகள் ஆராதிக்கப்படுப வராகவும்,மனிதர்கள்ஆராதிப்பவர்களாகவும் மற்ற பொருள்கள் ஆராதனைக்குப் பயன்படும் பொருள்.

பரந்து: பரக்கையாவது, தோற்றுவித்த எல்லா பொருள் களிலும் அவற்றின் அந்தராத்மாவாக விளங்கிநிற்பது.

ஏருருவில்-உலகமனைத்தும் அவனது உடல் என்றதால் உரு என்று சொல்லாமல், தேவர் முதலானோர்களுடைய உடலைச் சொல்கிறது. தாழ்ந்தவராகையால் கைவிடத் தக்கவரான சம்சாரிகளை ஏருரு என்று சொல்லலாமா என்றால் 'மோட்சத்தை அடைய விரும்புபவர்களுக்கு இந்த உடல்கள் ஒரே நேரத்தில் கைக்கொள்ளத் தக்கனவாகவும், அஞ்சப்பட வேண்டியவையாகவும் இருக்கும். இந்த சரீரங்கள் கர்மபலனாக வருவன என்று எண்ணினால் பயப்பட வேண்டியவையாகவும் இவை எம்பெருமானுக்கும் சரீரமாயிருக்கும் என்றால் கைக்கொள்ளத் தக்கவையாய் இருக்கும்.

மூவருமே என்ன நின்ற: பிரமன், விஷ்ணு, சிவன் என்ற மூவருமாகத் தான் ஒருவனே நின்று, நாராயணன் ஒருவனே

பிரமன், விஷ்ணு சிவன் எனும் பெயர்களுடன் முறையே படைத்தல் காத்தல் அழித்தல் ஆகிய செயல்களை செய்கிறான்- *(விபு.1.266)*

இமையவர் தம் திருஉரு வேறெண்ணும் போது : அப்படி அவன் மூவராகி நின்ற தேவர்களின் அழகிய உருவங்களின் வேறுபாடுகளைப் பிரித்துப் பார்க்கும் போது, (பிரித்துப் பார்க்க வேண்டிய தேவை என்ன வென்றால்.) இந்த மூன்று உருவங்களில் எந்த உருவம் பெரிய உருவம் என்பது நோக்கமல்ல. ஒருவனே மூவனாக நிற்கின்றான். அந்த ஒவ்வொரு உருவிலும் வேறுபட்ட தன்மைகளைக் காட்டு கின்றான். அப்படி அவன் காட்ட நாம் பார்க்கும் வேற்றுமைகள் என்ன என்று ஆராய்ந்து பார்க்கும் போது

ஒருருவம் பொன்னுருவம்-படைக்கின்ற பிரமனின் உருவம் பொன்னிறமாக, பொன்னை ஒத்த திருஉருவாகும். (பொன்னுருவாய் என்று முதல் பாசுரத்தில் குறிப்பிட்ட) அந்த உருவத்தில்,

ஒன்று செந்தீ-சிவனாக இருக்கின்ற உருவம் செந்தழலைப் போன்று -எரிகின்ற நெருப்பைப் போல உள்ளது. அனலுருவாய் என்று முதல்பாசுரத்தில் குறிப்பிட்ட உருவம், சிவனாக இருக்கின்ற ஊழித்தீயைப் போன்ற அனலுருவம்.

ஒன்று மாகடலுருவம்: கடலின் தன்மை , இவ்வுருவம் எல்லா ஜீவராசிகளையும் தன்னுள்ளே அடக்கி வைத்திருக்கின்ற தன்மை நீரையுடையது. அதனையே புனல் உருவாய் என்று முதற் பாடலில் ஆழ்வார் பாடியது. இதனுடைய நிறம் எப்படி இருக்கும் என்றால் நீருக்கு சொந்தமாக நிறம் இல்லை. கடல் நிறத்தையோ,ஆகாயத்தையோ அல்லது அதனில் மிதந்து

வருகின்ற மேகத்தின் நிறத்தையோ அது பிரதி பலிக்கின்றது. அந்த நிறம், நீலமேக சியாமள வர்ணன் என்றும் அழைக்கப் படுகின்ற திருமாலின் நிறம்.

ஒத்து நின்ற மூவுருவும் கண்ட போது: மூவுருவங்களின் வேறுபாடுகளை ஆராய்ந்து பார்க்கையில் இந்த மூன்றும் ஒரே உருவிலிருந்து வந்த மூன்று (பொன்னுருவாய், புனலுருவாய், அனலுருவில் திகழும்) தன்மைகளைக் கொண்டனவாக இருக்கின்ற தன்மைகளை ஆழ்வார் பாசுரமட்டுமின்றி வேதம் உபநிடத்துக்கள் போன்ற பிரமாணங்கள் தருகின்ற தத்துவங்களை ஆராய்ந்த போது.

சோதி ஒன்றாம் : இந்த மூன்று உருவங்களுக்குள்ளும் ஒருவனே ஆத்ம ஜோதியாக இருக்கிறான். நாராயணனாகிய பரஞ்சோதியே மற்ற இருவரையும் படைப்பவனாகவும் அவர்களை உடலாகக் கொண்ட ஆன்மாவாகவும் இருக்கிறான்.

ஏகோஹவை நாராயண ஆஸீத் ந ப்ரஹ்மா நேசாந:
நேமே த்யாவா ப்ருதிவீ. (மஹோபநிஷத்1)

ஊழிப் பெருவெள்ளக்காலத்தில் நாராயணன் ஒருவனே இருந்தான். பிரம்மாவும் இல்லை. சிவனும் இல்லை. பூமியும் சுவர்க்கமும் இல்லை.)

ஏஷ ஸர்வபூதாந்த ராத்மா அபஹதபாப்மா திவ்யோ
தேவ ஏக நாராயண: (ஸுபால-1)

எல்லாப் பொருள்களின் உள்ளிருந்தும் அப்பொருள் களின் மாசுபடாதவன். பரம பதத்திலிருக்கும் தேவனான நாராயணன் ஒருவனே. என்று ஸுபாலோபநிஷத்தில் ஸ்ரீமந் நாராயணனை எல்லாப் பொருள்களுக்கும் அந்தராத்மா

வென்று கூறுகையாலே 'ஸர்வ' என்று சொல்லில் எல்லா தேவர்களும் மனிதர்களும் அடக்கமாகிறார்கள்.

ஆம் சோதி:என்று நாராயணனைக் குறிப்பிடுகையினால் இந்த சோதிதான் மற்ற சோதிகளாக ஆகின்றது.

நாராயணபரம் ப்ருஹம தத்வம் நாராயண : பர
நாராயணோ பரோஜ்யோதிராத்மா நாராயண: பர:
(தை-நா: 11)

நாராயணனே பரப்ரஹ்மம், நாராயணனே பரதத்துவம்
நாராயணனே பரஞ்சோதி நாராயணனே பரமாத்மா. என்று
தைத்திரீய நாராயணவல்லியிலும்
ஜ்யோதிஷாம் ஜ்யோதி (ப்ருஹ. 4.4.16)

ஒளிகளுக்கெல்லாம் ஒளியானது என்று ப்ருஹ தாரண்ய உபநிடதத்திலும், நாராயணனாகிய பரஞ்சோதி சோதிகளுக் கெல்லாம் சோதி.

நாராயணன் படைத்தான் நான்முகனை. நான் முகனும்
தான் முகமாய் சங்கரனைத் தான் படைத்தான் என்று
நான்முகன் திருவந்தாதியில் திருமழிசைப்பிரானும்
மூவரில் முதல்வனாய ஒருவனை-(திருக்குறுந்தாண்டகம் -6)

என்று திருமங்கையாழ்வரும் பாடிய பாசுரங்களிலும் **முகிலுருவம் எம்மடிகள் உருவம் தானே:** எனது ஸ்வாமியான ஸ்ரீமந்நாராயணன் உருவம் கருத்த மேகத்தின் நிறத்தை ஒத்திருக்கும். கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெய் உண்டவாயன் *(அமல 10)*

பின்னை வண்ணம் கொண்டல் வண்ணம்-
(பெரிய திரு.-498)

என்று இவ்வாறாக கார்மேக வண்ணனாகியவன் நாராயணன்-

படைத்தல்-காத்தல்-அழித்தல் என்று மூன்று தொழில் களை அதற்காக அவனால் படைக்கப்பட்ட அவனே ஆகிய பிரம்மா விஷ்ணு, சிவன் என்று மூவராக நின்று, அவர்களைத் தன் உருவாகக் கொண்ட தால், அவர்களுக்கு அந்தராத்மா வாகிய பரஞ்சோதியாகி தானே நின்றான் என்று இப்பாசுரத்தில் ஆழ்வார் விரிவாக எடுத்துரைக்கின்றார்.

மூன்றாம் பாசுரம்

திரு வடிவில் கருநெடுமால் சேயன் என்றும்
திரேதைக்கண் வளையுருவாய்த் திகழ்ந்தான் என்றும்
பெருவடிவில் கடலமுதம் கொண்ட காலம்
பெருமானைக் கருநீல வண்ணன் தன்னை
ஒருவடிவத் தோருருவென் றுணர லாகா (து)
ஊழிதோ றூழிநின் றேத்தல் அல்லால்
கருவடிவிற் செங்கண்ண வண்ணன் தன்னை
கட்டுரையே யாரொருவர் காண்கிற் பாரே.

பதவுரை:

திருவடிவில் - *சிறந்த திருமேனி விஷயத்தில்-அழகிய திருமேனியின் வண்ணத்தை பற்றி--... இலக்குமி குடிகொண் டிருக்கும் மேனியின் வண்ணத்தை*

கருநெடுமால்- *கருமையான காளமேகம் போன்ற வண்ணத்தைக் கொண்டவனாய், அடியவர்களிடத்தில் மிகவும் அன்பு கொண்டிருக்கும் எம்பெருமான்.*

சேயன் என்றும் *சிவப்பு நிறத்தை உடையவன் என்றும்- செம்மை யானவன் என்றும்*

திரேதைக் கண் : *திரேதா யுகத்தில் - இரண்டாவது யுகமான திரேதாயுகத்தில்*

வளை உருவாய்த் திகழ்ந்தான் என்றும் : சங்கம் போன்ற வெண்மை நிறத்தை உடையவனாகவும்

பெருவடிவில் கடல் அமுதம் கொண்ட காலம் - பலவடிவுகளை உடையவனாய், திருப்பாற் கடலிலிருந்து அமுதம் எடுத்த க்ருத யுகத்தில், பலவடிவுகளுடன், திருப்பாற் கடலைக் கடைந்து தேவர்களுக்காக அமுதத்தைக் கடைந் தெடுத்த கூர்மாவதார காலமாகிய கிருதாயுகத்தில்.

பெருமானைக் கருநீல வண்ணன் தன்னை : கரிய நீலநிறத்தை இயல்பாகக் கொண்டவனாகிய பெருமானை-சர்வேஸ்வரனை - எம்பெருமானாகிய நாராயணனை,

ஊழிதோறு ஊழிநின்று ஏத்தல் அல்லால்-இப்படி ஒவ்வொரு கல்பத்திலிருந்து துதிப்பது ஒழிய இப்படி ஒரு ஊழிக்காலம் தொட்டு மறு ஊழிக்காலம் வரை வருகின்ற நான்கு யுகங்களிலும் வெவ்வேறு வண்ணத்தில் நின்று காட்சியளிப்பது இல்லாமல்,

ஒருவடிவத்து ஓர் உரு என்று- இவனுக்கு ஒரு வடிவம் நிறம் என்று

உணரலாகாது- உறுதியாகச் சொல்ல முடியாது. அறிய இயலாது.

கருவடிவில் செங்கண்ண வண்ணன் தன்னை: நீலவண்ண திருமேனியையும் சிவந்த கண்களையும் உடைய அப்பெரு மானை, கரிய திருமேனியும் சிவந்த கண்களையும் உடைய எம்பெருமானாகிய நாராயணனை, (திருமாலை.)

கட்டுரையே - (அனைவரும்) பேசிப்போவதே தவிர -பலவிதமான அவனது கதைகளை அவனது அடியவர்கள் பேசித் திரியலாமே யொழிய.

யார் ஒருவர் காண்கிற்பாரே- *(அடியேன் அவன் காட்டக் கண்டது போலே)* வேறு எவர் காணமுடியும். என்னைப் போன்ற நித்ய சூரிகளைத் தவிர வேறு யாராலும் காண முடியாது.

பொழிப்புரை:

ஆழ்வாரைப் போன்ற நித்ய சூரியகளுக்கு மட்டும் தன்னுடைய கரிய திருமேனியையும் செம்மை நிற கண் களையும் காட்டிக் கொடுத்த எம்பெருமான், மற்றவர்களால் இவனுக்கு இதுதான் வடிவம் இதுதான் நிறம் என்று அவர்களால் உறுதியாகச் சொல்ல இயலாதபடி, வெவ்வேறு

யுகங்களிலும் அவதாரங்களிலும் சிவப்பு, வெண்மை, நீலம் என்று அவனைப் பற்றியே பேசி மகிழ்வதற்காகப் பல வடிவங்களையும், பல நிறங்களையும் கொண்டவனாகக் காட்டுகிறான் என்பது இப்பாடலின் கருத்து.

விளக்கவுரை:

திருவடிவில்:-அழகிய உருவம் என்றோ திருவாகிய இலக்குமியே அநுபவிப்பதற்குரிய வடிவம் என்றோ, அல்லது 'அகலகில்லேன் இறையுமென்று அலர்மேல் மங்கை உறைமார்பா' என்று நம்மாழ்வார் அனுபவித்தது போல திருஉடன் கூடிய வடிவம் என்றோ கொள்ளலாம்.

கருநெடுமால்: காளமேகம் போன்ற கருத்த வடிவை உடைய எம்பெருமான்-நெடுமால் என்பதற்கு மிகப் பெரியவன் என்றும் அன்பினால் வரும் மயக்கமாய் அடியாரிடம் மயங்கி நிற்பவன். தன்னையே மாற்றிக் கொண்டு அடியார்க்கு முகங்காட்டுபவன்.

சேயன் என்றும்: (திருவாகிய இலக்குமி) இவன் மார்பில் உறைகின்ற காரணத்தினால்) செம்மை நிறத்தைக் கொண்டவனாகவும். இவன் அவளை மிகவும் உகப்பதனால் செம்மை

நிறத்தை ஏற்றுக்கொண்டான் என்றும் கொள்ளலாம் **திரேதைக்கண்:-**திரேதா யுகத்தில்,

வளையுருவாய்த் திகழ்ந்தான் என்றும்: இக்காலத்தில் மனிதர்கள் சத்வ குணத்தைக் கொண்டவர்களாக இருப்ப தால் அவர்கள் வெண்மை நிறத்தை உகந்திருப்பார்கள். ஆகையாலே அவர்களுடைய விருப்பத்தை ஒட்டி வெண்மை நிறத்தை உடைய திருமேனி கொண்டவனாக இருந்தான்.

''சங்க வண்ண அன்னமேனி சார்ங்க பாணி
அல்லையே'' என்று திருமழிசைப் பிரானும்
'முன்னை வண்ணம் பாலின் வண்ணம் முழுதும் நிலை நின்ற
பின்னை வண்ணம் கொண்டல் வண்ணம் வண்ணம் எண்ணுங்கால்
பொன்னின் வண்ணம் மணியின் வண்ணம் புரையும் திருமேனி
இன்ன வண்ணம் என்று காட்டீர் இந்தளூரீரே!''

என்று திரு இந்தளூர்ப் பெருமாளை ஆழ்வார் மங்களா சாசனம் செய்வதாலும் முன்பிருந்த நிறம் வெள்ளை

நிறம் என்பது பொருந்தும். ஆனால், திரேதாயுகத்திற்கும் முன்னைய யுகம் க்ருத யுகம். அந்த யுகத்தில் அவன் சங்கைப் போன்ற வெள்ளை நிறத்தில் இருந்ததாக பூர்வா சார்யர்கள் வியாக்யானம்.ஆனால் என்றும், என்றும் என்று எண்ணும்மையை ஆழ்வார் பயன்படுத்துவதனால் இந்த

இடத்தில் அடியைப் பதம் பிரித்து வேறு ஒரு அடியின் பதமாகக் கொள்வதை விட, இதற்கு வேறு ஒரு விளக்கம் தருவது சாலச்சிறந்ததாக இருக்கும் என்பது அடியேனுடைய தாழ்மை யான அபிப்ராயம். என்றும் என்றும் என்றும் பதங்களை ஊழிதோறூழி நின்றேத்ததல்லால் என்றும் தொடரோடு கூட்டிப் பொருள் கொள்ள வேண்டும் என்பது புத்தூர் ஸ்வாமிகளின் அபிப்பிராயம் (திருநெடுந்தாண்டக விவரணம் -பக்கம் 46)

பாசுரத்தின் பின்னொரு அடியில் ஊழிதோறூழி நின்று ஏத்தலல்லால் என்று பாசுரவசனம் இருப்பதால் அதன் அடிப்படையில் ஒரு ஊழிக்காலம் என்பது க்ருத, த்ரேதா, துவாபர, கலி என்று நான்கு யுகங்களைக் கொண்டது. ஒரு ஊழிக்காலத்தின் திரேதா யுகம், அதற்குப் பின்னால் வரும் ஊழிக் காலத்தில் வரும் க்ருத யுகத்தை விட முற்பட்ட காலம் என்பதால் அந்த முற்பட்ட ஊழிக்காலத்தின் 'திரேதைக் கண் வளையுருவாய் திகழ்ந்தான்' அதற்குப் பிற்பட்ட ஊழிக்காலத்தில் நடந்த கிருத யுகத்தில்,

பெருவடிவிற் கடலமுதம் கொண்டகாலம்: பெருவடிவிற் கடலமுதம் கொண்ட காலம் என்று கிருதயுத்தைக்குறிப்பது திரேதைக் கண். என்று முன்பு குறிப்பிட்டது போல அல்லாமல் குறிப் பிட்டது ஒரு நிகழ்வின் அடிப்படையில் அப்போது நிகழ்வு நடந்த காலத்தைக் குறிப்பது இப்பொழுதும் வழக்கத்தில் தானே இருக்கிறது. உதாரணமாக விக்கிரம் சகாப்தம் என்றும் சாலிவாகன சகாப்தம் குறிக்கும் வழக்கத்தை ஒட்டி ஆழ்வாரும் க்ருதகாலம் என்று குறிப்பிடாமல், கடலமுதம் கொண்ட காலம் என்று ஒரு க்ருதயுகத்தை ஆழ்வார், துர்வாசருடைய சாபத்தினால்

செல்வமிழந்தவர்களாய் அமுதத்தை இழந்து ஏழைகளாகி தேவர்கள் யாவரும் திருப்பாற்கடற்கரையில் வாசு தேவனைத் துதித்தபோது அவன் அவர்களுக்காக கூர்மாவ தாரம் எடுத்து பாற்கடலைக் கடைந்து தேவர்களுக்காக அமுதத்தைப் பெற்ற காலம் என்று க்ருதயுகத்தை ஆழ்வார் குறிப்பிடுகிறார். 'கொண்ட' என்பதற்கு அவன் தேவர் களுக்காக அமுதத்தைத் தனக்காக பெரியபிராட்டியாகிய ஆராஅமுதைக் கொண்டான். *(விண்ணவர் அமுதுண அமுதில் வரும் பெண்ணை உண்ட பெருமானே' (பெரியதிரு- 6-10-9)* என்று ஆழ்வாரே பாடுவதைப் போல் கடலமுதமும் கொண்டகாலம் என்பதற்கு தேவர்களுக்காகவும் தனக்காகவும் பாற்கடலைக் கடைந்த காலம்.

பெருமானை: இப்படி அடியார்களுக்காகக் கொள்ளும் திருமேனிகளுக்கு அளவில்லை. யுகங்கள் நாலானால் திருமேனியும் நான்காகத் தான் இருக்கும் என்றால் மாறி மாறி வரும் யுகங்களுக்கு எண்ணிக்கை யில்லாமையால் திருமேனிகளும் எண்ணிக்கையில் அடங்காது.

பெருவடிவில் என்பதற்கு கணக்கில்லாத வடிவுகளில் என்றும் பெரிய ஆமை வடிவ மெடுத்து மந்தரமலை கடலில் முழ்காமல் காத்தும் மற்றொரு வடிவில் தேவாசுரர்களுக்குத் தெரியாமல் கையால் மேலேயிருந்து மலையை அழுத்திக் கொண்டிருந்தான். இதைத் தவிரவும் தேவர்களிருக்கும் பக்கம் ஒரு வடிவையும் அசுரர்கள் இருக்கும் பக்கம் மற்றொரு வடிவையும் எடுத்துக்கொண்டு தானும் கடல் கடைந்தான். *(வி.பு.1.9.90)*

தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் உடன் புகுந்து அவர்களுக்கு பலமளித்து வந்தான்.

கருநீல வண்ணன் தன்னை: தேவர்களுடைய வேண்டு கோளுக்கு இணங்கிக் கடல் கடைந்த காலத்தில் அவன் பாற்கடலிலேயே இருந்ததால், அவன் தன்னுடைய இயல்பான கருநீல நிறத்திலேயே இருந்தான். இங்குக் கரு என்பது நீலத்தின் தன்மையை அதிகப்படுத்துவதற்காக சேர்க்கப் பட்டுள்ளது. அதனால் கருப்பு என்ற நிறத்தை இங்கே குறிக்காது.

ஒரு வடிவத்தோருரு வென்று உணரலாகா(து): எம்பெருமான் அடியார்களின் விருப்பத்திற்கேற்ப நிறத்தையும் திருமேனி யையும் 'தமருகந்தது எவ்வுருவம் அவ்வுருவம் தானே' (முதல் திருவ. 44) என்கிறபடியாக மாற்றிக் கொள்வான். ஆகையால் 'இதுதான் அவனுடைய வடிவு இதுதான் அவனுடைய நிறம்' என்று எவராலும் அறுதியிட்டுக் கூறமுடியாது. அவதாரங்கள் தோறும், மீன், ஆமை, பன்றி என்று தன் உருவங்களையும் வெள்ளை, சிவப்பு, நீலம் என்று தன்னுடைய நிறத்தையும் எடுத்து, இதுதான் அவனுடைய நிறம், இதுதான் அவனுடைய வடிவம் என்று சொல்ல முடியாதவனாக இருக்கிறான்.

ஊழி தோறுழி நின்று ஏத்தலல்லால்: ஒவ்வொரு யுகத்திலும், அவன் கொண்ட பல வகைப் பட்ட வடிவங்களையும், நிறவேறுபாடுகளைய்மே போற்றிப்புகழ்வதே நம்மால் செய்ய முடியும். இவனைத் துதித்துக்கொண்டிருக்கலாமே தவிர அளவிட்டு அறிய முடியாது.

கருவடிவில் செங்கண்ண வண்ணன் தன்னை: எம்பெருமான் தமக்குக் கறுத்த நிறத்தையும் சிவந்த கண்களையுடைய வடிவத்தையும் காட்டினான்.

(கண்ணார் கடல் போல் திருமேனி கரியாய் (பெரிய. திருமொழி) ஆழ்வார்க்கு எந்தக் குறிப்பிட்ட நிறத்திலோ

வடிவத்திலோ ஈடுபாடு இல்லாமல் அவனிடம் சரணாகதி அடைய வேண்டும் என்ற விருப்பமே மேலோங்கி இருந்தமையால் எம்பெருமான் அவருக்கு எல்லோரும் விரும்பத் தக்கதான தனது இயல்பான வடிவத்தையும் நிறத்தையும் சிவந்த கண்களையும் காட்டி அருளினான்.

கட்டுரையே யாரொருவர் காண்கிற்பாரே:

யாரொருவர் கட்டுரைப்பார். யாரொருவர் காண்கிற் பார் என்று முன்னும் பின்னும் கூட்டிப் பொருள் கொள்ளலாம். நான் அவனைப் பார்த்தைப் போல் யார்ப் பார்க்க முடியும். நான் பேசினது போல் யார் பேசமுடியும்? என்றும் எல்லோராலும் அவனுடைய வடிவத்தையும் நிறத்தைப் பற்றியும் பேசலாமே தவிர என்னைப் போல் எவரேனும் காண முடியுமோ நான் கண்ட காட்சியை வேதங்களும் காணவில்லை. மற்ற ஆழ்வார்களும் காண வில்லை. அதனால் பரகதி அடைவதற்குத் தாமே வழிகாட்ட முடியும் என்பது அரும்பத உரை.

இப்பாசுரத்தில் சாத்வீகர்களுக்கு உரிய நிறம் வெண்மை, ரஜோ குணமிக்கவர்களுக்கு செம்மை நிறமும், தாமச குணம் மிக்கவர்கள் நீலநிறத்தையும் விரும்புவார்கள். கிருத யுகத்தில் சாத்வீகர்கள் அதிகமாக இருந்த படியால் அவர்கள் விரும்புகின்ற வெள்ளை நிறத்தில் எம்பெருமான் அவர் களுக்குக் காட்சி யளித்தான். திரேதாயுகத்தில் ரஜோ குணம் மிக்கவர்கள் அதிகமாக இருந்ததால் எம்பெருமான் செம்மை

நிறத்தில் காட்சியளித்தான். கலியுகத்தில் உள்ளவர்கள் கருப்பு நிறத்தையும் துவாபரயுகத்தில் சிவப்புமில்லாமல் கருப்புமில்லாமல் இடைப்பட்ட பசுமை நிறத்தை விரும்புவார்கள். அதனால் பச்சை நிறத்தில் காட்சியளித்தான்

என்பது திருமழிசை பிரானின் திருச்சந்த விருத்த பாசுரத்தில் இருந்து அறிகிறோம். (பச்சைமா, மலைபோல் மேனி பவளவாய் கமலச் செங்கண்' என்றாரல்லவா தொண்டரடிப் பொடி ஆழ்வார் அதை யூகத்திற்கு விட்டு வைத்தார்.

பாலினீர்மை செம்பொனீர்மை பாசியின் பசும்புறம்
போலும் நீர்மை பொற்புடைத் தடத்து வண்டு
விண்டுலாம்
நீலநீர்மை என்றிவை நிறைந்த காலம் நான்குமாய்
மாலின் நீர்மை வையகம் மறைத்தது என்ன நீர்மையே.
(திருச்சந்த-44)

பாசுரம் : 4

இந்திரர்க்கும் பிரமர்க்கும் முதல்வன் தன்னை
இருநிலம் கால் தீநீர் விண் பூதமைந்தாய்
செந்திறத்ததமிழோசைவடசொல்லாகித்
திசைநான்குமாய் திங்கள் ஞாயிறாகி
அந்தரத்தில் தேவர்க்கு மறிய லாகா
அந்தணனை அந்தணர்மாட் டந்தி வைத்த
மந்திரத்தை மந்திரத்தால்மறவாதென்றும்
வாழுதியேல் வாழலாம் மடநெஞ்சமே

பதஉரை :

மடநெஞ்சமே:எனக்கு வசப்பட்ட நெஞ்சமே! மட நெஞ்சமே- முற்றறிவு பெறாத என்னுடைய நெஞ்சே

இந்திரர்க்கும் பிரமர்க்கும் முதல்வன் தன்னை: இந்திரனுக்கும் பிரமனுக்கும் காரணமாயிருப்பவனை இந்திரனுக்கும் பிரமனுக்கும் முற்பட்டவனை, தலைவனை.

இருநிலம், கால், தீ, நீர், விண், பூதம் ஐந்தாய்:பெரிய பூமி, காற்று, நெருப்பு, நீர் மற்றும்ஆகாயம் என்று ஐந்து பூதங்களாகவும்அவற்றின் உள்ளுறைபவனாக

செந்திறத்த தமிழோசை வட சொல்லாகி: (தன்னைத் தெளிவாகக் காட்டும்) செம்மையை உடைய தமிழ் மறைகளையும்

வடமொழி வேதங்களையும் வெளிப்படுத்தி. செம்மைமிக்க தமிழ் மொழியாகவும், வடசொல்லாகவும்

திசை நான்குமாய்: நான்கு திக்குகளிலும் உள்ள பொருள்களின் உள்ளுறைபவனாகி திங்கள் ஞாயிறாகி சந்திரனுக்கும் சூரியனுக்கும் உள்ளுறைபவனாகவும்

அந்தரத்தில்: -அப்படி உள்ளுறைபவனாக இருக்கும், மேலே இருக்கின்ற உலகங்களில் இருக்கின்ற

தேவர்க்கும் அறியலாகா அந்தணனை:

தேவர்களாலும் அறிய முடியாத தூய்மையுடையவனை. தேவர்களால் அவர்கள் முயன்றாலும், அறிந்து கொள்ள முடியாதவனை.

அந்தணர்மாட்டு அந்திவைத்தை மந்திரத்தை:

அந்தணர்களின் செல்வமான வேதத்தில் முடிகளிலே வைக்கப் பட்டிருக்கும். ரகஸ்யப் பொருளான ஸர்வேச்வரனை, அந்தணர்க்காக மறைகளில் மறைத்து வைக்கப் பட்டிருக்கும் மறைபொருளான எம்பெருமானை

மந்திரத்தால்: திருமந்திரத்தில்

மறவாது வாழுதியேல்: மறக்காமல் அனுபவித்தால்

என்றும் வாழலாம்: எப்பொழுதும் பரமபதத்தில் மிகழ்ச்சியுடன் இருக்கலாம்.

பொழிப்புரை:

இந்திரன், பிரமன் முதலாகிய தேவர்களைப் படைத்து அவர்களுக்குத் தலைவனாக இருப்பவனை, பஞ்ச பூதங்களையும் படைத்து அவற்றிலும் உள்ளுறைபவனாகவும், செம்மை மிக்க தமிழ் மொழியில் சொல்லப்பட்ட, அருளிச்

செயல்களிலும் வடமொழியில் சொல்லப் பட்ட வேதங்களிலும் பரந்து நிற்பவனாய், சந்திரனாகவும், சூரியனாகவும் அந்தணர்களின் செல்வம் என்று கருதப்படுகின்ற மறைகளில் மறைமுகமாக சொல்லப்பட்டிருக்கின்ற நாராயணனை, திருமந்திரத்தால் மறவாது போற்றிக் கொண்டிருந்தால், எப்பொழுதும் மகிழ்ச்சியுடன் பரமபதத்தில் வாழலாம் என்று ஆழ்வார் தன்னுடைய நெஞ்சுக்குச் சொல்வதாக இந்தப் பாசுரம் அமைகிறது.

விளக்கவுரை:

முதல் பாசுரத்தில் தாம் எம்பெருமானுக்கு அடிமைப் பட்டவர் என்றும், இரண்டாம் பாசுரத்தில் அவனைத் தவிர வேறு யாருக்கும் அடிமைப்பட்டவரல்ல என்றும், மூன்றாவது பாசுரத்தில் அவனுடைய நீர்மையைப் பற்றியும் பேசினார். அப்படிப்பட்ட நாராயணனை எப்பொழுதும் பிரியாமல் வாழ்வதற்கு வழியாக, திருமந்திரத்தை மறக்காமல் சொல்லிக் கொண்டிருக்க வேண்டும் என்று இந்தப்பாசுரத்தில் கூறுகிறார்.

ஏகோ ஹவை நாராயண ஆஸீத் நப்ரஹ்மா நேஸாந:
நேமே த்யாவாப்ருதிவீ (மகோபநிஷத்-1)

ஊழிப்பெருவெள்ளக்காலத்தில் நாராயணன் ஒருவனே இருந்தான். பிரமனும் இல்லை. சிவனுமில்லை. பூமியும், சுவர்க்கமும் இல்லை.

எல்லா ப்ரமாணங்களும் நாராயணனே இவ்வுலகிற்கு காரணன் என்று அந்த சொல்லுக்கு முதன்மை கொடுப்பதற்கு காரணம், நித்ய விபூதியில் எல்லோரும் தாங்கள் நாராயணனுக்கு அடியார்கள் என்று அறிந்தவர்களாதலால்

அவர்களுக்கு எந்த ப்ரமாணமும் தேவையில்லை. ஆனால் இவ்வுலகில் தாங்கள் நாராயணனுக்குக் கடமைப்பட்டவர்கள் என்று அறியாதவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு அதற்கான ப்ரமாணங்கள் தேவையாகிறது. அதனாலே ஆழ்வார் அதற்கு ப்ரமாணமாக, உன்னைப் பெற்றவனை அறிந்து கொள்வாயாக என்கிறார்.

இந்திரர்க்கும் பிரமற்கும் முதல்வன் தன்னை:

இரண்டாவது பாட்டில், மூவருவும் கண்டபோது ஒன்றாம் சோதி என்ற அடியில், ஒன்று ஆம் சோதி, சோதி என்று பிரித்து பொருள் சொல்லப்பட்டது. அப்படிப் பொருள்கொள்வதே பொருத்தம் என்பதை இப்பாட்டில் தெளிவு படுத்துகிறார். இந்திரன் படைக்கப்பட்டவன் என்பது எல்லோரும் அறிந்த ஒன்று. பிரமன் மும்மூர்த்திகளில் முதலில் வைத்துப் பேசப்படுவதால், அவன்தான் பரம்பொருளோ என்ற சந்தேகம் வராதபடி படைக்கப்பட்ட இந்திரனை முதலில் வைத்து அவனுடன் சேர்த்து பிரமனையும் வைத்து, அவனும் படைக்கப்பட்டவன், படைத்தவன் நாராயணன் என்று சந்தேகமின்றி 'இந்திரர்க்கும் பிரமற்கும் முதல்வன் தன்னை' என்று பல இந்திரர்களும் பல பிரம்மாக்களும் படைக்கப் பட்டார்கள் என்னும் பொருள் படும்படி இரண்டு பெயர்களையும் பன்மையில் வைத்துப் பாடினார்.

இங்கு உருத்திரன் தான் பரம்பொருளோ என்று ஐயம் வரலாம். அவனை ஏன் சொல்லவில்லை என்றால்

'நாராயணன் படைத்தான் நான்முகனை நான்முகனும் தான் முகமாய் சங்கரனைத் தான் படைத்தான், என்று *நான்முகன் திருவந்தாதியின் முதல் பாசுரத்தில் திருமழிசைப்*

பிரானும் 'மூவரில் முதல்வனாய ஒருவனை' என்றும் திருக் குறுந்தாண்டகத்தில் ஆழ்வாரும். பிரமனுடைய பிள்ளை சிவன். அவனுயை பிள்ளை கந்தன் என்பது யாவராலும் அறியப்பட்டிருப்பதும் ஆகும்.

முதல்வன் தன்னை: தன்னைப் படைப்பவன் எவனும் இல்லாமல் இருக்கப் பெற்றவன். அவனே பிரமனுக்குள் உள்ளுறைந்து சிருஷ்டி செய்ய வைத்தவன். அதனால் 'வியஷ்டி சிருஷ்டி' என்று அழைக்கப் படுகின்ற தேவ, 'அசுர,' மானுடர்களையும், மற்ற ஜீவராசிகளைப் படைத்ததற்கும் அவனே காரணன் என்பது தன்னை என்று சொல்லால் விளக்கப்பட்டது.

இருநிலம், கால், தீ, நீர், விண் பூதம் ஐந்தாய்: முதலில் இவனால் செய்யப்பட்ட சமஷ்டி சிருஷ்டி என்று அழைக்கப்படுகின்ற பஞ்ச பூத படைப்பைப் பின்னால் சொல்லி, பின்னால் நடந்த இவர்களுடைய படைப்பை முன் என்று நினைப்பதற்கு ஏதுவாக பிரமன் முதலியவர்களைப் படைத்தவன் என்ற உண்மையை முன்னே வைத்து அவைகளைப் படைப்பதை பின்னே வைத்துப் பாடுகிறார்.

பஞ்ச பூதங்களை சொல்லும்போதும் நிலம், நீர், தீ, வாயு, ஆகாயம் என்ற லய வரிசையில் சொல்லாமலும் ஆகாயம், வாயு, தீ, நீர், நிலம் என்ற படைப்பு வரிசையில் சொல்லாமல் தாறுமாறாக சொன்னதற்குக் காரணம் அசையாத பூதமான, எல்லாப் பொருள்களையும் தாங்கும், எவர்க்கும் தீங்கிழைக் காததாய் இருக்கும் காரணத்தால், இருநிலம் என்று பூமியை முதலில் சொன்னார். தீ, நீர், கால் என்னும் மூன்று பூதங்களும் இங்கு மங்கும் அலைவனவாகவும் மனிதர்களுக்கு நன்மை, தீமை இரண்டையும் செய்பவையாக இருக்கையாலே,

அடுத்தபடி முறை கெட சொன்னார். மற்ற நான்கு பூதங்களுக்கும் இடமளிக்கும் ஏற்றத்தை வைத்து ஆகாயத்தை கடைசியில் சொன்னார்.

இந்திரர்க்கும் பிரமர்க்கும் முதல்வன் தன்னை என்று அவர்களை, படைக்கப்பட்டவர்கள் அவன் படைத்தவன் என்று தெளிவாகக் காட்டியவர், பூதம் ஐந்தாய் தானே ஆனான் என்றும் பொருள்கொள்ளும் படி அவற்றையும் தான் படைத்தான் என்று பாடுகிறார்.

இருநிலம், கால், தீ ,நீர்,விண் பூதம் ஐந்தாய், திசை நான்குமாய் திங்கள் ஞாயிறாகி செந்திறத்த தமிழோசை வடசொல்லாகி இந்திரர்க்கும் பிரமர்க்கும் முதல்வன் தன்னை அந்தரத்தில் தேவர்க்கும் அறியலாகா அந்தணனை அந்தணர் மாட்டு அந்திவைத்த மந்திரத்தை மந்திரத்தில் மறவாது என்றும் வாழுதியேல் வாழலாம் மட நெஞ்சமே.

திசை நான்குமாய் திங்கள் ஞாயிறாகி :

கிழக்கு மேற்கு தெற்கு வடக்கு என்னும் நான்கு திசை களிலுள்ள எல்லாப் பொருள்களையும் படைத்து, சூரியனையும் சந்திரனையும் படைத்து, தமிழ் மறைகளையும் வடமொழியில் உள்ள வேதங்களையும் படைத்து, இங்குத் தான் தோன்றிகளாகக் கருதப்பட்ட வடமொழியில் உள்ள வேதங்களை முதலில் வைக்காமல், தமிழோசையை முதலில் வைத்துப் பாடுவது எப்படி தகும் என்றால்.

1. *ஆழ்வார் தமிழில் பாசுரங்களை எம்பெருமானால் மயர்வற மதிநலம் அருளப்பெற்று பாடிய படியாலே ஆழ்வார்கள் அருளிச் செயல்களை முதலாக வைக்கிறார்.*
2. *செந்திறத்த தமிழோசை என்று கூறுவதனாலே தான் அறிவிக்கும் பொருளைச் செம்மையாகக் கூறுவது தமிழ்*

இப்படிச் செம்மையாக கூறுவதையே தனித்தன்மையாகக் கொண்டது.

3. வடமொழியிலிருந்து தமிழ் உருவாயிற்று என்று சிலர் கூறுவது ஆழ்வார்க்கு ஒப்பானதில்லை.

4. வடமொழியை அறிந்தவர்கள் ஒரு சிலரே இருக்க, தமிழ்வேதங்கள் அனைவராலும் வேறுபாடுகள் இன்றி ஓதத்தக்கது என்றும்.

5. எல்லாப் பொருள்களையும் மறைத்துச் சொல்வதால் வட மொழியில் உள்ள வேதங்களுக்கு உபநிடதங்கள் போல் விளக்க நூல்கள் தேவைப்படுகின்றன. அருளிச்செயல் களுக்கு அது தேவையில்லை.

6. வடமொழி வேதங்களைப் போல இவைகளும் ப்ரமாணங் களாக எடுத்துக்கொள்ளத்தக்கவை.

அந்தரத்தில் தேவர்க்கும் அறியலாகா அந்தணனை: இது வரைக்கும் 'நாராயணன்' என்பதில் 'நார' என்பதின் விளக்கம் சொல்லப்பட்டது. இதற்குமேல் அயன என்பதற்கு விளக்கம் சொல்லப்படுகிறது.

அந்தரத்தில் அவனால் படைக்கப்பட்ட எல்லாப் பொருள்களிலும், ஜீவராசிகளிலும் அவன் உள்ளும் புறமும் நீக்கமற நிறைந்திருக்கின்ற நிலையில், பரமாத்மாவான நாராயணன் எல்லா அசித்துகளுக்கும் அந்தர்யாமியாகவும் ஆனால் ,அவர்களால் அறியப்படாமல் இருப்பவன் என்கிறது ப்ரமாணம். (ப்ருஹ மாத்யந்திந 5.7.72) அப்படிப்பட்ட நிலையில் தேவர்க்கும், அவர்களும் அவனால் படைக்கப் பட்டவர்கள், ஆதலால் அவர்களாலும் அறிய முடியாத வனாக இருக்கின்றான். தேவர்களாலேயே அறியமுடியா

தவன் மற்றவர்களாலே எப்படி அறியப்படுவான்?. தேவர்க்கும் அறியலாக என்பதற்கு யாவராலும் அறியப்படாத நிலையில், அவர்களுக்கு உள்ளும் புறமும் நீக்கமற நிறைந்திருககின்ற அந்தணனை, அறிவனை ஆழிப்படை அந்தணனை என்று (திருவாய் 1-7-..1) என்று நம்மாழ்வாரும். இன்னமுத வெள்ளத்தை இந்தளூர் அந்தணனை என்று (பெரிய திருமடல்-126) திருமங்கையாழ்வாரும், அறவாழி அந்தணன் என்று திருவள்ளுவரும் (திருக்குறள் 1-8) குறிப்பிட்ட படி இங்கு அந்தணன், என்ற சொல் ஆழிப்படையை உடைய நாராயணனைக் குறிக்கும்.

அந்தணர் மாட்டு அந்திவைத்த: வேதமோதும் அந்தணர் களுக்கும் அவர்களுக்கு வேதமே செல்வம் போன்றது என்பதால் அந்தணர் மாடும் அந்தணர்களுக்கான செல்வமான வேதத்தில் அந்திவைத்த மறைக்கப்பட்டு சொல்லப்படுகின்ற அல்லது அந்தணர்மாட்டு அந்திவைத்த- அந்தணர் களுக்காக (இருள்சேர் இருவினையும் சேரா இறைவன் பொருள் சேர் புகழ் புரிந்தார் மாட்டு) என்று திருவள்ளு வரும் சொல்கிறபடி வேதத்தில் மறைத்து சொல்லப்பட்டிருக்கின்ற மந்திரத்தை, மந்திரம் என்ற சொல்லிலே அறியப்படுபவனான நாராயணனை, மந்திரத்தை உருச் செய்வதனாலே அவனது பெயரைத் திருப்பித் திருப்பி சொல்லி நாம சங்கீர்த்தனம் செய்து அறியப்படுபவனை.

மந்திரத்தை- மந்திரம் என்ற சொல் திருமந்திரத்தை குறிக்குமோ எனில் இப்பாசுரத்தில் சொன்ன பொருள்கள் அனைத்தையும் சொல்லும் மந்திரம் எட்டெழுந்து மந்திரம் ஆகையால் மந்திரத்தை என்ற சொல் எட்டெழுத்து மந்திரத்தால் அறியப்படுகின்ற நாராயணனையே குறிக்கும். மற்ற இருமந்திரங்களான வாசுதேவ மந்திரமும், விஷ்ணு

மந்திரமும், மந்திரம் என்ற சொல்லால் அறியப்படலாமா எனில் அவ்விரு மந்திரங்களுக்கும் மூலமாக இருப்பது திருமந்திரம் என்பதாலும் அவை நிறைபவனைச் சொல்பவை யானதாலும் நிறைப்பவற்றை சொல்லாததனாலும் ஆழ்வாரும் நான் கண்டுகொண்டேன் நாராயணா என்னும் நாமம் *(பெரியதிருமொழி 1-1-1)* வேதங்களில் மறைத்து சொல்லப் படுபவன் நாராயணன் என்று பொருள் படும்படி இங்கு, மந்திரம் என்ற சொல் திருமந்திரத்தைக் குறிப்பிடுவதாகக் சொள்வது சிறப்பு.

மந்திரத்தால் மறவாது வாழுதியேல்:

வாயினாற் பாடி மனத்தினால் சிந்திக்க- *(திருப்பாவை-5)*

திருமந்திரத்தை வாயினால் சொல்லி, அந்த மந்திரத்தால் அறியப்படுபவனும் இருக்கின்ற பகவானை விடாமல் அநுபவித்தால் மந்திரத்தால் வாழுதியேல், மறவாது வாழுதியேல் என்று பிரித்துப் பொருள் கொள்ளாமல், மந்திரத்தை மந்திரத்தால் மறவாது என்பதற்கு இடைவிடாது ஜீவனுக்கு உடல் தொடர்பு இருக்கும் வரை இடையூறுகள் வருவதற்கு ஏதுவானதால், மறவாது அனுபவித்தால்.

வாழுதியேல்-அவன் நமக்கு உபாயமாக இருப்பான் என்று நினைத்து அநுபவத்தை இழக்காமல் அவனுடைய இனிமையிலே ஈடுபட்டு அநுபவிப்பாயானால்,

என்றும் வாழலாம்: இவ்வுலகில் இப்படி அவனை அநுபவித்தால், ஆன்மா இந்த உடலை விட்டு பிரிந்த பிறகு நித்ய சூரிகள் நடுவேயிருந்து, ஆத்மா உள்ள எல்லாக் காலமும் பகவத் அனுபவத்தைப் பெற்று வாழலாம்.

மட நெஞ்சமே: எனக்கு வசப்பட்டிருக்கும் நெஞ்சமே.

பாசுரம் 5

ஒண்மிதியில் புனலுருவி யொருகால் நிற்ப
ஒருகாலும் காமருசீர் அவுணன் உள்ளத்து
எண்மதியுங் கடந்து அண்ட மீது போகி
யிருவிசும்பி னூடுபோ யெழுந்து மேலைத்
தண்மதியும் கதிரவனும் தவிர வோடித்
தாரகையின் புறந்தடவி யப்பால் மிக்கு
மண் முழுது மகப்படுத்து நின்ற வெந்தை
மலர்புரையுந் திருவடியே வணங்கினேனே.

பதவுரை:

ஒருகால்: ஒரு திருவடி,

ஒண்மிதியில்: மென்மையான திருவடிப்பட்டவுடன்

புனலுருவி நிற்ப :ஆவரண நீரளவும் ஊடுருவி நிற்க.

ஒருகாலும்; மற்றொரு திருவடியும்

காமருசீர் அவுணன் உள்ளத்து எண்மதியும் கடந்து : விருப்பப் படும் பெருமை மிக்க மகாபலியின் நெஞ்சில் நினைக்கும் நினைவையும் கடந்து,

அண்டம் மீது போகி: அண்டத்திற்கும் மேலே போவதற்காக,

எழுந்து - கிளம்பி

இரு விசும்பினூடுபோய்: - பெரிதான ஆகாயத்தை ஊடுருவிச் சென்று

மேலை:-மேலே யிருக்கின்ற

தண்மதியும்:- குளிர்ந்த சந்திரமண்டலத்தையும்

கதிரவனும்:- சூர்யமண்டலத்தையும்

தவிர ஓடி:- கடந்து சென்று

தாரகையின் புறம் தடவி: மேலேயுள்ள நட்சத்திர மண்டலத்தை நிறைத்து

அப்பால் மிக்கு: அதற்கு அப்புறமும் வியாபித்து

மண்முழுதும்: எல்லா இடங்களையும்

அகப்படுத்து நின்ற எந்தை:- அளந்து கொண்டு நின்ற எம்பெருமானுடைய

மலர்புரையும் திருவடியே:- தாமரை மலரைப் போன்ற திருவடிகளையே

வணங்கினேனே: அனுபவிக்கப்பெற்றேன்.

பொழிப்புரை:

நான்காவது பாசுரத்தில் உலகிற்கு காரணமாய் இருப்பவனாய் அவனது சரீரமாக உலகமனைத்தையும் கொண்டவனாய் இருக்கின்ற பெருமையைச் சொல்லி அவனை அடைவதற்குத் திருமந்திரத்தை வழியாகத் தன் நெஞ்சுக்கு உணர்த்தினார். இந்தப் பாசுரத்தில் நாராயண

மந்திரத்தின் மூலம் அறிந்த பகவானைக் கண்ணாலே கண்டு அனுபவிக்க ஆசைப்பட்டு அவன் வாமனனாய்ப் பிறந்து திரிவிக்ரமனாக வளர்ந்து உலகமனைத்தையும்

ஈரடியால் அளந்த அந்த உருவினைக்கண்டு அனுபவிக்கின்றார். இந்தப் பாசுரத்தின் மூலம் வாமன அவதார மகிமைகளைச் சொல்லாமல் உலகளந்த திருவிக்ரமனைப் பற்றிச் சொல்வதால் அவன் உடையவன் நாம் உடைமைகள் என்று அனைவர் தலைகளிலும் ஏற்படுத்திக் கொடுத்த திருவடி சம்மந்தத்தை முதலிட்டு வருணிக்கிறார்.

விளக்கவுரை:

எம்பெருமான் ஒரு அடியால் பூமி முழுவதையும் அளந்தான். மற்றொரு திருவடியாலே வானில் உள்ள உலகங்கள் அனைத்தையும் அளந்தான் என்கிறார்.

ஒண்மிதியில்: அனைவர்க்கும் அடிப்படையான எம்பெருமான் தன் படைப்புகளின் தலையில் மிதித்தால் அவைகள் அழிந்து விடாதா என்றால் சரீரம் ஆன்மாவிற்கு இருப்பிடமானாலும், சரீரம் ஆன்மாவிற்கு அடிப்படையானது இல்லை. ஆன்மாவும் உடலால் தரிக்கப் படுவதாகாது. ஆன்மாதான் சரீரத்தை தரிப்பது. உடல் அதனால் தரிக்கப்படுவது. அதைப் போல பகவானே எல்லாவற்றிற்கும் காரணமானவன். அதனால் எல்லாப் பொருள்களுக்கும் அவனே அடிப்படையானவன் என்பதால் தன்னுடைய திருவடிகளைத் தரிப்பதும் அவனே. மற்றவர்களது தலைகளைத் தரிப்பது அவனே என்பது அவனது திருவடி படுவதால் அவை அழிந்து விடுவதில்லை. அதனால் அந்தத்திருவடி தன் தலைமீது படுவதை ஆர்வத்துடன் எதிர்பார்க்கின்றன.

புனலுருவி : அப்படி அவன் பூமியை அளந்த திருவடி, அண்டத்தை சுற்றியிருக்கின்ற அண்டச் சுவரையும் (அண்டகடாஹம்) தாண்டி அதைச்சுற்றியிருக்கும் ஆவரண நீரளவும் ஊடுருவி.

புனலுருவி-முதல் பாசுரத்தில் புனலுருவாய் என்பதற்கு ஒரு துறையில் குளிக்கும்படியான நீர் போல என்ற பொருளைக் கொள்ளப்பட்டது. இங்கும் அப்படி ஒரு பொருள் கொள்ள வாய்ப்புள்ளது. எம்பெருமான் ஒரு அடியால் பூமியை அளந்தான். பூமியில் 2/3 பாகம் கடல் நீரால் மூடப்பட்டுள்ளது. அதனால் அவன் பூமியை அளக்கும் பொழுது அவன் காலை பூமியின் மறுபுறம் கடல்நீர் தன் அலைகளால் தழுவும்படி நின்ற நிலையைப் புனலுருவி என்று ஆழ்வார் பாடுவதாகவும் கொள்ளலாம்.

ஒருகால் நிற்ப அப்படிக் கடல்நீர் தன் கால்களைத் தன் அலைகளால் கழுவிக்கொண்டிருக்கும் படி முதலடி எடுத்து வைத்து கால் நிற்கவும்.

ஒருகால்: ஒரு திருவடி ஆவரண நீரளவும் ஊடுருவி நின்றது. இவருடைய திருவடி என்று சொல்லாமல் கால் என்று சொல்வது எம்பெருமான் திருவடி எளிய மக்களது தலையைத் தொட்டுச் சென்ற போது அவர்கள் அது எம்பெருமானது திருவடி என்று அறியமாட்டார்கள் என்பதனால் 'எவனோ ஒருவன் கால் நம் தலைமீது பட்டது' என்று நினைத்திருந் தார்கள். அதனால் திருவடி என்று குறிப்பிடாமல் 'கால்' என்று சாதாரண மக்கள் பயன்படுத்தும் சொல்லால் அந்தத் திருவடியைக் குறிப்பிட்டார்.

நிற்ப: 'ஆவரண நீரை ஊடுருவிச் சென்ற திருவடி உடல் வளர்ந்த நிலையில், மேலும் அதைத்தாண்டிச் சென்றிருக்கும் ஆனால் அது அப்படிச் செல்லாமல் இழுத்து நிறுத்தினான் என்று தோன்றுகிறது. எம்பெருமான் திருவிக்ரமனாக மூன்றடி மண் வேண்டி ஒரு அடியாலே மண்ணுலகம் முழுவதையும் அளந்து கடல் நீருக்குள் ஊடுருவிச் சென்று அங்குத் திடமாக இருந்த பூமியின் மறுபக்கத்தில் காலை

ஊன்றி நிற்க, மறு அடி விண்ணுலகத்தை அளப்பதற்கு ஏற்ப, கடலுருவி ஒருகால் நின்றது என்றும் பொருள் கொள்ளலாம்.

ஒருகாலும்:- மற்ற திருவடியும், நிற்ப என்பது வரையில் பூமியை அளந்த திருவடியை அனுபவித்தார். இந்த சொல்லிலிருந்து மேல் உலகங்களை அளந்த மற்ற திருவடியை அனுபவிக்கிறார். மற்ற காலும் என்று சொல்லாமல் ஒரு காலும் என்று ஒப்புமை இல்லாத ஒருகால், முதலில் ஒருகால் நிற்ப என்று சொன்னவர் ஒருகாலும் என்று எண்ணும்மை யாக உம் சேர்த்தார் என்பதை விட உம்மை உயர்வு சிறப்பாக ஒரு காலும் என்று பாடினார் என்று கொள்ளலாம்.

காமருசீர் அவுணன் உள்ளத்து எண்மதியும் கடந்து: மாவலியின் உள்ளத்தின் எல்லையையும் தாண்டி அவன் நினைத்துக் கூட பார்த்திராத மேலுலகங்களை யெல்லாம் அளந்தது. காமருசீர் அவுணன்- விரும்பப்படும். பெருமை உடையவனாகிய மாவலி என்று மற்றவர்கள் அவனை அகங்காரத்தால் பீடிக்கப் பட்டவன், எம்பெருமானுடைய செல்வத்தைக் கொள்ளை யிட்டவன் என்று தாழ்வாகப் பேசுகின்ற போது, ஆழ்வார் அவனைப் பெரிய பாக்கியசாலி என்கிறாரா? அதற்குக் காரணம் என்ன வென்றால் இந்த அவதாரத்திற்குப் பின்னால் வந்த தன்னைப்போல் அல்லாமல், வாமனாவதாரத்தில் எம்பெருமானின் திருமேனி அழகையும் நீர்மைக் குணத்தையும் கண்ணால் கண்டு அனுபவித்தவன் என்ற பெருமையை உடையவன். அந்தப்பெருமை எல்லாராலும் விரும்பப்படக் கூடிய பெருமை என்று கொள்ளலாம்.

(ஆ.உ) கலியன் காலத்தால் அவதார காலங்களுக்கு மிகவும் பிற்பட்டவர். ஆனாலும் மலை நாட்டுத் திருப்பதி களில் பலவற்றை அங்குச் சென்று மங்களாசாசனம் செய்தவர்.

மலைநாட்டில் இன்றும் மாவலியின் வருகை ஓணம் பண்டிகையாக மற்ற எல்லா திருவிழாக்களை விட மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுவதை அறிந்தவர். அவுணன் தேவர்களால் வெறுக்கப்பட்டாலும் தன்னுடைய ஆட்சிக் குட்பட்ட குடிமக்களால் அவன் மிகவும் விரும்பப்படு கின்றவன், அதனால் வருகின்ற புகழையும், ஏதோ சிறுபிள்ளை கேட்கிறான் என்று ஏளனம் செய்யாமலும் அவனது குருவாகிய சுக்கிராச்சாரியார் வந்திருப்பவன் உண்மையில் மகாவிஷ்ணுவின் அவதாரம் என்று கூறிய போதும், வாக்குத் தவறாமல் அவனுக்கு மூவடி மண்ணைத் தாரை வார்த்துக் கொடுத்த அந்த விரும்பத்தக்க, பெருமைப் படக்கூடிய தன்மை, அவன் தான் அரக்கனாக இருந்த போதும், பெற்றிருந்த காரணத்தால் ஆழ்வாருக்கு அது மிகையாகப் படுகின்றது. அதனால் அவனை காமருசீர் அவுணன் என்று இரட்டை அடைமொழியிட்டு அழைக்கிறார்.

(பெ.உ) எண்மதியும் கடந்து : சிறுவன்தானே என்று இவனுடைய ஒரு அடி போக மற்றவையெல்லாம் நம்முடையதாகத் தான் இருக்கப்போகிறது என்று மாவலியின் எண்ணத்தைப் பொய்யாக்கி, ஒரு காலாலே அவன் பூமி முழுவதும் அளந்தவுடன் நமக்கு மேகங்கள் இருக்கின்றனவே என்ற அவனது எண்ணத்தைப் பொய்யாக்கி.

(ஆ.உ) அப்பொழுதிருந்த சாத்திரங்களின் படி மொத்தம் ஒன்பது கோள்களில் பூமியைத்தவிர மீதியிருந்த கோள்கள் எட்டு. மேலே சென்ற பகவானது மற்ற திருவடி, சூரியனையும் சேர்த்து எட்டு கிரகங்களையும் தாண்டி, மதி என்றால் சந்திரன். சந்திரன் பூமியின் துணைக்கோள். மற்ற எட்டு கிரகங்களும் சூரியனுக்குத் துணைக்கோள்கள்

என்றதனால், எண்மதியும் கடந்து என்பதற்கு இப்படியும் பொருள் கொள்ளலாம்.

அண்டம் மீது போகி: மேலே சென்ற திருவடி அண்டச் சுவருக்கு அப்பாலும் போய், உயரத்தூக்கிய கால் சென்று அளந்த இடங்களை வரிசையாக சொல்லாமல் முதலிலேயே அண்டச்சுவருக்கு அப்பால் போயிற்று என்று சொல்வானேன்? எனில், பகவானுடைய வெற்றியில் தமக்குண்டான களிப்பின் மிகுதியால் அவன் அளந்த இடங்களுக்கு எல்லைக் கல் நாட்டுவது போல் எல்லையைச் சொல்கிறார்.

மீது போகி: என்றதற்கு மீது போகைக்காக என்றும் பொருள் கொள்ளலாம் அப்பொழுது தான், மேலே அளந்த பொருள்களை வரிசையாக சொல்வது மட்டும் முன்பு போகி என்பதற்குப் போய் என்று பொருள் கொள்ளப்பட்டது. இங்கு இப்போது போகைக்காக என்று பொருள் கொள்ளப் படுகிறது. அண்டம் மீது போகைக்காக, இரு விசும்பின் ஊடு போய் என்று சேர்த்துப் பொருள் கொள்ள வேண்டும்.

எழுந்து: வாமனன் கையில் மாவலி விட்ட நீர் விழுந்த வுடன் உயரத்தூக்கிய திருவடி மாவலியின் யாகசாலை யிலிருந்து கிளம்பி

இருவிசும்பு: பெரிய ஆகாயம். பூமியைக் காட்டிலும் ஆகாயம் பெரிது. தவிர வாமனனுடைய வளர்த்தியில் தமக்குண்டான ஆர்வமிகுதியாலும் மேல் உள்ள பகுதியை பெரிய ஆகாயம் என்கிறது.

ஊடு போய்: பூமிக்கும் மேலே சுவர்க்கத்திற்குக் கீழே நூறாயிரம்காதம் தூரம் உயரத்தை உடைய அந்தரிக்ஷம் முழுதும் அடைத்துக்கொள்ளும்படி திருவடிகளைத் தூக்கியபடி.

ஆசிரியர் உரை: ஒரு காலும் எழுந்து காமருசீர் அவுணன் உள்ளத்து எண்மதியும் கடந்து, இருவிசும்பினூடு போய், மேலைத் தண்மதியும் கதிரவனும் தவிர ஓடி தாரகையின் புறம் தடவி அப்பால் மிக்கு.

(பெ.உ.) மேலைத் தண்மதியும் கதிரவனும் தவிர ஓடி

அந்தரிக்ஷத்திற்கு மேல் எல்லையில், சுவர்க்கத்திற்குக் கீழ் எல்லையாய் இருப்பது சூரியமண்டலம். அதற்கு மேலே நூறாயிரக் காத தூரம் இருப்பது சந்திரமண்டலம். அப்படியானால் சூரியனை முதலில் சொல்லாமல் தண்மதியும் கதிரவனும் என்று மாற்றிச் சொல்வானேன் எனில், அகங்காரமுள்ளவர்களாய், எம்பெருமானிடம் பகைமை பாராட்டுபவர்கள் தலையிலே, மிக மென்மையாய் இருக்கிற திருவடிகளை வைக்கையாலே, முதல் முதலில் குளிர்ந்த சந்திரனைத் திருவடி தொட்டதாகக் கூறுகிறார். அடுத்தபடி சூரியனைச் சொல்லும் போது வெங்கதிரோன் என்று சொல்லாமல் கதிரவனும் என்று சொல்வதால் சந்திரன் மேலேயும் சூரியன் கீழே இருப்பவன் என்பது விளக்கம்.

(இது புராணங்களின் அடிப்படையில் பெரியவாச்சான் பிள்ளை விளக்கம்) தற்கால விஞ்ஞானத்தின் படி

ஆழ்வார் தண்மதியும் கதிரவனும் என்று ஆழ்வார் அருளியிருப்பது சந்திரன் கீழேயும் சூரியன் மேலேயும் உள்ளது என்பதற்குப் பொருந்தியிருக்கிறது. இது புத்தூர் சுவாமிகளின் விளக்கம். (தாரகையின் புறம்தடவி) நட்சத்திர மண்டலத்தையும் வியாபித்து அதற்கும் மேலே போய், சந்திரமண்டலத்திற்கு மேலே நூறாயிரம் காதம் தூரம் உள்ளது நட்சத்திரமண்டலம். நட்சத்திர மண்டலத்திற்கு

மேலெல்லையில் இருப்பது சிம்சுமார ப்ரஜாபதியின் பதம். க்ரஹங்களைப் போல் சிம்சுமாரப்ரஜாபதியும் நட்சத்திரங் களில் ஒருவன் அவனுடைய மண்டலமும் பனிரெண்டு நூறாயிரக் காதங்கள் பரவியிருக்கிறது. (புராணங்களை ஆதாரமாகக் கொண்டு பெரியவாச்சான் பிள்ளையால் இவ்வண்ணம் உரையிடப்படுள்ளது.)

தடவி: கெட்டுப்போனப் பொருளைத் தேடுகிறவர் களைப் போல ரட்சகனான பெருமாள் ரட்சிக்கப்படுபவற்றைத் தேட வேண்டியிருக்கிறதன்றோ? இப்படித் தடவித் திரிகிற காலத்தில் கூட அவனால் திருத்தலாம்படி அகப்படாதே கிடந்தேன் நான் என்று வருத்தப்படுகிறார்.

அப்பால் மிக்கு: மேலே பரஹ்மலோகம் வரையில் வியாபித்து, அத்திருவடியை ப்ரஹ்மா தன் கமண்டலத் திலிருந்து தர்மமாகிற நீரால் கழுவினார் என்றும், அதுவே ஆகாச கங்கையாய் பூமியில் விழுந்தது என்றும் ப்ரமாணங் களில் சொல்லப்பட்டுள்ளது.

மண்முழுதும் அகப்படுத்து: மேல் ஏழ், கீழ் ஏழு ஆகப் பதினான்கு உலகங்களையும் அளந்து கொண்டு, இங்கு மண் என்றது உலகங்களைக் குறிக்கிறது. அப்படியில்லாமல் மண் என்று பூமியைச் சொல்லி முழுதும் என்கையாலே மேலுலகங்களைச் சொல்வதாகவும் கொள்ளலாம். மாவலி, பூமி முதலான மூவுலகங்களையே ஆக்ரமித்திருந்தான். அதனால் மண் என்று இடத்தைச் சொல்லுவதால் மூவுலகங் களிலுமுள்ள இடங்களைச் சொல்லுவதாகவும் கொள்ளலாம். 'அளந்து' என்று கூறாமல் அகப்படுத்து என் கையாலே ஆழ்வார் வாழ்ந்த காலத்திற்கும் அதற்குப் பிறகு ஆச்சாரியாகள் வாழ்ந்த காலத்திற்கும் தற்காலத்திலும் உள்ள அறிவியல்

ப்ரமாணங்கள் வேறுபட்டாலும் ஆழ்வார் பாடல் தற்போதைய அறிவியல் ப்ரமாணங்களுடன் ஒத்துச் செல்வதை பின்வரும் பாடல் விளக்கத்தின் படி அறிய முடிகிறது.

(ஒரு காலும் எழுந்து இருவிசும்பின் ஊடு போய் காமருசீர் அவுணன் உள்ளத்து எண்மதியும் கடந்து அண்ட மீது போகி மேலைத் தண்மதியும் கதிரவனும் தவிர ஓடி தாரகையின் புறந்தடவி மண் முழுதும் அகப்படுத்து) என்று கொண்டு தற்கால அறிவியலை ஒத்து விளக்கம் தரப்படுகின்றது.

பகவானுடைய ஒருகால் பூமியைப் அளந்து புனலுருவி நிற்கவும், ஒருகாலும் பகவானுடைய ஒப்புயர்வற்ற திருவடி பூமி (எழுந்து) பூமியிலிருந்து மேலே எழுந்து, இருவிசும்பினூடு போய் பூமியைச் சூழ்ந்து stratosphere, (ஸ்ட்ரேடோஸ்பியர்) என்றும், ionosphere (அயனோஸ்பியர்) என்றும் இரண்டு ஆகாய நிலைகள் உள்ளன. இருவிசும்பு என்பதற்கு பெரிய ஆகாயம் என்று பொருள் கொள்ளாமல் இரண்டு வகை ஆகாயங்கள் என்று பொருள் கொள்வது சிறந்ததாக இருக்கும்.

தற்காலத்தில் நம்முடைய ஆகாயம் Tropo sphere, Strato sphere, Meso sphere, Thermo sphere, Exosphere என்று பிரிக்கப்பட்டு Exosphereக்கு அப்பாற்பட்டது. அண்டவெளி (Space) என்றும் பிரிக்கப்படுகிறது. ஆழ்வார் காலத்தில் இவ்வளவு Exosphere என்பது 600கி.மீ. மேற்பட்டு இருக்கிறது. ஆழ்வார் காலத்தில் அந்த அளவிற்கு அறிவியல் வளர்ச்சி இல்லை என்றாலும், 10 கிலோமிட்டர் வரை உள்ள Troposhere, என்றும் அதற்கு மேல் 90 கிலோமீட்டர் வரையிலும் பரந்திருக்கின்ற Stratosphere என்ற இரண்டு வகை

விண்வெளிகளின் ஊடே சென்றது பகவானின் திருவடி கொள்ளலாம் அல்லது வெப்பத்தின் அடிப்படையில் என்று 300^0C வெப்பநிலை உள்ள Troposhere, Stratosphere, மற்றும் Mesosphere கீழ்ப்பகுதி ஆகியவற்றை தட்ப (குளிர்ந்த) விண்வெளி என்றும் 300^0லு லிருந்து 1200^0லு வரை உள்ள விண்வெளியை வெப்ப விண்வெளி என்று இரண்டுவகை விண்வெளியையும் ஊடுருவிச் சென்றது. உயரே எழுந்த திருவடி என்று கொள்ளலாம். (காமருசீர் அவுணன் உள்ளத்து எண் மதியும் கடந்து) இதற்கும் சிறிதுவேறுபட்ட விளக்கம் முன்பு தரப்பட்டது.

அண்டம் மீது போகி:- அண்டவெளி என்று சொல்லப் படுகின்ற புவியீர்ப்பு விசையே இல்லாத அண்ட வெளியில், மற்ற கிரகங்களின் ஈர்ப்பினால் அந்தக் கால் மேலே செல்வதாகவும் கொள்ளலாம்.

மேலைத் தண்மதியும் கதிரவனும் தவிர ஓடி- இங்கு மேலே என்பதை உயரத்தின் அடிப்படையில் பார்க்காமல் மேலே என்பதை மேற்கே என்ற பொருளில் பார்த்தால் வளர்பிறைக் காலங்களில் சந்திரன் மேற்கிலிருந்து கிழக் காகவும் பகலில் சூரியன் கிழக்கிலிருந்து மேற்கே செல்வது போலவும் தோன்றுகிறது. அதனால் மேற்கிலிருந்து எழுகின்ற குளிர்ந்த சந்திரனும் கிழக்கிலிருந்து எழுகின்ற சூரியனும் ஒருபுறம் நிற்க.

தாரகையின் புறந்தடவி: அண்டவெளியில் எத்தனையோ நட்சத்திரங்கள் இருக்கின்ற போது தாரகை என்று ஒருமையில் சந்திரனின் விருப்பமான மனைவி என்று அழைக்கப்பட்ட ரேவதி என்ற கடைசி நட்சத்திரத்தின் பின்புறம் வரை சென்று (அந்த நாட்களில் கோள்கள்,

நட்சத்திரங்கள் எல்லாம் உருண்டை என்று கண்டுபிடிக்கப் படாத காரணத்தினால் புறம் தடவி என்றது நட்சத்திர மண்டலத்தைத் தாண்டி (அப்பால் மிக்கு) அதற்கு மேலும் எழுந்த திருவடி வளர்ந்தது.

மண் முழுதும்: என்பதற்கு பெரியவாச்சான் பிள்ளையின் விளக்கத்தை அப்படியே எடுத்துக் கொள்வோம்.

அகப்படுத்த; எம்பெருமானின் ஒரு திருவடி 'புனலுருவி' நின்றது. மறு திருவடி 'தாரகையின் புறந்தடவி' அப்பால் நின்றது. இந்த இரண்டு திருவடிகளுக்கு இடையில் உலகங்கள் எல்லாம் அகப்படுத்தப்பட்டு இருந்தன.

பாசுரம்-6

அலம்புரிந்த நெடுந்தடக்கை அமரர் வேந்தன்
அஞ்சிறைப்புள் தனிப்பாகன் அவுணர்க் கென்றும்
சலம்புரிந்து அங்கருளில்லாத் தன்மையாளன்
தானுகந்த ஊரெல்லாம் தனதாள் பாடி
நிலம்பரந்து வரும் கலுழிப் பெண்ணை ஈர்த்த
நெடுவேய்கள் படுமுத்தம் உந்த உந்தி
புலம் பரந்து பொன்விளைக்கும் பொய்கை வேலிப்
பூங்கோவலூர் தொழுதும் போது நெஞ்சே.

பதவுரை

நெஞ்சமே: *மனமே*

அலம்புரிந்த நெடுந்தடக்கை அமரர் வேந்தன்: *கேட்பவர்கள் போதும் என்னுமளவுக்குக் கொடுக்கும் நீண்டு பருத்த திருக்கைகளை உடையவனாய் தேவர்களுக்கு (நித்யசூரிகளுக்கு) சுவாமியாய் (நாதனாய்)*

அம்சிறைப்புள் தனிப்பாகன்: *அழகிய சிறகையுடைய கருடனுக்கு ஒப்பற்ற பாகனாய்*

அவுணர்கள்: *அசுரர்களுக்கு (அரக்கர்களுக்கு)*

என்றும் சலம்புரிந்து: *எக்காலத்திலும் தீங்கு இழைத்து*

அங்கு: *அவர்களிடம்*

அருள் இல்லா தன்மையாளன்: கருணையே இல்லாதவன்

தான் உகந்த: எம்பெருமான் விரும்பி கோயில் கொண்டிருக்கும்.

ஊர் எல்லாம்: எல்லா திவ்ய தேசங்களிலும்,

தன் தாள்பாடி; அவனுடைய திருவடிகளைப் பாடி

நிலம் பரந்து வரும் கலுழிப்பெண்ணை:- பூமியெங்கும் பரந்து பெருகி கலங்கிய நீருடன் ஓடும் தென்பெண்ணையாறு.

ஈர்த்த நெடுவேய்கள் படுமுத்தம் உந்த: இழுத்து வருகின்ற பெரிய மூங்கில்களில் உண்டாகிற முத்துக்களை (கழனிகளில்) தள்ள

உந்தி:- உழவர்களாலே களையென்று தள்ளப்பட்டு

புலம்பரந்து:-வயல் புலங்களில் பரவி பாய்ந்து

பொன் விளைக்கும்: பொன்னை ஒத்த விளைபொருட் களைத் தருகின்ற

பொய்கை: குளங்களை

வேலி : நாற்புறமும் உடையதான

பூங்கோவலூர்: பூத்துக் குலுங்குகின்ற அழகிய திருக்கோவலுரைத்

தொழுதும் போது: தொழுவதற்கு வருவாய்.

பொழிப்புரை: நான்காவது பாசுரத்தில் மந்திரத்தில் நின்ற எம்பெருமானை எப்பொழுதும் மந்திரத்தால் அனுபவித்து உய்வோம் என்று தன் நெஞ்சுக்கு சொன்னார். ஐந்தாம்

பாசுரத்தில் அவன் திருவிக்கிரம அவதாரம் எடுத்து உலகை யெல்லாம் தன்னகப்படுத்தி நின்ற அவனது திருவடிகளைத்

தொழலாம் என்றார். ஆனால், காலத்தினால் பிற்பட்ட வராகியராதலால் அவரைப்போன்று நாமெல்லாம் பிற்காலத்தில் அனுபவிக்கும் படி அர்ச்சாவதார ரூபியாக நிற்கின்ற திருக்கோவலூரரை அனுபவிக்கலாம் என்று இப்பொழுது தன் நெஞ்சை அழைக்கிறார்.

திருமந்திரத்தின் பொருள் எம்பெருமானாய் இருக்க இவர் ஊரைத் தொழ முற்படுவானேன் என்றால், முதல் திருமொழியில் திருமந்திர உபதேசம் பெற்ற உடன் சூழ்புனற் குடந்தையே தொழுது என்று ஆராமுதனை அனுபவித்தது போல் இங்கு "பூங்கோவலூர் தொழுதும்' என்று அவன் திருவிக்ரமனாக நடக்கும் அர்ச்சாவதாரத்தை பூங்கோவலூரில் தொழலாம் என்று சொல்கிறார்.

விளக்கவுரை:

அலம்புரிந்த நெடுந்தடக்கை அமரர் வேந்தன்: போதும் என்று இருப்பவர்கள் சொல்லும்படியாகக் கொடுக்கின்ற தடக்கை களை உடையவன். எம்பெருமானுடைய தோள்களையும் அவற்றின் வலிமையைப் பல இடங்களில் ஆழ்வார் அனுபவிக் கிறார். அவருடைய கைகளை அவர் அனுபவிப்பது குறைவு. அப்படி அனுபவித்தாலும் 'கைத்தலமும் கமல வண்ணம்' என்று அனுபவிக்கிறார். நெடுந்தடக்கை என்று கூறுவது, அவன் திருவிக்கிரம அவதாரம் எடுத்து பூமிக்கும் ஆகாயத் திற்குமாக நின்ற காரணத்தில் அந்தகைகள் உடல் அளவிற்கு ஏற்ப நீண்டும் அகன்று இருப்பது தானே பொருந்தும். தவிரவும், இங்கு அமரர்வேந்தன், தேவர்களுக்கு அரசன் என்று சொல்லுவதால் அரசர்களுக்குரிய இலட்சணங்கள் முழங்காலுக்கும் கீழே நீண்டிருக்கும் கைகளை அரசர்கள்

கொண்டிருப்பார்கள் என்பதனாலும் நெடுந்தடக்கை என்பது பொருந்தும்.

கேட்பவர்களுக்கு, அவனைத் தரிசித்த அளவில் எதையும் கேட்கத் தோன்றாது என்பதனால் எதையாவது கேட்டு வைப்பார்கள். பரமதயாளனாகிய எம்பெருமான் அவன் கேட்டதையும் கொடுத்து அவன் எதைக் கேட்க வந்தானோ அதையும் கொடுத்து, அவனுக்கு இதைத்தவிர என்ன தேவை யென்று தானே அறிந்து கொடுக்கின்ற கருணாசாகரம். நரசிம்மனாக பிரகலாதனுக்கு உதவியதைப் போல அடியார் களுக்கு உதவுவதற்கென்றே காத்துக் கொண்டிருப்பான். *(உன்னடியார்க்கு என் செய்வனென்றே இருத்தி (பெரியதிருவ-53)* என்னுமாப் போலே.

அமரர் வேந்தன்: அமரர் என்ற சொல் தேவர்களைக் குறிப்பிட்டாலும் தேவர்களைப் போன்று இறப்பில்லாத நித்ய சூரிகள் என்று பொருள்கொள்வது சிறந்தது. ஏனென்றால், தேவர்களுக்கு வேந்தன் தேவேந்திரன் என்று பொருள் வராத படி நித்ய சூரிகளால் சூழப்பட்டிருக்கும் எம்பெருமான் என்று பொருள் கொண்டால் முடியுடை வானவர் *(திருவாய் 10.9.8)* என்று நித்ய சூரிகளுக்கு முடி உண்டு. அவர்களுக்கு சுவாமியாக இருக்கும் எம்பெருமானுக்கும் முடியுண்டு அதனால் அவரை வேந்தன் என்று சொன்னார்.

அஞ்சிறைப்புள் தனிப்பாகன்: அழகிய சிறகுகளையுடைய பறவையான கருடனுக்கு ஒப்பற்ற பாகன். இவன் பாகன் என்றால் கருடன் செலுத்தப்படுகின்ற ஊர்தி (வாகனம்) எம்பெருமானை கருடவாகனன் என்று அழைத்து அடியார்கள் பெருமைப்படுகிறார்கள் 'செழும் பறவை தானேறித் திரிவான்' என்றார் நம்மாழ்வார் *(திருவாய்10.6.5)*

தனிப்பாகன்: ஒப்பற்ற பாகன். பொதுவாக பாகன் என்னும் சொல்லாலே 'யானைப் பாகன்தான் குறிக்கப்படுகிறான். யானையைத் தன் வசப்படுத்தி யானையை எப்படி தன் விருப்பப்படி ஒரு பாகன் நடத்துகிறானோ அதுபோலே எம்பெருமான் கருடனைத் தன் வசப்படுத்தி தனது விருப்பத்தின் படி அதனை நடத்தக் கூடியவனாக இருக்கிறான் என்பது கருத்து.

அவுணர்க்கு என்றும் சலம்புரிந்து அங்கு அருளில்லாத் தன்மையாளன்: எம்பெருமான் அருளே வடிவானவன் என்றாலும் எப்பொழுதும் தீமையே செய்கின்ற அரக்கர் களுக்கு அவன் தன் அருள் வடிவத்தைக் காட்டாமல், அவர்கள் நல்லவர்க்குத் தீங்கு செய்கின்ற போது அவர்களைத் தண்டிப்பவன்

(பரித்ராணாய சாதுநாம் -சம்பவாமி யுகே) என்று கீதையில் குறிப்பிட்டது போல தீயவர்களை அழித்து தர்மத்தை நிலைநாட்டுவதற்காக யுகந்தோறும் அவன் அவதாரம் செய்கிறான் அதனால் என்றும் என்ற சொல்லுக்கு யுகந்தோறும் அசுரர்களுக்குத் தீங்கிழைப்பவன் என்றபடி. வராக அவதாரத்தில் இரண்யாட்சகனுக்கும், நரசிம்மாவ தாரத்தில் இரண்யகசிபுக்கும் வர்மனாவதாரத்தில் மகா பலிக்கும், இராமாவதாரத்தில் இராவணன் முதலான அசுரர்களுக்கும் கிருஷ்ணாவதாரத்தில் தட்சன், கீசகன் ஜராசந்தன் போன்ற அரக்க குணம் கொண்டவர்களுக்கும் தீங்கு செய்வதால் அவுணர்க்கு என்றும் சலம்புரிந்து என்றார்.

அதே நேரத்தில் பிரகலாதன், விபீடணன் போன்றவர் அசுர வம்சத்தில் பிறந்தவர்களானாலும் அவர்கள் அசுர குணத்தை விட்டு அடியார்களாகிய படியாலே அவர்களை

இரட்சித்து அவர்களுக்கு நன்மை புரிகிறான். அதனால் அவுணர்கள் என்பதற்கு அரக்கர்கள் என்றோ அசுரர்கள் என்றோ பொதுவாக சொல்லாமல் அசுரகுணத்தையுடையவர்கள் என்று குறிப்பிடுவதே பொருத்தம். துரியோதனன் துச்சாதனன், கீசகன், ஜராசந்தன் ஆகியோர் மனித குலத்தில் பிறந்திருந்த போதும் அரக்க குணம் உடையவர்களாக இருந்ததனால் அவர்களுக்கும் தீங்கு செய்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

தானுகந்த ஊர்: (அமரர் வேந்தன் தானுகந்த ஊர்) ஸ்ரீவைகுண்டநாதன் தானே படைத்து தானே உண்டு தானே உமிழ்ந்து தானே ஆளுகின்ற இந்த பூமியிலேயே அவனுக்கு என்று பிடித்த ஊர் என்று ஏதாவது இருக்கிறதா என்றால் நித்யசூரிகளும் தேவர்களும் விரும்பி வந்து அவனைப் போற்றுகின்ற இடங்களுக்கெல்லாம் சௌசீல்யத்தோடும் வாத்ஸல்யத்தோடும், சௌலப்யத்தோடும் அவர்கள் வருகின்ற இடத்துக்கு தானும் வரும்படியாலே அவையெல்லாம் தானுகந்த ஊர் என்றாயிற்று. அப்படிப் பட்ட திவ்யதேசங்களில் எல்லாம் ஆழ்வார்கள் இவரை பாடிப் புகழ்வதால், (என்னைத் தன்னாக்கி என்னால் தன்னை இன்கவி பாடும் பரம கவியாக அவனே இருப்பதால்), தானுகந்த ஊரெல்லாம் தன்தாள் பாடி, என்றாராயிற்று.

நிலம் பரந்து வரும் கலுழிப் பெண்ணை யீர்த்து:எம்பெரு மான் உகந்த ஊராகிய திருக்கோவலூர், தென்பெண்ணை ஆற்றங்கறையிலிருந்து திருக்கோவலூரை தரிசிப்பதற்காக பெண்ணையாறு கரையைக்கடந்து கொண்டு கலக்கத்துடன் ஓடிவருகின்ற போது,

நெடுவேய்கள் படுமுத்தம் உந்த உந்தி: அப்படி வேகமாக வருகின்ற பெண்ணையாறு நீண்டமூங்கில் மரங்களைப் பிடித்து ஆட்டவும் (பிரசவித்துக் கொண்டிருக்கின்ற கர்ப்பிணிகளைத் தலைமுடியைப் பிடித்து இழுத்தால் அது காரணமாக அவர்கள் பிரசவிக்குமாப்போலே) அந்த மூங்கில்களில் உள்ள முத்துக்களைத் தள்ளி எடுத்துக் கொண்டு திருக்கோவிலூருக்கு வருகின்ற தண்ணீரால், அந்த ஊர் பொன் விளையும் பூமியாக, அந்த ஊரை வேலியைப் போல் சுற்றி இருக்கின்ற குளங்களும் நீர் நிரம்பி இருக்கின்றன.

பூங்கோவலூர் தொழுதும் போது நெஞ்சே: அப்படிப்பட்ட திருகோவலூரரை அதன் ஆற்றினுடைய பெருமைகளையும் வயலின் பெருமையையும் ஊரின் பெருமையைக் கேட்கும்போது நாம் அந்த ஊருக்கு சென்று அங்கே அவனே மூன்று ஆழ்வார்கள் மூலம் அந்த ஊரை அறிய வைத்து, திருமங்கையாழ்வார் மூலம் தன்னைத்தானே பாடிக் கொள்கின்ற அவனது திருவடிகளையும் அனுபவிக்கலாம் நெஞ்சமே வாராய்.

பாசுரம் 7

வற்புடைய வரை நெடுந்தோள் மன்னர்மாள
வடிவாய மழுவேந்தி உலகமாண்டு
வெற்புடைய நெடுங்கடலுள் தனிவேலுய்த்த
வேள் முதலா வென்றானூர் விந்தை மேய
கற்புடைய மடக்கன்னி காவல் பூண்ட
கடிபொழில் சூழ் நெடுமருகில் கமல வேலி
பொற்புடைய மலையரயன் பணிய நின்ற
பூங்கோவலூர் தொழுதும் போது நெஞ்சே!

பதவுரை:

வற்புடைய வரை நெடுதோள் மன்னர் மாள: *பரசுராம அவதார காலத்தில் மலையைப் போன்ற உயர்ந்த தோள்களையுடைய கார்த்தவீரியார்ச்சுனன் போன்ற மன்னர்கள் மடியும்படி*

வடிவாய மழு ஏந்தி: *அவனுக்கு அடையாளமான மழு என்னும் ஆயுதத்தை ஏந்திக்கொண்டு*

உலகமாண்ட: *ஸ்ரீராமனாய் அவதரித்து உலகை நீண்டகாலம் ஆட்சி புரிந்து*

வெற்புடைய நெடுங்கடலுள் தனிவேலுய்த்த வேள்முதலா: *மலையைத் தனக்குத் தானே உடைய பெரிய கடலுள் (கண்ணனாய் அவதரித்த போது)வேலை எய்த முருகன்*

முதலானாரை வெற்றி கொண்டவனான எம்பெருமானுடைய ஊர், திவ்யதேசமாய்

விந்தை மேய கற்புடைய மடக்கன்னி காவல் பூண்ட: விந்திய மலையில் தவம்புரிந்தவளாய்,மிக்க அறிவுடையவளாய், பற்றின செயலை விடாதவளாய் எம்பெருமானுக்கே அடிமைப்பட்டவளான துர்க்கை யாலே காவலிடப் பெற்றதாய்.

கடிபொழில் சூழ் நெடுமருகில்: மணம் மிக்க சோலைகளால் சூழப்பெற்றதும், அகலமும் நீளமும் உடைய தெருக்களை உடையதானதும்

கமலவேலி: சுற்றிலும் தாமரைத் தடாகங்களைக் கொண்டது மானதும்,

பொற்புடைய மலை அரயன் பணிய நின்ற: செறிவுடைய மலைகளுக்கு அரசன் போற்றும்படி எம்பெருமான் நிற்கின்ற இடமான

பூம் கோவலூர்: அழகிய திருக்கோவலூரரை

தொழுதும்: அனுபவிப்போம்

நெஞ்சே : மனமே

போது: வாராய்

பொழிப்புரை:

ஆழ்வார் தமது திருஉள்ளத்தையும் கூப்பிட்டுக்கொண்டு திருகோவலூரரை அநுபவிக்கப் பார்த்தவர், அனுபவிக்கப்ப படவேண்டிய பொருள் அளவற்றதாக இருக்கக் கண்டு அச்சம் கொள்கிறார். மலையைப் போன்ற தோள்களுடைய

மன்னர்களையும் பரசுராம அவதாரமெடுத்து இருபத்தொரு களைகட்டு மன்னர்களைப் பூண்டோடு அழித்தார். மற்ற அவதாரங்களை வராக, நரசிம்மஅவதாரங்களிலும் ஹிரண்யாட்சன், இரண்யகசிபு போன்ற வலிய தோள் களுடைய மன்னர்களை அழித்தார். இராமாவதாரத்திலும் ராவணன், கும்பகருணன் இந்திரஜித்போன்ற தவவலிமை மிக்க அரக்கர்களை அழித்து பூமியை நெடுங்காலம் ஆட்சி செய்தார். இங்கு பரசுராமனுக்கு இராஜ்யம் என்று ஒன்று இல்லாததனால் இராமாவதாரத்தைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

விளக்கவுரை

வெற்புடைய நெடுங் கடலுள் தனிவேலுய்த்த வேள் முதலா: பெருங்கடலுள் மறைந்திருந்த மலையைத் தன்னுடைய வேலைக் கொண்டு அழித்த முருகப்பெருமான் முதலாக; ஒருகாலத்தில் மலைகளுக் கெல்லாம் சிறகுகள் இருந்தன. அவை பறந்து வந்து ஏதாவது ஓரிடத்தில் அமர்ந்தது, அங்குள்ள ஜீவராசிகளை அழித்து பறந்து வேறிடத்தில் அமர்ந்து, என இப்படி உலகனைத்தையும் அழித்துகொண்டு திரிந்தன (சில அசுரர்கள் சிறகுள்ளமலைகள் போல் உருவங்கொண்டு அங்கும் இங்கும் பறந்து திரிந்து ஜீவராசிகளை அழித்துக் கொண்டிருந்தார்கள்.)

அவற்றைத் தேவேந்திரனான இந்திரன் தன் வஜ்ரா யுதத்தைச் செலுத்தி அவைககளின் சிறகை வெட்டினான். அதில் ஒரு மலை வஜ்ராயுதத்திற்குத் தப்பி தெரியாத படி கடலில் மூழ்கிக்கொண்டது. தேவசேனாதி பதியான முருகன் தேவேந்திரன் கேட்டுக்கொண்ட படி அந்த மலை மூழ்கிக்

கிடக்கிற இடத்தை அறிந்து தன் கையில் இருக்கும் ஒப்பற்ற வேலினால் அழித்தான். முருகனது இளம் பருவத்தாலும் வீரியத்தாலும் எதிரிகளை அழியச் செய்வதாலே அவன் கந்தவேள் என்று சொல்லப்படுகிறான். முருகன் முதலான சிவகுடும்பத்தினர்களை வென்ற ஆண்பிள்ளையான கண்ணன் எழுந்தருளியிருக்கும் திவ்யதேசம் பாணா சுரனோடு போர் புரியும் போது அவனுக்கு உதவிக்கு வந்த சிவ குடும்பத்தில் அவனே முதலானவன், என்பதனால் வேள்முதலா என்றார் நம்மாழ்வாரும் 'நேர் சரிந்தான் கொடி கோழிக்கொண்டான் (திருவாய் 7.4.8) என்று அருளிச் செய்யுமா போல (வண்டுலாவு கோதை மாதர் காரணத் தினால் வெகுண்டு ''இண்ட வாணன் ஆயிரம் தோள் களைத் துணித்த நாள், முண்டன், நீறன் மக்கள் வெப்பு மோடி அங்கி ஓடிடக் கண்டு நாணி வாணனுக்கு இரங்கினான் எம்மாயனே'' திருச்சந்த விருத்தம் (71)) என்று தோற்றோடிய வர்களில் முக்கியமானவர்களைக் கூறினார்.

வென்றானூர் : கண்ணனுடைய பேரனான அநிருத் தனைக் கனவில் கண்டு காதல் கொண்ட பாணாசுரனின் மகளான உஷை அவனை எடுத்து வந்து காந்தர்வ திருமணம் செய்து கொண்டாள். இதை அறிந்த அசுரன் அவனைச் சிறையிலிட்டு விட்டான். நாரதர் மூலமாக இதை அறிந்த கண்ணன் பெரிய திருவடி மேல் ஏறிப் புறப்பட்டு பாணனை அழிப்பதற்காக படையெடுத்துச் சென்றார். சிவபக்தனான பாணன் தனக்குத் துணையாக நிற்க வேண்டுமென்று சிவனை வேண்டிக் கொண்டான். கண்ணனை எதிரிட்டுத் தன்னால் வெல்ல முடியாது என்பதை மறந்து பாணனுக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதற்கு சிவன் தன்னைச் சேர்ந்தவர்

களோடு கூட, கண்ணன் முதலானரோடு போரிட்டான் இராவணனைப் போல் தன்னை வணங்க மாட்டேன் என்றிருக்காத தேவர்களாகையாலே அவர்களை அழிக்காமல், அவர்கள் பாணனைக் கைவிட்டுப் புறமுதுகிட்டு ஓடும்படி பண்ணினான்.

பேரனுடைய மனைவியை மனத்திற் கொண்டு அசுரனுடைய ஆயிரம் கைகளில் இரண்டைவிட்டு மற்ற கைகளை அறுத்தெறிந்தான். அவனையும் உயிரோடு விட்டான்.

வென்றானூர்: அப்படிப்பட்ட கண்ணன் வாழ்கின்ற ஊரல்லவா திருக்கோவலூர்.

விந்தை மேய கற்புடைய மடக்கன்னி காவல் பூண்ட: விந்தியமலையில் இருந்து தவம்புரிந்து, இங்கு காவல் தெய்வமாயிருக்கும் பதவியைப் பெறுவதற்காக இவள் விந்தியமலையில் தவம்புரிந்தாள்.

கற்புடைய: கற்பு என்று கல்வியைச் சொல்வதால் அது இங்கு அறிவைக் குறிக்கிறது அல்லது கற்பு எண்ணும் பெண்ணின் தனித்தன்மையைக் குறிப்பதாய், தம் உயிரை விட்டாவது பெண்கள் தம் கற்பைக் காப்பதைப் போல இவளும் உயிரைவிட்டாவது திருக்கோவலூரைக் காவல் காப்பாள் என்று காட்டுகிறது.

மடக்கன்னி : என்றும் இளமையோடு இருக்கும் கன்னியாகிய காளி, காவல் பூண்ட தன்னிச்சையாகக் காவல் செய்கின்ற, அவன் மீது இருக்கும் பரிவினால் அவளே ஏற்றுக் கொண்டதால், திருமணம் செய்து கொண்டால், காவல்

தொழிலை விட வேண்டுமே என்று கன்னியாகவே இருக்க விரதம் பூண்டவள்.

கிருஷ்ணாவதாரத்தில் இவள் கண்ணனுக்கு முன்பு பிறந்து அவனைத் தன் தம்பியாக எண்ணி பாதுகாத்தவள் ஆகையாலே. நஞ்சியர் ''தம்பி வளைக்காரியன்றோ'' என்று அருளிச் செய்ததாக பெரியவாச்சாள் பிள்ளை அருளிச்செயல். நின் செவ்வடி செவ்வித் திருக்காப்பு என்று பெரியாழ்வார் அருளிச் செய்கிறார்.

கடி பொழில் சூழ்: மணம் மிக்க சோலைகளால் சூழப் பெற்றது

நெடுமறுகில் கமலவேலி: பாதை நெடுகவும் இருபுறங் களிலும் தாமரைத் தடாகங்கள் இருந்தன. அதாவது இவ்வுல கிலுள்ள இன்பங்களை அனுபவிப்பது போகம் என்றும் இவ்வுலகிலிருந்து விடுபட்டு பரமபதத்தில் பேரின்பம் அளிப்பது மோட்சம் என்று இரண்டு பொருள் சொல்லப் படுகிறது.

நெடுமறுகில் : இந்த திவ்ய தேசம் அகலமானது நீளமானதும் ஆன வீதிகளைக் கொண்டது. அப்படிப்பட்ட

வீதிகளின் இரு பக்கங்களும் தாமரைத் தடாகங்கள். நிறைந்த படியினால் இந்த ஊருக்கு வருபவர்கள் சோலை அழகிலும் வீதி அழகிலும் மயங்கி தாம் வந்த வேலையை மறந்து விடுவார்கள் என்பதால் இவை எம்பெருமானை ரட்சிக்கின்றன.

பொற்புடைய: வலிமைமிக்க

மலையரசன் பணியநின்ற: மலையமான் போன்ற அரசர் களின் காவலும் இந்த ஊருக்கு உண்டு மடக்கன்னி காவல்

பூண்டு மலையைரசர்கள் பணிய நின்ற திவ்யதேசம் திருக்கோவலூர்.

பூங்கோவலூர் தொழுதும் போது நெஞ்சே: அவனைக் காட்டிலும் அவன் வாழும் திவ்ய தேசமே இனிமை மிக்கது என்னும் படியல்லவா இவர் திவ்யதேசங்களோடு ஒன்றியிருக்கிறார்

போது நெஞ்சே: இந்த ஊரை எந்தவித அச்சமில்லாமல் அனுபவிக்கலாம் வா நெஞ்சே!

பாசுரம் 8

நீரகத்தாய் நெடுவரையின் உச்சி மேலாய்
நிலாத்திங்கள் துண்டத்தாய் நிறைந்த கச்சி
ஊரகத்தாய் ஒண்துறை நீர் வெஃகா உள்ளாய்
உள்ளுவார் உள்ளத்தாய் உலகமேத்தும்
காரகத்தாய் கார்வானத்துள்ளாய் கள்வா
காமருபூங் காவிரியின் தென்பால்மன்னு
பேரகத்தாய் பேராது என் நெஞ்சிலுள்ளாய்
பெருமான் உன் திருவடியே பேணினேனே

பதவுரை:

நீரகத்தாய்: திருநீரகரத்துப் பெருமாளே!

நெடுவரையின் உச்சிமேலோய்!: உயர்ந்த திருவேங்கட மலையின் சிகரத்தில் இருக்கும் மலையப்பனே

நிலாத்திங்கள் துண்டத்தாய்: நிலாத் திங்கள் துண்டம் என்னும் திவ்யதேசத்தில் எழுந்தருளியிருக்கும் பெருமாளே!

நிறைந்த கச்சி ஊரகத்தாய்: கோயில்கள் நிறைந்த காஞ்சிபுரத்தில் உள்ள திருஊரகம் என்னும் திவ்ய தேசத்தில் எழுந்தருளியிருப்பவனே!

ஒண்துறை நீர் வெஃகா உள்ளாய்:- அழகிய குளக்கரையின் மேல் இருக்கும் திருவெஃகாவில் கண்வளர்பவனே!

உள்ளுவார் உள்ளத்தாய்: உன்னை சுவாமி என்று நினைப்ப வர்களின் உள்ளத்திலிருப்பவனே

உலகமேத்தும் காரகத்தாய் உலகனைத்தும் போற்றும்படி திருக்காரகம் என்னும் திருப்பதியில் நிற்பவனே.

கார்வானத் துள்ளாய்:- கார்வானம் என்னும் திருப்பதியில் உள்ளவனே.

கள்வா!: எனக்குக் காட்டாமல் தம்மை மறைத்துக் கொண்டிருப்பவனே.

காமரு பூங் காவிரியின்தென்பால்மன்னுபேரகத்தாய்: அழகுமிக்க காவிரியின் தென்கரையில் உள்ள திருப்பேர் நகர் என்னும் ஊரில் கோயில் கொண்டவனே.

பேராது என் நெஞ்சினுள்ளாய்: என் நெஞ்சை விட்டு நீங்காமல் இருப்பவனே.

பெருமான்: இப்படி பல திருப்பதிகளிலே இருப்பவனே!

உன் திருவடியே பேணினேனே: உன் திருவடிகளைக் காண வேண்டும் என்ற ஆசையில், கூப்பிடா நின்றேன்.

பொழிப்புரை:

எம்பெருமான் ஈரடியால் உலகளந்த போது அதைப் பார்க்க முடியாமற் போனதே என்று ஏங்கிய ஆழ்வாரை நீ திருக்கோவலூருக்கு வா. நான் அதே கோலத்தில் நிற்கிறேன். அநுபவிப்பீராக என்று சொல்லவும் தன்னுடைய நெஞ்சுடன் அனுபவிக்க சென்ற ஆழ்வார் எம்பெருமானுடைய மேன்மையைக்கண்டு அவருக்கு என்ன தீங்கு வருமோ என்று நினைக்க, சென்ற பாட்டில் தனக்கு எந்தத் தீங்கும் வராமல் ஊரைச் சுற்றியிருக்கும் சோலைகளும்நீண்டு அகன்ற

வீதிகளும், கோயிலுக்குக் காவல் தெய்வமான காளியும், ஊரைச்சுற்றி இருக்கிற மலைகளின் அரசர்களும் அவரை எப்பொழுதும் காத்துக் கொண்டிருப்பதால் அவருக்கு எந்தத் தீங்கும் வராது என்று தெளிந்தார். ஆனால் திருக்கோவலூரை அனுபவிக்கும் போது, அறிவு மயங்கிய ஆழ்வார் திருமலையிலிருந்து தொடங்கி பல திவ்யதேசங் களிலுள்ள பெருமாளின் அழகை இங்கே அனுபவிக்கிறார்.

விளக்கவுரை:

நீரகத்தாய்:- திருநீரகம் என்னும் திவ்ய தேசத்தில் கோயில் கொண்டிருப்பவனே. நீரினுடைய தன்மையான நீர்மையை உடையவன் இருப்பதனால் அந்த இடத்தை நீரகம் என்று கூறினார். வேற்றுமை பாராமல் அனைவர்க்கும் அருள் செய்கின்றவன் தனக்கு அருள் செய்ய வேண்டும் என்று 'நீரகத்தாய்' என்றார்.

நெடுவரையின் உச்சி மேலாய்: மனிதர்களும் தேவர்களும் வணங்கும்படியாக திருமலையின் குடுமியில் நின்றருள் பவனே (வானவர் வானவர் கோனாடும் நமன் தொழும் திருவேங்கடம்) என்றாரல்லவா நம்மாழ்வார் (திருவாய் 3.3.7). அதனால் மேலுலகங்கள் யாவையும் அளந்த திருவிக்ரமனின் திருவடிகளை நினைவூட்டுகின்றன.

நிலாத்திங்கள் துண்டத்தாய்: இத்திருப்பதியின் பெயர் அங்கு கோயில் கொண்டிருக்கும் எம்பெருமானுடைய தன்மையைக் காட்டுகிறது. சந்திரன் குளிர்ச்சிக்குப் பெயர் போனவன். நிலாத்திங்கள் என்று பூர்ண சந்திரனையும் நிலாத்திங்கள் துண்டம் என்று கலை குறைந்த சந்திரனைக் குறிப்பிட்டு, உளகளந்த பெருமாள் திருவடி, மேலே பிரமனால்

கழுவப்பட்டது. கீழே நின்ற கால் பிறை சந்திரனால் குளிர்விக்கப்பட்டது. அதனால் திருக்கோவலூரில் இந்த திவ்யதேசத்தை நினைவு கூர்கிறார்.

நிறைந்த கச்சி ஊரகத்தாய்: கோயில்கள் நிறைந்த காஞ்சி புரத்துக்கு அழகும், ஒளியும் தருகின்ற திருஊரகத் திருப்பதியில் நிற்பவனே! திருக்கோவலூரைப் போல் இங்கேயும் பெருமாள் நடந்த கோலத்தில் இருப்பதால் இந்த திருஊரகம் ஆழ்வாரின் நினைவுக்கு வருகிறது.

ஒண்துறை நீர் வெஃகா உள்ளாய்: திருவெஃகாவில் இருக்கும் சொன்னவண்ணம் செய்த பெருமாள் திருமழிசையாரின் விருப்பப்படி படுக்கவோ, பாய்சுருட்டிக் கொள்ளவோ செய்ததனால் இது அழகிய துறை எனப்பட்டது. திருமழிசை யார் இருந்த இடம் மற்ற வைணவர்களுக்கும் விருப்பமுள்ள இடமாய் உள்ளது. இது மூன்றாழ்வார்களுடன் இடைக் கழியில் நெருக்கமாக நின்று அவர்கள் சென்ற பிறகும் அவர் இடத்தை, அகலாமலிருந்த திருக்கோவலூர் பெருமானை நினைவுபடுத்துகிறது.

வேங்கடமும் விண்ணகரும் வெஃகாவும் அஃகாத
பூங்கிடங்கின் நீள்கோவல் பொன்னகரும்- நான்கிடத்தும்
நின்றான் இருந்தான் கிடந்தான்நடந்தானே .
என்றால் கெடுமாம் இடர். (முதல் திருவந்தாதி - 77)

என்று பொய்கை ஆழ்வார் அருளிச்செய்தபடி,

உள்ளுவார் உள்ளத்தாய்: நமக்கு ஒரு தலைவன் உண்டு என்று நினைக்கும் பக்தர்கள்தம் நெஞ்சிலே என்றும் வாழ்பவனே

முன்னும் பின்னும் திவ்ய தேசங்களைச் சொல்லி வருபவர், இங்கே நினைப்பவர்களின் நெஞ்சைச் சொல்வானேன்

என்றால்-அவன் திருப்பதிகளில் நிற்பதும், கிடப்பதும் அடியவர்களுடைய நெஞ்சை அடைவதற்காக வல்லவா?.

"நின்றது எந்தை ஊரகத்து இருந்தது எந்தை பாடகத்து
அன்று வெஃகணை கிடந்தது எண்ணிலாத முன்னெலாம்
அன்று நான் பிறந்திலேன் பிறந்தபின் மறந்திலேன்
நின்றதும் இருந்ததும் கிடந்ததும் என் நெஞ்சுளே"

என்று திருமழிசைப் பிரான் அருளிச் செய்தாரல்லவா. கொஞ்சம் அன்புள்ளவர்கள் நெஞ்சத்தில் என்றும் இருக்கக் கூடிய நீ, உன்னைப் பிரிந்தால் தரிக்க மாட்டாத எனக்குக் காட்சி தாரதது எவ்வாறு என்கிறார் ஆழ்வார்.

உலகமேத்தும் காரகத்தாய்: உலமனைத்தும் போற்றும் படியான திருக்காரகத்தில் நின்றருளியவனே! அனைத்து உலகும் போற்றக் கூடிய நீ எனக்குக் காட்சி அளிக்காதது எங்ஙனம் என்பது கருத்து.

கார் வானத்துள்ளாய்:- உன்னுடைய பெயருக்கேற்றபடி மழை பொழியும் மேகம் போல் திருக்கார்வானம் என்னும்! திவ்யதேசத்தில் இருப்பவனே! மேகம் ஒரு பயனும் எதிர்பாராது மழையைத் தருவது போல் எவருடைய விண்ணப்பமின்றி பாரபட்சமின்ற அனைவருடைய தலைகளிலும் திருவடியை வைத்த திருவிக்கிரமனின் குணத்தைக் காட்டுவதற்கு கார் வானத்துள்ளாய் என்றார்.

கள்வா : திருடனே! ஆழ்வார் தம் அன்பின் வெளிப்பாடாக பெருமாளை 'திருடா' என்று அழைக்கிறார். 'ஒரு பாட்டன் அன்பின் மிகுதியில் திருட்டுப்பயலே' என்று அழைப்பது போல 'கள்வா' என்றார். அடியார்களுக்கு உரிய, அவர்கள் அனுபவிக்கத் தக்க வடிவைக் காட்டாமல் இருப்பதும் ஒரு

கள்ளத்தனம் ஆகும். அவனுடைய திவ்யமங்கள விக்ரகமும், திவ்யாயுதங்களும் அவனுடைய இருப்பிடமாகிய வைகுந்தமும் எல்லாம் பக்தர்கள் கொண்டாட ஏற்பட்டது. அதை அவர்கள் அனுபவிக்க விடாமல் மறைப்பதும் ஒரு கள்ளந்தானே. அதனால் கள்வா என்றார்.

காமரு பூங்காவிரியின் தென்பால் மன்னு பேரகத்தாய்: ஆசைப்படத்தக்க அழகையுடைய காவிரிக்கு தெற்குப் பக்கத்தில் உள்ள திருப்பேரகம் என்னும் திவ்யதேசத்தில் வாழ்பவனே. திருவரங்கம் எம்பெருமான், அடியார்கள் இருவருக்கும் ஒரே மாதிரியான ஈர்ப்பைத் தருகின்ற திவ்யதேசம். அப்படிப்பட்ட திருவரங்கம் பெரிய கோயில் தெற்குக் கரை வழியாக போவாருண்டோ என்று அடியார் களைத் தடுத்தாட் கொள்வதற்காகத் தன்னால் காப்பாற்றப்பட வேண்டியவர்களைத் தேடி எம்பெருமான் கரையைப் பற்றுகிறான். உலகிலுள்ள யாவரையும் உய்விப்பதற்காக அவன் கரையைப் பற்றிக்கொண்டு கிடக்க, ஆழ்வார் அவன் தன்னைக் கொள்ளாதது ஏன் என்று மருவுகிறார். அடியார் களுக்காகவே இருக்கின்ற திருக்கோவலூர் ஆயனைப் போல திருப்பேர்நகர் எம்பெருமானுடைய தன்மை ஒத்திருப்பதால் அவரை இங்கு நினைவு கூறுகிறார்.

பேராதென்னெஞ்சினுள்ளாய் : என்னால் உன்னைப் பார்க்க, இயலாதவாறு நீ மறைத்துக்கொள்கிறாய். ஆனால் என் நெஞ்சில் எப்படித் தோற்றுகிறாய்? அப்படி நீ நெஞ்சில் தோற்றாமல் இருந்திருந்தால் நான் உன்னைத் தேடவேண்டிய தேவை இருந்திருக்காது. உன்னை என்னால் காணவும் இயலவில்லை, மறக்கவும் இயலவில்லை இப்பொழுது இல்லாமல், போனாலும் எப்போதாவது வெளியில்

காணலாம் என்னும் ஆசையில் பிரிந்து சென்றாலும் நெஞ்சு உன்னையே நினைத்துக்கொண்டு அவஸ்தைப் படவேண்டியுள்ளது. இறந்து உன்னிடம் வரலாம் என்றாலும் அதுவும் உன் சித்தப்படி அல்லவா நடக்கிறது. அசோக வனத்தில் உன்னைப் பிரிந்த நிலையில் சீதாபிராட்டி தன்னை முடித்துக் கொள்வதற்காகத் தலை முடியைக்கொண்டு சுருக்குப்போட முயன்றபோது அதுவும் முடியவில்லை அல்லது 'உதவிக்கைம்மாறு என்னுயிர் என்ன உற்றெண்ணில் அதுவும் மற்றாங்கவன்தன்னது (திருவாய் 7.9.10) என்னுமாப் போல், எல்லா உயிர்களுக்கும் உடையவன் அவன் அல்லவா. அவன் விருப்பமின்றி நாம் நம்மை முடித்துக்கொள்ளவும் முடியாது. அவனைக் காணவும் முடியாது. ஆனால் அவனை நம் நெஞ்சில் வைத்து போற்றுவதை அவனாலும் தடுக்கமுடியாது.

பெருமான்- எத்தனைத் திருப்பதிகளிலே திருக்கோயிலூரைப் போல் எம்பெருமான் குடிகொண்டிருக்கிறான். நான் உடைமை நீ உடையவன் என்ற அறிவை நீ தந்திருக்கா விட்டால் உன்னை இப்படி திவ்யதேசங்கள் தோறும் தேடி அலையவேண்டிய தேவை யிருந்திருக்காது. மற்ற சம்சாரி களைப் போல சாதாரண இன்ப·துன்பங்களுக்கு ஆட்பட்டு அதற்காக அதிக கவலைப்படாமல் இருந்திருப்பேனே என்று ஆழ்வார் சொல்லவும், பகவான் உடலும் உயிரும் ஒன்று என்ற நினைவுடன் எழுவகை உலக இன்பங்களில் உழன்று கொண்டிருந்த உமக்கு, உமது தன்மைக்குத் தகுந்ததான திவ்யதேசங்கள் தோறும் நான் அர்ச்சாவதாரத்தில் எழுந்தருளியிருக்கும் பெருமையை மங்களாசாசனம் செய்யும் புருஷார்த்தத்தையும் அறியச்செய்து என்னோடு

இருத்தலே இன்பம் மற்றது துன்பம் என்னும் நிலைக்குக் கொண்டு வந்து உமக்கு நாம் உபகாரம் செய்திருக்க நான் ஒன்றுமே உமக்கு செய்யாதது போல் மற்றவர் நினைக்கும் படியாக இப்படிக் கதறுவது நன்றி மறந்ததனாலா? என்று பெருமாள் கூறவும்.

உன்திருவடியே பேணினேனே: ஆழ்வார் நான் நன்றி மறந்தவனல்லன்; இருந்தாலும் மற்ற சம்சாரிகளை விட ஏதோ சில சிறப்புகளைச் செய்ததால், அது எனக்குப் புருஷார்த்தம் (பிறவிப்பயன்) ஆகிவிடுமா? உன் திருவடிகளை நேரே காண வேண்டும் என்னும் ஆசையினால் அல்லவா கதறுகின்றேன்.

'எல்லாரோடும் ஒக்க எண்ணியிருந்தீர் அடியேனை' (பெரிய திரு. 4.9.6) உன்திருவடிகளைக் காண்பது தானே எனக்குப் புருஷார்த்தம். உனது திருவடியை நான் கண்டு களிக்கும்படி காட்ட வேண்டும் என்பதே எனது வேண்டு கோள் என்கிறார். அத்தனை திருப்பதிகளைச் சொல்லி திருவடி என்று ஒருமையிற் சொல்லாமா? என்றால் எல்லா திருப்பதிகளிலும் திருக்கோவலூர் உட்பட, இருப்பது எம்பெருமான் ஒருவன் தானே, அதனால் உன் திருவடி என்று ஒருமையில் சொல்கிறார் ஆழ்வார்.

ஒன்பதாவது பாசுரம்

வங்கத்தால் மாமணி வந்துந்து முந்நீர்
மல்லையாய் மதிள் கச்சியூராய் பேராய்
கொங்கத்தார் வளங்கொன்றை அலங்கல் மார்வன்
குலவரையன் மடப்பாவை இடப்பால் கொண்டான்
பங்கத்தாய் பாற்கடலாய் பாரின் மேலாய்
பனிவரையினுச்சியாய்! பவள வண்ணா!
எங்குற்றாய் எம்பெருமான் உன்னைநாடி
ஏழையேன் இங்ஙனமே உழிதர் (ரு) கேனே.

பதவுரை:

வங்கத்தால்:- *கப்பல்களாலே,*

மாமணி வந்துந்து: *சிறந்த இரத்தினங்களைக் கொண்டு வந்து தள்ளும்*

முந்நீர் மல்லையாய்: *க்டற்கரையின் மேல் இருக்கும்* **திருக்கடல் மல்லையில் :** *(மாமல்லபுரத்தில்) வாழ்பவனே*

மதிள் கச்சியூராய்: *மதில்கள் நிறைந்த காஞ்சிபுரத்தில் வாழ்பவனே,*

பேராய்: *திருப்பேர் நகரில் கோயில் கொண்டிருப்பவனே,*

கொங்க(த்த)ார் வளங்கொன்றை அலங்கல் மார்வன்:- *தேன் நிறைந்த கொன்றைப் பூக்களால் ஆன மாலையை மார்பில் விளங்க பெற்றிருப்பவனாய்*

குலவரையன் மடப்பாவை இடப்பால் கொண்டான்: சிறந்த மலையரசனான இமவானின் மகளான பார்வதியை தன்னுடலின் இடப்பக்கத்தில் வைத்திருக்கும் உருத்திரனை (அர்த்த நாரீசுவரன்)

பங்கத்தாய்: தன் இடப்பக்கத்தில் கொண்டவனே. (வெற்றி கொண்டவனே)

பாற்கடலாய்! : திருப்பாற்கடலில் பள்ளி கொண்டவனே. **பாரின் மேலாய்:-** பூமியில் (இருப்பவர்களுக்கு நன்மை செய்ய) அவதரித்தவனே. (உலகின் தலைசிறந்த பரம் பொருளே)

பனிவரையின் உச்சியாய்-: குளிர்ந்த திருவேங்கட மலையில் உச்சியில் நின்றவனே,

பவளவண்ணா: பவளம் போல் இனிய திருமேனி கொண்டவனே.

எங்குற்றாய்:- எங்கே புகுந்தாய்?

எம்பெருமான்:- எனது தலைவனே

உன்னைநாடி:- உன்னைத்தேடி

ஏழையேன்:- சிறியவனாகிய நான்

இங்ஙனமே உழிதர்கேன்: இவ்வண்ணமாக தேடி அலைகிறேன்.

பொழிப்புரை

சென்ற பாட்டில் தாம் இருந்த இடம் திருக்கோவிலூராக இல்லாததால், அவன் தாம் இருந்த இடத்துக்கு வந்து காட்சி அளிக்காததால், அவனுடைய வெவ்வேறு குணங்களை யுடைய பல திவ்யதேசங்களைப் பாடி அவன் தனக்கு வந்து காட்சி அளிப்பான் என்று பாடினார். பெருமாள் தான்

உலகளந்த திருவிக்ரமனாக நின்ற அழகை திருக்கோவிலூரில் காட்டினோம். ஆழ்வார் அங்கே வந்து அனுபவிக்க வேண்டியதுதானே என்றிருக்க, ஆழ்வார் அவன் தாமிருக்கு மிடத்திற்கு வராதது, தம்மிடம் அதற்குத் தேவையான தகுதிகள் இல்லையோ என்று ஐயுறுகிறார். ஏனென்றால், பெருமாள் சிறிது அன்பு இருக்குமிடத்திற்கும் சென்று காட்சியளிப்பான். அவன் தாமிருக்குமிடம் வந்து தனக்குக் காட்சியளிக்காதது தம்முடைய பாவமே என்று நினைத்து, அவனை விடவும் முடியாமல் பெறவும் முடியாமல் கிடந்து தவிக்கின்ற நிலையாகிவிட்டதே என்று ஆழ்வார் வருந்துகிறார்.

விளக்கவுரை:

வங்கத்தால் மாமணி வந்துந்து முந்நீர் மல்லையாய்: கப்பல்கள் நிறைய இரத்தினங்களைக் கொண்டு வந்து கடற்கரையில் அமைந்திருந்திருக்கின்ற கடல் மல்லை என்னும் திவ்ய தேசத்தில் கொண்டு வந்து சேர்த்த வண்ணம் இருக்கின்றன. அவை எடுப்பாரற்றுக் கிடக்கின்றன. அதனால் நித்யசூரிகளால் அனுபவிக்கப்படும்படியான பரம்பொருள் கடற் கரையில் வந்து கிடக்கின்றது. ஆனால் அங்கு வருபவர்கள் அவனைப் பேணாமல் இருக்கும் படி செய்து அவன் மாய உறக்கத் திலிருக்கின்றான். பரமபதத்தில் மணியுருவில் (மணியுருவாய் திருநெடு.1) இருக்கும் அவன் இங்கு வந்து பேணுவாரின்றி கடற்கரையில் கிடக்கிறான். அதுவும் அனந்தசயனமாக இல்லாமல், அஞ்சாமல் நெருங்கக் கூடிய ஸ்தலசயனப் பெருமாளாய்ப் பள்ளிகொண்டிருக்கிறான். அவன் அடியவர்க்காக வாத்ஸல்யத்துடன் அவர் இருக்குமிடத்து வந்து எளிமையாகக் கிடக்கவும் போற்று வாரில்லாமை இந்த

நூற்றாண்டில் என்றால் ஆழ்வார் வாழ்ந்த காலத்திலும் அந்தநிலை. லீலா விபூதியின் இழிநிலையைக் குறிப்பிடுகிறது.

இதற்குத் தன்னுடைய பாவங்கள் தான் காரணம் என்று ஆழ்வார் எண்ணுகிறார். (குற்றமுள்ள நெஞ்சல்லவா?)

மதிள் கச்சியூராய்: மதிள் நிறைந்த காஞ்சிமாநகரக் கோயில்களில் குடிகொண்டிருப்பவனே! நிறைந்த கச்சி ஊரகத்தாய் என்று தொடங்கி கச்சி, திருஊரகம் என்று இரண்டு திவ்யதேசங்களைச் சென்ற பாட்டில் பாடினார். அங்கு ஆயனாருடைய தன்மையை உடையவன் என்று சொன்னார். இங்குத் திருக்கடல் மல்லைபோல் ஆசைப்படுவார் எவரும் இல்லை என்றில்லாமல் சில அடியார்கள் பெருமாளுக்கு மதிளிட்டுக் காக்கப்போகிறோம் என்றார்கள். மல்லையாய் என்ற போது கொள்வாரில்லையே என்று ஆதங்கமும் மதிள்கச்சி என்றும் போது இங்கு மதிளிட்டு காக்கப் போகிறோம் என்று பரிவோடு பேசுகிறார். அவனுக்கு என்ன தீங்கு நடந்து விடுமோ என்று அஞ்சும்படி ஆழ்வாரின் தன்மையிருக்கிறது. மல்லையாய் மதிள் கச்சியூராய் என்று இவ்விரண்டையும் சேர்த்து கொள்வதற்கு காரணம் துறை முகத்தில் இறங்கிய பொருள் நகரில் அல்லவா விலை போகும் எம்பெருமானுடைய மென்மையைப் பார்த்து பரிவும் தன்நிலையைப் பார்த்து வெறுப்பும் ஒரு சேர அடைவது ஜீவனின் குணம் தானே?

பேராய்:- திருப்பேர் நகர் என்னும் திவ்யதேசத்தில் எழுந் தருளியிருக்கும் பெருமாள் நம்மாழ்வார் திருமாலிருஞ் சோலை என்ற சொன்னவுடன் ஆழ்வாரின் நெஞ்சு நிறையப்புகுந்து (திருவாய்-10.8.1) அவன் நம்மாழ்வாரை ஆட்கொண்டதைப் போல் மற்றவரை ஆட்கொள்ள

தென்திருப்பேர் நகரில் எழுந்தியிருக்கிறான். ஆனால் அவனும் தன்னைப் பிரிந்து தரிக்க முடியாத பரகாலரை ஆட்கொள்ளாமல் இருக்கிறான்.

கொங்கத்தார் வளங்கொன்றை அலங்கல் மார்வன் குலவரையன் மடப்பாவை இடப்பால் கொண்டான் பங்கத்தாய்: தேனையும், மணத்தையும், அழகையும், உடைய கொன்றை மாலையை அணிந்தவனும், இமவான் மகளான பார்வதியை இடப் பக்கத்தில் கொண்டவனான உருத்திரனை தன் உடலில் வலப்பக்கத்தில் வைத்த பெருமானே எம்பெருமான் இலக்குமியை வலப்பக்கத்தில் வைத்திருக்க மாதொரு பாகனான (பார்வதியை இடப்பக்கத்தில் கொண்டுள்ள) சிவனை தனது வலப்பக்கத்தில் வைத்தது எங்ஙனம்? கபால மாலைகளும், சுடுகாட்டுச் சாம்பலும் பூசிக்கொண்டிருக்கின்ற சிவனை, திவ்ய மாலைகளையும் திவ்யாபரணங்களையும் அணிந்து கொண்டிருக்கும் பிராட்டியின் இடத்தைக் கொடுத்தது, தான் அனைவரோடும் உறவுள்ளவன் என்பதைக் காட்டவே. தவிரவும், மற்ற சேதனர்களைப் போல் சிவனும் எனக்கு உடலாகிறான் என்று காட்டி தன்னுடைய பரத்துவத்தை நிலை நாட்டவே என்றும் கொள்ளலாம்.

ஏறாளும் இறையோனும் திசைமுகனும் திருமகளும்
கூறாளும் தனியுடம்பன் குலங்குலமா அசுரர்களை
நீராகும் படியாக நிருமித்துப் படைதொட்ட
மாறாளன் கவராத மணிமாமை குறைவிலமே.

(திருவாய் 4.8.1)

பாற்கடலாய்: உருத்திரன் ஒருவனுக்கு மட்டும் தன் உடலை அளிக்கவில்லை. நான்முகன், இந்திரன் போன்ற எல்லா தேவர்களுக்கும் வசதியாக அவர்களுக்கு ஆபத்து வரும்போது

அவனை அணுகுவதற்கு எளிதாக பரமபதத்தை விட்டு பாற் கடலில் வந்து யோக நித்திரை செய்பவனே. எல்லோருக்கும் காட்சியளிப்பவன் காணவிரும்பும் எனக்குக் காட்சி அளிக்காமல் இருக்கிறான்,

பாரின் மேலாய்: அரக்கர்களாலே தங்களுடைய இருப்பிடத்தை இழந்து எல்லா தேவர்களும் திருப்பாற்கடலில் வந்து சரணடைய, தன் தகுதிக்கு ஒவ்வாத மீன், ஆமை, பன்றி, சிங்கம், மனிதன் போன்ற உருக்களில் அவதாரம் செய்து காத்ததைச் சொல்கிறது.

பனிவரையின் உச்சியாய்: கானமும், வானமும் வேடு முடைய வேங்கடம் (நான். திரு. 47) என்று காட்டிலுள்ள வேடர்களுக்கும் குரங்களுக்கும் காட்சியளிக்கும் படி இருக் கின்ற திருவேங்கடத்து எம்பெருமான் எனக்குக் காட்சியளிக் காமல் இருக்கிறான்.

பவள வண்ணா எங்குற்றாய்? பவளம் போல் அழகிய மேனியைக் கொண்டு நீ எங்கே காணாமற் போனாய். உன் அழகிய திருமேனியை எங்களுக்குக் காட்டியதை மறைத்துக் கொள்ளவே எங்குற்றாய். எங்கே போனாய் என்று இருளிலே கையை நீட்டுவது போன்று நீட்டித் தேடினால் அவன் நம் கைக்கு எட்டுவான். அவனைப் பிடித்துக்கொள்ளலாம் என்று கையை வீசுகிறார். வளர்ந்து விட்டக் கொடி பற்றிக்கொள்ள ஒரு கொம்பு தேவைபோல இவர் கொம்பு கிடைக்காத கொடி போல் தரையில் கிடக்கிறார்.

எம்பெருமான் எங்குற்றாய்? உடையவன் நீ உன்னுடைய உடமையான நான் வாடித் தரையில் கிடக்கும் பேரது, உடைமை இருந்த இடத்திற்கு உடையவுன் வந்து

கைக்கொள்ளத் தக்கதே அன்றி உடையவனிடம் உடைமை செல்வது இயலுமா?

உன்னைநாடி:- இனிமையிலும் அழகிலும் ஒப்பற்றவனாய் இருக்கிற உன்னைத்தேடி, நீ அடையத் தகுந்தவனாய் இருப்பது நான் உன்னை வந்தடைய வேண்டும் என்ற வேகத்தை எனக்குத் தருகிறது. ஓடினேன் ஓடி(பெரிய திரு.1.1.1) என்று உலக ஈர்ப்புகளில் நான் மூழ்கிக் கிடக்கும் பொழுது நீயே என் மேல் விழுந்து உனக்கும் எனக்கும் உள்ள உறவை உணர்த்தி உன்னை எண்ணும்படி பண்ணி, உன் பேறாக என் தலைமேல் உன் திருவடிகளை வைத்து இன்று நான் உன்னைத் தேடும்போது நீ வந்து காட்சி அளிக்காமல் இருப்பது ஏன்?

நீயே வந்து எனக்கு உன்னைக்காட்டியதிலிருந்து நான். 'தேசமறிய உமக்கே ஆளாக' (பெரி திரு) திவ்ய தேசந் தோறும் திரிந்து வந்திருக்கிறேன். சீதையைப் போல் நான் என்றும் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது. என்னுடைய நப்பாசை அப்படிப் பொறுத்திருக்க விடவில்லை.

ஏழையேன் இங்ஙனமே உழிதர்கேனே: நீ அடியார்க்கு வசப்பட்டவன் . தகுதியைப் பார்த்து எல்லாருக்கும் ஒரே மாதிரியாகக் காட்சியளிப்பவன் அல்லன். நான் உன்னைப் பெற முடியாமைக்கு என் பாபமே காரணம் ஆகும். (வாழ்ந்தே போம் நீரே! (பெரியதிரு 4.9.4) என்று நான் சொன்னபாவத்திற்கு இது பலனா?)

இங்ஙனமே: காடுகளில் அரக்கர்களால் துன்பப்படுத்தப்பட்ட உடலை பல முனிவர் இராமனுக்குக் காட்டியதைப் போல்

அவனைக் காணமுடியாமல் வருந்தும் தன் உடம்பை காட்டி என்றும் இப்படியாக.

உழிதருகேனே: சரீரத்தை முடித்துக்கொள்ளவும் முடியாமல் தரிக்கவும் முடியாமல் இருதலைக்கொள்ளி எறும்பு போல, தசரதனைப் போல் உடலை முடித்துக் கொள்ளவோ அல்லது சீதை இராமனுக்காகக் காத்துக் கொண்டிருந்ததைப் போல காத்துக் கொண்டிருக்கவும் முடியாமல் பிரிவுத்துன்பத்தை பொறுக்க முடியாமல் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறேனே என்று ஆழ்வார் அங்கலாய்க்கிறார்.

பத்தாவது பாசுரம்

பொன்னானாய் பொழிலேழுங் காவல் பூண்ட
    புகழானாய் இகழ்வாய தொண்டனேன் நான்
என்னானாய் என்னானாய் என்ன லல்லால்
    என்னறியேன் ஏழையேன் உலகமேத்தும்
தென்னானாய் வடவானாய் குடபாலானாய்
    குணபால மதயானாய் இமையோர்க் கென்றும்
முன்னானாய், பின்னானார் வணங்குஞ் சோதி
    திருமூழிக் களத்தானாய் முதலா னாயே.

பதவுரை:

உலகமேத்தும்: உலகம் முழுவதும் போற்றுகின்ற

தென்னானாய்: திருமாலிருஞ்சோலையில் நின்ற யானை போன்றவனே.

வடவானாய்: வடதிருவேங்கடத்தில் நின்ற யானை போன்றவனே.

குடபால் ஆனாய்:- மேல்திசையில் (திருவரங்கத்தில் கண்வளர்ந்தருளும் யானை போன்றவனே.

குணபாலமதயானாய்:- கிழ்த்திசையில்(திருக்கண்ணபுரத்தில்) மதயானை போன்றவனே.

இமையோர்க்கு முன் ஆனாய்: நித்ய சூரிகளுக்குக் கண்ணால் கண்டு அனுபவிக்கும்படி முன்னிற்பவனே.

பின்னானார் வணங்கும் சோதி: அவதாரத்திற்குப் பிறப்பட்டவர்கள். கும்பிடும் படியான சோதியாக

திருமூழிக்களத்தானாய்: திருமூழிக்களத்தில் வாழ்பவனே.

பொன்ஆனாய்:- பொன் போன்றவனே, பொழில் ஏழும் காவல் பூண்ட புகழ் ஆனாய்:- ஏழுலகங்களையும் காத்தருள்வதால் வந்த புகழை உடையவனே.

இகழ்வாய தொண்டனேன் ஏழையேன்:- இகழ்ச்சியை (இழிவையே) வடிவாகக் கொண்ட தொண்டனான அலைகின்ற மனத்தை யுடைய வனான நான்.

என் ஆனாய் என் ஆனாய் என்னலல்லால்: என்னுடைய யானையே, என்னுடைய யானையே என்று சொல்வதன்றி **என் அறிவன்?:** எனக்கு வேறென்ன தெரியும்?

பொழிப்புரை:

இப்பாட்டால் அடியார்கள் இருந்த இடம் சென்று காட்சி அளிப்பவனாய், அவர்கள் தகுதியைப் பார்க்காமல் அடியார்க்கு காட்சி அளிப்பவன், ஆழ்வாருக்குக் காட்சி அளிக்காது இருப்பதற்கு காரணம். முன்பு நான்காம் பாசுரத்தில் தாம் சொன்ன 'மந்திரத்தை மந்திரத்தால் மறவாதென்றும் வாழுதியேல் வாழலாம்' என்ற வ்ார்த்தை காரணமாக இருக்கலாமோ என்று எண்ணி திருமந்திரத்தைப் பற்றித் தாம் சொன்னது. அடையவேண்டிய பொருள் நீயாயிருக்க அடைய வேண்டிய வழி எப்படி வேறாக இருக்கமுடியும்? அது நான் ஒரு பேச்சுக்காக சொன்னதை நீ

வேறாகப் புரிந்துகொண்டாய். எனக்கு கைமுதல் உன்னைத் தவிர வேறொன்றுமில்லை. நம்மாழ்வாரும் தனக்கு வேறு கைமுதல் இல்லாமையை 'நோற்ற நோன்பிலேன். நுண்ணறி விலேன்- திருவாய் 5.7.1) 'ஆகிலும் இனி உன்னை விட்டு ஒன்றும் ஆற்றகில்லேன்' -திருவாய்மொழி 5.7.1) இவரும் தன் கைமுதல் வேறு இல்லாமையைக் கூறுகிறார்.

விளக்கஉரை

பொன்னானாய் : எனக்கு பொன் போல அடையத்தக்க பொருளாக இருப்பவனே! பொன், ஆபத்துக்கு உதவுவதாய், இருந்தால் உயர்வாவது எளிது அனைவராலும் விரும்பப்படு கின்ற ஒரு பொருளாய் இருப்பது போல் நீ அடியார்களுக்கு வைப்பாம் மருந்தாம் (திருவாய் 1.7.2) என்னும் படி இருக்கிறாய். நீயே அடையப்பட வேண்டிய பொருளாக இருக்கின்ற போது வேறு (உபாயம்) வழி எனக்குத் தேவையில்லை என்றார் ஆழ்வார்.

பொழிலேழும் காவல் பூண்ட புகழானாய்: உன்னுடைய லீலாவிபூதி எனப்படும் ஏழு உலகங்களையும் நீயே உன் புகலாக எடுத்துக் கொண்டு அவற்றைக் காப்பாற்றுகிறாய். ஒரு அடியார் தனக்குத்தானே ஊறு விளைவித்துக் கொள்ளும் பொழுது அவனிடமிருந்து அவனையேக் காப்பாற்றும் வல்லமை படைத்தவன் அல்லவா நீ?

நீயே உபாயம் (வழி) ஆகும் தன்மையை ஏற்றுக்கொண்டு எனக்கும் வழியாக ஆனாய். அப்படி தன்னிடம் சரணடைந் தவர்களைக் காத்து அதனால் ஏற்பட்ட புகழும் உன்னுடைய சொத்தாக இருக்கிறது. அதனால் தானே நம்மாழ்வார் 'உவப்பில் கீர்த்தி அம்மானே என்றும் (திருவாய் 6-10-1)

அடிக்கீழ் அமர்ந்து புகுந்து அடியீர் வாழ்மின் என்றென்றும் *(6-10-10)* அருளிச் செய்தார்.

இகழ்வாய தொண்டேனேன் நான்: இதனால் வழியையும் (உபாயம்) அடையும் பொருளையும் (உபேயம்) அடைய வறுபவனிடம் வேறு எந்த உபாயம் இருந்தால் அதனால் பயனில்லை. அதனால், வேறேதும் உபாயமில்லாத அடியவனாக உன் காட்சிக்குக் காத்துக்கொண்டு கிடக்கிறேன்.

'நான் குற்றங்களுக்கு இருப்பிடமானவன் என்னைக் காப்பாற்றிக் கொள்ளும் கை முதல் இல்லாதவன் வேறு புகலிடம் இல்லாதவன். நீயே என்னை ஆட்கொண்டருள வேண்டும்' என்ற வேண்டுகோள் சரணாகதி ஆகும். அப்படிப்பட்ட சரணைத் தரக்கூடியவன் நீ (திருமால்) ஒருவனே அல்லவா?

முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்டது போல் தொண்டனான நான் உன்னை அடைய ஆசைப்படுவது. இகழ்வான செயல் என்று ஆழ்வார் தன்னை இகழ்வாய தொண்டனாகச் சொல்லிக்கொள்கிறார்.

என் ஆனாய் என் ஆனாய் என்னலல்லால்: ஆனை வலிமை மிக்கது. ஆனால் அதை மிருதுவான பிராணி போலவும் பழக்கலாம். அதனால் என் ஆனாய் என்றார். எம்பெருமானுக்கும் யானைக்கும் பல ஒற்றுமைகள் உள்ளன. யானை;

1. *ஒருநாள் பார்த்தால் திருப்தி படாமல் தினந்தோரும் பார்க்கத் தூண்டும் தன்மையை உடையது.*
2. *பெரிய மதிப்பு (விலை) உடையதாய் உள்ளது.*

3. தான் நினைத்தபோது கைக்கு எட்டியவர்களை எடுத்து கழுத்திலே வைத்து கொள்ளும்.
4. தாமே முயன்று தன் மேல் ஏற வேண்டும் என்று நினைப்பவர் களுக்கும் பணிந்து கொடுக்கும்.
5. தான் விரும்பாதவரை கீழே தள்ளினால் அது பற்றி கவலைப் படாமை.
6. தன்னைக் கட்டுவதற்குக் கயிற்றைத் தானே கொடுக்கக் கூடியதாயிருக்கை.

எம்பெருமானும்

1. என்றும் எல்லோராலும் ஆசைப்படத்தக்க வடிவழகை உடையவன்.
2. ஒத்தாரும் மிக்காரும் இல்லா பெரிய மதிப்பை உடையவன்.
3. தன்னைச் சரணடைந்தவர் யாராயினும் தன் பொருட்டு அவர்க்குத் தன்னையும் கொடுக்கும் உரிமை உள்ளவன்.
4. ஆனை தன்மீது ஏற விரும்புபவர்களுக்குப் பணிந்து கொடுப்பது போலத் தன்னை எவ்வழியிலேயும் அடைய முடியவர்களுக்கு தன்னை எளியவன்ாக்கிக்கொள்ளும் தன்மை யுடையவன்.
5. தன் அடியார்க்கு விரோதிகள் தன்னோடு உறவுடைய வர்களாக இருந்தாலும் அவரை அழித்தால் அதை எவராலும் தடுக்க முடியாதவன்.
6. தன்னை அடைவதற்கான பத்தியை தானே கொடுத்து த்ன்னைத்தானே கட்டிக்கொள்வதற்கு கயிறு கொடுப்பது

போல் தன்னிடம் பக்தர்களுக்கு ஆசையை ஏற்படுத்தும் தன்மை.

எம்பெருமானுக்கும் யானைக்கும் இத்தனை ஒற்றுமை இருப்பதனாலே 'என் ஆனாய் என் ஆனாய்' என்கிறார் ஆழ்வார். என் ஆனாய் என்று இரண்டு முறை சொல்லி எம்பெருமானிட மிருந்து தன்னை (தன்நெஞ்சை) மீட்பது அரிது என்று காட்டுகிறார்.

என்னலல்லால்: இப்படி உம்முடைய குணங்களைப் பாடி பொழுது போக்குவததைத் தவிர வேறு எந்த சாத்திரமோ அதில் சொல்லப்பட்டுள்ள ஞானம், தியானம், கர்மம் எந்த வழி முறைகளும் எனக்குத் தெரியாது.

எம்பெருமான் 'நானே வழியும் நானே அடையுமிடம் என்று நினைத்திருந்தீரானேல் ஏன் அவசரப்படுகிறீர் எம்பெருமான் காட்சி தரும் போது தரட்டும் என்று அமைதியாக இல்லாமல் என்னைக் கூப்பிட்டுக் கொண்டே இருக்கலாமோ?' என்கிறார்.

ஏழையேன்:- நான் வேறு எந்த கைம்முதலும் இல்லாதவன் என்பது மட்டுமின்றி உன்னை அடைய வேண்டும் என்ற ஆசை மிகுந்த நிலையில் நான் எப்படி அமைதியாக இருக்கமுடியும் 'ஆனையின் தன்மைகள் எமக்கு உண்டு என்ற நீர் சாத்திரங்களில் கற்றீரா அல்லாது எந்த குருவாவது சொல்லிக் கொடுத்தாரா?'' என்று எம்பெருமான் கேட்கவும் நீ கோயில் கொண்டிருக்கும் திருப்பதிகளிலிருந்து கண்டறிந்தேன் என்கிறார். உலகமேத்தும் தென் ஆனாய் என்று தொடங்கி தான் மனத்தில் கட்டிவைத்திருக்கும் நாலு திசையானைகளைப் பற்றி கூறுகிறார்.

உலக மேத்தும் தென் ஆனாய் : தெற்குத் திருமலை என்று அழைக்கப்படுகின்ற திருமாலிருஞ்சோலை மலையில் நின்றிருப்பவனே. இம்மலையைச் சுற்றி வருவதனால் தெற்கு திக்கில் உள்ளோர் வளர்ச்சி பெறுவதல்லாமல், 'வலஞ் செய்யும் வானோர் மாலிருஞ்சோலை' என்று நம்மாழ்வார் அருளிச்செய்தபடி(திருவாய் *2-10-8*) வானோர்களும் தங்களக்குப் பரமபதத்தில் கிடைக்காத சிறப்பு விருந்துகளை கண்டுண்பதற்காக தெற்கு யானையாக திருமாலிஞ் சோலையில் இருக்கிறாய்.

வடவானாய்:- வானவர் வானவர் கோனொடும் சிந்து பூ மகிழும் திருவேங்கடம் (திருவாய் *3.3.7*) விண்ணோர் தாம் பரவும் பொழில் வேங்கட வேதியனை (பெரிய திருமொழி *1-9-10*) நெடியானே வேங்கடவா! நின்கோயிலின் வாசல் அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும் (பெருமாள்-திரு. *4-9*) என்று ஆழ்வார்கள் அருளிச் செய்தபடி, இந்திரன் முதலிய தேவர்களும், அரம்பையரும், அடியார்களும் ஒருசேர அனுபவிக்கின்ற வடவேங்கட மலையில் நின்ற கோலத்தில் இருப்பவனும்.

குடபாலானாய்: மேற்குத் திக்கிலே யோக நித்திரை செய்கின்ற பெரிய பெருமாளாகிற ஆனையே. மற்றதிக் கிலுள்ள ஆனைகள். நின்ற கோலத்திலிருக்க, பெரிய பெருமாள் மட்டும் பொன்னிசூழ் திருவரங்கத்தில் நீராடுகின்ற யானை சாய்ந்து கிடப்பது போல் 'மைம்மான மழகளிறாக' (பெரியதிருமொழி *5.6.1*) திருவரங்கத்தில் எல்லாரும் வணங்கும் படியாக இருக்கின்றவனே.

குணபால மதயானாய்: கிழக்குத் திக்கிலே, மதங்கொண்ட யானை போல் திருக்கண்ணபுரத்தில் எழுந்தருளியிருப்

பவனே. (ஆழ்வார் திருக்கண்ணபுர பெருமானைப் பத்து பதிகங்களில் அல்லவா அனுபவிக்கிறார். (கைம்மான மதயானை இடர் தீர்த்த திருமுகிலை(8-9-1) கருந்தாள் களிறொன்று ஒசித்தாவிர் கண்ணபுரம்) என்று ஒரு பாசுரத்தில் யானையைக் காத்ததையும், மற்றொரு பாசுரத்தில் யானையைக் கொன்றவனாக இருக்க ஒரு மதயானையால் தானே முடியும் என்று குணபால மதயானாய் என்றார். ஆழ்வார் காலத்தில் காட்டுமன்னார்குடி நாதமுனிகள் ஆளவந்தார் அவதரித்த இடம் அறியப்படாததால் குணபால் மதயானையாக அந்த யானையை நான்கு ஆழ்வார்களாலும் கோதைப் பிராட்டியாலும் மங்களாசாசனம் செய்யப்பெற்ற திருக்கண்ணபுரத்தை குணபால மதயானை யாய் கொள்வது உத்தமம்.

இமையோர்க்கு என்றும் முன்னானாய் : வைகுந்தத்தில் நித்யசூரிகள் தினமும் வணங்கும்படி அவர்கள் முன்னால் காட்சியளிக்கும் ஸ்ரீமந் நாராயணனே!

பின்னனார் வணங்கும் சோதி: தேசத்தாலும் காலத்தாலும் பிறப்பட்டவர் இருக்கும் மலையாள தேசத்தவர் வணங்கு கின்ற கொழுஞ்சுடராக திருமூழிக் களத்துறையும் ஒண் சுடரை" (திருவாய் 9-7-11) என்கண்பாசம் வைத்த பரஞ்சுடர் சோதி என்று திருவேங் கடத்தையும் மூவருவும் கண்டபோது ஒன்றாஞ்சோதி என்று இவ்வாழ்வாரே (திருநெடுந் தாண்டகம் 2) அருளிச்செய்தது போலவும்.

முதலானாயே : எம்பெருமானே கைமுதல். அவனைப் பற்றிக் கொண்டே அவனை அடையவேண்டும். பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றை பற்று விடற்க்கு (திருக்குறள்-9) என்று வள்ளுவப் பெருந்தகை அருளிச் செய்ததுபோல் ஆதி

பகவனாகவும் அகாரவாச்யனாகவும் இருப்பதனால் முதல் தனி வித்தாகவும் ஆதிப்பரமமூர்த்தி என்று நம்மாழ்வார் அருளிச்செய்தபடியும், மூவுலகும் படைத்த முதல் மூர்த்தியினை (பெரிய திரு. 9.9.1,2) என்று இவ்வாழ் வாரே அருளிச் செய்தபடி உலகுக்கெல்லாம் காரணமானவன் நீ.

1. முதல் பத்து பாசுரங்கள் ஆழ்வார் தாமான நிலையில் பாடியது எப்படி என்றால் தளிர்புரையும் திருவடி என் தலை மேலே என்று தாமான நிலையில் பாடுவதை விளக்கும்.

2. மச்சித்தா: என்று கீதா வாக்கியத்தின் விளக்கம் எப்படி யென்றால் 'இமையவர் தம் திருவுரு வேறெண்ணும் போது' (திருநெ-2) அந்தணனை அந்தணர் மாட்டு அந்தி வைத்த மந்திரத்தை மறவாது என்றும் வாழுதியேல் வாழலாம் மடநெஞ்சமே.

3. முதல் பத்தில் திருமந்திரார்த்தம் சொல்லப்பட்டது. எவ்வாறென்னில் ''என்னுருவில் நின்ற எந்தை'' என்பதால், முதல் பதமான ப்ரணவத்தின் பொருள் சொல்லப்பட்டது. ''தளிர் புரையும் திருவடி' என் தலைமேலவே என்று உபாயம் எம்பெருமான் என்று சொல்லுகையில் நம: சப்தத்தின் பொருளாகக் கொள்ளப்பட்டது. ''மின்னுரு வாய்'' தொடங்கி ''அனலுருவாய் திகழும் சோதி'' என்பதால் நாராயண ஸப்தத்தின் பொருள் சொல்லப் பட்டது.

4. முதல் பத்தில் பக்தி எப்படி சொல்லப்பட்டது எனில் ''மந்திரத்தால், மறவாதென்றும் வாழுதியேல்'' (திருநெ.4) எம்பெருமானைப் பக்தியுடன் மறவாமல் நினைப்பதையே சொல்கிறது. தூய உணர்வினால் மனம் தூய்மை

அடைகிறது. மனம் தூய்மைப் பட்டால் தியானம் நிலைபெறும். தியானம் நிலை பெற்றால் தீவினை முதலிய எல்லா முடிச்சுகளும் விலகும்' என்று சாந்தோக்ய உபநிஷதம் கூறும் நிலையான நினைவு பக்தியாகிறது.

5. முதல் பத்தில் திருமந்திரத்தின் முதல் சொல்லான ஓம் என்ற பதத்தின் பொருள் எப்படி சொல்லப்பட்டது என்றால் ''என்னுருவில் நின்ற எந்தை'' (திருநெ-1) என்பதால் அகார வாச்யனான எம்பெருமான் மகார வாச்யனை ஆழ்வாருக்கு (என்னுருவில்) அந்தர்யாமியாக இருந்தது என்று சொல்லப்பட்டது.

''மூவுருவும் கண்டபோது ஒன்றாம் சோதி'' (திருநெ.2) என்று உடையவனைச் சொல்லும் அகாரமும் உடமையைச் சொல்லும் மகாரமும் இருவருக்கும் இருக்கும் பந்தத்தைக் காட்டும் உகாரமாகவும் மூன்றும் ஒன்றும் சேர்ந்து ஓங்காரமாயிற்று.

6. ப்ரணவத்தின் முதல்பகுதியாகிய 'அகாரத்தை' ஏழாவது பாசுரத்தில் 'மன்னர் மாள வடிவாய மழுவேந்தி' 'வேள் முதலா வென்றானூர்'' ''உலகமாண்டு'' என்று பகைகளை நீக்கி உலகத்திற்கு வேண்டியதை செய்வதன் மூலம் காக்கும் தன்மை சொல்லப் படுவதாலே அது 'அவரக்ஷணே' என்னும் தாதுவிலிருந்து தோன்றிய முதலெழுத்தான அகாரத்தைக் குறிக்கிறது.

7. முதல் பத்துப் பாட்டுக்களில் தலைவன் தலைவி பிரிந்து இருக்கும் காலத்து தலைவி அவனைக் காணவேண்டும் என்றும் ஆற்றாமையில் தவிப்பது' எங்குற்றாய்? எம்பெருமான்'' என்று ஏக்கத்தைக் ாட்டியது.

பாசுரம் 11

பட்டுடுக்கும் அயர்த்திரங்கும் பாவை பேணாள்
பனிநெடுங்கண் நீர்ததும்பப் பள்ளி கொள்ளாள்
எட்டுணைப் போது என்குடங்காலிருக்ககில்லாள்
எம்பெருமான் திருவரங்கம் எங்கே என்னும்
மட்டுவிக்கி மணிவண்டு முரலும் கூந்தல்
மடமானை இது செய்தார் தம்மை, மெய்யே
கட்டுவிச்சிசொல்லென்னச் சொன்னாள் நங்காய்
கடல் வண்ணர் இது செய்தார் காப்பார் ஆரே!

பதவுரை:

பட்டு உடுக்கும்: பட்டுச் சேலையை உடுத்துக் கொள்கிறாள்.

அயர்த்து இரங்கும்: மயங்கி வருத்தத்தோடுநின்றாள்.

பாவை பேணாள்: விளையாட்டு பொம்மைகளில் விருப்பமில்லாதவளாக இருக்கிறாள்.

பனிநெடுங்கண் நீர்த்தும்ப: அவளுடைய குளிர்ந்த நீண்ட கண்களில் கண்ணீர் நிரம்ப

பள்ளி கொள்ளாள்: துங்குவது இல்லை.

என்துணை போது:- ஒரு நொடியளவும்

என் குடங்கால் இருக்க கில்லாள்: என் மடியில் இருப்பதில்லை

எம்பெருமான் திருவரங்கம்: எம்பெருமான் ஸ்ரீரங்க நாதன் பள்ளிக் கொண்டிருக்கும் படியான திருவரங்கம் என்கின்ற திவ்யதேசம்

எங்கே என்னும்: எங்கிருக்கிறது என்கிறாள்.

மணிவண்டு:- *அழகிய வண்டுகள்.*

மட்டுவிக்கி: *தாம் பருகிய தேன் விக்கி*

முரலும்: *ரீங்காரம் செய்யும்*

கூந்தல்: கூந்தலை உடையவளான

மடமானை: *அழகிய மான் போன்ற இளம் பெண்ணை*

இது செய்தார் தம்மை: இந்நிலைமைக்குக் கொண்டு வந்தவர் இன்னாரென்பதை

கட்டுவிச்சி:- *குறிசொல்லுகிறவளே!*

மெய்யே சொல் என்ன: உண்மையைச் சொல் என்று நான் கேட்க அவள்.

நங்காய்: பெண்ணே

கடல் வண்ணர் இது செய்தார்: *(என்று)* சொன்னாள் கடல் போன்ற நிறத்தை உடைய எம்பெருமான் இந்த நிலையை உண்டு பண்ணினார் என்று சொல்லவும்

காப்பார் யாரே : காப்பவனே இது செய்தால் இந்தப் பெண்ணை யார் காப்பாற்ற முடியும்?.

பொழிப்புரை:

முதல் பத்தில் எங்குற்றாய் என்று எம்பெருமானைத் தேடவும் பிரிவு அதிகமானதால் பிரேமையும் அதிகமாகி

பெண்பேச்சு (ஞானத்தில் தன்பேச்சு பிரேமத்தில் பெண் பேச்சு என்ற சொற்படி) அதிகமாக, ஆழ்வார் பரகால நாயகியாக ஆனார். இருந்தாலும், பிரேமை மிகுந்த போது நாயகி வாய் திறக்க முடியாமல் தவிக்கவும் இந்தப் பாசுரம் முதற்கொண்டு தாய்ப் பாடுகின்ற பாசுரங்களாக அமைந்தது. ஆழ்வார் எப்படி பெண்ணாக முடியும் என்றால் இதற்கு முன்பே பராங்குச நாயகியாகி நம்மாழ்வார் நமக்கும் பூவின் மிசை நங்கைக்கும் (திருவாய் 4-5-8) என்ற பிராட்டியோடு தம்மையும் பெண்ணாக சேர்த்துக்கொண்ட பாவம் பரகால நாயகிக்கும் பொருந்தும் என்பதைப் போல் எம்பெரு மானுடைய தலைமைக்கும் அழகுக்கும் ஆண்மைக்கும் அடிமைப்பட்டு மற்றெல்லாரும் பெண் தன்மை அடைந்து விடுகிறார்கள். பிரிவாற்றாமல் பரகாலநாயகி உண்ணாமலும் உறங்காமலும் இருப்பதால் அவளது நிலையைப் பிறருக்குத் தெரியப்படுத்தும் வகையில் தாய்ப் பாசுரங்களாக அமைந்தன.

விளக்கவுரை:

பட்டுடுக்கும்: தான் பட்டு உடுத்தியிருக்கும் அழகைக் காண்பதற்காகவே அவன் வருவான் என்று நினைத்து பட்டுசேலையை உடுத்திக்கொண்டு அவனுடைய வரவை எதிர் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அயர்ந்து இரங்கும்: இப்படி தான் தயாரான நிலையில் இருந்தும் அவன் தன்னைத் தேடி வராமையைக் கண்டு சோர்ந்து, முன்பே தூக்கம் இல்லாத நிலையில் மயக்கம் அடைகிறாள். தாயோ அவள் சிறுமிதானே என்று நினைத்து

பாவை பேணாள்: நேற்றுவரை மரப்பாச்சி பொம்மையும் மற்றையை விளையாட்டுப் பொருள்களையும் வைத்துக் கொண்டிருந்தவள் திடீரென்று சேலையை உடுத்திக் கொண்டு யார் வரவையோ எதிர்பார்த்து, அவர் வராமை யாலே சோர்ந்து மயங்குகிறாள் என்று தாய்க்கு கவலை கலந்த வியப்பாக இருக்கிறது. அவள் எப்போது பகவானிடம் காதல் வயப்பட்டாளோ, அப்போதே அவளுக்குத் தான் சிறுமியாக இருந்து செய்த மற்ற செயல்களை வெறுத்து ஒதுக்குவது போல் இவள் விளையாட்டுப் பொருட்களைத் தவிர்க்கிறாள். இப்படியும் கொள்ளலாம்; அவன் வரும்போது தான் மரப்பாச்சியோடு விளையாடிக்கொண்டிருந்தால், இவளை விளையாட்டுப் பெண் என்று அவன் நினைத்து விடக் கூடாதே என்றும் அவள் 'பாவை பேணாள்' என்றும் கொள்ளலாம்.

பனி நெடுங்கண் நீர் ததும்பப் பள்ளி கொள்ளாள்: பட்டுசேலை உடுத்திக்கொண்டு, தான் விளையாடும் விளையாட்டையும் ஒதுக்கி விட்டு, அவன் வருவான், அவனைத் தாய்க்கும் மற்றவர்க்கும் அறிமுகம் செய்து வைக்கலாம் என்று கண்களை விரித்து அவன் வரும் திசையைப் பார்த்து, அந்தக் கண்களில் ஆற்றாமையில் வரும் கண்ணீர் நிரம்பித் தளம்புகின்றது. அவளுடைய கண்கள், நீண்டு (மீன்கள் போன்று) அழகாக இருப்பதனால்தான், அவன் அவள் மீது காதல் கொண்டான். இப்போது, அவன் வராத தாலே அந்தக் கண்கள் கண்ணீரால் நிரம்பியது.

பள்ளி கொள்ளாள்: உறக்கத்தை இழந்தாள். நாயகனோடு கூடியிருந்த போது ஆனந்தக் கண்ணீராலே உறக்கமில்லாமல் இருந்தாள். அவனைப் பிரிந்திருந்த போது துயரக்

கண்ணீராலே உறக்கமிழந்தாள். உடனிருக்கும் அவன் அவளைத் தூங்க விடாமல் சேட்டைகள் செய்வான் பிரிந்திருக்கும் போது அவன் செய்த செய்கைகளும் பேசிய பேச்சும் அவள் நினைவை விட்டு நீங்காது இருப்பதால் அவளுக்குத் தூக்கம் வரவில்லை. உறங்காள் என்று சொல்லாமல் பள்ளி கொள்ளாள் என்று மரியாதையோடு சொல்வானேன் என்றால் அரச குலத்தில் பிறக்காவிட்டாலும் ஒரு அரசன் அவளை மணந்தால், அவள் அரசி என்று அழைக்கப்படுவதைப் போலவும். எம்பெருமானோடு தொடர் புள்ளவர்கள் ஆணாயிருந்தாலும், பெண்ணாயிருந்தாலும், பிள்ளையாக இருந்தாலும், மாணவனாக இருந்தாலும் அவர்களை கௌரவத்தோடு கொண்டாட வேண்டும் என்று முந்தைய ஆச்சாரியர்கள் செய்து வைத்த பழக்கத்தின் மூலம் ஆழ்வாருடைய இந்த வழக்காகும்.

எட்டுணைப் போதும் என் குடங்காலிருக்க கில்லாள்: முன்பெல்லாம் உறக்கம் வரவில்லையென்றால் தாய் மடியில் படுத்து உறங்குவாள். இப்பொழுது உறக்கம் தொலைந்த போதும் ஒரு கண நேரம் கூட தாயின் மடியில் தலைவைத்துத் தூங்க முடியவில்லை. பிள்ளைகள் வளர்ந்து விட்டாலே பெற்றோர்களை விட்டு விலகிச் செல்லப்பார்ப்பார்கள். இவளோ, எம்பெருமானிடத்தில் காதல் வயப்பட்டவள். தாயின் மடியில் தலைவைத்துத் தூங்க, கனவில் ஏதாவது பிதற்ற, தாய் உண்மை கண்டறிந்து விடுவாள் என்பதும் ஒரு காரணம். தாய்க்கும் மகளுக்கும் இடையே இப்படிப்பட்ட பிரிவைக் கொண்டு ,வந்தவன் மேல் தாய்க்கு கோபம் வருகிறது.

எம்பெருமான் திருவரங்கம் எங்கே என்னும்: அதுமட்டு மல்ல; என்னை இந்நிலைக்கு ஆக்கியவனுடைய இல்லமாகிய கோயில் எங்கே இருக்கிறது?. அரங்கன் என்று பெயரைச் சொல்லாமல் எம்பெருமான் என்று சொல்லுவது, கந்தர்வ முறையில் அவனுடைய தொடர்பைப் பெற்றவள் ஆதலால் காதல் மயக்கத்தில் பெயரைக் கேட்காமல் விட்டுவிட்டாள். இப்போது, அவன் வராத காரணத்தினால் எம்பெருமான் (என்னை ஆட் கொண்டவன்) என்று சொல்கிறாள்.

அப்படி என்றால் அவனுடைய ஊர் திருவரங்கம் என்று எப்படி அறிந்தாள் என்றால், 'நான் உன்னைப் பிரிய மாட்டேன் பிரிந்தால் உயிர் வாழ மாட்டேன்' என்று அவள் பலமுறை சொல்லிக் கொண்டிருந்ததால் நாம் பிரிந்த பிறகு இவள் உயிருடன் இருக்க வேண்டும் என்பதற்காக நம்மூர் திருவரங்கம் என்று சொல்லிப் போனான். (தெள்ளூரும் இளந்தெங்கின் தேறல் மாந்தி சேலுகளும் திருவரங்கம் நம்மூரென்ன, புனலரங்கம் ஊரென்று போயி னாரே (திருநெடு.24) ஊரைச் சொன்னாரே தவிர பெயரைச் சொல்ல வில்லை எனக்கும் கேட்க வேண்டும் என்று தோன்ற வில்லை. ஆழ்வாருக்கு, தனது ஊராகிய திருநகரிக்கு (திருவாலி) மேற்கே உள்ளது என்று தெரிந்த போதிலும் பிரிவாற்றாமையில் வரும் மயக்கத்தில் திசையைத் தேடுகிறார்.

மட்டுவிக்கி மணிவண்டு முரலும் கூந்தல்: அழகிய வண்டுகள் பருகிய தேன் விக்கி ரீங்காரம் செய்யும் கூந்தல். அவன் இவளுடைய கூந்தலழகைப் பார்த்து மயங்கி நிற்க, இவள் அவனது நினைவிலே இப்படி மயங்கிக் கிடக்கிறாள். மணிவண்டு மட்டுவிக்கி, அழகிய வண்டு மிகுந்த ஆர்வத்

தினால் பூவிலுள்ள மதுவைப் பருகத்தொடங்கி அது அளவு மிகுந்தபடியால் வண்டுக்கு விக்கல் ஏற்படுகிறது. தேனின் அளவு அதிகமானதால் விக்கியதாகக் கொள்ளலாம். சுவை மிகுந்ததினாலே விக்கியதாகவும் கொள்ளலாம். ஆர்வத்தினால் அதிவேகமாகப் பருகியதால் தேன் விக்கிய தாகவும் கொள்ளலாம். மனிதர்களுக்கு உணவும் நீரும் தேவை. அதனால் உணவு மிகுந்து விக்கினால், நீர் பருகி விக்கலைப் போக்கிக் கொள்ளலாம். வண்டுக்கோ தேனே உணவு. தேனாலே விக்கினால் தேனைவிட்டுப் போக்குவதோ, தேன் பருகுவதை நிறுத்தச் செய்ய வேண்டுமே யொழிய வேறு வழியில்லை. அதனால் அந்த வண்டு அவளுடைய கூந்தலின் நறுமணத்தை முகர்ந்து தனது விக்கலைப் போக்கிக் கொள்ளப் பார்க்கிறது. (முரலும்) ஓரிடத்தில் நிற்காமல் வண்டு பறப்பதால் அதனுடைய ரீங்காரம் கேட்கிறது.

கூந்தல் மடமானை: அப்படிப்பட்ட கூந்தலை உடைய அழகிய இளம்பெண்ணை. தவிரவும், இதுவரை அவள் தாய்க்கு அடங்கி நடந்த அடக்கத்தையும் அச்சம் மடம், நாணம், பயிர்ப்பு என்ற நான்கு குணங்களும் உள்ள இப்பெண்ணுக்கு இப்பொழுது, அவளுடைய மடம், அதிகமாக வெளிப்படுகிறதாகையால் ‘மடமானை’ என்றாள்.

இது செய்தார்: இந்த இளம்பெண்ணை, இந்த நிலைக்குக் கொண்டு வந்தவரை, முன்பெல்லாம் தாய் செய்த ஒப்பனை மாறாமல் அப்படியே திரும்பி வருவாள். இப்பொழுது அந்தக் குழல் தாறுமாறாகக் கலைந்து இருக்க தலையிலிருந்த பூக்களை வாடவைத்தவர்.

தம்மை: இவளை இப்பாடு படுத்தியவர் மிகப்பெருமை உடையவராக இருக்க வேண்டும். அவர் யாரென்று,

கட்டுவிச்சி மெய்யே சொல்: குறிசொல்கின்ற பெண்ணே உண்மையாகச் சொல் என்று நான் ஏதாவது சினங் கொள்வேனோ என்று நினைத்து மறைக்காமல் நோயாளி மருத்துவனுக்குத் தெரியப்படுத்துவது போல்

சொல்லென்னச் சொன்னாள்: நான் சொல்லென்று சொல்லவும், அவள் சொன்னாள். இந்த உண்மை ஆன்மாவிற்கும் பரமனுக்கும் உள்ள தொடர்பை உடல்வேறு ஆன்மா வேறு என்கின்ற உண்மையை ஒரு ஆச்சார்ய னிடத்தில் நீண்டநாள் தொண்டு செய்து தெரியப்பட வேண்டிய ஒரு உண்மையை, கட்டுவிச்சி நான் கேட்டவுடனே உண்மையைச் சொன்னாள். கண்ணன் அர்ச்சுனனுக்கு கீதையை உரைத்தது போலவும், உடையவர் குருவினால் காதிலே மட்டும் சொல்லப்பட வேண்டிய திருமந்திரத்தை எல்லோருக்கும் கோபுரத்தின் மேலிருந்து சொன்னது போலவும் சொன்னாள்.

நங்காய்: நாயகியின் நிலையைப் பார்த்து கேட்க வந்த ஒரு பெண்ணைப் பார்த்து தாய் விளிக்கும் பதம். தாய் அந்தப் பெண்ணிடம் கட்டுவிச்சி (குறிகாரி) சொன்னதை மிகவும் விருப்பமுடன் பகிர்ந்து கொள்கிறாள். ஏனென்றால் பரதேவதைகளைக் கும்பிடுபவர், அவற்றிற்குப் பூசையோ செய்யும் வழக்கமில்லாதவளானதால் எம்பெருமான் லீலைகளை நன்கு புரிந்து கொண்டவள். உன்னிடம் சொல்வதில் மகிழ்ச்சியே எனத் தாய் கூறவும், வந்தவளோ கட்டுவிச்சி அப்படி என்னதான் சொன்னாள் என்று கேட்கிறாள்.

கடல் வண்ணர் இதுசெய்தார்: தலைவி எம்பெருமான் திருவரங்கம் எங்கே என்றாள். குறிகாரியும் கடல்வண்ணர் இது செய்தார். அதாவது தலைவியின் நிலைக்கு திருவரங்கத்து

பெரிய பெருமாளே காரணம். தலைவி அவரது பெயரை அறியாதது போல அவருடைய குணத்தையோ, தன்மையையோ பாராமல் அவரது கடல் நீலமேனி அழகிலே ஈடுபட்டு, அவரிடம் காதல் கொண்டாள் என்று கடல் வண்ணர் என்றாள்.

இதுசெய்தார்: ஆன்மா உள்ளவரைத் தொடரும் காதல் நோயைக் கொடுத்துவிட்டார். அந்த காதல் நோயே இவளுக்கு அடையாளமாகி விட்டது. இவள் கொண்ட காதல் நோய் எவர்க்கும் கிடைக்க முடியாத ஒரு பயன் என்பதால் அதுவிளங்கும்படியாக இது என்றாள்.

'தெய்வ நன்னோய்' (திருவிருத்தம் 53) இந்த நோய்க்கு காரணன் உலக காரணனான எம்பெருமாள் என்பதால் இது நன்மை விளைவிக்கும் நோய். இது பெரியோர்களால் போற்றப்படும் பக்தி என்னும் பெரும் பேறு. இந்த நோய் எந்த பலனையும் இவளிடம் எதிர்பாராது எம்பெருமானால் தரப்பட்ட நோய். ஆகவே விரும்பத்தக்கது. இது இவள் சாகும் வரை இவளை விட்டு நீங்காத நோய்.

காப்பார் ஆரே: காப்பாற்ற வேண்டிய கடமையை உடையவரால் வந்த இந்த நோயை எந்த மந்திரத்தாலும், மருந்தாலும் போக்கமுடியாது.

கடல்வண்ணர் இது செய்தார் காப்பார் ஆரே: தாய் கூற்று என்று கொள்ளாமல் கட்டுவிச்சியின் கூற்று என்று கொண்டால், கடல்கண்டதொரு பொருளை கடலிலே விட்டு விடுவதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்.

இந்த நோயைத் தலைவியால் தானாகவோ, தாயாலோ அல்லது வேறு மருத்துவனாலேயோ தீர்க்க முடியாது.

வேலியே பயிரை மேய்வது போல் காப்பாற்ற வேண்டிய எம்பெருமானே கொடுத்த நோய். அதை வேறு யாராலும் தீர்க்கமுடியாது. இப்படிப்பட்ட நல்ல நோயை யாராவது தீர்த்துக்கொள்ள ஆசைப்படுவார்களா? மாட்டார்கள்.

1. எம்பெருமான் கைம்மாறு கருதாமல் ஆழ்வாரை ஆட்கொண்டான். *2.* அதனால் அவருக்கு அவன் மீது அளவற்ற காதல் (பக்தி) ஏற்பட்டது. *3.* அதனால் அவருக்கு மற்ற பொருட்களின் மீதிருந்த பற்றற்று விட்டது என்பது இப்பாடலின் உள்ளுறைக் கருத்து.

12 ஆவது பாசுரம்

நெஞ்சுருகிக் கண்பனிப்ப நிற்கும் சோரும்
நெடிதுயிர்க்கும் உண்டறியாள் உறக்கம் பேணாள்
நஞ்சரவில் துயிலமர்ந்த நம்பீ என்னும்
வம்பார் பூம் வயலாலி மைந்தா என்னும்
அஞ்சிறைய புட்கொடியே ஆடும் பாடும்
அணியரங்கம் ஆடுதுமோ தோழீ என்னும்
என்சிறகின் கீழ் அடங்காப் பெண்ணைப் பெற்றேன்
இருநிலத்தோர் பழி படைத்தேன் ஏ பாவமே.

பதவுரை:

நெஞ்சுருகி: (நெஞ்சு+உருகி) - மனம் கரைந்து நீர் போல உருகி

கண்பனிப்ப நிற்கும்:- கண்ணீர் பெருக நிற்கின்றாள்.

சோரும்: சோர்ந்து மயங்குகின்றாள்.

நெடிது உயிர்க்கும்: நீண்ட (பெரு) மூச்சுகளை விடுகின்றாள்.

உண்டுஅறியாள்:- உணவு உண்டு பல நாட்கள் ஆகிவிட்டன.

உறக்கம் பேணாள் : உறக்கம் வராமல் தவிக்கின்றாள்.

நஞ்சு அரவில் துயிலமர்ந்த நம்பீ என்னும்: - நஞ்சை உமிழக்கூடிய திருவனந்தாழ்வான் மீது யோக நித்திரை புரிகின்ற நம்பீ என்று அழைக்கிறாள்.

வம்பு ஆர் பூம் வயலாளி மைந்தா என்னும்: நறுமணம் மிக்க பூக்களையுடைய வயல்கள் சூழ்ந்த திருவாலி என்னும் திவ்ய தேசத்திலிருக்கும் ஆண்பிள்ளையே! என்கிறாள்.

அஞ்சிறைய புள்கொடியே: அழகு மிக்க பெரிய சிறகுகளை உடைய பெரிய திருவடியைப் (கருடனை) போற்றுகின்றாள்.

ஆடும் பாடும்: ஆடுகின்றாள்பாடுகின்றாள்.

தோழீ அணிஅரங்கம் ஆடுதுமோ என்னும்: நாம் திருவரங்கம் என்றும் பெரிய பெருமாளின் திவ்யதேசத்திற்குச் சென்று ஆடலாம் என்று கேட்கிறாள்.

என் சிறகின் கீழ அடங்கா : எனது சிறகு போன்ற கைகளுக்கு அடங்காத

பெண்ணைப் பெற்றேன்- மகளைப் பெற்ற நான்.

இருநிலத்து:- பரந்த விரிந்த இந்தப் பூமியில்

ஓர் பழிபடைத்தேன்: ஒப்பற்ற பழியைத் தேடிக் கொண்டேன்.

ஏபாவம்: இதற்கு என் பாவமே காரணம்.

பொழிப்புரை:

இந்தப் பாசுரத்திலும், பிரிவாற்றாமையால் தவிக்கின்ற தலைவியின் தாய், அந்த நிலை தொடர்வதை எண்ணி வருந்தி தலைவி செய்கின்ற செயல்களைப் பார்த்து வருத்தப்பட்டு நான் செய்த பாவமே எனக்கு வந்து மகளாகப்பிறந்து அக்கம்

பக்கத்தார் பழித்துக் கூறும் நிலைமைக்கு என்னை ஆளாக்கி விட்டது என்று வருந்துகிறாள். இப்படியெல்லாம் ஊராருக்கு முன் பழிவருமே என்று நினைத்து தாய் வருந்தினாலும், இது எம்பெருமான் தொடர்புள்ள செயல் என்பதால் மனதுக்குள் மகிழ்ச்சி அடைகிறாள்.

விரிவுரை:

நெஞ்சுருகி நிற்கும் என்று தொடங்கி ஆடும் பாடும் வரைக்கும் தலைவியாக மகள் செய்கின்ற செயல் களை பிரிவாற்றாமல் பரகால நாயகி படுகின்ற பாட்டையும் திருத்தாயாரின் சொல்லாலே விளக்கப்படுகின்றது.

நெஞ்சுருகி: நெஞ்சிற்குள் இருப்பதாகக் கருதப்படும் அவளது மனம்நீர் போல் கரைந்த தீயின் முன் மெழுகு உருகி நிற்பதைப் போல் உருகுகின்றாள். வாளால் வெட்ட முடியாதது நெருப்பினால் எரிக்கமுடியாதது என்று சொல்லப்படுகின்ற (கீதை), ஆன்மாவின் அறிவு வெளிப்படும் வழியாகின்ற மனது உருகாமல் இருக்கமுடியாது.

கண்பனிப்ப: உள்ளே இருக்கும் நெஞ்சு உருகுவதை வெளியே காட்டக் கூடிய முகத்தில் உள்ள கண்கள் (அகத்தின் அழகு முகத்தில் தெரிய வேண்டுமல்லவா) நீர் நிறைந்து கண்ணீர் வழியக் காட்சி அளிக்கிறது.

நிற்கும் சோரும்: நெஞ்சு உருகியபடியாலே மனம் செய்வதறியாது அப்படியே நிற்கும். அவளது தலைவர் காட்சியளிக்காத காரணத்தாலே சோர்ந்து ஒரு மயக்க நிலையை மனம் அடைகிறது.

கார் எனக் கடிது சென்றான் கல்லிடைப்படுத்த புல்லின்
வார் சிலைத் தடக்கை வள்ளல் வைகிய பள்ளி கண்டான்
பார்மிசைப் புதைந்து வீழ்ந்தான் பருவரற்பரவை புக்கான்
வார்மணிப் புனலால் மண்ணை மண்ணுநீர் ஆட்டும்
கண்ணான்.

- (அயோ.கா. கங்கைகாண்- 39)

சிருங்கி பேரபுர்த்தில் இராமன் படுத்திருந்த படுக்கையை பரதனுக்குக் குகன் காட்டவும், பரதன் மண்ணில் விழுந் தான். துன்பக்கடல் புகுந்தான். அந்த இடத்தை தன் கண் களிலிருந்து தாரைதாரையாக விழும் கண்ணீரினால் நீராட்டினான். அவன் கீழே விழுந்து அப்படி அழுவதைப் பார்த்து சத்ருக்கனனும் செய்வதறியாமல் நின்றான். பற்றிக்கொள்வதற்கு ஒன்றும் இல்லாத நிலையில் மயங்கி விழுந்தான் என்பதைப் போன்ற ஒரு நிலையைத் தலைமகள் அடைந்தாள்.

நெடிதுயிர்க்கும்: உள்ளே இருக்கும் வருத்தத்தின் வேகத்தால் பெருமூச்சாக விடாநின்றாள். மரத்தின் பொந்தில் பற்றிக்கொண்ட நெருப்புப் போல, இவளுடைய நெஞ்சில் பற்றிக்கொண்ட ஏமாற்றம் பெருமூச்சாக வெளிப்பட்டது.

உண்டறியாள் உறக்கம் பேணாள்: உண்பது என்னும் ஒரு கடமை இந்த உடலைப்பேணுதல் செய்வது ஒன்று இருப்பதே தெரியாதது போல எப்பொழுதும் எம்பெருமான் நினைவாகவே இருக்கிறாள். எம்பெருமானுடன் இருக்கும் போது 'உண்ணாநாள் பசியாவதொன்றில்லை (பெரியாழ். திரு. 5-1-6) என்றும் உண்ணும் சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலை எல்லாம் கண்ணன் (திருவாய் 6-7-1) என்று

பசியை மறந்து, எம்பெருமானுடைய நினைவே உணவாக இருப்பதால் உண்பதில்லை. எம்பெருமானைப் பிரிந்த போது பிரிவாற்றாமல் உணவு கொள்வதில்லை என்பதாலும் அவள் உண்பதில்லை. ஆக இரண்டுநிலைகளிலும் உணவு கொள்ளாததால் அவள் உண்பதையே தெரியாதவளாக இருக்கிறாள்.

உறக்கம் பேணாள்: அவன் விரும்புகின்ற உடலை அழகு படுத்துவதற்குப் பட்டை உடுத்தாள். படுக்கையில் படுத்து உறங்கினால் அவன் வரும்போது தன்னுடைய ஒப்பனைக் கலைந்து விட்டால் அவன் தேடிவந்த நீ உறங்காமல் இருந்தால் அவன் விரும்பும் இந்த உடல் கெடும் என்று தாய் சொன்னாலும் அதைக் கேளாமல் உறக்கமில்லாமல் இருக்கிறாள். இயற்கைத் (ப்ரகிருதி) தொடர்பினால் தூங்கிக் கொண்டிருந்த உடலில் அவள் ஆன்மாவும் உறங்கிக்கிடந்தது. இப்பொழுது பகவத்சம்மந்தம் ஏற்பட்டவுடன் ஆன்மா விழித்துக்கொண்டது. ஆன்மா விழித்தவுடன் உடலின் உறக்கமும் போயிற்று.

நஞ்சரவில் துயிலமர்ந்த நம்பீ என்னும்: நான் உறக்க மில்லாமல் கிடக்கிறேன். நீ திருவரங்கத்தில் நஞ்சை உமிழக் கூடிய அரவப்படுக்கையில் என்னைப் பற்றிக் கவலைப் படாமல் உறங்கிக் கொண்டிருக்கிறாய். 'அரவத்தமளியி னோடும் அரவிந்தப் பாவையும் தானும் அகம்படி வந்து புகுந்து' (பெரியாழ் திரு. 5-2-10) என்றபடி அரவப்படுக்கை மட்டுமின்றி அரவிந்தப் பாவையும் அல்லவா உடன் இருக்கிறாள். உனக்கு என் நினைவு எப்படிவரும். எனக்கு என்படுக்கை சூடாக இருக்கிறது. அதனால் உறக்க மில்லாமல், உன் நினைவே கதியாகக் கிடக்கிறேன். நீயோ

மென்மை, குளிர்ச்சி மணம் ஆகிய எல்லாம் ஒன்று சேர்ந்த வசதியான அரவப்படுக்கையில் உறங்கிக் கிடக்கிறாய். நானோ நீ எப்போதாவது வருவாய் என்று உறங்காமல் கிடக்கிறேன். நீயோ உனக்கு யாரும் இடையூறு செய்யா வண்ணம் உன்னைக் காத்துக் கொண்டிருக்கும் அநந்தாழ் வான் இருப்பதால் எந்தக் கவலையுமின்றி உறங்கிக்கிடக் கிறாய். நீ குறைவொன்றும் இல்லாத நம்பி. நானோ என்னையே உனக்குக் கொடுத்துவிட்டு உறக்கத்தை இழந்த நங்கை என்றும் விளக்கம் அளிக்கலாம்.

வம்பார் பூம் வயலாலி மைந்தாவென்னும்: - அவனுக்கு இப்பொழுது பரகால நாயகி, தான் எம்பெருமானை முதலில் சந்தித்த இடத்தை நினைவு படுத்துகிறாள்.

மணம் மிக்க பூக்களை உடைய, வயல்கள் சூழ்ந்த திருவாலியின், ஒப்பாரும் மிக்காரும் இல்லாத ஆண்மகனாக இருக்கும்போது தானே நாம் முதலில் பார்த்தோம் என்று காதலர்களுக்கு அவர்கள் முதன் முதலில் பார்த்த இடம், கொடுத்த பரிசு, போட்டிருந்த ஒப்பனை என்ற பல முதல்கள் எப்பொழுதும் நினைவிலிருக்கும் என்பதால், அவள் தாங்கள்முதலில் சந்தித்த அழகு மிக்க திருவாலியை நினைவு கூர்ந்தாள். 'எவ்வளவுண்டு எம்பெருமான் கோயில் என்றேற்கு இதுவன்றோ திருவாலி' (திருநெடு-22) என்று அவரே பரகால நாயகிக்கு நினைவு கூர்கிறார் அல்லவா?

அஞ்சிறைய புட்கொடியே ஆடும்: அழகிய சிறகுகளை உடைய பெரியதிருவடிபோட்ட கருடக்கொடியை ஒற்றித் தானே அவன் புகழ்பாடத் தொடர்கிறார்கள். திருவரங்கத் திலே நிறைய இடங்களில் கருடக்கொடி பறக்க விட்டிருக்கும். அதனால் பெரியதிருவடியைப் போற்றுகிறாள். அவனிடம்

சொன்னால், கருடன் எம்பெருமானை முதுகு மேல் ஏற்றிக்கொண்டு தான் இருக்குமிடம் வருவான் என்ற நம்பிக்கையில் எம்பெருமான் தூங்கிவிட்டதைப்போல் (பறவை அரையா உறகல்' (பெரியாழ் திரு. 5-2-9)நீயும் தூங்கிவிடாமல் என் நிலைமையை அங்குச் சொல்லி உன் முதுகு மேல் அழைத்துக்கொண்டு நானிருக்குமிடம் வந்து சேர். பார்த்தனை விட பார்த்தசாரதி பெருமை பெற்றது போல் உரியவனைவிட உடைமை போற்றப்படுகிறது. ஆனால் கருடாழ்வார் அப்படிச் செய்யாததினாலே,

பாடும்: பெரிய திருவடியைப் போற்றுவதற்கு அவள் வாய்பேசப்பெற்று பாடவும் தொடங்குகிறாள். ஆனால் அதன்பிறகும் உறங்குகின்ற பெருமாளை எழுப்பி அவளிடம்சேர்க்கவில்லை.

அணி அரங்கம் ஆடுதுமோ தோழி என்னும்: அவன் வரவில்லை. அவன் தான் என்னைத் தேடி வரவேண்டும். ஆனால் அவன் வராத காரணத்தால், நாம் அங்கு சென்றால் என்ன என்று நினைத்து தோழிக்கு தனது எண்ணத்தை முழுதும் சொல்லாமல், தோழீ! நாம் திருவரங்கம் சென்று அம்மா மண்டப காவிரித் துறையிலே நீராடி பலன் பெறலாம் வருகிறாயா என்று தோழியை அழைக்கிறாள்.

'என் சிறகின் கீழ் அடங்காய் பெண்ணைப் பெற்றேன்': நான் சொல்வதைக் கேளாத, என் கைக்குள் அடங்காத இப்படிப்பட்ட ஒரு பெண்ணைப் பெற்றேனே என்று வருந்திய தாய் தன் பெண்ணுக்கு அறிவுரை கூறுகிறாள். தலைவி தோழியுடன் திருவரங்கத்துறை ஆட செல்லலாமா என்று கேட்பதைக் கேட்ட தாய், நேற்று வரை நான் சொன்னபடி கேட்டு என்மடியிலே தூங்கிய பெண்

இப்பொழுது நான் சொல்வது அவளுக்குக் கசக்கிறது. அப்படி ஒன்றும் நான் தவறாக சொல்லவில்லையே. நீ அவனை அனுபவிக்கும் போது, அவனாக வந்து உன்னை அனுபவிக்கச் செய்த அந்நிலையில் அவனை அனுபவிப்பது தானே உன் பெண்மைக்குப் பெருமை? திருவரங்கம் போவேன் என்று சொல்வது எப்படிப்பட்ட இழிசெயல்? என்று தாய் கூறும் அறிவுரைக்கு அவள் செவிசாய்க்காத நிலையில் தலைமகள் விரும்புவது திருவரங்கத்தம்மான் என்ற அளவில் தன் பெண்ணைப் பெருமையாக நினைக்கின்ற தாய், தலைவியைக் குறை கூறாமல், இப்படிப்பட்ட பெண்ணைப் பெற்றேனே என்று தன்னையே நொந்து கொள்கிறாள்.

இரு நிலத்து ஓர்பழி படைத்தேன்: இவளைப் பெற்ற பலன் உலகத்தாரின் பழி சொல்லேயாகும். எம்பெருமான் வந்து அருள வேண்டியிருக்க, தான் அவனை அடைய முயல்வது குடிப்பழி என்னும் அளவில் அக்குடியின் பெருமை யிருக்கிறது. பாவம் இப்படி குடிப்பழி வருமளவிற்கு மகள் நடந்து கொள்வதற்கு எம்பெருமானும் காரணமில்லை. மகளும் காரணமில்லை. தான் செய்த பாவங்கள் தான் காரணம். இது, இராமன் வனவாசம் செய்ய அனுப்பப் பட்டதற்கு மந்தரை காரணமல்ல, கைகேயி காரணல்ல, தசரதனும் காரணமல்ல, என்னுடைய பாவமே காரணம் என்று பரதன் நினைப்பது போல் இந்தத் தாயும், தன்னுடைய பாவம்தான் மகளை இப்படி என் சொல்லுக்குக் கட்டுப் படாமல் நடக்கும்படி செய்கிறது என்று நினைக்கிறாள்.

பாசுரம் -13

கல்லெடுத்துக் கல்மாரி காத்தாய்! என்றும்
காமரு பூங் கச்சியூரகத்தாய்! என்றும்
வில்லிறுத்து மெல்லியள் தோள் தோய்ந்தாய்! என்றும்
வெஃகாவில் துயிலமர்ந்த வேந்தே! என்றும்
மல்லடர்த்து மல்லரையன் றட்டாய்! என்றும்
மாகீண்ட கைத்தலத்தென் மைந்தா வென்றும்
சொல்லெடுத்துத் தன்கிளியைச் சொல்லே யென்று
துணைமுலை மேல் துளி சோரச் சோர்கின்றாளே!

பதவுரை

கல்மாரி:- இந்திரன் பெய்வித்த கல்மழையை

கல் எடுத்து: ஒரு மலையை எடுத்துக் குடைபோல் பிடித்து

காத்தாய் என்றும்: தடுத்தவனே! என்றும்

காமரு பூ கச்சி ஊரகத்தாய் என்றும்: விரும்பத் தக்கதாயும் அழகானதுமான காஞ்சிபுரத்தில் உள்ள திரு ஊரகம் என்னும் திவ்யதேசத்தில் நின்றருளியவனே என்றும்

வில் இறுத்து மெல்இயல் தோள்தோய்ந்தாய் என்றும்: சிவதனுசை ஒடித்து சீதாபிராட்டியைக் கைப்பிடித்தவனே என்றும்

வெஃகாவில் துயில் அமர்ந்த வேந்தே என்றும் : திருவெஃகாவில் பள்ளி கொண்டருளும் அரசனே என்றும்,

அன்று : *(கண்ணனாய் அவதரித்த) அந்தநாளில்*

மல்லரை : *மல்லர்களை*

மல் அடர்த்து: வலிமையை அடக்கி

அட்டாய் என்றும் : ஒழித்தாய் என்றும்

மாகீண்ட: கேசி என்னும் குதிரை வடிவில் வந்த அரக்கனைக் கிழித்த

கைத்தலத்து: பெரிய கைகளையுடைய

என் மைந்தா என்றும்: எனது நாயகனே என்றும்

தன்கிளியை: தான் வளர்த்த கிளியை நோக்கி,

சொல் எடுத்து: திருநாமத்தின்முதற் சொல்லை எடுத்துக் கொடுத்து

சொல் என்று: மேலே நீயே சொல் என்று சொல்லி அது சொல்லத் தொடங்கிய உடன்

துணை முலைமேல்: இருமுலைத்தடங்களிலும்

துளிசோ: கண்ணீர் ஒழுக

சோர்கின்றாளே: துன்புறுகின்றாள்.

பொழிப்புரை:

தலைவிக்கு, திவ்ய நாமங்களைக் கேட்கும் அளவுக்கு அவளுடைய நிலை மேம்பட்டிருந்தது. இவளுடைய குரலைக் கேட்காமல் அவள் வளர்த்த கிளியும் துன்பத் திலிருந்தது. தாய், அந்தக் கிளியை இவள் கண்ணுக்கு முன்னால் வைத்தாள். இவள் கிளிக்கு திவ்யநாமங்களைச் சொல்லித் தருவாள். அதனால் இருவரும் ஆறுதல்

பெறுவார்கள் என்று நினைத்து, அவள் வளர்த்த கிளியை தலைவியின் முன்னே தாய்வைக்கவும், கிளியைப் பார்த்துத் தாய் திருநாமங்களைச் சொல் என்று சொன்ன போது கிளி வாளாவிருந்தது. அவள் தனக்கு ஆச்சார்யன் அவள் சொல்லிக் கொடுத்ததை அவளது அனுமதியில்லாமல் சொல்லக்கூடாது என்று அமைதியாக இருந்த கிளியிடம் தலைமகள் நான் திருநாமம் சொல்ல நீயும் திரும்பச்சொல்லு என்றதும் கிளி அதற்கு உடன்பட்டது.

இந்தத் திருநாமங்களைத் தலைவி சொல்ல சொல்ல அவளுடைய நிலையில் மாற்றம் வரத் தொடங்கியது. ''உதவி வரைத்தன்று உதவி செய்யப்பட்டார். சால்பின் வரைத்து'' (திருக்குறள் 105) என்பதைப் போல இந்தத் திருநாமங்களின் பயன் அவற்றைச் சொல்பவர்களின் நிலையைப்பொறுத்து இருக்கும். ஒரு நிலையில் திருநாமங்கள் இன்பத்தைக் கொடுக்கும் ஒரு நிலையில் வருத்தத்தை அதிகப்படுத்துவதாக இருக்கும். அனுமன் சொல்லிய இராமநாமம் சீதையைக் காப்பாற்றியதைப் போல் ஒரு நிலையில் உயிர் காக்க உதவி செய்யும். மற்றோர் நிலையில் உயிர் விடச் செய்வதாயும் இருக்கும்.

''மூவுலகுண்டுமிழ்ந்த முதல்வ, நின் நாமம் கற்ற ஆவலிப்பு உடைமை கண்டாய்'' என்று தொண்டரடிப் பொடிகள் அச்சுதா! அமரர்ஏறே, ஆயர்தம் கொழுந்தே என்று அவன் நாமத்தைச் சொல்லித் தன்னைத் தூய்மைப் படுத்திக் கொள்கிறார். கண்ணன் நாமமே குழறிக்கொன்றீர் (திருவாய்.9-5-8) என்றபடி ஒவ்வொருவரின் நிலையை ஒத்துப் பயன்வேறாக இருக்கிறது. தலைவியின் உயிர் தரிப்பதற்காக அவள் திருநாமங்களைச் சொல்லுகிறாள் தாய்.

விளக்கவுரை

கல்லெடுத்து கல்மாரி காத்தாய்: கோவர்தன மலையைத் தன் ஒரு கையால் உயரத் தூக்கி இந்திரன் ஏற்பாடு செய்த கல்மழையையும் தடுத்துக் கண்ணன் ஆயர்களையும் அவர்களது பசுக்களையும் காப்பாற்றியருளினான்.

ஆயர்கள் மழை வேண்டி இந்திரனுக்குப் படைக்கத் தயாரித்த உணவை, கண்ணன் கோவர்த்தன மலைக்கு இடச் செய்து தானே எல்லாவற்றையும் அமுது செய்தருளினான். தன்னுடைய அடியார்கள் மற்றொரு தெய்வத்தை வணங்கு வதைக் கண்ணன் விரும்பவில்லை. அதனால் இந்திரன் அவன் மீதும் ஆயர்கள் மீதும் கோபங்கொண்டு கல்மழையைப் பெய்வித்தான். அவர்களைத் தான் நேரடியாகக் காப்பாற்றிய தாக இருக்கக் கூடாது என்பதற்காக அவர்கள் வழிபட்ட கோவர்தன மலையைக் கொண்டே அதன் மூலம் அவர்களைக் காப்பாற்றினான்.

காமரு பூங்கச்சி ஊரகத்தாய் என்றும்: விரும்பத்தக்க தாயும், அழகியதானதுமான காஞ்சிபுர நகரில் திரு ஊரகத்தில் கோயில் கொண்டிருப்பவனே என்றாள். திருஊரகத்தில், பெருமாள் உலகளந்த பெருமாளாக எழுந்தருளியிருக் கிறான். உளகளந்த போது வேற்றுமை பாராமல் அனைவரையும் தீண்டி ஆட்கொண்டதைப் போல கண்ணனும் அடியார்களில் வேற்றுமை பாராட்டதவன் என்பதால் அந்த ஒற்றுமையை வைத்து இருவரையும் ஒன்றாகப் பேசுவது வழக்கம்.

ஆழ்வார் இந்தப் பாசுரத்திலும், பதினைந்து மற்றும் பலபாசுரங்களில் அடுத்தடுத்த அடிகளில் விபவ அவதாரங் களைச் சேர்த்து அனுபவிக்காமல், ஒரு அடியில் விபவ

அவதாரத்தையும் மறு அடியில் அர்ச்சாவதாரத்தையும் மாறி மாறி அநுபவிப்பவர். அரசகுமாரர்கள் உண்ணும் போது ஒவ்வொரு பிடி சோற்றுக்கும் நெய் இட்டுக் கொள்வது வழக்கம். அது போல ஆழ்வாரும் விபவ அவதாரங்களை அனுபவிக்கும் போது அடுத்தடுத்த அடிகளில் அர்ச்சாவ தாரத்தை சேர்த்துக்கொள்கிறார். அப்படியானால், இவர் தான் விபவ அவதாரங்களைப் பாடவேண்டும் என்றால் விபவ அவதாரங்கள் என்னும் பெருக்காற்றில் தோண்டிய மடுக்கள் போன்றவை அர்ச்சாவதாரங்கள். அதனால் அர்ச்சாவதாரங்களுக்கு மூலமான விபவ அவதாரங்களையும் சேர்த்துப்பாடுகிறார். இதுவே இவருக்கு மற்ற ஆழ்வார் களுக்கும் உள்ள வேறுபாடு. மற்ற ஆழ்வார்கள், மேன்மையை அனுபவிப்பதற்கு பரமபதநாதனையும், நீர்மையை அனுபவிக்க விபவ அவதாரங்களையும், அந்த நீர்மையைநேரில் அனுபவிக்க அர்ச்சாவதாரங்கள்.

இதையே 'ராஜகுமாரர்களுக்குப் பிடிதோறும் நெய் திருமங்கை ஆழ்வாருக்கு அடிதோறும் 'அர்ச்சை' என்று சொல்லப்படுகிறது. இவர் மேன்மையை அனுபவிப்பதும் அர்ச்சாவதாரத்தில். நீர்மையை அனுபவிப்பதும் அர்ச்சாவ தாரத்தில். அதை நேரில் காண்பதும் அர்ச்சாவதாரத்தில்.

'வில்லிறுத்து மெல்லியள் தோள் தோய்ந்தாய் என்றும்: சீதாப்பிராட்டியைத் திருமணம் செய்து கொள்வதற்காக விசுவாமித்திரர் சொல்படி சனகன் வசமிருந்த சிவதனுசுவை ஒடித்து, சீதாப்பிராட்டியின் மென்மையான தோள்களை அனுபவிக்கப் பெற்றவனே என்று இராமாவதாரத்தைப் பாடினார்.

தோள் தோய்ந்தாய் என்றும் இராமன் என்னும் பரப்பிரம்மம், பிராட்டியின் தோள்கள் என்று ஒரு அவயத்தில் அடங்கியபடியினால் மற்ற அவயங்களும் ஆத்மகுணங்களும் திருமேனி அழகும் சிறப்புப் பெறாமல், பயனற்றுப்போயின. அப்படி அவன் அவள் தோள்மீது தோய்வது மிதிலையிருந்த அனைவரும் 'தோள் கண்டார் தோளே கண்டார்' என்று இவனது திரண்ட மலைபோன்ற தோள்களில் மயங்கா நிற்க, அவனோ சீதையின் மூங்கில் போன்ற தோள்களில் மயங்கி நின்றான்.

வெஃகாவில் துயிலமர்ந்த வேந்தே என்றும்: இராமாவ தாரத்தைப் பாடிய உடனே ஆழ்வாருக்கு அர்ச்சாவதாரம் தேவைப்படுகிறது. காஞ்சியிலிருக்கும் திருவெஃகாவே பிராட்டியைக் கைப்பிடித்தபின் வந்து கிடக்கும் இடம் என்று ஆழ்வாருக்குத் தோன்றுகிறது. சக்ரவர்த்தித் திருமகன் வந்து கிடக்கிறான் என்னும் படியான மிடுக்குடன், அவன் திருவெஃகாவில் கண்வளர்ந்தருளும் காட்சி ஆழ்வாருக்குத் தெரிகிறது.

மல்லடர்த்து மல்லரை அன்று அட்டாய் என்றும்: கம்சனை அழிப்பதற்கு முன்பாக, அவன் அனுப்பிய சாணூரன், முஷ்டிகன் என்ற இரண்டு வலிமை மிக்க மல்லர்களின் வலிமையை ஒடுக்கி அவர்களை அழித்தான் (அன்று அட்டாய் என்றும்) தேவகி வசுதேவரும் கண்ணனை பிறந்த அன்று பார்த்தார்கள். பிறகு அவனுடைய நன்மையை எண்ணி அவனைக் காணாமல் இருந்தார்கள். தவிரவும், சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்கள். மதுரைக்கு வந்த கிருஷ்ண பலராமர்கள், நேரே அவர்களைப் பார்க்காமல் விரோதிகளை அழிக்க வருவானேன் என்றால், கம்சனைக்

கொல்லாமல் அவர்களைப் பார்க்கச் சென்றால் அவர்களிடம் இருக்கும் அச்சம் நீங்காது. அதனால் முதலில் எதிரிகளை அழிக்க முற்பட்டார்கள். வேண்டியவர்களான தாய் தந்தையர் புறத்தே இருக்க இவர்கள் எதிரிகளைத் தேடிச்செல்கிறார் களே. நானும் அவனுக்குக் காதலியாக இல்லாமல் எதிரியாக இருந்தால் என்னைத்தேடி வந்திருப்பானோ என்று இவள் ஐயமுறுகிறாள்.

மாகீண்ட கைத்தலத்து என் மைந்தா என்றும்: கம்சனால் ஏவப்பட்ட கேசி என்னும் அரக்கன் ஒரு பெரிய குதிரை உருவில் வரவும் அவன் கண்ணனின் இளமையையும் மென்மையையும் கண்டு அவனை வாயால் விழுங்கி விடுகிறேன் என்று வாயைப் பிளந்து கொண்டு வர, அதன் வாயில் கையை வைத்து தன் கையைப் பெரிதாக்கி அதன் வாயைப் பிளந்து அதனைக் கொன்றான் கண்ணன்.

ஆய்ப்பாடியில் பெண்களை வசப்படுத்திய இளம் பருவத்தைக்காட்டி என்னைத் தனதாக்கிக் கொண்டவனே என்றும் இவ்வாறாக, என்றும் என்றும் என்று பல விடங்களில் பலருடைய ஆபத்தைப் போக்கிய திருநாமங்கள் சொல்லிக் கொடுத்து.

சொல்லெடுத்து; இந்தத் திருநாமங்களை உச்சரிப்பதே இவளுக்கு மலையெடுத்தது போலிருக்கிறது. பிரிவுத் துன்பத்தால் அவன் மலையைத் தூக்கும் போது அவன் சக்தியை கல்லெடுத்து என்றும் அவன் திருநாமங்களை சொல்லும்போது தன் சக்தியின்மையை சொல்லெடுத்து என்றும் காட்டு கிறாள். தன் கிளியைத் தான் வளர்த்து வந்த கிளியை சொல்லே என்று முதலடி எடுத்துக்கொடுத்தாள். அதுவும் சொல்லத் தொடங்கியது. உடனே இவளுக்குக் கண்களிலிருந்து தாரை

தாரையாக நீர் வடிந்து அவளது முலைத் தடங்களைச் சென்றடைகிறது. இத்தொடர் ஆழ்வாருக்குத் தன்னிலை மாரி பெண்நிலை வந்ததை குறிக்கிறது. நாயகன் பெண்களை அனுபவிப்பதற்கு உண்டானது முலை, அடியவர்க்கு பக்தியே முலை போன்ற பொருள்க பகவானை அனுபவிப்பதற்கும் அவன் அவர்களை அனுபவிப்பதற்கும் உள்ளுறை பொருளாகச் சொல்லப்பட்டது.

துணை முலை:- துணையாக இரண்டாக இருக்கின்ற முலைகள் என்றும், நாயகியை நாயகன் அனுபவிப்பதற்கு துணை செல்லும் முலைகள் என்றும் கொள்ளலாம் அல்லது, வேறு ஒப்பில்லாத திருவடிகளை இணை அடிகள் என்று சொல்வதைப் போல வேறு ஒப்பில்லாத முலைகளைத் துணை முலை என்று சொல்லப்பட்டது. மற்ற ஆழ்வார்களின் துணை முலையை இவ்வாழ்வாரின் முலைகளோடு ஒப்பிட முடியாது. இவர் மிக மென்மையானவர் பிரிவைக் கொஞ்சமும் தரிக்காதவர் என்பதைப் போல நும்மடியார் எல்லோரோடும் ஒக்க எண்ணியிருந்தீர் அடியேனை. (பெரிய திரு. 4-9-6)

துணை முலைமேல் துளி சோர: முலைமேல் கண்ணீர் விழும் பொழுது பார்வை, மெய்யுணர்வு ஆகிய இரண்டையும் இழந்து கண்ணும் முலையும் ஒன்றை ஒன்று கட்டிக்கொண்டு அழுவதைப் போலவும் கண் ஞானத்தையும் முலை பக்தியையும் காட்டுவதால் ஞானமும் பக்தியும் அறிந்த ஒரு நிலையில் மறுபடியும் அவள் சோர்வுற்று மயக்கமடைந்தாள்.

பாசுரம் 14

முளைக் கதிரை, குறுங்குடியில் முகிலை, மூவா
　　மூவுலகுங் கடந்தப்பால் முதலாய்நின்ற
அளப்பரிய ஆரமுதை அரங்கமேய
　　அந்தணனை அந்தணர்தம் சிந்தையானை
விளக்கொளியை மரகதத்தைத் திருத்தண்காவில்
　　வெஃகாவில் திருமாலைப் பாடக்கேட்டு
வளர்த்ததனால் பயன் பெற்றேன் வருகவென்று
　　மடக்கிளியைக் கை கூப்பி வணங்கினாளே.

பதவுரை:

முளைக்கதிரை: இளங்கதிரவனைப் போன்றவரும் **குறுங்குடியில் முகிலை:** திருக்குறுங்குடியில் கார்மேகம் போன்று விளங்குபவனும்,

மூவா மூவுலகங்கடந்து: எப்பொழுதும் இருக்கும் படியான மூவகைப்பட்ட உலகுக்கும் அவ்வருகாய்

அப்பால்: பரமபதத்தில்

முதல் ஆய்நின்ற: இரு விபூதிகளுக்கும் முதல்வனாய்க் கொண்டு எழுந்தருளியிருப்பவனும்

அளப்பரிய: அளவிட முடியாதவனும் (பௌதீக எல்லைக்கு அப்பாற்பட்டவனும்)

ஆர் அமுதை: அருமையான அமிர்தம் போன்றவனை **அரங்கம் மேய அந்தணனை:** திருவரங்கமாநகரில் பள்ளிக் கொண்டிருக்கும் அரங்கநாதன் என்கின்ற தூயவனை,

அந்தணர்தம் சிந்தனையானை: தூயவர்களின் உள்ளத்தை இருப்பிடமாகக் கொண்டவனை

திருத்தண்காவில் விளக்கு ஒளியை : திருத்தண்காவல் விளக்கொளிப் பெருமாளாக இருப்பவனை,

மரகதத்தை: மரகதப்பச்சை போல் அழகிய வடிவு படைத்தவனை,

வெஃகாவில் திருமாலை: திருவெஃகாவில் சொன்ன வண்ணம் செய்த பெருமாளாகப் பள்ளி கொண்டுள்ள திருமகள் கேள்வனை,

பாடக்கேட்டு: கிளி பாட, அப்பாசுரங்களைக் கேட்டு

மடக்கிளியை: அழகிய அக்கிளியை நோக்கி வளர்த்ததனால் பயன் பெற்றேன் வருகவென்று : உன்னை வளர்த்ததனால் நான் உய்வடைந்தேன். இங்கே வா என்றழைத்து ,

கை கூப்பி வணங்கினாள்: அதற்கு அஞ்சலி செய்து தலைவி தான் வளர்த்த கிளியை வணங்கினாள் என்று எல்லோரும் அறிவீர்களாக என்று தாய்ப்பேசுகிறாள்.

பொழிப்புரை: சென்ற பாசுரத்தில் கிளியைப் பாடச் சொல்லி தான் பாட ஆரம்பித்தாள். கிளியும் அதற்காகக் காத்துக் கொண்டிருந்தது போல் எம்பெருமான் அர்ச்சாவதார மூர்த்தியாய் எழுந்தருளியிருக்கும் பல திவ்ய தேசங்களையும் பாடத்தொடங்கி சென்ற பாசுரத்தில் அவன் விபவ அவதாரங் களிலும் அர்ச்சாவதாரத்திலும் அடியார்களை ஆட்கொள்பவன்,

தன்னிடம் பாராமுகம் காட்டுகிறானே என்று சோர்ந்து போனாள். ஆனால், இந்தப் பாசுரத்தில் அது அவளுக்கு பெருமகிழ்ச்சியைக் கொடுத்தது. அதனால் உன்னால் உய்வு பெற்றேன் என்று தான் வளர்த்தக் கிளியை வணங்கினள் என்று தாய்ப் பேசுகிறாள்.

விளக்கவுரை:

முளைக்கதிரை: பரகாலநாயகி தான் தன்னிலையில் இருந்த போது கிளிக்குக் கற்பித்தத் திருநாமங்கள் இங்கு வரிசைப் படுத்தப்படுகின்றன.

முளைக்கதிர், குறுங்குடியில் முகில் என்று அவள் சொல்லித் தந்த வரிசைக்கிரமத்தில் பரகால நாயகி உயிர்பிழைப்பதற்காகக் கிளி அதே வரிசையில் சொல்கிறது.

முளைக்கதிரை: காலையில் உதிக்கின்ற கதிரவனைப் போல கண்ணால் கண்டு அனுபவிக்கக்கூடிய திவ்யமங்கள திருமேனியை உடையவனை, முதல் பாசுரத்தில் மணியுருவில் என்று நீலவண்ணமான திருமேனியைச் சொன்னார் இங்கு முளைக்கதிரை என்று சொன்னது சிவப்பு நிறத்தைச் சொல்லாமல் இளஞ்சூரியனைப் போல் ஒளிவிடுகின்ற (கண்ணால் காணக்கூடிய ஒளி) திருமேனியைச் சொல்கிறார். நீலமேனியானாலும் சூரியனைப் போல் ஒளி வீசுகின்ற திருமேனி என்று பொருள்.

குறுங்குடியில் முகிலை: இரண்டாம் பாசுரத்தில் முகிலுருவம் என்று திருமேனியினுடைய துன்பத்தைத் தீர்க்கும் தன்மையையும் வண்மையையும் கருதி மேகம் போன்ற திருமேனி என்றார். அதையே இங்குக் குறுங்குடியில் முகில் என்றார். திருக்குறுங்குடியில் வந்து நிலையாய் நின்ற

நீர்மைக்குணம் மிக்கவன் எங்கிருந்து வந்தான் என்று அடுத்த அடியில்

மூவா முவுலகும் கடந்து அப்பால்: மூவா மூவுலகு என்று நித்யசூரி, முக்தர், பக்தர் என்று மூவகைப்பட்ட ஜீவன்கள் கூட்டத்தை அருளிச்செய்கிறார் கடந்து மூவுலகும் என்று உம்மையாலே மூவுலகும் என்ற பதத்தால் சொல்லப் பட்ட சேதனா சேதனங்களுக்கும் மேலான அப்பால்- பரமபதத்தில் முதலாய் நின்ற; உலகங்கள் எல்லாம் தோன்று வதற்கு முதல் காரணணாக நின்ற

அளப்பரிய ஆரமுதை: ஸ்வரூபம், ரூபம், குணங்கள் ஆகிய ஒவ்வொன்றாலும் அளவிட முடியாதவனாய் அமுதக் கடல் போல ஒப்புயர்வற்ற இனிமையை உடையவனாக என்று இத்தொடரால் குறுங்குடியில் நின்றவன் பரமபத்திலிருந்து வந்தவன் என்று சொல்லப்படுகிறது.

அரங்கம் மேய அந்தணனை: திருவரங்கத்தில் துயில் கின்ற பெருமாளும் அந்தப் பரமபதத்தின் அமுதக் கடலி லிருந்து வந்து அரங்கத்தில் தேங்கிய ஒருகுமிழ். திருப்பாணாழ் வாரும் அண்டர்கோன் அணி அரங்கன் என் அமுதன் (அமலன்-10) என்றல்லவா அரங்கனை அனுபவிக்கிறார்.

பரமபதத்தில் உள்ள இருப்பு அவதாரங்கள் செய்து (ராமன், கிருஷ்ணன்) அந்த அவதார நோக்கம் தீர்ந்த பிறகு திரும்பச் செல்லும் நிலை. ஆனால் திருவரங்கத்தில் உள்ள கிடக்கை, பூவுலகில் எல்லாரும் திருந்தினாலொழிய இவ்விடத்தை விட்டுப் போவதில்லை என்று பிரளயம் வந்து திருத்துவார் யாரும் இல்லாத காரணத்தால் பரமபதத்துக்குத் திரும்பும் கிடக்கை.

அந்தணனை: தூய்மை ஆனவனை. சேதனர்களுக்கு உயிரும் உடலும் வேறு என்று உண்மையைத் தன் திருமேனி அழகைக்காட்டி ஆட்கொள்பவன்.

அந்தணர் தம் சிந்தனையானை:- தூய மனிதர் களுடைய மனத்தில் அந்தராத்மாவாக இருப்பவனை. 'நின்றதும் இருந்ததும் கிடந்ததும் என் நெஞ்சுளே' (திருச்சந்த-64)

விளக்கொளியை: தனது மேனி அழகைக்காட்டி நான் எனது என்ற பற்றுக்களை அறுத்து, தூய்மை உள்ளவர்கள் நெஞ்சிலே புகுந்து தனக்கும் அவர்களுக்கும் உள்ள தொடர்பைக் காட்டுகிறான். விளக்கொளி போன்ற ஸ்வரூபத்தை உடையவன் என்று பொருள். அந்த விளக்காகிய வெளிச்சத்தில் ஜீவன் தன்னை அறிந்து கொண்டு, தனக்கும் பரமாத்மாவிற்கும் உள்ள தொடர்பை அறிந்து, அதனை அடைய தடையாக இருக்கும் உலக விஷயங்களில் உள்ள தொடர்பை அறுத்துக் கொள்ளும்.

திருத்தண்காவில் மரகதத்தை: பச்சைமாமலை போல் மேனி (திருமாலை 2) மரகதம் போல் பச்சைவண்ணத்தில் இருப்பவன்.

வெஃகாவில் திருமாலை: திருவெஃகாவில் சொன்ன வண்ணம் செய்த பெருமாளாக, பிராட்டியுடன் இருக்கும் ஆகையால், அவள் புருஷகார பூதை என்பதால் அன்பர்கள் கேட்டது கிடைக்கும் படி செய்யும் அந்த இடம் சரணாகதிக்குச் சிறந்த இடம்.

பாட: பரகால நாயகியின் விருப்பப்படி கிளி பாடவும் அவள் உயிர் தரிக்க உதவினோம் என்று, கிளிமகிழ்ச்சியோடு பாடுவதைக் (கேட்டு) சென்ற பாசுரத்தில் 'சொல்லெடுத்து

சொல்' என்று கிளிக்கு விண்ணப்பம் செய்த தலைவி, கிளி பாடுவதைக் கேட்டுப் புத்துயிர் பெற்றுங் கிளியிடம்,

வளர்த்ததனால் பயன்பெற்றேன்: உன்னை வளர்த்த பயனாக என்னுடைய உயிரைத் திரும்பப் பெறும் பயன் பெற்றேன். **வருக என்று:** கிளி அவளுடைய அருகிலே இருந்த போதிலும் உயிர்பிழைத்த மகிழ்ச்சியில் கிளி ஏதோ தொலைவிலிருந்து வந்ததைப் போல் 'வருக வருக' என்று வரவேற்று

மடக்கிளியைக் கைகூப்பி வணங்கினாளே: தான் வளர்த்த கிளியென்றும் பாராது அதற்கு அஞ்சலி செய்து வணங்கினாள். இது எப்படியிருக்கிறது என்றால் இராமானு சருக்கு திவ்யப்ரபந்த பாடம் சொல்லிய முதல் ஆச்சாரிய னாகிய பெரியநம்பி, அவர் குளிக்க ஆற்றுக்குச் சீடர்களோடு வந்து கொண்டிருப்பதைப் பார்த்துத் தமது குருவான ஆளவந்தாரே வருகிறார் எனப்பாவித்துத் தன் சீடன் காலில் விழுந்து வணங்கினார். அதைத் தடுத்தால் குருவின் செய்கையை ஒத்துக்கொண்டதாகி வரும் என்று உடையவர் வாய் பேசாமல் ஆற்றுக்குக் குளிக்கச் சென்றார்.

பாசுரம் 15

கல்லுயர்ந்த நெடுமதிள் சூழ் கச்சி மேய
களிறென்றும் கடற்கிடந்த கனியே! என்றும்
அல்லியம்பூ மலர்ப்பொய்கைப் பழன வேலி
அணிஅழுந்தூர் நின்றுகந்த அம்மானென்றும்
சொல்லுயர்ந்த நெடுவீணை முலைமேல் தாங்கித்
தூமுறுவல் நகையிறையே தோன்ற நக்கு
மெல்விரல்கள் சிவப்பெய்தத் தடவி ஆங்கே
மென்கிளி போல் மிகமிழற்றும் என்பேதையே.

பதவுரை:

கல் உயர்ந்த நெடுமதிள் சூழ்: *கல்லினாலே கட்டப்பட்ட ஓங்கிய நீண்ட மதிள்கள் சூழ்ந்த*

கச்சிமேய: *காஞ்சிபுரம்திருப்பாடகத்தே எழுந்தருளி இருக்கின்ற*

களிறு என்றும்: *ஆண்யானை போன்றவனே*

கடல்கிடந்த கனியே என்றும்: *திருப்பாற்கடலில் கண் வளர்கின்ற கனி போன்று இனிமையாவனே*

அல்லி அம்பூமலர்ப் பொய்கை: *அழகிய அல்லிமலர்கள் நிறைந்த குளங்களையும்*

பழனம்: *நீர்நிலங்களையும்.*

வேலி: நான்கு புறமும் சூழப்பட்டுள்ள, வேலியாகக் கொண்ட

அணி அழுந்தூர் : அழகிய திருவழுந்தூரிலே

நின்று : நின்றருளி

உகந்த: திருஉள்ளம் உகந்திருக்கின்ற

அம்மான் என்றும்: தலைவனே என்று சொல்லி

சொல்உயர்ந்த: நாதமிகுந்ததும் .

நெடு வீணை: நீண்ட இசையை உடைய வீணையை

முலைமேல் தாங்கி: தனது மார்பகங்களின் மீது தாங்கிக்கொண்டு

தூமுறுவல்: தூய புன்சிரிப்பாலே

நகை: பல்வரிசை

இடையே தோன்ற: சிறிதே தெரியும்படி

நக்கு: சிரித்து

மெல் விரல்கள்: தனது மெல்லிய விரல்கள்

சிவப்பு எய்த: சிவக்கும்படியாக

தடவி: அந்த வீணையை மீட்டி

ஆங்கே: அத்தோடு நில்லாமல்

என்பேதை: என்னுடைய சிறுமி.

மென்கிளி போல்:- கிளிப்பிள்ளை போல்

மிக மிழற்றும்: நன்றாகப் பேசுவும் செய்கிறாள்.

பொழிப்புரை:

இந்தப் பாசுரத்தில் தன் வாயாலேயே எம்பெருமானுடையத் திருநாமங்களை அழகான நீண்ட வீணையைத் தன் மார்பகங்களில் வைத்து அணைத்து தன்னுடைய விரல்கள் சிவப்பாகுமளவுக்கு வீணையை மீட்டி அவனுடைய மேனியை நேரில் காண்பது போல், அவனை அணைப்பது போல், வீணையை அணைத்துக் கொண்டு அவனது நாமங்களையும் தன் வாயால் மிழற்று கிறாள்.

விளக்கவுரை:

கல்லுயர்ந்த நெடுமதிள்சூழ் கச்சிமேய களிறு என்றும்: திருநாமங்கள் ஆபத்துக்கு உதவுவதாகவும் உய்விப்ப தாகவும் இனிமையாகவும் இருக்கவேண்டும். ஆபத்துக்குதவும் தன்மையைப் பதின்மூன்றாம் பாசுரத்திலும், உய்விக்கும் தன்மையை 14ஆவது பாசுரத்திலும் கண்டோம் இந்தப் பாசுரத்தில் இனிமையான திருநாமங்களைச் சொல்கிறாள்.

கல்லுயர்ந்த நெடுமதிள் சூழ் கச்சிமேய களிறு: அவன் மிகவும் பாதுகாப்பாக நீண்டு உயர்ந்த மதில்கள் உள்ள திருப்பாடகம் என்னும் திவ்யதேசத்தில் ஓர் ஆண்யானை போல் எழுந்தருளியிருக்கிறான். அவன் பாதுகாப்பா்க இருந்தால் தானே மற்றவர்களைப் பாதுகாக்க முடியும். பாண்டவர் தூதனாக வல்லவோ அவன் இருக்கிறான். சாதாரணமாக, தூதனுக்கு யாரும் இடையூறு செய்வதில்லை. இவனோ சர்வவல்லமை மிக்க அர்ச்சுனனும் பீமனும் உள்ள பாண்டவருக்குத் தூதனாக இருக்கும் போது, அவனுக்கு யார் இடையூறு செய்ய முடியும்? அது மட்டுமின்றி இவன், சக்கரம் உள்ளவன். இவனை யாரால் வெல்ல முடியும்?. அதனால் பாதுகாப்பிற்கு எந்தக் குறைவும் இல்லை.

கடல் கிடந்த கனியே என்றும்: அடுத்து, அவனது இனிமையை அவன் பாற்கடலில் கண்வளர்கின்ற கனி போன்ற இனிமையுள்ளவன். இவன் கனி போன்று மற்றவர்களே தன்னை அனுபவிக்க வேண்டும் என்று நீர்மையோடு பாற்கடலில் துயில் செய்கிறான். தன்னை அநுபவிப்பவர் களைத் தேடிக்கொண்டிருப்பவன் தன்னை அனுபவிக்க வர மறுக்கிறான் என்று அவள் கவலை அடைகிறாள். வியூகத்தில் இருப்பவன் அவன். முதலில் அவனுடைய அருள் வேண்டுபவர்கள் அங்கு சென்று இறைஞ்சினாலொழிய, விபவ அவதாரம் போல் பக்தர்கள் இருக்குமிடம் தேடி வரமாட்டான் என்பது பொருள். அதனால், அவன் செல்வதற்கு வசதியாக அவன் எழுந்தருளியிருக்கும் சோழநாட்டுத் திருவழுந்தூரில் ஆமருவியப்பனாக எளிமையான கோலத்தில் பசுக்களை மேய்ப்பவனாகக் காட்சி அளிக்கிறான்.

அல்லியம் பூ மலர்ப்பொய்கை, பழனவேலி அணி அழுந்தூர் நின்று உகந்த அம்மான்: இது சோழநாடு அல்லவா? இங்கு நெல்வயல்களும், அல்லி, மற்றும் தாமரைப் பொய்கைகளும் தாமே உண்டு. அதனால் 'அல்லியம் பூ மலர்ப்பொய்கை, பழனவேலி அணி அழுந்தூர் நின்று உகந்த அம்மான்' என்றாள்.அந்தத் திவ்யதேசம் திருக்கோவலூர் போல் (கடிபொழில்சூழ் நெடுமருகில் கமலவேலி போல்) நீர்ப்பழனங்களை வேலியாகக் கொண்டுள்ளது. இங்குள்ள பொய்கைகள் இரவில் மலரும் அல்லிப் பூக்களை அதிகமாகக் கொண்டுள்ளன. இவளுக்கு இருப்பதும் மாலை மலர்கின்ற நோய் (திருக்குறள் 1227). அதனால், மாலை மலர்கின்ற

அல்லிப்பூக்களைக் கொண்ட பொய்கைகள் இவளது கவனத்தை ஈர்க்கின்றன.

நின்று உகந்த: உகந்து நின்ற என்றும் கொள்ளலாம். பக்தர்கள் தன்னைத் தேடி வருவதற்கு உகந்த இடம் என்று அந்த இடத்தில்

அம்மான் என்றும்: பரமபதத்தில் பெறமுடியாத இல்லறத்தில் உள்ள அடியார்களை இங்கு ஆட்கொள்ள முடிகிறதே என்று எம்பெருமான் விரும்பி நின்ற இடம். அதனால்தான் இவரைப் போன்ற ஆழ்வார்கள். அர்ச்சாவ தாரத்தில் மிக ஈடுபாடு கொண்டுள் ளார்கள். இப்படிப்பட்ட நின்றும் இருந்தும் கிடந்தும் காட்சியளிக்கும் திவ்யதேசங் களால் தாம் உடையவனாகிய எம்பெருமான் உடைமை களாகிய ஜீவர்களைப் பெற முடிகிறது. இவைகள் தாம் ஜீவர்களைப் பரமபதத்துக்கு இட்டு செல்லும் வழிகாட்டி களாக அமைந்தன.

சொல்லுயர்ந்த நெடுவீணை: தலைமகள் இப்பொழுது நாமங்கள் ஊட்டிய மகிழ்வோடு வீணை எடுத்து பாடிக் கொண்டே வாசிக்கிறாள். அந்த விணை (சொல்லுயர்ந்த) ஒலி மிகுந்த வீனை என்பதோடு சுர சுத்தமான வீணை அது

நீண்டிருப்பது வாசிப்பதற்குக் கடினமானாலும் எழுத்துக்கள் தனியே வராமல் இசையோடு கரைந்து வருவதற்கு வசதியான நெடுவீணை. வீணையைத் தொட்டவுடன் அது அவளுக்குத் தன் நாயகனை நினைவுபடுத்த அதைக்கட்டி அணைப்பது போல் தனது மார்பகங்களால் அந்த வீணையைத் தாங்கி அப்படி அந்த வீணை அவளது மார்பகங்கள் மீது அமர்ந்த உடன் அவளுக்குத் தான் எம்பெருமானைத் தனிமையில் கட்டி அணைத்தது நினைவுக்கு வரவும் அவளது உதடுகளில்,

தூமுறுவல்: களங்கமற்ற ஒரு புன்னகை தவழ்கிறது. அப்பொழுது,

நகை இறையே தோன்ற நக்கு: அவளது உதடுகளில் கீழ் வெண்முத்துப் போன்ற பற்கள். சிறிதே வெளிப்பட்டதாக நகைக்கிறாள். மெல்லிய வீரல்களை வீணைத் தந்திகளைத் தடவும் போது அவை சிவந்தன. அவை இயல்பாகவே சிவந்த விரல்கள். சூர்ப்பனகை இராவணனிடம் சீதையை வருணிக்கும் போது 'மஞ்சு ஒக்கும் அளக ஓதி மழை ஒக்கும் வடித்த கூந்தல் பஞ்சு ஒக்கும் அடிகள்; செய்ய பவளத்தின் விரல்கள்; ஐய! (க.ரா.சூர்ப் பனகை சூழ்ச்சிப்படலம்-70) சீதையினுடைய விரல்கள் நேர்த்தியான பவளத்தின் சிவப்புநிறத்தை உடைய விரல்கள். அப்படிப்பட்ட தலைமகளின் மெல்லிய விரல்கள் வீணைத் தந்தியை திரும்பத் திரும்பத் தடவுவதனால் இயல்பாகவே சிவந்த விரல்கள் மேலும் சிவந்தன.

ஆங்கே: அந்த நிலையில்

மென்கிளி போல்: இளங்கிளி போல் மிகவும் அழகாக

மிக மிழற்றும் : கிள்ளை மொழி பேசுகிறாள்

என் பேதை: என்னுடைய வயிற்றில் பிறந்த பெண். இவள் ஒன்றுமறியாதவள் என்று நான் எண்ணியிருக்க இவளுக்குக் காதல் அனுபவத்தை நான் அறியாமல் எம்பெருமான் கொடுத்துச் சென்றதால் அல்லவா என்மகள், இவள் உருவத்தைப் பார்த்தால் இவள் சிறுமியாக இருக்கிறாள், இவள் கிள்ளை மொழி பேசுவதைப் பார்க்கும் போது அதில் முதிர்ச்சி தெரிகிறது. இவள் என் பெண்தானா என்பதே எனக்கு ஐயமாக இருக்கிறது என்கிறாள் திருத்தாயார்.

பாசுரம் 16

கன்று மேய்த் தினிதுகந்த காளாய் என்றும்
கடிபொழில் சூழ் கணபுரத்தென் கனியே என்றும்
மன்றமரக் கூத்தாடி மகிழ்ந்தாய் என்றும்
வட திருவேங்கட மேய மைந்தா என்றும்
வென்றசுரர் குலங்களைந்த வேந்தே என்றும்
விரிபொழில் சூழ் திருநறையூர் நின்றாய் என்றும்
துன்றுகுழற் கருநிறத்தென் துணையே என்றும்
துணை முலைமேல் துளிசோரச் சோர்கின்றாளே!

பதவுரை:

கன்று மேய்த்து பசுக்களின் நிரை காத்து

இனிதுகந்த: அதை ஒரு கடனாகக்கொள்ளாமல் மகிழ்வோடு ஏற்றுக்கொண்ட

காளாய் என்றும்: காளை போன்ற மிடுக் குடையவனே.

கடிபொழில் சூழ்: மணமிக்க சோலை களாலே சூழப்பட்ட

கணபுரத்து: திருக்கண்ணபுரத்தில் பழுத்த

கனியே என்றும்: என்பழமே என்றும்

மன்றமர கூத்தாடி; நாற்சந்திகளிலே குடக்கூத்து ஆடி

மகிழ்ந்தாய் என்றும்: மகிழ்ந்தவனே என்றும்.

வடதிருவேங்கட மேய மைந்தா என்றும்: வடக்கே ஏழுமலையில் ஒன்றான திருவேங்கடமலையில் பொருந்தி வாழ்கின்ற ஆண்மகனே என்றும்

அசுரர் குலம்: அரக்கர் குலத்தை

வென்று: வெற்றிகொண்டு களைந்த வேறோடு அழித்த

வேந்தே என்றும்: அரசனே என்றும்.

விரிபொழில் சூழ்: பரந்த சோலைகளாலே சூழப்பட்ட

திருநறையூர்: திருநறையூர் என்னும் திருப்பதியிலே

நின்றாய் என்றும்: நின்றருளுகின்றவனே என்றும்.

துன்று குழல் கருநிறத்து என் துணையே என்றும்: அடர்ந்த திருக்குழற் கற்றையையும் கருத்த திருமேனியையும் உடையவனாய், எனக்குத் துணையானவனே என்றும் சொல்லி.

துணை முலைமேல்: ஒன்றோடொன்று ஒத்த மார்பகங்களின் மீது

துளிசோர: கண்ணீர்த் துளிகள் வழிந்தோடும் படியாக

சோர்கின்றாளே: தளர்ச்சி அடைகின்றாளே என்று திருத்தாயார் சொல்கிறாள்.

பொழிப்புரை: சென்ற பாசுரத்தில் பரகால நாயகி வீணையை எடுத்து தன்னுடைய மார்பகங்களிலே வைத்துப் பாடியவுடன், அனுமனிடமிருந்து கணையாழியைப் பெற்ற சீதை எப்படி இராமனே நேரில் வந்தது போல் நினைத்துப் புலம்பினாளோ அப்படிப்பட்ட அனுபவத்தை, பரகால நாயகியும் பெற்று, ஏற்றத் தாழ்வு பாராமல் தன்னை எம்பெருமான் காப்பாற்றும்படியும் தனக்குக் காட்சியளித்து

தன் தளர்ச்சியைப் போக்குமாறு வேண்டுவதாகத் திருத்தாயார் பேச்சாக இந்தப் பதினாறாம் பாசுரத்திலும் ஆழ்வார் அடிக்கொருதரம் அர்ச்சாவதரத்தைப் பாடுவதைக் காண்கிறோம்.

விளக்கவுரை

கன்று மேய்த்து இனிதுகந்த காளாய் என்றும் : பசுங் கன்றுகள் உள்ளிட்ட எல்லாப் பொருள்களையும் காப்பாற்று கின்ற உனது அடிப்படை குணத்தை என்னிடத்தில் ஏன் காட்ட மறுக்கிறாய் என்றாள். பரமபத்தில் நித்யசூரி களையும் காப்பாற்றுபவன் என்றால் மனத்தைத் தேற்றிக் கொள்ளலாம். கிருஷ்ண பலராமர்களாக அவதரித்து இடக்கை வலக்கை அறியாத ஆயர்களைக் காப்பாற்றினாய் என்றாலும் மனம் தேறியிருக்கும். அறிவின்மையின் மேல் எல்லையில் நிற்கும் பசுக்களையும் மேய்த்துக் காப்பாற்றிய போது என் மனம் எப்படி சமாதானம் அடையும்.

கன்று மேய்த்து இனிதுகந்த காளாய்: நீ அனைவரையும் காப்பாற்றுபவன் என்ற சொல். நீ ஆநிரைகளைப் மேய்த்த பிறகுதானே அனைத்து ஜீவராசிகளுக்கும் நீ அரசன் என்ற பேச்சு நிலைபெற்றது. இனிதுகந்த நிலத்திலும் பசுநிரை மேய்ப்பதிலும் ''செங்கனிவாய் எங்கள் ஆயர்தேவே'' (திருவாய் 10-3-10) என்று கன்றுகள் மேய்ப்பதை, இவன்தான் மேய்ப்பவன் என்று விரும்பிச் செய்கிறான். ஏனென்றால் அப்பொழுது தான் அவன் ஜீவராசிகளுக்குள் வேறுபாடு பார்க்காமல் எல்லாவற்றையும் காப்பாற்றுபவன் என்ற பெயர் நிலைபெறும். அதனால் அதைவிரும்பிச் செய்கிறானே. காதல் முதிர்ச்சியில் அறிவு மயங்கி, ஒருகால் தான் அறிவில்லாத

பசுங்கன்றாக பிறந்திருந்தால் அவன் என்னை ஆட்கொண்டிருப்பானோ என்று நினைக்கிறாள்.

கடிபொழில் சூழ் கணபுரத்து என் கனியே என்றும்: ஆழ்வார் தனது வழக்கப்படி கிருஷ்ணாவதாரத்தைப் பாடியவுடன் அடுத்த அர்ச்சாவதாரமான திருக்கண்ணபுரம் சௌரிராஜப் பெருமானைப் பாடுகிறார். (கடிபொழில் சூழ் கணபுரத்து என் கனியே என்றும்)

நறுமணத்தைக் கொண்ட மலர்கள் மிக்க சோலைகளால் சூழப்பட்டுள்ள திருக்கண்ணபுரத்தில் இருக்கும் கனியைப் போன்று இனிக்கின்ற சௌரிராஜனே. பக்தி முதலான யோகங்களைப் பற்றி அவனை அடைய முயல்பவர்களுக்கு அவன் காயாகவும், அவனையே உபாயமாக அவனை 'அடையமுயற்சி செய்கின்ற பிரபந்நர்களுக்கு, அவன் கனி போல் இருக்கிறான் என்று பிரபத்தியின் மேன்மையையும் கூறுவதாகக் கொள்ளலாம்.

கனியே என்றும்: பழுத்த கனியானது உண்பவருக்கு கிடைக்காமல் போனால் அழுகிப்போய் வீணாகிவிடும் உண்பவரும், கனி கிடைக்காததால் உயிர்வாழ முடியாது. நீ கனி போன்றவன். உன்னை எனக்கு அநுபவிக்கத் தரா விட்டால் இருவருக்கும் கேடுவரும் என்பதாகும்.

மன்றமரக் கூத்தாடி மகிழ்ந்தாய் என்றும்: நாற்சந்தி களிலே கூத்தாடி அதற்குப்பிறகும் அங்கிருப்போருடன் கூடி மகிழ்பவனே என்று பொருள். ஒரு நாடக அரங்கில் நாடகம் முடிந்த பிறகும் நாடகத்தில் நடித்தவர்களும் பார்வை யாளரும் நெடுநேரம் வரை அரங்கில் அமர்ந்து, அந்த அரங்க நிகழ்ச்சியைப்பற்றிப் பேசி மகிழ்வார்.

மகிழ்ந்தாயென்றும்: கூத்தைக் கண்டவர்கள் மகிழ்ந்தார்கள் என்பதை விட அவர்களை அக்கூத்தால் வெற்றிகொண்டு மகிழ்ந்தவனும் அவன்தான். சில நிகழ்ச்சிகளில் பாடல் சுவைஞர்கள் (பாடல் கேட்பவர்கள்) அனுபவிப்பதற்கு ஒரு படி அதிகமாக (பாடியவர்கள்) நிகழ்ச்சியில் பங்கேற்றுக் கொண்டவர்கள் மகிழ்ச்சியடையவது அதிகமாக இருக்கும். இங்குதலைவி ஊருக்கு கிடைத்த மகிழ்ச்சி எனக்கு கிடைக்காமல் அல்லவா போனது என்று வருந்துகிறாள்.

வட திருவேங்கடம் மேய மைந்தா: ஏழுமலைகளில் ஒன்றான திருவேங்கடத்தில் நின்று வேறுபாடு இல்லாது யாவருக்கும், என்றும், "மண்ணோர் விண்ணோர்க்கு" (திருவாய்1-8-3) "வானவர் வானவர் கோனொடும் நமன் தொழும் திருவேங்கடம்" (திருவாய் 3-3-7) என்று நம்மாழ்வாரும் என்று மண்ணவர் விண்ணவர் யாவரும் அனுபவிக்கும் திருவேங்கடம். பக்தர்கள் அனைவருக்கும் பொதுவான திருமேனி என் ஒருத்தியைத் தவிர மற்றவர்களுக்கு உரியதாகி விட்டதோ என்று தலைவி கருதுவதாகவும் கொள்ளலாம்.

வென்றசுரர் குலங்களைந்த வேந்தே என்றும்: இராமாவதாரத்தில் சிதை நிமித்தமாகவும், விசுவாமித்திரர் நிமித்தமாகவும் வீடணனைத் தவிர அரக்கர் குலமே இராவணனோடு சேர்த்து அழிக்கப்பட்டதல்லவா? அப்படி தேவர்களது வேண்டுகோளுக்கிணங்கி அரசகுமாரனாக அவதாரம் பண்ணி அரக்கர் குலத்தை அடியோடு அழித்தவன் அல்லவா? (குலங்களைந்து வென்றானை திரு நெடு 29)

விரிபொழில் சூழ் திருநறையூர் நின்றாய் என்றும்: பெரியதிருமொழியில் நறையூர் நின்ற நம்பியைப் பத்து பதிகங்களால் மங்களாசாசனம் செய்த ஆசை தணியாமல்

இங்கும் ஆழ்வார் திருநறையூரை மங்களாசாசனம் செய்கிறார். என்ன இருந்தாலும் இவருக்கும் பஞ்ச சம்ஸ் காரங்களை செய்து வைத்தவரல்லவா? இந்தத் திவ்ய தேசத்தில், இதைச் சுற்றியுள்ள திவ்ய தேசங்கள் போல் உபய நாச்சிமாருடன் எழுந்தருளாமல், மஞ்சுளவல்லித் தாயார் ஒருத்தியோடு மட்டும் எழுந்தருளியிருப்பது சீதையைத் தவிர வேறு ஒரு எவரையும் நெஞ்சால் நினைக்காத இராமனாக இங்கு எழுந்தருளியிருப்பது போல் ஆழ்வாருக்குத் தோன்றுகிறது.

பரந்து விரிந்த சோலைகளை உடைய நறையூரைக் கண்டவுடன், பிராட்டியைத் தேடி அலைந்த இராமன் வஞ்சுளவல்லியைக் கண்டவுடன் இங்கேயே நின்று விட்டான். அதனால் எனக்கு முகங்காட்ட மறுக்கிறாயா என்றும் கொள்ளலாம் அல்லது அவளது பிரதிநிதியாகிய எனக்கு நீ முகங்காட்டாவிட்டால் அவள் முகம் உனக்குக் கிடைக்காது என்று பரகால நாயகி புலம்புகிறாள்.

துன்றுகுழல் கருநிறத்து என் துணையே என்றும்: அடர்ந்த கூந்தலும் கரிய திருமேனியையும் உடைய என் துணைவனே என்கிறாள் பரகாலநாயகி. இதுவரை காதலி சொல்லாகச் சொல்லிக் கொண்டிருந்தவள் அவனுடன் கந்தர்வ திருமணம் செய்து கொண்டவள் போ்ல என் துணைவனே என்று பாவிப்பது ஆடவர்கள் பெண்களின் குழலை மேகங்கள் என்றும் அலை அலையாய் இருக்கும் கூந்தல் என்றும் வருணிப்பது ஒரு புறமிருக்க பரகாலநாயகி இந்தப் பாசுரத்திலும் வரும் 'துன்றுகுழல்' என்று இங்கேயும் 'மைவண்ண நறுங்குஞ்சி குழல்' என்று 21 ஆம் பாசுரத்திலும் எம்பெருமான் குழலின் அழகை வருணிக்கிறார். பெண்களுக்குத் தங்கள் கூந்தல் அழகுமட்டுமல்ல தம்

நாயகரின் குழல் அழகிலும் பெருமை என்று நன்கு அறிந்த ஆழ்வார் தாம் பெண்ணாக மாறி பாசுரம் செய்யும்போது எப்படி மறப்பார். துணை என்பதற்கு தன்னைக் கவர்ந்தவன் தன்னைக் காப்பாற்றுபவன் என்று இரு குணங்களையும் சேர்த்து சொல்லும் பதம். 'இலை துணை மற்று என் நெஞ்சே' (நா. திருவ-8) என்று துணை என்ற சொல்லுக்கு இவ்விரு பொருள்களையும் காட்டுகிறார் திருமழிசைப் பிரான்.

என்றும் துணைமுலை மேல் துளிசோரச் சோர் கின்றாளே: இப்படிக் கூப்பிட்டுக் கொண்டிருக்கும் .போதே, தரையில் மயங்கி விழுந்தாள் என் பெண் என்கிறாள் திருத்தாயார். துணை முலை- இரண்டு முலைகள் என்று நேர்ப் பொருளையும் அவை ஒன்றுக்குத் துணையாக இருப்பது மட்டுமல்ல அவள் தன் நாயகனோடு கூடியிருந்த போது அவ்வநுபவத்திற்கு இருவருக்கும் அவளுடைய முலைகள் துணையாக இருந்தன. அதனால் தானே "கல்லாதான் சொல் காமுறுதல் முலையிரண்டும் இல்லாதாள் பெண் காமுற்றற்று' என்றார் பொய்யாமொழிப் புலவர் (திருக்குறள் 402) அவன் உடன் இல்லாத போதும் அவன் கைப்பட்ட முலைகள் அவளுக்குத் துணையாயின.

தூளிசோரச் சோர்கின்றாளே : இப்படி அவள் அவனுடன் ஒன்றாக இருந்த பொழுதை எண்ணியவுடன், அவள் கண்களிலிருந்து கண்ணீர் தாரையாக அவளுடைய முலைமேல் விழவும் அவள் மயக்க மடைந்து விழுகிறாள். கீழே விழும்போது எல்லோரையும் போல் அம்மா என்று சொல்லி விழாமல் தன்நாயகனின் துணை விழைந்து கீழே விழுந்தாள் என்ற பொருள். 'என் துணையே சோர் கின்றாளே' என்று பதங்களை சேர்த்தால் வரும்' அதாவது

அவன் எனக்கு முகங் காட்டாமல் தனக்கு முகங்காட்டா தவனையே நினைத்து மயங்கிவிழுந்தாள் இந்த நிலை எம்பெருமானிடம் சரணடைய வேண்டுபவர்க்கும் பொருந்தும்.

பாசுரம் 17

பொங்கார் மெல்லிளங் கொங்கை பொன்னே பூப்பப்
பொருகயற்கண் நீரரும்பப் போந்துநின்று
செங்கால மடப்புறவம் பெடைக்குப் பேசும்
சிறுகுரலுக்குடலுருகிச் சிந்தித்து ஆங்கே
தண்காலும் தண்குடத்தை நகரும் பாடித்
தண்கோவலூர் பாடியாடக் கேட்டு
நங்காய் நங்குடிக்கிதுவோ நன்மை என்ன
நரையூரும் பாடுவாள் நவில்கின்றாளே.

பதஉரை:

பொங்குஆர் மெல் இளங் கொங்கை: வளர்த்தியுடையதாய மென்மை மிக்கதான இளைய முலைகள்.

பொன்னே பூப்ப: நிறமிழக்கவும்,

பொருங்கயற்கண்: சண்டையிடுகின்ற கயல்மீன்களைப் போன்ற கண்கள்

நீர் அரும்ப:- நீர்த்துளிகளால் நிரம்பவும்,

போந்து நின்று: தாயைவிட்டுப் பிரிந்து வந்து நிலையாயிருந்து

செங்காலமடப்புறவம். பெடைக்குப் பேசும் சிறுகுரலுக்கு: சிவந்த கால்களையுடைய அறிவற்ற புறாக்கள் தம் பெடைகளோடு சிறுகுரலாகப் பேசுகின்றபடி

உடல் உருகி ; மேனி கரைந்து

சிந்தித்து: அவனை நினைத்து

ஆங்கே: அந்த அளவில்

தண்காலும்: திருத்தண்காவையும்

தண் குடந்தை நகரும்: வயல்களால் சூழப்பட்டு குளிர்ந்துள்ள திருக்குடந்தைநகரிலுள்ள திவ்யதேசத்தையும்

தண் கோவலூர்: திருக்கோவலூரரையும்

பாடி ஆட: பாடிக்கூத்தாட

கேட்டு: அவ்வொலியை நான் கேட்டு,

நங்காய்: பெண்ணே!

நம் குடிக்கு: நமது குலத்திற்கு

இது நன்மையோ என்ன: வாய்விட்டுக் கூப்பிட்டு ஆடிப்பாடுவது நல்லதா என்று சொல்லி

நறையூரும்: திருநரையூரையும், நாச்சியார் கோவிலையும்

பாடுவாள் நவில்கின்றாளே: பாடுபவளாக பாட்டைத் தொடங்கினாள்.

பொழிப்புரை:

சென்ற பாசுரத்தில் மயங்கிவிழுந்த, பரகால நாயகி எழுந்து அவனுடைய நினைவு வரவும், அவன் எழுந்தருளியுள்ள திருத்தண்கால், திருக்குடந்தை, திருக்கோவலூர் போன்ற திருத்தலங்களைப் பாடி ஆடத்தொடங்கினாள். திருத்தாயார் அவள் அப்படிப் பாடி ஆடுவது நமது குலத்திற்கு ஒவ்வாது. தவிரவும், தலைவி யாரை நினைத்துப் பாடுகிறாளோ அந்த

எம்பெருமானுக்கும் இழுக்கு என்று சொல்லவும் அவள் நாச்சியார் கோவிலைப் பாடுவதற்குத் தொடங்கினாள்.

விளக்கவுரை:

செங்கால மடப்புறவம்: சிவந்த கால்களை உடைய அறிவற்ற பெண் புறாவானது, நாயகனோடு கூடியிருக்கும் போது, *"அடிச்சியோம் தலைமிசை நீயணியாய் ஆழியங் கண்ணா! உன்கோலப்பாதம் (திருவாய் 10-3-6)* என்கிற படியே தன் தலையிலே வைத்துக்கொள்ளும் அவனது சிவந்த காலைத் தலைவிக்கு நினைவுறுத்தி இவளைத் துன்புறுத்துகிறது. அதுமட்டுமா?

பெடைக்குப் பேசும் சிறுகுரல்: ஆண்புறா தன்பக்கலிலிருக்கும் பெண் புறாவிடம் காமத்துடன் பேசுகின்ற மெல்லிய ஓசை. இப்படிப்பட்ட ஓசை ஆண் பெண் கலவியிலும் பயன் படுத்தப்படும் என்றும் அளவில் அந்த ஆண்புறாவின் காலும், அதனுடைய கூவலும் அவளுக்குத் தான் நாயகனோடு கூடியிருந்த போது அவன் அன்பு மிகுதியில் தொண்டை அடைக்கப் பேசிய பேச்சுக்களை அவளுக்கு நினைவிற் கொண்டு வருகிறது. அதை நினைத்து உடல் உருகி மேனி இளைத்துப்போக, அங்கே அவ்வளவில்

பொங்கார் மெல் இளங்கொங்கை பொன்னே பூப்ப: அவளுடைய வளர்த்தி அதிகமுள்ள தடமுலைகள், அவள் உடல் இளைக்கவும் அந்த முலைகள் அளவில் அதிகமாகத் தோன்றுகின்றன. *"ஊனிடையாழி சங்கு உத்தமர்க்கென்று உன்னித்தெழுந்த என் தட முலைகள்' (நாச்சியார் திரு 1-5)* (மெல் இளங்கொங்கை) திருமண மாகாத பெண்களின் முலைகள் கடினமாக இருக்க வேண்டும். ஆனால் அவனது பிரிவாற்றல்

தாங்காமையி னாலே அவை மென்மையாகி விட்ட இளமுலைகள் என்று சொல்லாமல் பொன்னிறமாகப் பூத்தது என்று தாய் குறிப்பிடுவது, அந்த நிறமாற்றம் அவளுக்கு ஏற்புடைத்தாகவும் தெரியவருகிறது.

பொருகயற்கண் நீரரும்ப: அவனைக் காண்பதற்காகக் காத்திருந்த கண்கள் அவன் வந்தாலும் அவனைக் காண விடாமல் நீரால் நிரம்பிற்று.

'என்புருகி இனவேல் நெடுங்கண்கள் இமை பொருந்தா பல நாளும்' (நாச்சியார் திரு. 5-4) என்றபடி அவளுடைய கயல் மீன்களைப்போன்ற கண்கள் ஒன்றோடொன்று சண்டையிட அதனால் இமைகள் மூடாத கண்கள். அவனது பிரிவுத்துயரினால் நீர் அரும்பி நிற்க.

போந்து: அவன் தானே வந்து மேல் விழும்படியான முலை அழகையும் கண்ணழகையும் உடைய நீ, நீயாக அவன் இருக்குமிடம் தேடிப்போவது சரியில்லை என்று தாய் சொல்லவும், அது அவளுக்குப் பிடிக்காமல் போகவே, தாய் வீட்டை விட்டுவெளியே புறப்பட்டாள்.

நின்று: தாய் வீட்டை விட்டு வெளியே வந்து தனித்து நின்றாள்.

ஆங்கே: அவ்வளவில் அவனுடைய புகழைச் சொல்லி ஆடிப்பாடினாள்.

தண்காலும்; திருத்தண்காவில் வாழ்கின்றவனுடைய குளிர்ந்த தன்மை அந்தத் திருப்பதிக்குப் பேராகிறது. களைப்பை ஆற்றுகின்ற காற்று- களைப்பைப் போக்கும் வடிவையும் உடையவன் வாழ்கின்ற திருப்பதிக்குப் போயிற்று.

தண்குடந்தை நகரும் பாடி: அடியவரோடு முறை கெடக் கிடந்த இடம். சுவாமி அமுது செய்த பிறகு, அவனுடைய அடியவன் உண்பது முறையாயிருக்க ஆராவமுதாழ்வார், தமக்காகச் செய்த பிரசாதத்தைத் திருமழிசைப் பிரானுக்கு அமுது செய்வித்து தாம் அமுது செய்வார். திருமழிசையாரும் இது தகாதது என்று வழக்குப் பேசமாட்டடார். அவள் திருக்குடந்தையைப் பாடுவது அவன் ஆழ்வாருக்கு ஊட்டியதைப் போல் தனக்கும் ஊட்ட மாட்டானோ என்று ஆசைப்பாடு. தண்குடந்தை: திருக் குடந்தை நகரில் கோயில் கொண்டிருக்கும் ஆராவமுதன்

தண் கோவலூர்பாடி: முதலாவார்களோடு மேல் விழுந்து நெருக்கியடித்து (முதல் திருவந்தாதி- 86) கலந்த இடமான திருக்கோவலூர் என்பதால் "அந்த ஆயன் தானே அவள் மீது விழுந்து ஆதரிக்கமாட்டானோ என்ற ஆசையில் திருக்கோவலூரைப் பாடினாள்.

இப்படித் தனக்குக் குளிர்ந்த காற்று போல் இனிதாயிருந்த தண்காலையும், தன்னைப் போல ஆழ்வார்களோடு கலந்த திருக்குடந்தையையும். திருக்கோவலூரையும் நினைத்து, முன்பட்ட துன்பத்தையும் மறந்து, அன்பினால் தூண்டப் பட்டு பாடி,

ஆடி: வாயால் பாடுவது மட்டும் நில்லாமல் உடலாலும் ஆடுவதைக் கேட்டு என்பதையும் கேட்டு என்று சொல்லாகவும் கொள்ளலாம்.

நங்காய்; நிறை மிக்க பெண்ணே!. நான் அவனுடைய உடைமை. என்னை அவன் எப்படி வேண்டுமானாலும் கையாளலாம் என்று நினைக்கும் மன நிறைவு பெற்ற

வளல்லவா நீ. அவனை நினைத்து இப்படி பாடுவதும் ஆடுவதும்

நங்குடிக்கு: நமது குலம் உலகிலுள்ள மற்ற குலத்திற்கு எல்லாம் உயர்ந்த வைணவ குலமல்லவா?

இதுவோ நன்மை: இது நல்லது அல்லவே. நிறைகுடம் தளும்பாது என்று இருக்க வேண்டியவள் இப்படி வாய் விட்டுப் பாடி ஆடலாமோ என்று தாய் சொல்லக் கேட்டும்

நறையூரும் பாடுவாள் நவில்கின்றாளே: அவனைப் பிரிவதால் வரும் ஆற்றாமையை நன்கு அறிந்த வஞ்சுளவல்லித் தாயாரின் முகத்தில் விழிப்பது எப்போது என்கிறார். ''அகலகில்லேன் இறையும் என்று'' (திருவாய் 6-10-10) இருக்கிறவளாகையாலே, அவள் பிரிவுத் துயரை நன்கு அறிவாள். அல்லது நறையூர் நின்ற நம்பியை (பெரிய திரு 4-8-2) நினைத்துக் கூப்பிடுவதாகவும் கொள்ளலாம்.

மடலெடுப்பது போல் இந்த நிலையை இவள் பாடுவதையும் ஆடுவதையும் பார்த்து ஊரார் பழி சொல்வார்களே என்று எல்லாப் பெண்களைப் பெற்ற தாய்மாரைப் போல் இந்தத் தாயும் நினைக்கிறாள்.

பாசுரம்18

கார் வண்ணம் திருமேனி கண்ணும் வாயும்
கைத்தலமு மடியிணையும் கமலவண்ணம்
பார் வண்ண மடமங்கை பத்தர், பித்தர்
பனிமலர் மேற் பாவைக்குப் பாவம் செய்தேன்
ஏர்வண்ண என்பேதை என் சொல் கேளாள்
எம்பெருமான் திருவரங்கம் எங்கே என்னும்
நீர் வண்ணன் நீர்மலைக்கே போவேனென்னும்
இதுவன்றோ நிறையழிந்தார் நிற்கு மாறே.

பதவுரை:

பாவம் செய்தேன் என்: பாவம் செய்தவளாகிய என்னுடைய

ஏர்வண்ண பேதை: அழகிய நிறத்தையுடைய சிறுமி

என் சொல்கேளாள்: தாயாகிய எனது பேச்சை கேட்கிறள்ளில்லை.

திருமேனி கார்வண்ணம் என்னும்: எம்பெரு மானுடைய திருமேனியின் நிறம் கறுத்த மேகத்தின் நிறமுடையது என்கிறாள்.

கண்ணும்: அவரது அழகிய கண்களும்:

வாயும்: திருவாயும்

கைத்தலமும்- அழகிய விரல்களையுடைய கைகளும்

அடியிணையும்: இரண்டு பாதங்களும்

கமல வண்ணம் என்னும்: தாமரையின் நிறத்தை ஒத்திருக்கும்

பார்வண்ண மடமங்கை பத்தர்: அவர் பூதேவிக்கு வசப்பட்டிருப்பவர் என்கிறாள்.

பனிமலர் மேல்பாவைக்குப் பித்தர் என்னும்: குளிர்ந்த செந்தாமரைப் பூவிற்பிறந்த இலக்குமி (ஸ்ரீதேவி) யின் மேல் அடங்காக காதல் கொண்டவர்.

எம்பெருமான் திருவரங்கம் எங்கே என்னும்: என்னைத் தம் வயப்படுத்திச் சென்ற எம்பெருமானுடைய வசிக்கும் இடமான திருவரங்கம் எங்குள்ளது? என்கிறாள்.

நீர் வண்ணன் நீர் மலைக்கே போவேன் என்னும்: நீர்மையுடையவன் எழுந்தருளியிருக்கின்ற திருநீர்மலைக்கு போவேன் என்கிறாள்.

நிறைவு அழிந்தார் நிற்கும் ஆறு இது அன்றோ?: அடக்கமில்லாவதர்கள் இப்படித்தான் இருப்பார்கள் போலும்.

பொழிப்புரை:

பெண்ணே நீ பாடுகின்ற பாட்டும், ஆடுகின்ற ஆட்டமும், நம்மைப் போல நல்ல குலத்தில் பிறந்த பெண்கள் செய்யும் செய்கைகள் அல்ல என்று சொன்னபோது என் பேச்சைக் கேட்காமல் திருநரையூரைப் பாடி ஆடா நின்றாள். இவளை அவள் வழியிலேயே போகவிட்டுதான் பிடிக்க வேண்டும் என்று நினைத்த தாய் உனக்கு என்னதான் வேண்டும் என்று கேட்க. நான் எம்பெருமான் பள்ளி கொண்டிருக்கும் திருவரங்கத்திற்கு செல்வேன் என்றாள் பேதைப் பெண்.

அதைக் கேட்டதாய் அவர் முன்னமே பூதேவி, சீதேவி என்று இரண்டு பிராட்டிகளுக்கு அடிமை யாக இருக்கிறார். அங்கே சென்று என்ன பயன் என்று தாய் சொல்லவும் அப்படி யென்றால் அடியவர்களுக்கு நீர்மை மிக்க திருநீர்மலையில் நின்றான் கிடந்தான் என்று நான்கு நிலைகளிலே எழுந்தருளியிருக்கும் திருநீர்மலைக்குப் போவேன் என்று பெண் சொல்லவும் இதுதான் அடக்கமற்ற பெண்களின் செய்கை போலும் என்று தாயார் வியக்கிறாள்.

விளக்கவுரை:

கார் வண்ணம் திருமேனி: பிரிவுத் துயரத்தைத் தீர்ப்பது திருமேனி என்றதால் மகள் 'ஓம் நமோ நாராயணாய' என்று திருமந்திரத்தில் பிரணவத் திலோ, நமவிலோ, அதிக ஈடுபாடு காட்டாமல் நாராயணாய என்ற சப்தத்தின் பொருளான அவனது திருமேனியில் ஈடுபட்டாள் தலைவி. அதற்குக் காரணம் தன் சரீரமே தான் என்றிருந்த பெண்ணை தனது திவ்யமங்கள ஸ்வரூபத்தைக்காட்டி, அந்த ஈடுபாட்டை நீக்கினான். ஆனால் இப்பொழுது அவளுக்கு அந்தத் திருமேனியின் மீது ஈடுபாடு அதிகமாயிற்று. அதனால்,

கார் வண்ணம் திருமேனி என்று பிரேமை மிகுதியில் கண்டு கொண்டாள். அதனால் தாமான தன்மையில் அவருக்கு அவனது மேனியின் நிறத்தைப் பற்றி இருந்த செயல்பாடுகள் (முன்னை வண்ணம் பாலின் வண்ணம் பெரிய திரு. 4-9-8) (திருவடிவிற் கருநெடுமால் சேயன், திரு நெடு.3) மேனி சூல்கொண்ட கரிய மேகத்தின் நிறத்தை ஒத்திருக்கும் என்றாள்.அது மட்டும் சொன்னால் போதாது என்று

'கண்ணும் வாயும் கைத்தலமும் அடியிணையும் கமலவண்ணம்: என்றாள்' கருமுகில் தாமரைக்காடு பூத்து என்று கம்பன் பாலகாண்டத்தில் வர்ணித்ததைப் போல மேகவர்ணத் திருமேனி முழுதும் தாமரை பூத்தாற் போல என்று இது. ஒரு இல்பொருள் உவமை. மேகத்தில் எங்காவது தாமரை பூக்குமா? அவனுடைய அரவிந்தாட்சன் என்னும் படியான கண்களும், தூது செய் கண்கள் (திருவாய் 9-9-2) 'கள்ளவிழ் தாமரைக்கண் கண்ணனே' திருவாய் 7-8-4) தவறு செய்த ஜீவன்களை அருள்செய்யும் தாமரைக் கண்ணிணை களால் பார்க்கும் பார்வையிலேயே ஆட்கொள்பவை யாகவும்.

வாயும்: உதடுகளிலே உதிரும் புன்னகை யாலே நம் அச்சத்தைத் தவிர்க்கும் அந்த இதழ்களும் தாமரை இதழ்கள் போல் இருப்பதைப் பாடுகிறார்.

கையும்: அணிமிகு தாமரைக் கையை அந்தோ அடிச்சியோம் தலைமிசை நீ யணியாய் என்றும், வருந்தாதே என்று சரணாகதி மந்திரத் (கீதை 18-66)தில் சொன்னது போல் அபய முத்திரை காட்டும் கைகளும் (அடியிணையும்) அடிக்கீழ் வந்து புகுந்து அடியீர் வாழ்மின் என்றென்று அருள் கொடுக்கும் (திருவாய்மொழி 6-10-6) 'படிக்களவாக நிமிர்த்த நின் பாதபங்கயமே தலைக்கணியாய்' (திருவாய் 9-2-2) திருவடித்தாமரைகளே ஆழ்வார்களால் அதிகம் அனுபவிக்கப்பட்டது என்றபடி அடியார்களோடு முதலில் பேசும் கண்கள் அதை உறுதியாக்கும் முறுவலும் உடைமை உடையவன் என்ற உறவு முறையை உணர்ந்த அடியார்களை மேல் விழுந்து அணைக்கும் கையும் அந்த அணைப்புக்குத் தோற்றுவிடும் திருவடிகளும் எல்லாமே தாமரை போன்ற சிவந்த நிறத்தையே உடையன. ஆனால் வாடாத தாமரையை

ஒப்பாகக் கொள்வது. 'கட்டுரைக்கில் தாமரை நின் கண்பாதம் கை ஒவ்வா' (திருவாய் 3-1-2) என்று நம்மாழ்வார் அருளிச்செய்திருந்த போதிலும் பரகால நாயகி இங்கு 'கமலவண்ணம்' என்று நிற உவமையே சொல்வதால் அது ஏற்புடைத்து என்றுங் கொள்ளலாம்.

பார் வண்ண மடமங்கை பத்தர், பனிமலர் மேற் பாவைக்குப் பித்தர்: கடலில் மூழ்கி முத்தெடுப்பவர்கள் போல், வராக வடிவில் கடலில் மூழ்கி பூமியைக் காப் பாற்றியது, அவள்மேல் இருக்கும் அளவு கடந்த அன்பினால் தானே? எம்பெருமானுக்கு பொருத்தமான மங்கைப் பருவத்தை உடைய பூதேவி இப்பொழுது பூமியை சரீரமாகக் கொண்டவள். அவள் தான் எம்பெருமானுக்கு இனியவளாக இருப்பதோடு அந்த பூமியில் வாழ்பவர்களான அடியார்களும் அவனுக்கு இனியவர்களாய் இருப்பார்கள்.

'அடியாரடியார் தம்மடியாரடியார் தமக்கு அடியாரடியார் தம் அடியாரடி யோங்களே'(திருவாய் 3-7-10) எந்தை தந்தை தந்தை தந்தை தம் மூத்தப்பன் ஏழ்படிகால் தொடங்கி வந்து வழிவழி யாட்செய்கின்றோம்' (திருப்பல்லாண்டு-6) 'எந்தை தந்தை தந்தை தந்தை தந்தைக்கும் முந்தை' (திருவாய் 3-3-2)

என்ற ஆழ்வார்கள் அருளிச்செய்தபடி ஏழ்படிகால் தொண்டு செய்து வரும் அடியவர்கள் அவளைப் போல் அவனுக்கு இனியவர்கள்தாமே.

அவள் அவனுக்கு மாணவியாகவும், வேலைக்காரியாகவும் அன்புடையவனாகவும் இருப்பவள் எனக்காக எல்லா உயிர்களுக்கும் எளிய உபாயத்தைச் சொல்லுவாய் என்று அவள்வேண்டிக்கொள்ள,

அஹம் சிஷ்யா சதாஸீ ச பக்தாச புருஷோத்தம
மத்க்ருதே சர்வபூதாநாம் லகூபாயம் வத ப்ரபோ:
(வராக 114-64)

இவள் பெண்மை நலத்தை நினைத்து அவன் காதல் வயப்படும் போது,

'கிடந்திருந்து நின்றளந்து கேழலாய்க் கீழ்ப்புக்கு
இடந்திடும் தன்னுள் சுரக்கும் உமிழும்
தடம்பெரும் தோளாரத் தழுவும் பாரென்னும்
மடந்தையை மால் செய்கின்றமால் ஆர்காண்பாரே?''
(திருவாய் 2-8-7)

பித்தர் பனிமலர்மேல் பாவைக்கு : களைப்பை ஆற்றும் குளிர்ந்த தாமரைப் பூவின் நறுமணமே ஒருவடிவு கொண்டாற் போல் அமர்ந்திருக்கும் இலக்குமிதேவியிடம் மிகவும் மயங்கியிருப்பவர் *(அல்லிமலர் மகள் போக மயக்குகள் ஆகியும்நிற்கும் அம்மான்' (திருவாய் 3-10-8)*

அப்படி அவன் அனுபவிக்க முடியாமல் தத்தளிக்கும் படியான இனிமை, மலர்மகளிடம் இருக்கும் போது மண் மகளிடம், இவன் படும் பாடும் அவனுடையத் தலைமைத் தகவிற்குத் தகுந்ததே என்கிறார்.

பாவம் செய்தேன்: இவளுடைய நிலையைக் காண்ப வர்கள் அது அவளுக்கு சிறப்பையே கொடுக்கும் என்று சொன்னாலும், தாயானவள் 'நான் செய்த பாவங்கள்தான் இவளுடைய இந்த நிறையழிந்த நிலைமைக்குக் காரணம் என்று அழுகிறாள். இதற்குக் காரணம்,

ஏர்வண்ண என்பேதை என் சொல் கேளாள்: அதனால் தான் அழகிய ஒற்றுமுள்ள நிறத்தையுடைய என்னுடைய பேதைப்

பெண் (நல்லது தீயது அறியாத சிறுமி) மழை வண்ணனாகிய அவனிடம் ஈடுபட்டு பாடுபடுகின்றாள். அவன் படவேண்டிய பாட்டை இவள் படுகிறாள் என்ன என்றாலும், அவன் உடையவன், இவள் உடைமை தானே. ஒருத்தி பூவில் பிறந்தவள் மற்றொருத்தி மண்ணை உடலாகக் கொண்டவள். என்னுடைய பெண்தான் நல்ல குலத்திலே பிறந்தவள் என்ற சிறப்பு இருக்கும் போது மூவரில் இவள்தானே சிறந்தவள்.

என்சொல் கேளாள் : உனக்குப் பிறந்தவள் என்றால் உன் பேச்சைக் கேட்காமல் அல்லவா இருக்கிறாள்? நீ அவளை அடக்க வேண்டாமா என்று மற்றவர்கள் கேட்க "நீ அவளுக்காகக் காத்திருக்க வேண்டுமே தவிர அவனை அடைவதில் வேகங் காட்டக் கூடாது' அவனேதான் உபாயம் அவனுக்கு உன்னை எப்போது ஆட்கொள்ள வேண்டும் என்று தெரியும் என்று தாய் சொன்ன சொல்லை அந்தக் காதல் வயப்பட்ட சிறுமி கேட்காமல்,

எம்பெருமான் திருவரங்கம் எங்கே என்னும் : அவன் துயில் கொண்டிருக்கும் படியான திருவரங்கம் எங்கே இருக்கிறது? என்று கேட்கிறாள். 11 வது பாசுரத்திலும் திருவரங்கம் எங்கே என்று கேட்டாள் அல்லவா. அதையே திருப்பிக்கேட்கிறாள்.

நீர்வண்ணன் நீர்மலைக்கே போவேன் என்னும்: இவள் பிறந்த திருக்குறையலூர் தெற்கே இருக்க, திருவரங்கம் அதற்கும் தென் மேற்காக இருக்க, இவள் வடக்கேயிருக்கும் திருநீர்மலைக்குப் போவேன் என்று சொல்வது இவளுக்குத் திசைகளைப் பற்றிக் கவலையில்லை. திவ்ய தேசங்களை நிமித்தமாகக் கொண்டு பூலோக வைகுண்டமாகிய திருவரங்கத்தை அடைவேன் என்கிறாள்.

எங்கே நீர்மை இருக்கிறதோ, அங்கே அவன் நீர்வண்ணனாக நீர்மையுடன் இருப்பதைக் கேட்டு, அவன் வழியே திருவரங் கத்தை அடையலாம் என்று எண்ணுகிறாள்.

இதுவன்றோ நிறை அழிந்தார் நிற்குமாறு: தன் நிலை இழிந்தவர்கள் தாம் என்ன சொல்கிறோம், என்ன செய் கிறோம் என்று அறியாத ஒரு குழப்ப நிலையில் இருப்பார்கள். அங்கு வேகம் உண்டே தவிர விவேகம் இருக்காது. திருவரங்கம் இரண்டு ஆறுகளின் நடுவில் இருக்கிறது. இந்தப் பேதைப்பெண் ஆற்றிலே கெடுத்துக் குளத்தில் தேடுகிறாள். இதுவன்றோ நிறையழிந்தவர்கள் நிற்கும் நிலை? என்று பிள்ளை அருளிச் செய்தார். இவள் நிறையழிந்தாலொழிய அவன் அவளை ஆட்கொள்ள மாட்டான். அதனால் பெறப்போகிற பேற்றுக்குத் தக்கவாறு தங்களுடைய தன்மை களை மாற்றிக் கொள்ள வேண்டும் என்பது ஆழ்வார்களின் மற்றும் கோதைநாச்சியாருடைய நிலைப்பாடு.

பாசுரம் 19

முற்றாரா வன முலையாள் பாவை மாயன்
மொய்யகலத் துள்ளிருப்பாளஃதும் கண்டும்
அற்றாள் தன் நிறை அழிந்தாள் ஆவிக்கின்றாள்
அணி அரங்கம் ஆடுதுமோ ?தோழீ; என்னும்
பெற்றேன் வாய்ச்சொல் இறையும் பேசக்கேளாள்
பேர்பாடித் தண்குடந்தை நகரும்பாடி
பொற்றாமரைக் கயம் நீராடப் போனாள்
பொருவற்றாள் என்மகள் உம் பொன்னும்அஃதே

பதவுரை:

பொரு அற்றாள் எம் மகள்: *யாருடனும் ஒப்பிடமுடியாத அழகுடைய என் பெண்.*

முற்று ஆராவன முலையாள்: *முற்றும் வளராத இளமுலைகளை உடையாள்.*

பாவை : இயல்பான பெண்மை உடையவளான பெரிய *பிராட்டியார்*

மாயன்: *அற்புதமான எம்பெருமான் உடைய*

மொய் அகலத்துள் இருப்பாள் அஃதும் கண்டும்: *அழகிய திருமார்பினுள் அடங்கி வாழ்வதைக் கண்டும்*

அற்றாள்: *அவனுக்கே அற்றுத் தீர்த்தாள்*

தன் நிறைவு அழிந்தாள்: தனக்கு வித்தான நிறை குணங்களான அச்சம், மடம், நாணம்,பயிர்ப்பு ஆகிய நாற்குணங்களையும் விட்டொழிந்தாள்.

ஆவிக்கின்றாள்; பெருமூச்சு விடுகிறாள்

தோழீ, அணி அரங்கம் ஆடுதுமோ என்னும்: திருவரங்கநகர் சென்று அங்கு நீராடுவோமா தோழி என்றாள்.

வாய்ச்சொல்பேச: பெற்றவளாகிய நான் சொல்லும் நல்ல வார்த்தைகளை

இறையும் கேளாள்: கொஞ்சமும் கேட்ப தில்லை.

பேர்பாடி :- திருப்பேர் நகரையும்

தண்குடந்தை நகரும் பாடி: குளிர்ந்த திருக்குடந்தையில் பள்ளி கொண்டிருக்கும் ஆராவமுதனைப் பாடியும்

பொற்றாமரைக் கயம்: அங்குள்ள திருப்பொற்றாமரைத் தடாகத்தில்

நீர் ஆட: குடைந்து நீர் ஆடுவதற்கு

போனாள் : எழுந்து சென்றாள்

உம்பொன்னும் . அஃதே: உம்முடைய பெண்களும் இவ்வண்ணமா இருக்கின்றார்கள் என்று தாய் கேட்கின்றாள்.

பொழிப்புரை:

தாயின் ஆற்றாமை இந்தப் பாடலிலும் தொடர்கிறது. தன் நிறை அழிந்தவர்கள் தன் பெண்ணைப் போல் தான் இருப்பார்கள் என்று திருத்தாய் தன்னைத் தேற்றிக் கொள்கிறாள். தன் ஆசைப்பெண் வயப்பட்டிருப்பது முன்பே பெரிய பிராட்டியிடம் ஈடுபட்டிருப்பவன் என்று

உன் மகளுக்குத் தெரியாதா என்று மற்றவர்கள் கேட்க. 'நான் சொல்லி விட்டேன். ஆனால், அதுவும் எதிர்மாறான பலனையே கொடுத்தது. திருமகள் கேள்வன் என்ற காரணத்திற்காகவே அவனிருக்கும் இடம் தேடிப் போனாள் என்கிறாள் திருத்தாயார்.

விளக்க உரை:

முற்று ஆராவனமுலையாள்: இந்தப் பெண், தாய்மடியிலே தூங்கிப் பழக்கப்பட்ட பேதைப் பெண். தன் உடல் வளர்ச்சி கூட அவளுக்குப் புதுமையாக இருக்கின்ற ஒரு நிலையில், அவளது முலைகள் இப்பொழுது தான் வளரத் தொடங்கி யிருக்கின்றன. அதற்கும் ஒரு வனப்பு உண்டு. அதை அந்த வாலிபப் பருவத்திலே இருக்கும் எம்பெருமானை அவளிடம் ஈடுபடச் செய்கிறது. எம் பெருமானின் பருவமும் பிராட்டியின் பருவமும் என்றும் அதே நிலையில் இருக்கும் என்ற காரணத்தில் ஒத்த பருவத்தையுடைய பெண்ணின் மீது எம்பெருமானுக்கு ஈடுபாடு வந்தது.

வனமுலையாள்: அழகியமுலைகளை உடைய பெண். பெண்களுக்கு முலைகள் தானே அழகு. முலையிரண்டும் இல்லாத பெண் மீது யார் காதல் கொள்வார்கள்? பெண்களின் வயதிற்கு ஒரு அளவு என்றதைப் போல, இந்தப் பெண் பொதும்பையிலிருந்து மங்கைப் பருவத்தைத் தொட்டுள்ள பெண் என்பதை ஆழ்வார் (முற்று ஆரா வனமுலை) வனப்பு எழுந்த முலை காண்பவரைக் கவர்கின்றமுலையை உடையவள் என்றார். அதே வயதில் இருக்கும் எம்பெருமானுக்கு இவளிடமும் இவளுக்கு அவரிடமும் ஈர்ப்பு வருவது இயற்கை தானே. பேயாழ்வாரும் 'மலராள் தனத்துள்ளான்' (மூன். திரு-3) என்றல்லவா அருளிச் செய்கிறார்.

மாயன்- திருமாலாகிய விஷ்ணுவின்

மொய்யகலத்துள்ளிருப்பாள்: அகன்ற மார்பின் உள்ளே அடங்கியிருப்பாள். "அகலகில்லேர் இறையும் என்று" (திருவாய்6-10-10) சிறு நேரம் கூட அவனை விட்டுப் பிரியாதவளாய் நப்பின்னை பிராட்டியும் கூட (திருப்பாவை- 19) (எத்தனையேலும் பிரிவாற்ற கில்லாயால்) அவனைப் பிரியாது, அவன் கூடவே இருப்பவர்களை அவன் மார்பில் கொண்டிருப்பது தானே அவனுக்கும் சிறப்பு. "திருவில்லாத் தேவரைத் தேறேன்மின் தேவு"(நான்.திரு.52) என்று திருமழிசைப்பிரானும் அருளினார். அப்படிப்பட்ட, அகலாமல் திருமகள் அமர்ந்திருக்கின்ற, அகண்ட மார்பினை உடைய பெருமானிடம், மற்றொருத்தி ஆசைப்பட்டு எந்தப் பயனும் இல்லை.

அஃதும் கண்டு மற்றாள்: என்று தாய் சொல்லியும் கேளாமல் மாறாக அவனிடம் மிகுதியாக ஈடுபாடு கொண்டாள் என் மகள்.இது இப்பொழுதும் பார்க்கிறோம். எவனுடைய மனைவி மிக அழகாக இருக்கிறாளோ அவன் அத்தனை அழகில்லாதவனாக இருந்தாலும், மற்ற பெண்கள் அவன் மேல் விழுந்து பேசுவது இன்றும் வழக்கமாக உள்ளது. இவனோ அழகானவன். அழகிய மனைவியையும் மார்பிலேயே கொண்டவன் என்றால், மற்ற பெண்கள் அவனிடம் ஈடுபாடுகொண்டு பழகுவது அவர்கள் இருவருக்குமே புதிய ஒன்றல்ல.

உள்ளிருப்பாள்: திருமகள் அவனது திருமேனிக்கு அழகு சேர்ப்பது மட்டுமன்றி எம்பெருமானுடைய திவ்யாத்ம ஸ்வரூபத்திற்கும் நிரூபணமாய் இருப்பவள் ஸ்ரீதேவி. அவனுக்கு கைங்கர்யம் செய்யும் போதும் அவனது

ஸ்வருபத்தை அனுபவிக்கும் போதும் புருஷகாரமான இவளை முன்னிட்டுக்கொண்டே, இவளோடு கூடியிருக்கும் சேர்த்தியிலேயே கைங்கர்யம் செய்ய வேண்டும். (அஃதும் கண்டு மற்றாள்) 'ஸ்ரீதேவி பிராட்டியும் எம் பெருமானும் ஒருவர் மேல் மற்றவர் மையல் கொண்டு பித்தேறி இருப்பவர் அதனால் நீ அவனிடம் ஆசைப்பட்டு பயனில்லை' என்று தாய் சொல்ல, அவள் எண்ணியபடியே அவனைக்கை விடாமல் அவனிடம் அதிக ஈடுபாடு கொண்டாள்.

ஆனால் பிராட்டியும் எம்பெருமானும் அடியார்களின் குற்றங்களையே குணமாகக் கொள்ளும் தன்மை உடைய வர்கள் என்பதினால் ''குன்றனைய குற்றம் செய்யினும் குணங்கொள்ளும்'' (முதல் திருவ. 41) அவர்கள் இருவரும் தாய் தந்தையைப் போன்றவர்கள். ஆனாலும், இவள் அவர்கள் இருவருடைய தன்மையையும் கண்டு அவர்கள் இருவருக்கும் சேர்ந்து ஆட்பட்டாள்.

தன்னடியார் திறத்தகத்துத் தாமரையாளாகிலும் சிதகுரைக்கு மேல் என்னடியார் அது செய்யார், செய்தாரேல் நன்று செய்தார் என்பர் போலும் (பெரியாழ் திரு. 4-9-2) என் திருமகள் சேர் மார்வனே என்னும் என்னுடை ஆவியே என்னும் (திருவாய் (7 -2-9)) என்றாள் அல்லவா பராங்குச நாயகி.

தன் நிறை அழிந்தாள்: தாய்க்கூற்று தொடர்கிறது. பிராட்டி எம்பெருமானுடைய சேர்த்திக்குத் தன்னை உள்ளாட் படுத்திக்கொண்ட தலைவி. தன்னுடைய தனித் தன்மையான பெண்மையையும் இழந்தாள். அவள் தன்னுடைய நிறை அழிந்தது. ஒருகடல் நீர் வற்றியதைப் போல இருந்தது. அது எப்படி எனக்குத் தெரியுமென்றால்,

ஆவிக்கின்றாள்: நெடுமுச்சு விடுகிறாள். இவளுடைய நிலைமை கண்டு அவளுடைய தோழி அவளுடைய உதவிக்கு வந்தாள். தாய் சொல்லமுடியாத ஆறுதலை, நாயகன் முகங்காட்டவில்லை யென்றாலும் தன்னுடைய ஆற்றாமையே அவனைப் பெறுவதற்கான உபாயம் என்றிற்கு.

அணி அரங்கம் ஆடுதுமோ? தோழீ; என்னும்: ஓ தோழி, நாம் திருவரங்கம் பெரிய கோயிலுக்குப் போய் அனுபவிக்கலாம் வா' என்று தோழியைக் கூப்பிட்டாள்

ஆடுதும்: என்று பொய்கையில் சென்று நீராடுவது போல் ஆடுவதும் என்று ஏன் சொல்கிறாள் என்றால். அவளைப் பிரிந்து பிரிவுத்துன்பத்தில் வருந்துகிறவர் களுடைய உடல் வெப்பம், திருவரங்கம் சென்றவுடன் ஏதோ பொய்கையில் நீராடியதைப் போல் தீர்ந்து விடும் என்பதற்காக அணியரங்கம் ஆடுதுமோ என்றாள்.

பெற்றேன் வாய்ச்சொல் இறையும் பேசக்கேளாள்: இவளைப் பெற்ற தாயாகிய நான் சொல்லும் இனிய சொற்களைக் கொஞ்சம் கூட கேட்க மறுக்கிறாள். நாயகனுடைய நினைவே அவளுக்கு இனிக்கிறது. தோழி சொன்ன வார்த்தை யையும் கேட்கிறாள். நான் தான் அவளுக்கு வேண்டாத வளாகி விட்டேன் என்று தாய் அங்கலாய்க்கிறாள்.

பேர்பாடி தண்குடந்தை நகரும் பாடி; சென்ற பாசுரத்தில் திருவரங்கத்திற்கு திருநீர்மலை வழியாக செல்ல முற்பட்டவள் இந்தப் பாசுரத்தில் திருவரங்கத்திற்கு செல்லும் வழியிலுள்ள திருக்குடந்தையைத் தரிசித்து திருவரங்கம் செல்லாமல், முதலில் திருப்பேர் நகருக்குச் சென்று பிறகு

திருக்குடந்தை வழியாகத் திருவரங்கம் செல்லலாம் என்று சொல்கிறாள்.

இதுவன்றோ நிறையழிந்தார் நின்றவாறே: என்று முன்னுக்குப் பின் முரண் வைத்துப் பேசுகிறாள்.

பொற்றாமரைக்கயம் நீராடப் போனாள்: சுனையாடல், நீராடல் என்று நாயகன் நாயகி வழிகளாகச் சொல்லப் பட்டுள்ளபடி நாயகனோடு சேர்ந்து அனுபவிக்கச் சென்றாள். 'போனாள்' என்று கண்முன் நிற்கும் பெண்ணை எப்படிச் சொன்னாள் என்றால் அவள் உடல்தான் இங்கிருக்கிறது. மனம் தயரதன் பெற்ற மரகத மணித்தடம் *(திருவாய் 10-1-8)* என்றும் வாசத்தடம் போல் வருவானே என்றும் *(திருவாய் 8-5-1)* பெரிய பெருமாளை ஒரு தடாகம் என்று நம்மாழ்வார் சொல்வதினாலே பொற்றா மரைக்கயம் நீராடப்போனாள், திருவரங்கத்துப் பெரிய பெருமாள் என்னும் தடாகத்தில், அவன் நினைவில் மூழ்கி விட்டாள். அவள் உடல்தான் இங்கு இருக்கிறது.

பொருவற்றாள் என் மகள்: ஒப்பில்லாதவள் என்மகள் ''பின்னை கொல் நிலமாமகள் கொல், திருமகள் கொல் பிறந்திட்டாள்'' *(திருவாய் 6-5-10)* இவளுக்கும் மலர்மகள் நிலமகள், நீளாதேவி ஆகிய மூவரும் ஒன்று சேர்ந்தால் கூட இவள் அழகிற்கு ஒப்பாகமாட்டார்கள்.

உம் பொன்னும் அஃதே: உங்கள் வயிற்றிற் பிறந்த பெண்களும் இப்படித்தான் இருக்கிறார்களா என்ற மற்ற தாய்களைக் கேட்கின்றாள்.

மற்றை ஆழ்வார்களும் என்னைப் போல்தான் அவதிப் பட்டார்களா என்று ஆழ்வார் கேட்பது, விபவாதாரமான

கிருஷ்ணாவதாரத்தை (திருவாய் 1-3-1) மத்துறு கடை வெண்ணெய் களவினில் உரலிடை யாப்புண்டு என்று பராங்குச நாயகி மயங்கினாள். இவர் அர்ச்சாவதாரமாக திருவரங்கத்தை நினைத்து மயங்குகிறார். அதனால் அவளும் இவளுக்கு ஒப்பாக மாட்டாள்.

பாசுரம் 20

தேராளும் வாளரக்கன் செல்வம் மாளத்
தென்னிலங்கை முன் மலங்க செந்தீ ஒல்கி
போராளன் ஆயிரந்தோள் வாணன் மாளப்
பொருகடலை அரண்கடந்து புக்குமிக்க
பாராளன் பாரிடந்து பாரையுண்டு
பாருமிழந்து பாரளந்து பாரையாண்ட
பேராளன் பேரோதும் பெண்ணை மண் மேல்
பெருந்தவத்தள் என்றல்லால் பேசலாமே.

பதவுரை:

முன்: முன்பொருநாள்,

தேர் ஆளும் வாள் அரக்கன் : தேர்ப்படை உள்ளவனும் வாள் சண்டையில் வல்லவனுமாகிய இராவணனுடைய

செல்வம்மாள: செல்வமனைத்தும் அழிந்து போகவும்.

தென் இலங்கை மலங்க: அவனது தென் இலங்காபுரி கலங்கவும்.

செம் தீ ஒல்கி: சிவந்த நெருப்பாலே கொளுத்தி அதுவன்றியும்

போர் ஆளன்: சிறந்தபோர்வீரனாகிய

ஆயிரம் தோள்: ஆயிரம் தோள்களையுடைய

வாணன்: பாணாசுரன்

மாள: தோல்வியடைந்து ஓடும்படி செய்வதற்கு

பொரு கடலை அரண் கடந்து: அலை எறிகின்ற கடலாகிற கோட்டையைக் கடந்து

புக்கு: பாணபுரத்திற்குள் புகுந்து,

மிக்க: வீரலக்ஷ்மி மிகப்பெற்றவனும்

பார் ஆளன்: பூமியை ஆள்பவனும்

பார் இடந்து: வராக அவதாரத்தில், பூமியைத் தன் கொம்பால் குத்தி எடுத்து

பாரையுண்டு: பிரளய காலத்தில் உலகத்தைத் தன் வயிற்றில் வைத்துக் காப்பவனும்.

பார் உமிழ்ந்து: பிரளயம் முடிந்த உடன் அந்த பூமியைத் தன் வாய் வழியாக வெளிப்படுத்தி

பார் அளந்து: திரிவிக்ரமாவதாரத்தில் பூமியை ஓரடியில் அளந்தவனும் ஆக இப்படியெல்லாம்

பாரையாண்ட: பூமியைக் காப்பாற்றுபவனும் ஆன

பேர் ஆளன்: பெருமை பொருந்திய ஆயிரம் பேர்களுடைய எம்பெருமானுடைய

பேர் ஓதும் : திருநாமங்களை இடைவிடாமற் சொல்லும் **பெண்ணை;-** இப்பெண் பிள்ளையை

மண்மேல் பெருந்தவத்தள் என்று அல்லால் பேசலாமே: இந்நில உலகத்தில் பெரும் பாக்கியத்தைப் பெற்றவள் என்று சொல்லலாமே தவிர வேறு சொல்லப்போமோ.

பொழிப்புரை:

இந்தப் பாசுரம் தாய்க்கூற்றின் கடைசிப் பாசுரமாக அமைக்கப்படுள்ளது. சென்ற பாசுரத்தில், தாய் தன்னுடைய பெண் எம்பெருமான் திருமகளை மார்பில் எப்பொழுதும் வைத்திருக்கிறான் என்று தெரிந்தும், அதைப் பற்றிக் கவலைப் படாமல் தோழியுடன் திருவரங்கம் செல்வோம் என்றும்,பொய்கையில் நீராடலாம் என்று கிளம்பி நேராகப் போகாமால், திருப்பேர் நகர் சென்று அப்புறம் திருக்குடந்தை வழியாக செல்கின்ற நேரத்தில் எம்பெருமான் பல அவதாரங்கள், பல நேரங்களில் செய்த லீலைகளைப் பற்றிப் பாடிக்கொண்டு, அவனுடைய நாமங்களை இடைவிடாமல் சொல்லிக்கொண்டிருக்கிறாள். இவளை அதிபாக்யவதி என்று சொல்லலாமே தவிர யாரையும் இவளுக்கு ஒப்பிட்டு சொல்ல முடியாத அளவிற்கு இவள் எம்பெருமானிடம் ஈடுபட்ட வளாக இருக்கிறாள் என்கிறாள் தாய்.

விளக்கஉரை:

தேராளும் வாளரக்கன் செல்வம்:இராவணன் மதிள் சூழ்ந்த இலங்கைக்கு உரியவன். அவனிடம் எத்தனையோ தேர்கள் இருந்தன. தேர்கள் என்றுசொல்லும் போது ரத, கஜ, துரக, பதாதி என்று தேர்ப்படை,யானைப்படை, குதிரைப் படை, காலாட்படை என்ற நால்வகைப் படைகளையும் தன்னுடைய படையிலே கொண்ட இராவணனை வாள் அரக்கன் என்றது அவன் கையில் ஒளி பொருந்திய வாள் இருந்தது. அந்த வாளைக் கொண்டு இந்திரன் முதலான தேவர்களைப் புறமுதுகிட்டு ஓடச்செய்தவன். ஒளி பொருந்திய அரக்கன் என்றும் பொருள் உண்டு. இலங்கையின் அழகை சிறிய திருவடியின் சொல்லாகக் கம்பர்.

மரம் அடங்கலும் கற்பகம்; மனை எலாம் கனகம்;
அரமடந்தையர் சிலதியர், அரக்கியர்க்கு; அமரர்
உரம் மடங்கி வந்து உழையராய் உழல்குவர்; ஒருவர்
தரம் அடங்குவது அன்று இது; தவம் செய்த தவமால்.
(கம்ப இராமாயணம் ஊர் தேடுபடலம் -9)

மரங்கள் அத்தனையும் அழகு மிகு கற்பக மரங்கள் மாளிகைகள் அனைத்தும் பொன்கொண்டுவேயப்பட்டவை இங்குள்ள அரக்கியர்களுக்குப் பணிப்பெண்கள் யாவருமே தேவலோகத்துப் பெண்கள்தாம்.தேவர்கள் அரக்கர் களுக்குப் பணியாளர்களாக வேலை செய்தனர். இதெல்லாம் இராவணன் செய்த தவ வலிமையால் வந்தது என்று கூறுகிறார் கம்பர்.

மாள-மாண்டு போகும்படி.

தென்னிலங்கை: கடலை அரணாகக் கொண்ட இலங்கை, அதன் பெரிய மதில்கள், அகழிகள் என்று எதிரிகளால் வெல்லமுடியாத இலங்கை

முன் மலங்க: இராவணனின் கண் முன்னமே அவனைச் சேர்ந்தவர்கள் சுற்றத்தையும் உடைமைகளையும் இழந்து நின்றார்கள்.

செந்தீ ஒல்கி: அனுமனின் வாலில் இடப்பட்ட தீ, அதற்கு முன் இராவணனுக்குப் பணி செய்து வெளுத்துப் போன அக்னி அனுமனின் வாலைத் துணைகொண்டு,

'நீலநிற நிருதர் யாண்டும் நெய்பொழி வேள்வி நீக்க,
பால் வரு பசியன் அன்பான் மாருதி வாலைப்பற்றி,
ஆலம்உண்டவன்நன்றுஊட்ட, உலகு எலாம் அழிவின் உண்ணும்

காலமே என்ன மன்னோ. கனலியும், கடிதின் உண்டான்''
(கம்பஇரா.பிணிவீட்டும்படலம். 138)

தன்னுடைய சிவப்பு நிறத்தைப்பெற்று இலங்கையை அழித்தது.

போராளன்:- இப்பொழுது வாணாசுரனின் கதை சொல்லப்படுகிறது. வாணாசுரனுக்கு ஆயிரம் கைகள் இருந்தும் அதற்குத் தகுந்த வேலை கொடுக்க முடியாமல் தான் சரணடைந்த உருத்திரனை அடைந்து நான் இவ்வளவு தோள்களைச் சுமந்து திரிந்து என்ன பயன் என்னுடைய பலத்துக்குத் தக்க எதிரியைக் காட்டித் தர வேண்டும் எண்ணவும்.

ஆயிரந்தோள்: இவனிடம் ஆயிரம் கைகள் இருந்தும் அகம்பாவத்தால் இருகைகளால் கூட எம்பெருமானைத் தொழவில்லை. அதனால் அவனது இருகரங்களைத் தவிர மற்ற 998 கரங்களை எம்பெருமான், அவனுடைய அலைகள் எழும்படியான கடலை நாற் புறமும் அரணாகக் கொண்ட பாணபுரத்தை எரித்து, அவனுக்காகப் போரிட்ட உருத்திரனையும் புறமுதுகு காட்டி ஓடும்படி, எம்பெருமான் செய்தார். இந்தக்கதை ஏழாம் பாசுரத்தில் சொல்லப்பட்டது.

பாரிடந்து: இரண்யாட்சகன் என்றும் அரக்கன் பூமியை தூக்கிக் கொண்டு பாதாளத்தில் சிறைவைக்க எம்பெருமான் பெரிய வராக உருவை எடுத்து பூமியை மேலெடுத்து வந்து பூமியை எதிரிகளிடமிருந்துக் காப்பாற்றிய விருத்தாந்தத்தைச் சொல்கிறார்.

பாரையுண்டு: பிரளய காலத்தில் பூமி பிரளயத் தண்ணீரில் முழ்கி விடாமல் அதனைத் தன் வயிற்றில் வைத்துக் காப்பாற்றினான்.

பாரையுண்டு: கிருஷ்ணாவதார காலத்தில், குழந்தையாக மண்ணை உண்டு பிறகு தன்னுடைய தாய் யசோதைக்கு எல்லா உலகத்தையும் தன் வாயில் இருப்பதைக் காட்டினான்.

பாருமிழ்ந்து; தம்முடைய பாதுகாப்புத் தேவை இல்லாத காலத்தில் மறுபடியும் பூமியை உமிழ்ந்து,

பாரளந்து: மாவலிச் சக்ரவர்த்தி எல்லா உலகங்களையும் தன் வலிமையால் வென்று இந்திரனுடைய இந்திர பதவிக்கும் ஆபத்து விளைவித்த காலத்தில், மாணிக்குறள னாகச் சென்று பலி நடத்திய வேள்வியில் அவனிடம் 3 அடி மண்ணை யாசித்து, அவன் கொடுத்தேன் என்று சொன்ன உடனே திருவிக்ரமாவதாரம் எடுத்து ஓரடியில் பூலோகம் முழுதும் அளந்து மற்ற திருவடியை பிரமலோகம் வரைக்கும் அனுப்பி அப்படி செய்கின்ற போது எல்லார் தலையிலும் தம் திருவடி படும்படி தானே சுவாமி என்று நிருபணம் செய்து ஆழ்வாரே மங்களாசாசனம் செய்தது போல் 'ஒரு குறளாய் இருநிலம் மூவடி மண்வேண்டி உலகனைத்தும் ஈரடியால் ஒடுக்கி ஒன்றும் தருகவெனா மாவலியைச் சிறையில் வைத்த தாடாளன்' என்றபடியாக பூமியை அளந்து

பாரை ஆண்ட: நம்மாழ்வார் "தானே படைத்திடந்து தானே உண்டுமிழ்ந்து தானே ஆள்வானே" (திருவாய்) என்றபடி தானே எல்லா உலகத்திற்கும் தலைவனாக இருப்பவனாகி.

பேராளன்: எண்ணிறந்த திருநாமங்களை உடையவன். பேராயிரமுடைய பீடுடையன் (திருவாய்)

பேரோதும் பெண்ணை : இப்படி எம்பெருமானுடைய திருநாமங்களை விடாமல் சொல்வதையே பொழுது போக் காகக் கொண்ட பரகால நாயகியை.

மண்மேல் பெருந்தவத்தள் என்றல்லாற் பேசலாம்: நித்ய சூரிகள் கூட்டத்திலிருந்து பிரிந்து வந்தவள் இவள் என்று பொருள் கொள்ளலாமே தவிர வேறு பேச முடியுமா. அல்லது மண்மேல் பெருந்தவத்தள் பூமியிலிருந்து நித்ய சூரிகள் போல் செயல்படுபவள் இவள் என்பது தவிர இவளை வேறு எந்தப் பெயராலும் அழைக்க முடியாது. இப்படி வேண்டு மானால், *"சிதனையே தொழுவார். விண்ணுளாரிலும் சீரியர் (திருவிருத்தம் 79)* என்று நம்மாழ்வார் அருளிச் செய்தபடி இந்தப் பெண் நித்ய சூரிகளை விடச் சிறந்தவள் என்று வேண்டுமானால் சொல்லலாம்.

பாசுரம் 21

மைவண்ண நறுங்குஞ்சி குழல் பின்தாழ
மகரம் சேர் குழை இருபாடு இலங்கியாட
எய்வண்ண வெஞ்சிலையே துணையா இங்கே
இருவராய் வந்தார் என் முன்னே நின்றார்
கைவண்ணம் தாமரை வாய் கமலம் போலும்
கண்ணிணையும் அரவிந்தம் அடியும் அஃதே
அவ்வண்ணத்து அவர் நிலைமை கண்டுந் தோழீ!
அவரை நாம் தேவரென்று அஞ்சினோமே.

பதஉரை:

மைவண்ண நறுங்குஞ்சி குழல் பின்தாழ: *கறுத்த நிறமுடையதாய் நறுமணம் மிக்கதாய் அலகலகாய் பிரிந்திருக்கும் சுருண்ட திருக்குழற் கற்றையானது பின்னே அலையவும்*

இருபாடு; *இரண்டு பக்கங்களிலும்*

மகரம் சேர்குழை: *காதிலுள்ள மகர குண்டலங்கள்*

இலங்கி ஆட: *பார்ப்பவர் கண்கவரும் ஒளியுடன் அசையவும்*

எய்வண்ணம் வெம் சிலையே துணை ஆ: *அம்புமழை பெய்வதை இயல்பாக உடைய வெம்மையுடைய வில்லையே*

துணையாகக் கொண்டு இங்கே; இந்தத் திருமணங் கொல்லையிலே

இருவர் ஆய் வந்தார்: தாமும் தம்மை எப்பொழுதும் பிரியாத இளையபெருமாளுமாக இருவராய் வந்து

என் முன்னே நின்றார்: என்னெதிரே நின்றார்.

கைவண்ணம் தாமரை: அவருடைய கை திருக்கைகள் தாமரைவண்ணம் செந்தாமரைப்பூ போலழகுடையவை.

வாய்- பவளவாயும்

கமலம் போலும்: தாமரையை ஒக்கும்

கண் இணையும்: இரண்டு கண்களும்

அரவிந்தம்: தாமரை போன்றவையே.

அடியும் அஃதே: இரு திருவடிகளும் அந்தத் தாமரையே.

அவ்வண்ணத்தவர்: அப்படிப்பட்ட அழகுடைய அவரது நிலைமை;நிலைமையைக்

கண்டும்; கண்டு வைத்தும்

தோழீ: எனது அருமைத் தோழியே

அவரை: அவரைக்குறித்து

நாம்: நான்

தேவர் என்று அஞ்சினோமே; பரதேவதை என்ற நினைவாலே பயந்தேனே.

பொழிப்புரை:

மச்சித்தா: மத்கதப்ராணா: போதயந்த பரஸ்பரம் என்ற கீதா வாக்கியத்தில் முதல் பதத்திற்கு திருநெடுந்

தாண்டகத்தின் முதல் பத்துப் பாசுரங்களும், இரண்டாவது பதமான 'மதகதப்ராணா' வின் விளக்கமாக 11 லிருந்து 20 வரை உள்ள பாசுரங்கள் விவரணமாக இருக்க போதயந்த பரஸ்பரம் என்ற முன்றாவது பதத்தின் விளக்கமாகத் தலை மகளின் பாசுரங்கள் (21-30) இருக்கின்றன என்று முன்பே குறிப்பிட்டோம். இதைப்பற்றிய விளக்கம் இந்நூலின் கடைசி பகுதியாக தனியே மற்ற பிரிவுகளுடன் சேர்த்துத் தரப்பட்டிருக்கிறது.

முதல்பத்துப் பாசுரங்கள் பராசரர், வியாசர் போன்றயதிகள் நெஞ்சில் எம்பெருமானை வைத்துப் பேசுவது போல் ஞானத்தில் சொல்லப்பட்ட ஆழ்வார் தாமான தன்மையில் சொன்ன பாசுரங்கள். நடுப்பத்துப் பாசுரங்கள் ஆழ்வார்களின் அநுபவத்தை எம்பெருமானோடு கூடியிருக்கும் போது இன்பத்தையும் பிரிந்தால் துன்பத்தையும் அனுபவிக்கின்ற தன்மை சொல்லப்பட்டது.

மூன்றாவது பத்து பாசுரங்கள், சீதை போன்ற பிராட்டி மார்களின் அனுபவத்தைச் சொல்வது போலிருக்கின்றன. சென்ற இருபதாவது பாசுரத்தில் 'பேரோதும் என் பெண் பெருந்தவத்தள்' என்று சொல்லித் தாயும், அவளுடைய பிரிவாற்றாமையில் திருப்தி அடைந்த எம்பெருமானும் தலைவியை விட்டு விலகி நிற்க. இப்பொழுது 'அணியரங்கம் ஆடுதுமோ?' என்ற கேட்கப் பட்ட தோழி அருகில் வருகிறாள். இவளை உயிர் காக்கச் செய்வதற்கு வழி என்ன என்று ஆராய்ந்து இவளுக்கும் தலைவனுக்கு ஏற்பட்ட கூடலை நினவு படுத்தினால் உயிர் தரிப்பாள் என்று நினைத்ததோழி அவர்களது கூடல் நடந்த காந்தர்வ விவாகத்தின் போது தான் இல்லாததனால் அவன் எப்படி

வந்தான்? எப்படி இருப்பான்? என்ன பேசினான்? போன்ற கேள்விகளுக்குத் தலைவியிடம் விளக்கத்தைப் பெறுகின்ற வகையிலே அவளுக்குத் தலைவனுடன் நடந்த கூடலை அவளுக்கு நினைவு கூறவும் அந்த நினைவிலே அவள் தன் ஆற்றாமையை மறந்து தங்களுக்குள் நடந்த பரிமாற்றங்களைச் சொல்லுவதாக அமைந்துள்ள பத்து பாசுரங்களின் முதல் பாசுரமாக 21ஆவது பாசுரம் அமைகின்றது. வந்தவனை பரமபுருஷன் என்று நினைத்து தலைவி கையில் அகப்பட்ட பொருளைக் கைவிட்டு விட்டேன் என்று அங்கலாய்க்கின்ற தலைவியிடம் அவன் எப்படி வந்தான் என்ற தோழியின் கேள்விக்குப் பதிலாக மூன்றாவது பதிகத்தின் முதல் பாசுரமான 'மைவண்ண நறுங்குஞ்சி என்று தொடங்கும் பாசுரம் அமைகின்றது.

விளக்கவுரை:

மைவண்ணம்: எம்பெருமானுடைய குழற்கற்றை மை போன்ற கரு நிறத்தை உடையதாக இருக்கிறது. அவனுடைய திருமேனியும் கருப்புதானே என்றால் அது கார்மேகம் சிறிது வெளுப்பு கலந்த சாம்பல் நிறத்தை ஒத்திருக்கும். அவனுடைய குழலின் கருப்பு நிறத்தோடு ஒப்பிடும்போது மேனி வெளுத்தது என்று கூறும்படியிருக்கிறது. திருக்குழல், திருமேனிக்கு வண்ணச் சேர்த்தியழகை அளிப்பதாய் உள்ளது.

நறுங்குஞ்சி: மணமுள்ள குழல், பலவகை தாபங்களால் அவதிப்படும் இல்லறத்தோருக்கும் (ஸம்சாரிகள்) பிரிவாற்றாமையில் வருந்தும் நாயகிகள் ஆகிய அனைவருக்கும் துன்பத்தைப் போக்கும் படியான நறுமணம்.

குஞ்சி சுருண்டிருக்கும் குழலைச் சொல்கிறது. கற்றை கற்றையாய் விரித்துக் கொண்டிராமல் ஒவ்வொன்றையும் பிரித்துப் பார்க்கலாம்படியாக தனித்தனியாக சுருண்டிருந்ததை (கொள்கின்ற கோளிருளைச் சுகிர்ந்திட்ட கொழுஞ்சுருளின் உள்கொண்ட நீல நன்னூல் தழைகொல் (திருவாய் 7-7-9) என்று இல்பொருள் உவமையாக ஓர் காரிருளை எம்பெரு மானுடைய திருக்குழலுக்கு உவமானமாக எடுத்து, அது ஒப்பாக மாட்டாமையாலே 'அன்று மாயன் குழல்' (திருவாய் 7-7-9) என்று இதை மாயன் குழல் என்று சொல்லலாமே அன்றி. இதற்கு வேறு ஓர் உவமானம் கிடையாது என்றாரன்றோ? அவனுடைய கேசவன் என்ற திருநாமத்திற்கு பட்டர், புகழப்படும் வழவழப்பான கறுத்த, சுருண்ட, திருக்குழற் கற்றையை உடைய என்ற விளக்க மளித்த படியாக, வழவழப்பான, கறுத்த, சுருண்ட, குழற்கற்றை பின்னே அசைந்தாட நேர்முகமாக அவனை சந்தித்த நீ, அவன் பின்புறம் தாழ்ந்த குழற்கற்றையை எப்படிப் பார்த்தாய் என்று தோழி கேட்க, என் அழகான கண்களை நேரே சந்திக்க முடியாமல் முகத்தைத் திருப்பினார் அப்போது பார்த்தேன் என்கிறாள்.

மகரஞ்சேர் குழை இருபாடு இலங்கியாட: அவரது குழலின் இருட்சியாலே அவர் முகம் தோற்றாதிருக்க அவரது இரண்டு காதுகளிலும் இரண்டு சந்திரன் உதித்தது போல இருந்த அவரது மகரகுண்டலங்களின் ஒளியிலே அவரது திருமுகத்தைப் பார்க்க முடிந்தது என்கிறார். இந்த மகர குண்டலங்கள் அவனுடைய கருப்புக் குழலுக்கு ஒன்றோடொன்று வண்ணச் சேர்த்தியாக இருந்தது. அவனது முகத்தாமரையின் பொலிவைத் தூக்கிக் காட்டியது.

ஆட: எம்பெருமான் தன் முன்னழகையும், பின்னழகையும் காட்டமுகத்தைத் திருப்பிய போது எத்தனை ஆடல்களைச் செய்தான். அவர்தனியாகவா வந்தார்? என்று தோழி கேட்க. **எய்வண்ண வெஞ்சிலையே:** அம்புகளை எய்வதையே தொழிலாகக் கொண்ட வெம்மை மிக்க வில்லும் அம்புமே துணையாக வந்தார். முன்பு அப்படி ஒடிந்த சிவதனுசுவை வைத்துதானே நாம் இருவரும் சேர்ந்தோம் என்று கூறுமாபோலே அவனுடைய பக்கலிலேயே இருக்கின்றதாய் வெம்மையுடைய வில்லைத் துணையாகக் கொண்டு வந்தார். இருசிக முனியின் பேரனான பரசுராமன் அந்தவில்லைத் தன் தந்தை ஜமதக்னியிடமிருந்து பெற்று, அதை வைத்து 21 களைகட்டு அரக்கர்களை பூண்டோடு அழித்து, அதனால் வந்த வெம்மையோடு அவனிடமிருந்து பெற்ற வில்லை,

சிலையே துணையா: இவளைப் பார்க்க வருகின்றவன். சீதையைத் துணையாகக் கூப்பிட்டு வந்தால் இவளோடு கூட முடியாது என்பதற்காக வில்லைமட்டும் துணையாகக் கொண்டு மூவராக வராமல் இருவராய் வந்தார். வில்லோடு வந்தவன் தான் வேட்டையாட வந்ததாக யார் கேட்டாலும் பதில் சொல்லத் தேவையில்லாத அளவிற்குத் தன் வில்லோடு வந்தான். அவளைக் கேட்டால் தான் பூப்பறிக்க வந்ததாக இவள் ஒரு பொய்க் காரணத்தைச் சொல்வாளல்லவா?

இங்கே: இந்த இடத்தில்தான் நாங்கள் ஒன்றாகக் கூடினோம்.

இருவராய் வந்தார்: இளையபெருமாளோடு வந்தார். வெஞ்சிலையே துணையாக என்று சொல்ல இருவராய் வந்தார் என்பதற்கு இளைய பெருமாளிடமும் தம்முடைய வில்லிருந்தது என்று ஒரு பொருள் கொள்ளலாம். அல்லது

பஞ்சாயுதங்களும் பெரியதிருவடியையும் போலே அநந்தனும் பெருமாளை அடையாளம் காட்டுபவன் தான். அவன்தானே படுக்கும் போது படுக்கையாகவு.ம் நடக்கும் போது குடையாகவும் இருப்பவன் அவனில்லாமல் இவர் எப்படி வரமுடியும்? இராம இலக்குமணர்கள் என்று பெயரோடு இணைந்தவர்கள் அதையும் தவிர அல்லையாண்டு அமைந்த மேனி அழகனும் அவளும் துஞ்ச வில்லை ஊன்றிய கையொடும் (கம்பரா. -கங்கை காண்படலம் -42) காவல் காத்தவரல்லவோ இளைய பெருமாள்.

வந்தார்: அவர் இருந்த இடத்திற்கு நான் செல்ல வேண்டியிருக்க நானிருக்கும் இடம் தேடி அவர் வந்தார். அவர் வந்த அழகை நீ பார்க்க வில்லையே. நான்கு வித நடைகளையும் உடைய நடைச்சக்ரவர்த்தி அல்லவா அவர்.

வந்தார் என் முன்னே நின்றார்: நதியைப் போல வேகமாக வந்தவர், கடலைக் கண்டது போல என்னைப் பார்த்து என் முன்னே நின்றார்.

நின்றார் என் அழகைப் பார்த்து ஆடாமல் அசையாமல் அவர் நின்ற அழகை நீ பார்க்கவில்லையே! செய்வதறியாது மரம் போல நின்றார். அடுத்த அடி இவளல்லவோ எடுத்து வைக்க வேண்டும் என்று அவர் நின்றார்.

கை வண்ணம் தாமரை வாய் கமலம் போலும் கண்ணினையும் அரவிந்தம் அடியுமஃதே வருணிக்கும் போது பாதாதி கேசம் அல்லது மேலிருந்து கீழே அல்லவா வருணிக்க வேண்டும். இவள் மாற்றி மாற்றி அல்லவா சொல்கிறாள் என்றாள். அவன் ஒரு தாமரைக் காடு போல் இருந்தான்.

'தோள் கண்டார் தோளே கண்டார் தொடுகழற் கமலமன்ன தாள் கண்டார் தாளே கண்டார், தடக்கைக்

கண்டாரும்.'' என்றாரல்லவா கம்பர் (கம்ப.இரா உலாவியற் படலம்.19) முதலில் கண்பட்ட இடத்தில் கண் நிலைத்து விட்டது என்பது போலே இவள் அனுபவித்த முறையில் சொன்னாள்.

கைவண்ணம் தாமரை : அவளை அவன் கைகளில் பிடித்தான் என்றவுடன் அந்தக் கைகளின் அழகைச் சொன்னாள்.

வாய் கமலம் போலும்: பிறகு வாயைத் திறந்து முறுவல் செய்தான். அதனால் வாய் தாமரையைப் போல் இருந்தது என்றாள். பிறகு வைத்த கண் வாங்காமல் இருவரும் ஒருவரை ஒருவார் பார்த்துக் கொண்டனர்.

'கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனு மில. -திருக்குறள்

கண்ணினையும் அரவிந்தம்: இரண்டு கண்களும் ஒரே பார்வை உடைத்து என்பதால் கண்ணினை என்றாள் அவன் வாய் பேசவேண்டியதை கண்களே பேசுகின்றன என்பதால் அந்தப் பார்வையிலே கிறங்கி கண்ணினையும் அரவிந்தம் என்றாள். அவன் அடுத்து அவளை நெருங்கி வருவதற்காக அடிஎடுத்து வைத்தான். இவள் அடியும் அஃதே என்றாள். 18வது பாசுரத்தில் கண்ணும் வாயும் கைத்தலமும் அடியினையும் கமலவண்ணம். நான்கையும் சேர்த்து ஒரே தடவையில் கமலவண்ணம் என்ற சொல்லாமல் இப்பொழுது அவனைக் கூடினமையைச் சொல்லி உயிர்தரிப்பவள் ஆதலால் ஒவ்வொன்றின் இனிமையையும் தனித் தனியாக அனுபவிக்கிறாள்.

உன்னுடைய வர்ணனை அவரையே நேரில் கண்டாற் போலிருக்கிறது என்று தோழி சொல்ல,

அவ்வண்ணத்தவர்: என்று சொல்லலாமேயொழிய என்னால் அவரது வடிவழகை முழுவதும் சொல்ல இயலாது அப்படிப் பட்ட பெருமையை உடையவர் என்றுதான் சொல்லலாமே தவிர, அவரது மொத்த வடிவழகு ஒப்புயர் வற்றது. {*(உயர்வற உயர்நலம் உடையவன் அவன் (திருவாய்-1)*}

அவர் என்னைக்கண்டு பட்ட அவதியை என்னால் சொல்ல முடியவில்லை. என்னை அடைந்தால் மட்டுமே உயிர்தரிக்கலாம். இல்லையென்றால், உயிர் விடும்படியான அந்த மனிதத்தன்மையைக் கண்டும் அவருடைய நீர்மையையும், அடியாரைக் காக்கும் உறுதியையும் பார்த்த பின்பும், இத்தனை வடிவழகுடையவர் மனிதனாக இருக்க முடியாது என்று தோழி நீ பார்த்திருந்தால் அது உனக்கு விளங்கும்.

அவரை நாம்: அவரைப் பிரிய முடியாத நான், அவர் என்னை விட்டு உயிர்தரிக்க மாட்டார் என்று நினைத்து, நாம் என்று சொன்னது நீ பார்த்திருந்தாலும் அந்த நிலையைத் தான் பெற்றிருப்பாய் என்றோ இவர் பரகால நாயகி என்பதால் நாம் என்று தம்மைப் பன்மையிலே விளித்துக்கொள்கிறார்.

தேவரென்று: நான் மனிதன் தான் *(ரா.யு.120-11)* என்று அவர் சொன்ன பிறகு கூட அவர்தாம் தேவர் என்று இராவண வதத்தற்குப் பிறகு, பிரமன் மூலமாகத் தான் அறிகிறார்.

மன்னர்தொல்குலத்து அவதரித்தனை, ஒருமனிதன் என்ன உன்னலை உன்னை. இராம கேள்; இதனைச் சொன்ன நான் மறைத் துணிவினில் துணிந்த மெய்த்துணிவு நின் அலாதுஇல்லை, நின்னின் வேறு யாது நெடியோய்! (யுத்தகாண்டம் மீட்சிப்படலம் -99) என்றபடி அவன் தன்னை மனிதன் என்று தான் நினைத்து என்னிடம் பழகவந்தான்

நாம்தாம் அவரைத் தேவர் என்று அஞ்சினோம் என்று ராஜ குலத்தில் பிறந்த சீதைப் பேசுவதுபோல பரகால நாயகியும் தன்னை பன்மையில் 'நாம் அஞ்சினோமே' என்று சொல்கிறாள். அவன் தன்மையையும் என்னுடைய தன்மையை யும் நன்கு அறிந்த நீ (தோழி) என்னுடன் இருந்தால் என்னுடைய மயக்கத்தைப் போக்கியிருப்பாய் என்று தலைவி சொல்வதாக அமைந்துள்ளது இந்தப் பாசுரம்.

பாசுரம்22

நைவளம் ஒன்று ஆராயா நம்மை நோக்கா
நாணினார் போல் இறையே நயங்கள் பின்னும்
செய்வளவில் என் மனமும் கண்ணும் ஓடி
எம்பெருமான் திருவடிக்கீழ் அணைய இப்பால்
கைவளையும் மேகலையும் காணேன் கண்டேன்
கனமகரக் குழையிண்டும் நான்கு தோளும்
எவ்வளவுண் டெம்பெருமான் கோயில்என்றேற்கு
இதுவன்றோ எழிலாலி என்றார் தாமே!

பதவுரை:

ஒன்று: *ஒப்பற்ற*

நைவளம்:- *நைவளம் என்கிற பண்ணை*

ஆராயா: *ஆராய்ந்து பாடி*

நம்மை நோக்கா: *நம்மைப் பார்த்து*

இறையே நாணினார் போல்: *சிறிது வெட்கப்பட்டவர் போல் நின்று*

பின்னும்:- *அதற்குப் பிறகும்*

நயங்கள் செய்வளவில்: *நயமான வார்த்தைகளை யிட்டு பண்ணிலே பாடின அளவில்*

என் மனமும் கண்ணும்: *எனது நெஞ்சமும் கண்களும்*

ஓடி: என்னை விட்டு ஓடிச்சென்று

எம்பெருமான் திருவடிக்கீழ் அணைய: அப்பெருமானது திருவடிகளின் கீழே பொருந்த

இப்பால்: அதன்பின்,

கைவளையும்: என் கையில் அணிந்திருந்த வளைகளையும்

மேகலையும்: அரையில் பொருந்தியுள்ள புடவையும்

காணேன்: காணமாட்டாமல் இழந்தேன்.

கனமகரக் குழையிரண்டும்: கனமான மகர குண்டலங்கள் இரண்டையும்

நான்கு தோள்களையும்: நான்கு திருத்தோள்களையும்

கண்டேன்: காணப்பெற்றேன். அதன்பிறகு

எம்பெருமான் கோயில் எவ்வளவு உண்டு என்றேற்கு: தேவரீருடைய இருப்பிடம் இங்கிருந்து எவ்வளவு தொலைவு என்று கேட்ட எனக்கு

எழில் ஆலி இது அன்றோ என்றார்: அழகிய திருவாலித் திருப்பதி இதோ காண் என்று சுட்டிக்காட்டினார்.

பொழிப்புரை:

சென்ற பாசுரத்தில் தலைவி அவனுடைய தாம்ரைக்காடு போன்ற ரூபத்தில் மயங்கியபோதும் தான் அவரைத் தேவர் என்று நினைத்ததால் அவனிடம் நெருங்கிப் பழக அஞ்சினேன். ஆனால் அவர் என்னைத் தம்முடைய அருமையான குரல் வளத்தினால் தம் பாடலைக் கொண்டு வசப்படுத்தி, அவனோடு கூடியிருந்த தன்மையைத் தோழிக்குத் தலைவி சொல்வதாக அமைந்துள்ளது இந்தப் பாசுரம். எவரிடமும் எதையும் எதிர்பாராத எம்பெருமான், எப்போதும் எதையாவது எதிர்பார்த்துக் கொண்டேயிருக்கும்

ஜீவாத்மாவை விட்டுப் பிரிய மனமில்லாமல் நின்றதற்குக் காரணம் என்னவெனில், உடைமையை விட்டுவிட்டு உடையவன் செல்ல இயலாது என்பதே ஆகும். தன்னுடைய அழகாலும் குணத்தாலும் அவளை வசப்படுத்த முடியாத எம்பெருமான், தான் கிருஷ்ணாவதாரத்தில் குழல் இசையாலே கோபியர்களை வசப்படுத்தியதை நினைத்தான். இப்பொழுது குழலுக்கு மாறாக வில்லோடு வந்திருக்கிறான். அதனால் தன்னுடைய குரல்வளத்தைக் கொண்டு அவளை வசப்படுத்தும் நாட்டக் குறிஞ்சி என்னும் இசையில் அவள் ஈடுபடும்படியான நயமான வார்த்தைகளைச் சொல்லி, அவனோடு கூடி அவனிடம் தன்னை இழந்ததைத் தோழிக்குச் சொல்லுகின்ற வகையில் இந்தப் பாசுரம் அமைந்துள்ளது.

விளக்கவுரை:

நைவளம் : ''நட்டபாடை'' (நாட்டக்குறிஞ்சி) என்னும் ராகம். அதனுடைய நைவிக்கும் தன்மையையிட்டு இங்கு நைவளம் எனப்படுகிறது. கேட்டவர்கள், பாடியவர்கள் அனைவரையும் வேற்றுமையில்லாமல் கவரக்கூடிய அழகை உடையது என்று பொருள் கொள்ளலாம். (ஒன்று) இதற்கு ஒப்பாக வேறு இசை வகையை (ராகம்) சொல்ல முடியாது. தலைவனான பரமாத்மாவை கர்ம, ஞானயோகங்களாலே அடையலாம். அப்படி அடைய முடியாதவர்கள் பக்தியோகத் தாலே அவனை அடையலாம். அதையும் செய்ய முடியா தவர்கள், அவனையே உபாயமாகக் கொண்டு பிரபத்தி என்னும் சரணாகதி (தஞ்சம்) யாலே அவனை அடையலாம். அதுவும் முடியாது போனால் வேறு வழியில்லை. அதனால் நைவளம் என்னும் பண்ணைக் கொண்டு, பொதுவாகப் பாடுபவர்கள் கேட்பவர்களை விட மிக அதிக

ஈடுபாட்டோடு பாடுவார்கள். அப்படி அவர்கள் பாடும் பொழுது மட்டுமே கேட்பவர்கள் தம்மை மறந்து அந்த இசையிலே ஈடுபடுவார்கள். இசையிலிருக்கும் ஈடுபாடு நாத உபாசனை என்று பெயர். தியாகையர் தனது சங்கீதத்தினாலே இராமனிடம் அதிக இசைமூலமே அவன் திருவடிகளை அடைந்தார்.அதைப்போல் இங்கு எம்பெருமான் பரகால நாயகியிடம் இசைமூலம் அவளை வயப்படுத்தினான்.

ஆராயா: ஆலாபனை செய்யத் தொடங்கினான். ஆலாபனை என்பது இசை அறிந்தவர்களால் தான் அனுபவிக்க முடியும்.

நம்மை நோக்கா: அப்படி ஆலாபானை செய்யும் போது தன்னை மறந்தான். ஆண்மகனான தானே அந்த இசைக்கு வசப்பட்ட போது இவள் அதற்கு வசப்பட்டிருக்க வேண்டும் என்று அவளைத் தம் அழகிய கண்களால் நோக்கினான்.

நாணினாற் போல் இறையே: அப்படி அவர் என்னைப் பார்த்த போது, நான் அவருக்கு வசப்பட்டதை அவருக்குத் தெரியாதவாறு மறைத்த போதிலும், அவர் என்னைப் பார்த்து ஒரு வெட்கப் புன்னகை விடுத்தார். ஆண்களுக்கு நாணம் வரக்கூடாதே, அதுவும் ஒரு அழகிய பெண்ணின் முன்பு என்றால், தான் பாடிய நைவளத்தாலும் இவளை வசியப் படுத்த முடியவில்லை. அதனால் அவர் ஒரு நாணப் புன்னகை செய்தார்.

நாணினாற் போல் இறையே: கொஞ்சம் வெட்கம் வந்ததைப் போல நடித்தார். நான் வயப்பட்டவன். என்ன நேரப்போகிறது என்று தம் மனத்தில் அவர் எண்ணிப் பார்த்திருக்க வேண்டும் அதனால் கொஞ்சம் வெட்கம் வந்ததைப் போல் நடித்தார்.

பின்னும் நயங்கள் செய்வளவில்: அதற்குப்பிறகும், அவர் என்னைக் கவரும் வகையான சொற்களை வைத்து மறுபடியும் பாடினார். அது பரமபுருஷன் காத்தருள்வான் என்று தஞ்சமடைந்த அடியவன், மிக நம்பிக்கையுடன் காத்திருப்பது மட்டுமின்றி, தான் செய்த சரணாகதி பலனளிக்காவிட்டால் வேறு வழிகளைத் தேடிப்போகக் கூடாது என்பதைச் சொல்வதற்கே அவன் மறுபடியும் பாடினான். அவன் வரமாட்டானா என்று அவனிருக்குமிடம் தேடிச் சென்ற தலைவி, அவனைப் பார்த்தவள், அவள் தன் வசமிழந்தாள் என்று தோழியிடம் சொன்னால், அது பெண்மைக்கு இழுக்கு என்பதற்காக தோழியிடமும், தலைவி மறைத்துப் பேசுவதாகவும் கொள்ளலாம்.அதனால் தான் அவன் மறுபடியும் தன்னைத் தாழ்த்திக் கொண்டு பாடிய போது என்னுடைய மமகாரத்தை இழந்தேன் என்று, என் மனமும் கண்ணும் ஓடி இதுவரை அவனுடைய கண்ணையும் வாயையும் பார்த்துக் கொண்டிருந்த கண்களும் அது காட்டும் நெஞ்சும், மடைதிறந்தது போல ஓடி,

மனமும் கண்ணும் ஓடி: நெஞ்சம் தனியே போயிற்று, கண் தனியே போயிற்று. கண் காட்டியே நெஞ்சம் போக வேண்டியிருக்க, தான் நிலை தடுமாறியதைக் காட்டி முன்னுக்கு பின் முரணாக நடப்பது , அவள் தன் வயத்தை இழந்ததைக் காட்டியது.

ஓடி: ஒன்றுக்கொன்று போட்டி போட்டுக்கொண்டு, ஒன்றை ஒன்று பார்க்காமல் ஓடி,

எம்பெருமான் திருவடிக் கீழ் அணைய: அவன் உடையவன் என்பதனால், தாயிடம் ஓடும் கன்று போல் ஓடி, உடமைகளை நெஞ்சும் கண்ணும் ஓடி, கட்டுப்பாடின்றி ஓடி,

நெஞ்சார அணைத்துக்கொள்ள வேண்டும். அவன் காத்திருக்க 'தளிர் புரையும் திருவடி என் தலைமேலவே' என்று நான் அவன் காலை என் தலைமேல் வைத்துக் கொண்டேன், தன் நிறை அழித்து அவனுடைய திருவடியைத் தலைமேல் ஏற்றுக்கொண்டாள்.

இப்பால்: அவன் பாடியதையும் வெட்கப்பட்டதையும் பற்றி சொன்னேன். இப்பால்: எனக்கு நடந்ததைப் பற்றிக்கேள் என்று தோழியிடம் இப்பால்

கைவளையும் மேகலையும் காணேன்: என்னுடைய கைவளைகளைக் காணவில்லை. என்னுடைய இடையில் இருக்க வேண்டிய மேகலையும் காணவில்லை.

முதலில் அவன் என் கையை அழுத்தமாகப்பற்றி இழுத்தான் என் கைவளைகள் ஒடிந்து விழுந்தன. பிறகு ஒரு கையால் என் இடுப்பைப்பற்றி தன்னோடு என்னை அணைத்துக் கொண்டான்.

வீழும் இருவர்க்கு இனிதே வளியிடைபோழப் படா முயக்கு - திருக்குறள் *(111-8)*

காற்றுக்கூட இடையே சென்று பிரிக்க முடியாத படி இறுக்கமாகத் தழுவுதல், ஒருவரை ஒ்ருவர் விரும்புகின்ற இருவருக்கும் இனிக்கும் என்றாரல்லவா தெய்வப்புலவர். காற்றுக்கே செல்ல இடமில்லாத இடத்தில் ஆடை எப்படி இருக்க முடியும். அது இருந்ததா அல்லது இல்லையா என்று எனக்குப்புரியவில்லை. அது இருந்திருக்கலாம் ஆனால் நான் காணேன் என்றாள் பிறகு அவள் கண்டது தான் என்ன? அவனுடைய தடந்தோள்களையும் தோளுக்கு மேலே காதிலிருந்து தொங்கிக்கொண்டிருக்கின்ற அவனது மகர குண்டலங்களைப் பார்த்தாள்.

கண்டேன் கனமகரக் குழை: இவள் அவருக்குத் தோளுயரம். அதனால் இவளுக்கு அவர் தோள்களும் தோளுக்கு மேலே உள்ள காதுகளிலிருந்து தொங்குகின்ற குண்டலங்களும் மட்டுமே, தன் கண்ணால் பார்க்க முடிந்தது. அவருடைய இரு காதுகளிலும் அவர் அணிந்திருந்த மகரக்குண்டலங்கள் சிறப்பு மிக்க மகரமீன்களிலிருந்து செய்யப்பட்டவை. அவை அளவிலும் பெரியதாக இருந்தன.

நான்கு தோள்கள்: இரண்டு தோள்களுடன் வந்தவர் அவளை ஆரத்தழுவியதினால் இரண்டு தோள்கள் நான்கு தோள்களாக பணைத்தபடியாலே, இவள் கைப்பட்ட உடன் தானே எம்பெருமான் என்பதை வெளியிட்டார். இவளை அணைப்பதற்கு இரண்டு கைகள் போதவில்லை. வில்லும் கையுமாக வந்தவன் அப்படியே அவளை அணைத்தபோது அவருக்கு இயற்கையாக உள்ள மற்ற இரண்டு கைகளும் உதவ வந்தன. 'அவர் தேவர் என்று அஞ்சினோமே' என்றாள் கீழ்ப்பாசுரத்தில்.இப்பொழுது அவர் வயப்பட்ட தினாலே நான்கு தோள்களைக் கண்டும் இவளுக்கு அச்ச மில்லை. அவன் எம்பெருமான் என்று தன்னை வெளிப்படுத்தியதனாலே.

எவ்வளவுண்டு எம்பெருமான் கோயில் என்றேற்கு: இடைவிடாமல் அவனை அனுபவிக்க வேண்டும் என்ற ஆசையினாலே 'உம்முடைய இருப்பிடம், கோயில், எவ்வளவு தொலைவில் உள்ளது என்று கேட்ட எனக்கு, அவனுடன் கூடச்சென்று அவனை அனுபவிக்க வேண்டு மென்று அவன் இருப்பிடத்தைக் கேட்கப் போய் அதுவே அவன் ஊர் திரும்புவதற்குக் காரணமாகி, அவன் என்னைப் பிரிவதற்கு நானே காரணமானேன்.

இதுவன்றோ எழிலாலி என்றார் தாமே: நாயகி இருக்கும் திருமணங்கொல்லையயே எனக்கு இனியதான திருவாலி ஆகும் என்று கொள்ளலாம். அல்லது இதோ திருமணங் கொல்லைக்கு மிக அருகில் உள்ள திருவாலிதான் என்று திருவாலியை நோக்கி, இதுவன்றோ எழிலாலி என்று கைகாட்டினார்.

தாமே: என்னோடு கூடியிருக்கவந்தவரும் தாமே, அனுபவிப்பவரும் தாமே.பிரிவாரும் தாமே என்று ஆகிவிட்டது. உடைமையை உடையவன் எப்பொழுது வேண்டுமானாலும் அனுபவித்துக் கொள்ளலாம். அது அவர் விருப்பத்தைப் பொருத்தது என்றாள்.

பாசுரம் 23

உள்ளூரும் சிந்தை நோய் எனக்கே தந்தென்
ஒளிவளையும் மாநிறமும் கொண்டார் இங்கே
தெள்ளூரும் இளந்தெங்கின் தேறல் மாந்திச்
சேலுகளும் திருவரங்கம் நம்மூரென்ன
கள்ளூரும் பைந்துழாய் மாலையானைக்
கனவிடத்தில் யான் காண்பன் கண்டபோது
புள்ளூரும் கள்வா நீ போகேல் என்பன்
என்றாலும் இது நமக்கோர் புலவிதானே?

பதவுரை:

உள்ஊரும்: உள்ளுக்குள்ளேயே படரும்படியான

சிந்தை நோய்: மனநோயை

எனக்கே தந்து: என்னொருத்திக்கே உண்டாக்கி,

என் ஒளிவளையும் : எனது ஒளிவிடுகின்ற வளையள்களையும்

மாநிறமும்: கருப்பும் சிவப்பும் அல்லது எனது மேனி நிறத்தையும்

இங்கே: இந்தத் திருமணங்கொல்லையிலே

கொண்டார்: கொள்ளை கொண்டு போனார். அப்படி அவர் போகிற போது

சேல்: மீன்களானவை தெள்ஊரும் இளந்தெங்கின் தேறல் மாந்தி: தெளிவாகப் பெருகுகின்ற இளந் தென்னங்கள்ளைப் பருகி

உகளும்: களித்துத் துள்ளுகின்ற

திருவரங்கம்: பொன்னி சூழ் திருவரங்கம்.

நம் ஊர் என்ன: நமது இருப்பிடம் என்று சொல்லிப் போக கள் ஊரும் பைந்துழாய் மாலையானை : தேன் ஒழுகுகின்ற பசுமை தாங்கிய திருத்துழாய் மாலையை உடைய அப்பெருமானை

கனவு இடத்தில் யான் காண்பன்: என் கனவினிலே தான் அவனைப் பார்க்க முடிகிறது.

கண்டபோது: அப்படிக்காணும் போது

புள் ஊரும் கள்வா:- கருடப் பறவை மேல் ஏறிச்செல்லும் கள்வனே

நீ போகேல் என்பன்: நீ என்னைவிட்டுப் பிரிந்து போகக்கூடாது என்றேன்

என்றாலும்: அப்படிச் சென்றாலும்

நமக்கு: நம் இருவருக்கும்

இது: இந்தப் பிரிவானது

ஓர் புலவிதானே: ஆற்றாமையையே விளைவிப்பது.

பொழிப்புரை:

சென்ற பாட்டில் இதுதான் திருவாலி என்று சொல்லி விட்டு, என்னைப் பிரிவாற்றாமை என்னும் மனநோயில் அவதிப்பட வைத்துவிட்டு, தென்னை மரங்கள் மிகுந்த

திருவரங்கம் தான் தமது ஊர் என்று எம்பெருமான் சொல்லிப் போனான். ஆனால், அவன் அணிந்திருக்கின்ற துளவ மாலையின் மணம், என் மனத்தை நிரப்பி, நான் தூங்க முயற்சிக்கும் போது, என் கனவில் நான் எம்பெருமானைப் பார்க்கிறேன். அப்படிக் கனவில் காட்சி தருபவனை நீ போகாமல் என்னுடன் இரு என்றாலும், அதைக் கேட்காமல் கனவிலும் அவனை அடைய முடியாத பிரிவுத் துன்பத்தை எனக்கே சொந்தமாக்கி விட்டு மறைத்துவிட்டான். அவன் அவளோடு உடனிருந்தால் தலைவி கூடலில் திளைக்க கூடாது என்று அவளைக் காப்பாற்றும் எண்ணத்துடன் அவன் தன்னுடைய வாகனமான கருடனின் மேல் ஏறிக்கொண்டு சென்று விட்டான். 'பறவை அரையா உறகல்' 'பள்ளியறைக் குறிக் கொள்மின்' என்று கருடனுக்கு பெரியாழ்வார் ஆணையிட்டிருக்கும் போது எம்பெருமானைத் திரும்பத் தமது பள்ளியறையில் சேர்ப்பது கருடனுக்கு கடனாயிற்று. ஆனால் இந்தப் பிரிவில் தானே கலவியின் இன்பம் இன்னும் அதிகமாகத் தெரிகிறது.

விளக்கவுரை:

உள்ளுரும் சிந்தை நோய் எனக்கே தந்து: தோழி தலைவியைப் பார்த்து திருமகளையே தன் மார்பில் வைத்துக் கொண்டிருக்கும் எம்பெருமான் நீ அவனோடு கூடியதற்காக என்ன பரிசு கொடுத்தான்? என்று கேட்க, உள்ளிருந்து கொல்லும் மனநோயை எனக்குப் பரிசாகக் கொடுத்தான் என்றாள்.

எனக்கே தந்து: அந்தப் பிரிவாற்றாமை என்னும் நோய் என்னைதான் அதிகமாக வாட்டுகிறது. அவனை அது அதிகமாக பாதிக்கவில்லை. இந்த மனநோய்க்கு மருந்

தொன்றும் கிடையாது.மறுபடியும் அவனோடு கூடுவதுதான் மருந்து. அவனோ கருடனின் மீதேறி வெகுதூரம் போய் விட்டான். இந்தச் சிந்தை நோய்க்கு ஏதும் மருந்து இல்லாததால் இது, புற்று நோய் போல் உடனிருந்து உடலெல்லாம் பரவி ஆளைக்கொல்லும். வேறு எவராலும் தீர்க்கமுடியாத, அவனால் மட்டுமே குணப்படும்படியான அவனுடைய பிரிவாற்றாமை என்னும் மனநோய்தான், அவன் கொடுத்துச் சென்றான். அவன் சென்ற இடத்தில் திருமகளும் மண்மகளும், நீளாதேவியும் எப்பொழுதும் உடனிருந்து அவனுக்கு அந்த நோயைத் தெரியாமல் செய்து விடுகிறார்கள். அதனால், 'எனக்கேதந்து' என்றாள். அவனும் சீதையைப் பிரிந்த இராமனைப் போல் பிரிவுத்தீயினால் சுடப்பட்டிருப்பான்.

'செப்பு உருக்கு அனைய இம்மாரிச் சீகரம்
வெப்புறப் புரம்சுட வெந்து வீவதோ
அப்பு உருக் கொண்ட வாள் நெடுங்கண் ஆயிழை
துப்பு உருக் குமுதவாய் அமுதம் துய்த்த யான்?

(கம்ப.ரா. கிஷ்.கா. கார்காலப்படலம். 91)

அவனிடம் இருக்கும் எல்லாம் அடியார்களுக்காயிருக்கும் என்றபடி அவனுடைய பிரிவாற்றாமையும் அவளுக்கே வந்து சேர்ந்தது. சரி நீ அவனுக்கு ஏதாவது பரிசு கொடுத்தாயா என்று தோழி கேட்க தலைவி 'நான் எங்கே கொடுத்தேன். அவனாக எடுத்துக் கொண்டான்' என்றாள் தலைவி. மறுபடியும் 'அவன் அப்படி என்னதான் எடுத்துச் சென்றான்?' என்று தோழி மறுபடியும் கேட்க,

என் ஒளிவளையும் மாநிறமும் கொண்டார்: எனக்கு மனநோயைத் தந்துவிட்டு, எனக்கு ஆறுதலளிக்கக் கூடிய

என்னுடைய உடைமைகளான என்னுடைய ஒளிமிக்க வளையல்களையும் என்னுடைய சிறந்த நிறத்தையும் எடுத்துச் சென்று விட்டார். என்னுடையது எல்லாம் ஸ்வாமியினுடையது.

“உதவிக் கைம்மாறு என்னுயிர் என்ன உற்றெண்ணில் அதுவும் மற்று ஆங்கவன் தன்னது. (திருவாய் 7-9-10) அதனால், என்னுடைய வளையல், மாநிறம் என்று பேசலாமோவென்றால், அவன் இவளோடு கூடியிருந்த போது ‘இந்த வளையல்கள் உன் கைகளுக்கு மிகவும் அழகாக இருக்கிறது. உன்னோடு சேர்ந்ததால் அவை அழகு பெற்றனவா? இவள் பூணுக்கு அழகு செய்யும் பொற்றொடி அல்லவா? உன் மேனியின் நிறம் எவ்வளவு அழகாக இருக்கிறது என்று கொண்டிடாடியதால் அவை என்னுடன் இருந்தால் அவனை அதிகம் நினைவு படுத்தும் என்று அவனே எடுத்து சென்று விட்டானோ என்னவோ?

முயங்கிய கைகளை ஊக்கப் பசந்தது பைந்தொடி பேதைநுதல் -உறுப்புநலன் அழிதல் (திருக்குறள் 1238) தழுவிய கைகளை தளர்த்திய உடன் பசுமையான பொன்வளை அணிந்த பெண்ணின் நெற்றி நிறம் வெளுத்து இப்பிரிவுக்கு அவள் என்ன ஆனாளோ என்று தலைவி வருந்துவதை இவள் அறியாமல் பேசுகிறாள்.

அவனால் விரும்பப் பட்டவை என்ப்தனால் தனக்கும் அதில் விருப்பம் உள்ளது என்று சொல்வதில் ஏதும் தவறில்லை.

இங்கே: இந்தத் திருமணங்கொல்லை, நான் அவனை வழிப்பறி செய்வதற்காகக் காத்திருந்த இடம். நான் வழிப்பறிப்பதற்காக வந்து என்னுடைய உடைமைகளை

பறிகொடுத்த இடம். நான் எம்பெருமானைப் பெற்ற இடமும் என்னுடைமைகளான வளையல்களையும் மாநிறத்தையும் பறிகொடுத்த இடம்.

'அவனுடைய ஊராவது எந்த ஊர்? என்று கேட்டாயா என்று தோழியை, 'அதற்குத் தேவையில்லாமலே தெள்ளூறும் இளந்தெங்கின் தேறல் மாந்திச் சேலுகளும் திருவரங்கம் நம்மூர் என்ன:

தெளிந்த நீர் போலப் பாய்ந்து வருகின்ற இளம் தென்னம்பிள்ளைகளின் தேனை உண்டு, அம்மரங்களின் கீழே ஓடிக்கொண்டிருக்கின்ற தண்ணீரில் இருக்கின்ற மீன்கள் துள்ளிக் குதிக்கும் படியான இயற்கை வளம் மிக்க திருவரங்கம் தான் எனது ஊர் என்றல்லவா சொல்லிப் போனான்! திருநாட்டில் உள்ள திவ்யசூரிகள் யாவரும் 25 வயது இளைஞர்களாக இருப்பது போல் இவ்வூரில் உள்ள தென்னைமரங்களும் இளமையுடையன வாய் இருக்கின்றன.

தெள்ளூரும் இளந்தெங்கின் தேறல் மாந்தி: இளந்தென்னை மரங்களிலிருந்து பாய்ந்து ஒழுகுகின்ற தேன் தெளிந்த தென்னங்கள்ளை விட இனிப்பு காரணமாக அதிகம் குடித்து இந்த மீன்கள் தம் பிறப்பிடமான காவிரி நீரை விட்டு, ஊருக்குள் பாயும் நீரில் வந்து இளந்தென்னைகளின் கீழே வரும்போது அம்மரங்களில் வேகமாகச் சொட்டுகின்ற தெளிந்த தேன்போன்ற தென்னங்கள்ளை வயிறுமுட்ட சாப்பிட்டு அதில் உண்டான மயக்கத்தில் துள்ளிக் குதித்து மகிழும்படியான இடம் திருவரங்கம்.

(தேட்டருந்திறல் தேனினைத் தென்னரங்களை) என்று (பெரு.திரு.2-1)ல் ஆழ்வார் அனுபவித்ததைப் போல் இந்த மீன்களும் அனுபவிக்கின்றன.

நம்மூர்: பெருமாள் தம்மூர் என்றோ உம்மூர் என்றோ சொல்லாமல் நம்மூர் என்பதற்கு நீ எனக்கு அடியனான பின்பு என்னுடைய தெல்லாம் உன்னுடையது அதனால் எம்மூர் நம்மூர் ஆகிற்று. அதனாலன்றோ பரகாலர் திருவரங்கத்திற்கு மதிள்கட்டினார். அத்யயன உற்சவத்தில் நம்மாழ்வாரை திருக்குருகூரிலிருந்து திருவரங்கத்திற்கு எழுந்தருளச் செய்து திருவாய் மொழியை எம்பெருமான் செவிமடுக்கச் செய்தார்.

கள்ளூரும் பைந்துழாய் மாலையானை: அவன் என்னைப் பார்க்க வந்த போது எப்படி இருந்தான் தெரியுமோ? அவன் துளப மாலையை விரும்புவான். அதுவும் பசுமைமிக்க தேன் சுரப்பிகள் திறந்து தேன் ஒழுகாநின்ற துளபங்களாலான மாலையை அணிந்து கொண்டு, என்னைப் பார்க்க வந்தது போலவே அவன் மாலை அணிந்திருந்த திறத்தை நான் நன்கு அறிந்தவளல்லவா? அந்த நறுமணம் என் நாசியை விட்டு அகலாமல் நான் கண்மூடும் போதெல்லாம் என்,

கனவிடத்தில் யான் காண்பன்: நான் கனவில் அவனைக் கண்டேன். அந்த கள்ளமும் துளவமும் என் நாசியை விட்டு அகலாது அவனைக் கொணர்ந்து எனக்குக் கனவிடத்தில் காட்டி என் பிரிவாற்றாமைத் துயரைக் குறைத்தது.

கண்டபோது: அப்படி நான் அவனைப் பார்க்கின்ற போதெல்லாம் நீ என்னைப் பிரியக்கூடாது என்று

புள்ளூரும்கள்வா நீ போகேல் என்பன்: புள்ளூரும் பறவைகளுக்கெல்லாம் அரசனான கருடனைத்தேர்போலே வாகனமாகக் கொண்டு ஊர்வது தரையில் செல்லும் வாகனங்களுக்குப் பயன்படும் சொல் அப்படியிருக்க இங்குப் பறக்கும் கருடனுக்கு ஏன் பயன்படுத்தப்பட்டது என்றால்

உயிரற்ற தேரைப்போல உயிருள்ள பறவையான கருடனை வாகனமாகப் பயன்படுத்தினான்.

கள்வா என்ற திருடனே என்று எம்பெருமானை அழைப்பது எப்படிப் பொருந்தும் என்றால் அதைவிடப் பொருத்தமான சொல் வேறு ஒன்றும் இல்லை என்றே சொல்லலாம்.

கிருஷ்ணாவதாரத்திலே சிறுபிள்ளை ஆயர்களுடைய வீட்டிலே வெண்ணெயும் தயிரும் பாலும் திருடிச் சாப்பிட்டு வெண்ணைக் கள்வன் (நவநீத சோரன்) என்று பெயர் பெற்றவன்.

பிறகு கொஞ்சம் வளர்ந்த உடன் சிறுமிகளுடைய ஆடைகளைத் திருடினான். எல்லாவற்றையும் பல்லாயிரக் கணக்கான கோபியரின் நெஞ்சையும் அல்லவா திருடியவன். அதனால் அவனைக் கள்வன் என்று சொல்வதில் தவறில்லை.

அன்பு மிகுந்தவர்கள், அன்புக்குரியவர்களை திருடா என்று அழைப்பது இன்றும் வழக்கத்தில் உள்ளதுதானே. ஆனால், பரகால நாயகி இவனைக் 'கள்வா' என்று அழைப்பதன் காரணம் கருடனை மறைத்து வைத்துவிட்டு தன்னெதிரில் நடந்து வந்துத் தன்னை அனுபவித்து, வந்த வேலை முடிந்தவுடன் வேகமாக திருடனைப் போல் ஓடுவதற்காக கருடன் மேலேறி பறந்து சென்றதனால் புள்ளூரும் கள்வா என்றாள்.

நீ போகேல் என்பன்: என்னை விட்டுவிட்டுப் போகாதே என்றாள். போனால், அவளையும் கூட்டிச்செல்லவேண்டும் அல்லது அவனாவது அங்கே தங்கியிருக்க வேண்டும் ஆனால், இன்பம் என்னும் அனுபவத்தைக் காட்டிவிட்டு தந்ததைத்

திரும்பப் பெற இயலாமல், அவன் போகின்றானே என்று நீ போகேல் என்றாள்.

'என்பன்'நீ போகாதே என்ற சொல் பயனளிக்காது என்று தெரிந்தும் அவனுக்கு என்மீதுள்ள காதலைக் குறைத்து மதிப்பிடுவதுபோலவும், போனால் அவன் திரும்பி வரமாட்டான் என்றும் நினைத்தது என்னுடைய தன்மைக்குப் பொருந்தாது, நான் சொன்னாலும் அவன் கேட்க மாட்டான் என்பதால் அதுபயனற்ற சொல்

என்றாலும்: இருவருக்கும் பொருந்தாத சொல் என்ற போதிலும்

இது நமக்கோர் புலவிதானே: துனியும் புலவியும் இல்லாயின் காமம்கனியும் கடுக்காயும் அற்று (திருக்குறள் 131-6) என்ற தெய்வப்புலவர் கூறியதைப் போல சிறுபிணக்கும் பெரும் பிணக்கும் இல்லாவிட்டால் இன்பம் மிகப்பழுத்த பழத்தையும், இளங்காயையும் போன்று பயனற்றுப் போய்விடும். அதனால் புலவி என்பது காதலுக்கு இன்றியமையாத ஒன்று என்பதைப் போல் இந்தப் பிரிவும் அதனால் வரும் ஆற்றாமையும், மற்றவர்கள் ஒப்பிட்டு அறிய முடியாததால் 'ஓர் புலவி' என்றாள்.

தானே : இது எல்லாக் காதலர்களுக்கும் இடையில் நடப்பது தானே, என்று தன்னைத் தேற்றிக்கொள்கிறாள்.

பாசுரம் 24

இருகையில் சங்கிவை நில்லா எல்லே பாவம்
இலங்கொளி நீர் பெரும்பௌவம் மண்டி யுண்ட
பெருவயிற்ற கருமுகிலே ஒப்பர் வண்ணம்
பெருந்தவத்தர் அருந்தவத்து முனிவர் சூழ
ஒரு கையில் சங்கு ஒருகை மற்று ஆழியேந்தி
உலகுண்ட பெருவாயர் இங்கே வந்து என்
பொருகயற்கண் நீரரும்பப் புலவி தந்து
புனலரங்கம் ஊரென்று போயினாரே.

பதவுரை:

உலகுண்ட பெருவாயர்: ஊழிக்காலத்தில் உலகங்களை யெல்லாம் அமுது செய்த பெரிய திருவாயையுடையவரும்

இங்கே வந்து: நானிருக்கும் இடமான இங்கே வந்து

பொருகயல்: ஒன்றோ டொன்று ஒத்திருக்கும் கயல்மீன் களைப் போன்ற

என்கண்: என்னுடையக் கண்களிலிருந்து நீர் அரும்பி கண்ணீர்த்துளிகள் துளிக்கும்படி

புலவி தந்து: பிரிவுத் துன்பத்தை உண்டாக்கி

நீர் அரும்ப: நீர்த்துளிகள் துளிக்கும்படி

இலங்கொளி நீர் பெரும்பெளவம் மண்டியுண்ட: விளக்குகின்ற ஒளியையுடைய நீர் நிறைந்த பெருங்கடலில் ஆழ்ந்து நீரைப்பருகிய

வண்ணம் பெருவயற்ற கருமுகிலே ஒப்பர்: பெரிய வயிற்றை உடைய கருத்த மேகத்தின் நிறத்தை உடைய மேனியை உடைய எம்பெருமான்.

பெருந்தவத்தர் அருந்தவத்து முனிவர் சூழ: மிகுந்த பக்தியையும் தவவலிமையும் உடைய திவ்யசூரிகள் , நித்ய சூரிகளால் சூழ்ந்திருக்கும் படி

ஒரு கையில் சங்கு; ஒரு திருக்கையில் சங்கையும்

மற்றொரு கை ஆழி : மற்ற திருக்கரத்தில் சுதர்சனத்தையும்

ஏந்தி: தரித்துக்கொண்டு

புனல் அரங்கம் ஊர் என்று: நீர்வளம் பொருந்திய திருவரங்கம் நம்மூர் என்று சொல்லிவிட்டு

போயினார்: சென்று விட்டார்.

இருகையில் : இரண்டு கைகளிலும்

சங்கிவை நில்லா: சங்கு வளையல் போன்ற ஆபரணங்கள் கழன்று விழும்படி ஆனாள்

எல்லே பாவம்: பாவம் என் தோழி.

பொழிப்புரை: சென்ற பாசுரத்தில், அவள் குறிப்பிட்ட புலவித்துன்பம் இன்னும் தொடர்கிறது. வேதமயனான கருடன் எம்பெருமானுக்கு அடியவனாகவும், தோழ னாகவும், ஊர்தியாயும், இருக்கையாயும், கொடியாயும், மேற்கட்டியாகவும், விசிறியாகவும் தொண்டு செய்கிறான்

என்கிறார் ஆளவந்தார். (ஸ்தோத்ர ரத்னம்-41) எம்பெருமானுக்கு அடிமையான பறவை அரசன் உனக்கும் அடிமை தானே. திருமகளுக்கும் மண்மகளுக்கும் தாசனான அவன் உன்பேச்சை மட்டும் கேட்கமாட்டானா என்றாள் தோழி.

அதையும் தவிர இரவில் பள்ளியறைக்கு அவனைக் கொண்டு போய் சேர்த்துக் காக்க வேண்டிய பொறுப்பையும் பெரியாழ்வார் கருடனுக்குக் கொடுத்து விட்டார் அல்லவா. (பறவை அரையா உறகல் பள்ளியரைக் குறிக்கொள்மின்' (பெரியாழ்வார் திரு.5-2-9) அவன் ஒருவனாக வரவில்லை. நித்ய சூரிகள் அவனை சூழ்ந்து கொண்டிருந்தது. இப்பொழுது அவன் வடிவமே மாறி நின்றான். அதனால் தன்னால் எதுவும் செய்ய முடியவில்லை என்கிறாள் தலைவி.

விளக்கவுரை:

இருகையில் சங்கிவை நில்லா: என்னுடைய கை வளையல்கள், அவர் பிரிந்த போதே அவரது பிரிவாற்றாமை யாலே என் உடல் இளைத்து என் கையிலிருந்து நழுவி அவருடனே செல்ல ஆசைப்பட்டவை போல் கீழே விழுந்து உருண்டோடின. என்னைப் போலவே அவனது உடைமைகள் தானே அவை! அவனது கைப்பட்ட மகிழ்ச்சியில் அவைகளும் அவன் பின்னால் புறப்பட்டன. அதனால் அவைகளைக் கொண்டு நான் என்னைத்தேற்றிக்கொள்ள வழியில்லாமற் போய்விட்டது.

தோழி! வளையல் போனால் என்ன முழங்கைக்கு மேலே இருகையிலும் நீ சங்கு வளையல் போட்டிருப்பாயே. அதைப் பார்த்தாவது மனதாறலாமே என்றாள். அவளுடைய கைகளும் இளைத்து விட்டதால் அந்தச் சங்கு வளையல்களும் காணவில்லை என்று தோழி சொல்ல, தலைவி

இவைநில்லா: அவர் பிரிந்தால், இவையும் என்னைப் பிரியவேண்டுமோ? அவர் எனக்கு உடையவர் என்பதால் அவரை என்னால் நிறுத்த முடியவில்லை. ஆனால் என்னுடைய உடைமைகளான அறிவற்ற ஜடப்பொருள்களான சங்கும் வளையல்களும் கூட என் கையிற் நிற்க மறுக்கின்றனவென்று தலைவி அங்கலாயக்கிறாள். பலமுறை எடுத்துப் போட்டும் இவளுடைய கை இளைத்ததனால் அவை ஒவ்வொரு முறையும் கழன்று விழுவதை (நில்லா) என்றாள்.

எல்லே பாவம்: பாவம் என் தோழி. (எல்லே இளங்கிளியே இன்னம் உறங்குதியோ என்றாளல்லவா ஆண்டாள் திருப்பாவை--15) நாயகனான எம்பெருமான் தான் அவளைப் பிரிவாற்றாமையினால் துன்புறச் செய்கிறான் என்றால் அறிவற்ற அவளுடைய வளைகளும் சங்கும் கூட அவளுக்கு ஆதரவாக இல்லை.

இலங்கொளி நீர்ப் பெரும்பௌவம் மண்டி உண்ட பெருவயிற்ற கருமுகிலே ஒப்பர் வண்ணம்: கடல்நீருக்கு ஏது ஒளி? இவள் விளங்குகின்ற ஒளியுடைய பெரும் வெள்ளம் என்றாளே என்றால், உலகின் நான்கில் மூன்று பாகம் கடலால் சூழப்பட்டுள்ளன. அப்படிப்பட்ட கடல், சமுத்திரம் என்றும் கடல் என்றும் பிரிக்கப்பட்டிருப்பது பெயருக்குத் தானே தவிர எல்லாக் கடல்களும் பெருங் கடல்களும் சேர்ந்து ஒரே நீர்ப்பரப்பாக பெருங்கடலாகத் தானே இருக்கிறது? அப்படிப்பட்ட பெருங்கடலின் ஏதாவது ஒருபகுதியில் சூரிய ஒளி பிரதிபலிக்கப்பட்டுக் கொண்டே இருக்கும் என்பதால் இலங்கொளி நீர் பெரும் பௌவம் என்றார். இந்தப் பெருங்கடலிலே ஆற்று நீர் வந்து சேர்ந்த வண்ணமிருந்தாலும் சூரிய வெப்பத்தினால் தண்ணீர் ஆவியாக மேகமாகி

அம்மேகம் பொழிவதற்கு முன் கறுத்த மேகம் ஆக இருக்கும். கோதை நாச்சியாரும் 'ஆழிமழைக் கண்ணா ஒன்று நீ கைகரவேல் ஆழியுட்புக்கு முகந்து கொடு ஆர்த்தேறி ஊழி முதல்வன் உருவம் போல் மெய் கறுத்து' *(திருப்பாவை-4)* என்று கார் மேகத்தை அவனுக்கு உபமானம் ஆக்கினாள். பரகாலநாயகி அவனது நிறத்தை கருமுகிலுக்கு ஒப்பாக்கினாள்.

பெரும் பௌவம் மண்டியுண்ட: மிகப்பெரிய கடலின் நீரையெல்லாம் ஆவியாக்கி கடலை வெறுந்தரையாக்கி னால் அந்த மேகம் எவ்வளவு கறுப்பாக இருக்குமோ அப்படிப் பட்ட கருமுகிலைப் போன்ற மேனி வண்ணம் இவரே *(பின்னை வண்ணம் கொண்டல் வண்ணம் என்றாரல்லவா? பெரிய திரு 4-9-8)*

பெருவயிற்ற கருமுகிலே ஒப்பர் வண்ணம்: என்று தம்மோடு கூட வந்தபோது கார் வண்ணமாய் இருந்ததை அனுபவித்தாள். பிரியத் தொடங்கியவுடன் அவன் மின்னல் வந்து போனது போல் தோன்றியதைக் குறிப்பிடுகிறாள்.

பெருந்தவத்தர் அருந்தவத்து முனிவர் சூழ: அவரைச் சுற்றிலும் நித்ய சூரிகள் அனைவரும் வந்து அவரைச்சூழ்ந்து கொண்டார்கள். இவன் பரகால நாயகியின் அழகிலே ஈடுபட்டு திருமணங்கொல்லையிலேயே தங்கிவிட்டால் பூலோக வைகுண்டம் ஆகிய திருவரங்கமும், பரமபதமும் தலைவன் இல்லாமல் ஆகிவிடும், என்று பயந்து தலைவி அவரைப் போகாதே என்று சொல்லாமல் விட்டாள். வைகுந்தத்து அமரரும்,முனிவரும் *(திருவாய் 10-9-9)* பெருந்தவத்தர் என்று பக்தியினால் சேவை செய்பவர்களும், அருந்தவத்து முனிவர் பக்தியினாலே குணாநுபவம்

செய்பவர்கள் என்று இரண்டு வகையான நித்ய சூரிகள் அவரைச் சூழ்ந்து கொண்டதால், நான் அவரை நெருங்கிப் போக முடியவில்லை என்றாள். அதுமட்டுமல்ல, அவருடைய ஸ்வரூபமும் இப்பொழுது மாறியிருந்தது.

ஒரு கையில் சங்கு ஒருகை மற்று ஆழி ஏந்தி: 'வடிவார் சோதி வலத்துறையும் சுடராழியும் பல்லாண்டு' (திருப் பல்லாண்டு-2) என்றபடி வலக்கையில் சுடராழியையும் இடதுகையில் பாஞ்சஜன்யம் என்ற தனது சங்கையும் கொண்டு அவன் நிற்கின்ற காட்சிதானே அவனுடைய மேன்மைக்கு எல்லை. அப்படி அவன் காட்சி தருவதைப் பார்த்து சூழ்ந்திருந்த அமரரும் முனிவரும் பல்லாண்டு பாடினார்கள். என் காலைப் பிடித்த அவன் கைகள் அல்லவா அவனுக்குப் போக்கிடமாக இருந்தது. அவன் என்னோடு கூடிய போது அவனுடைய நீர்மை எவ்வளவு மேன்மையாக இருந்ததோ அதே போல நித்ய சூரிகளோடும் சங்கு சக்கரத்தோடும் கூடியிருந்த மேன்மை இன்னும் உயர்வாக இருந்தது.

உலகுண்ட பெருவாயர்: ஊழிக்காலத்தில் உலகுக்கு அவரைத் தவிர வேறு புகலிடமில்லாததால்,' என்னோடு கூடியபோது தமக்கு வேறு புகலிடம் இல்லாதவர் போல் வந்தார்.

இங்கே வந்து: ஜீவனைக் காப்பாற்றுவதற்கு அவரே வந்தது போல, போகமளிப்பதற்கும் அவராகவே வந்தார்.

பொருகயல் கண் நீர் அரும்பப் புலவி தந்து: ஒன்றை யொன்று ஒத்து இருப்பதான எனது இரண்டு கண்களும் கண்ணீரால் நிறையும்படி எனக்குப்பிரிவாற்றாமையைத் தந்து

கயல்மீன் போல் அங்குமிங்கும் அலைந்து கொண்டிருப்பதால் அது கயற்கண் ஆனது. அப்படிப்பட்ட கண்கள், அவருடன் கூடிய உடன் ஆனந்தக் கண்ணீரால் நிரம்பின. அவர் பிரிந்த உடன் பிரிவு என்ற நெருப்பால் கண்ணும் வரண்டு கண்ணீர் பொழியாமல் கண்ணீர்த்துளிக்கிறது. அப்படிப்பட்ட (புலவி தந்து) பிரிவுத் துன்பத்தைக் கொடுத்தது. தந்து அப்படிப்பட்ட புலவி, காதலுக்கு தேவை என்று முன்பே குறிப்பிடப்பட்டது. திருக்குறள் *(131-6)*. அதனால் அந்தப் புலவியைத் தன் பொற்கிழியிலிருந்து அவிழ்த்துத் தந்த பெருஞ் செல்வமாக அவள் கருதுகிறாள். அப்படிப்பட்ட புலவியை எனக்குக் கொடுத்து விட்டு,

புனலரங்கம் ஊரென்று போயினார்: அவரது பிரிவில் நான் உயிர்தரிக்க ஏதுவாக நம் ஊர் திருவரங்கம் பெரிய கோயில் என்று சொல்லிப் போனார்.

பாசுரம் 25

மின்னிலங்கு திருவுருவும் பெரிய தோளும்
கரிமுனிந்த கைத்தலமும் கண்ணும் வாயும்
தன்னலர்ந்த நறுந்துழாய் மலரின் கீழே
தாழ்ந்திலங்கு மகரஞ் சேர் குழையும் காட்டி
என் நலனும் என் நிறைவு மென் சிந்தையும்
என் வளையுங் கொண் டென்னை யாளுங்கொண்டு
பொன்னலர்ந்த நறுஞ் செருந்திப் பொழிலினூடே
புனலரங்க மூரென்று போயினாரே.

பதவுரை:

மின் இலங்கு திருவுருவும்: *மின்னல் போல ஒளிவீசுகின்ற திருமேனியும்,*

பெரிய தோளும்: *தடந்தோள்களும்*

கரிமுனிந்த கைத்தலமும்: *குவலயாபீடம் என்கின்ற யானையைச் சீறிப்புடைத்த திருக்கைகளும்*

கண்ணும்: *அரவிந்தம் என்று சொல்லப்பட்ட கண்களும்*

வாயும்: *திருப்பவள வாயும்*

தன் அலர்ந்த நறுந்துழாய் மலரின் கீழே: *தன்னிச்சையாய் நிலத்தில் வளர்ந்துள்ள துளசி செடிகளின் மணம் மிக்க பூக்களும்*

தாழ்ந்திலங்கு மகரம் சேர் குழையும் காட்டி: காதுக்கு கீழே தாழ்ந்து விளங்குகின்றமகரகுண்டலங்களை எனக்குக் காட்டி

என்நலனும்: என்னுடைய அழகையும்

என் நிறைவும்: என் அடக்கத்தையும்

என் சிந்தையும் : என் நெஞ்சையும்

என் வளையும்: என் கைவளையல்களையும் **கொண்டு:** கொள்ளை கொண்டது மன்றி

பொன்னலர்ந்த : பொன்போன்ற மஞ்சள் நிறப்பூக்கள் பூத்திருந்த

நறும்: மணம்மிக்க

செருந்திப் பொழிலினூடே: சுரபுன்னைச் சோலையின் வழியே

புனலரங்கம் ஊர் என்று போயினார்: நீர்வளம் மிக்க திருவரங்கம் நம்மூரென்று சொல்லிப் போய் விட்டார்.

பொழிப்புரை:

கூடல் புலவி பற்றிய பரிமாற்றம் இந்தப் பாட்டிலும் தொடர்கிறது. எம்பெருமான் தன்னை எப்படிக் கவர்ந்தார்? தன்னிடமிருந்து எதைக் கவர்ந்தார்? என்று தலைவி தோழிக்கு சொல்வது இந்தப் பாடலிலும் தொடர்கின்றது. 'புனலரங்கம் ஊரென்று போயினாரே' என்னும் தொடர் இந்தப் பாசுரத்திலும் தொடர்ந்து வருகிறது. அவன் மேனி அழகு, அவனது மகர குண்டலங்கள் ஆகியவை மறுபடியும் தோழிக்குக் கூறப்படுகிறது.

மின்னிலங்கு திருவுருவும்: மின்னல் போல ஒளிமிக்க திருமேனி, கார் வண்ணம், கருமுகிலே ஒப்பர் வண்ணம் என்றெல்லாம் முன்பு திருமேனிக்கு மேகத்தை உபமான மாகச் சொன்னது இவனுடைய திருமேனியின் வண்மை யையும் களைப்புற்றவர் களைப்பை போக்குவதுமான கரிய திருமேனி அழகு விளக்கப்பட்டது. இந்தப்பாடலில் மின்னலை அடிப்படையாகக் கொண்டு மின்னலைப் போல் ஒளிமிக்க திருமேனி என்று, இந்தத்திருமேனி காண வொண்ணாததாய் அடையமுடியாத திருமேனியாக இருப்பது சொல்லப் பட்டது. கார் மேகத்தைச் சிவந்த ஒளிக்கற்றையால் முழுவதும் மூடியதைப் போன்ற ஒரு ஒளி திருமேனியெங்கும் பரவியிருப்பதால் மின்னிலங்கு திருமேனி. எம்பெரு மானுடைய திருவாழியின் ஒளி, அவன் மேனியை எப்பொழுதும் சூழ்ந்திருக்கும் (வடிவார் சோதி வலத்துறையும் சுடராழி) (திருப்பல்லாண்டு 2) என்றபடி அவனுடைய திருவாழியினுடைய ஒளியால் அவனுடைய கார்மேனி ஒளிபெற்றது.

பெரிய தோளும்: காலம் எல்லாம் அனுபவித்தாலும் மற்ற அவயங்களில் போகவிடாத இனிமை மிக்கத்தோள்கள்.

'தோள்கண்டார் தோளே கண்டார்'

(கம்பரா. உலாவியல்-19)

வீமன் மடந்தை விழிமுடியக் கண்டறியா வாம
நெடுந்தோள்' (நளவெண்பா-325)

என்றெல்லாம் புகழப்படுகின்ற பெரிய தோள்கள் ஆண்களுக்கு அழகு. அவருக்கும் அப்படிப்பட்ட பெரிய

தோள்கள் இருந்தன. இவர் பெருவீரர் என்பதற்கும் அனுபவிப்பதற்கு மிக இனியவர் என்பதற்கும் இத்தோள்களே அடையாளமாய் உள்ளன என்று கருத்து.

கரி முனிந்த கைத்தலமும்: குவலயாபீடம் என்னும் யானை, கண்ணனைக் கொல்லவந்த போது, சீற்றத்தோடு கையாலே தள்ளியதே போதுமாய் அந்த யானை வீழ்த்தப்பட்டது.

புகர்ச் செம்முகத்த களிறட்ட பொன்னாழிக்கை எம்மான்' *(8 .10-6)* என்று நம்மாழ்வாரும், கைவண்ணம் தாமரை *(21)* கைத்தலமும் அடியினையும் கமல வண்ணம் *(18)* என்று இவரே முன்பு பாடியபடி, அவருடைய அழகிய கைகள்.

கண்ணும்: அணுகினவர்களை ஆட்கொள்கின்ற கண்கள். 'கண்ணினையும் அரவிந்தம்' *(21)* 'அரங்கத்தமலன் முகத்துக் கரியவாகி, புடைபரந்து, செவ்வரியோடி நீண்ட அப்பெரிய வாய கண்கள் என்னைப் பேதமை செய்தனவே' என்றார் திருப்பாணாழ்வார் *(அமலனாதிபிரான்-8)*

வாயும் : அணி அரங்கனார் அரவின் அணைமிசை மேய மாயனார் செய்யவாய் என்னைச் சிந்தைகவர்ந்ததுவே! என்றபடி *(அமலனாதிபிரான்-7)* ,வாய் கமலும் போலும் *(திரு. நெடு.21)*

தன்னலர்ந்த நறுந்துழாய் மலரின் கீழே: அவனுக்கு துளப மாலை தானே அடையாளம், அவன் அணிந்திருக்கும் துளப மாலையில் உள்ள துளவங்கள் காட்டிலே தாமாக வளர்ந்து மலர்ந்தவை. அவனுடைய திருமேனித் தொடர்பினால் அவற்றின் இயற்கையான நறுமணம் அதிகமானது அப்படிப்பட்ட மாலையின் கீழ்வரையில்

தாழ்ந்திலங்கு மகரம் சேர் குழையும் காட்டி: கீழிறங்கித் தொங்குகின்ற அவனது மகர குண்டலங்கள். அவனுடைய மேனியழகு தோள் கண், வாய் என்று அவனது உறுப்புகளையும் வியந்தாள். ஆனாலும், இந்தப் பெண்களுக்கு ஆபரணங்களின் மீதுள்ள ஆசை எந்த நேரத்திலும் குறையாது என்றபடி மகரம் சேர் குழை இருபாடு இலங்கியாட-21 , கண்டேன் கனமகரக் குழையிரண்டு (22) என்று முன்பே பாடி, மறுபடியும் இப்பொழுதும் பாடப்பெறுவதற்கு அவை கனக குண்ட லங்கள் கூட அல்ல. மகர குண்டங்கள் தாமே என்றாலும், அந்த மகரகுண்டலங்கள் எம்பெருமான் மகரமீனாக அவதாரம் செய்து சத்யவரதனோடு வகைக்கு ஓர் உயிராக பிரளயக் காலத்தில் காப்பாற்றியதால் தானே இப்பொழுது நாமெல்லாம் இருக்கிறோம். அதற்கு நன்றி கூறும் வகையில் அந்த மகரக் குண்டலங்களை பரகாலநாயகி போற்றிப் பரவுகின்றாள்.

என் நலனும் என் நிறைவும் என் சிந்தையும் என் வளையுங் கொண்டு: எனக்குத் தன்னைக் கொடுக்க வந்தவர் போல வந்தார். தன்னை முழுதும் எனக்குத் தந்தாரில்லை. ஆனால் என்னுடைய எல்லாவற்றை கொள்ளை கொண்டு போனார்.

என் நலன்- அழகு, நறுமணம், மென்மை முதலான ரூப குணங்களும் நாணம், மடம் அச்சம் பயிர்ப்பு, முதலான ஆத்ம குணங்களையும்.

என் நிறைவும் என்னுடைய பெண்மை, நாயகனுடைய ஆண்மையை அழிக்கக் கூடியது, அடக்கம் என் சிந்தையும் இந்த ஆற்றாமைக்குக் காரணமான என் நெஞ்சத்தையும்,

என்னுடைய வளையல்களையும் கொண்டுபோனார். (என் ஒளி வளையும் மாநிறமும் கொண்டார் 23)என்று முன்பே சொன்னாள் மறுபடியும் சொல்கிறார்.

என்னையாளுங்கொண்டு: என்னைத் தனக்கு அடிமையாக்கி விட்டான். என்னுடைய உடைமைகளை எல்லாம் பறித்துக் கொண்டு போனதோடு நில்லாமல் அவையனைத்தையும் சுமந்து செல்லும் அடிமையாகவும் என்னைச் செய்தான். அவனோடு கலந்து பரிமாறின காதலை இவள் அவனுக்கு அடிமை செய்வதாகவே நினைத்திருக் கிறாள்.

கொம்மை முலைகள் இடர்தீரக் கோவிந்தற்கோர்
குற்றேவல்' (நாச்சியார் திரு. 12-9)

'குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது' (திருப்பாவை 29) என்று கோதை நாச்சியாரும் அடிமைத் தனம் என்று தானே கூறுகிறார்.

பொன்னலர்ந்த நறுஞ் செருந்திப் பொழிலினூடே: பொன் நிறமான மஞ்சள் பூக்களை உடைய சுரபுன்னைச் சோலையின் வழியாக என் மனதுக்குப் பிடித்த மணம் மிக்க மலர்ச் சோலை களின் ஊடே சென்று.

புனல் அரங்கம் ஊரென்று: காவிரி, கொள்ளிடம் என்ற இருநதிகளாலும் சூழப்பட்ட நீர் வளம்மிக்க திருவரங்கம் தான் என்னுடைய ஊர் என்று சொல்லி, அப்படியென்றால் திருவாலி-திருநகரியிலிருந்து திருவரங்கம் வரை சோலையாய் இருந்ததா என்றால் பட்டர் அருளிச் செய்தபடி 'காளமேகம் போன்ற எம்பெருமான் அருளைப் பொழிந்துகொண்டு போகும்போது கண்டவிட மெல்லாம் தளிரும் முறியுமாய்ச் சோலையாகாதோ' எனலாம். அல்லது இவர் இருந்தமிழ்

நூற்புலவர் அல்லவா அதனால் தமிழ்நூல் மரபுப்படி பிரிந்தவர்கள் வருந்தும் (பாலை) நிலத்துக்குரிய மரம் செருந்தியாகையாலே அதைச் சொல்கிறாள்.

போயினாரே: எல்லா உறவும் உடையவராய் இருந்தும் இப்படி என்னை விட்டுப் போய்விட்டாரே. என்னோடு தங்கியிருக்கலாம், அல்லது என்னைத் தம்முடன் அழைத்துச் சென்றிருக்கலாம் இவை இரண்டையும் செய்யாமல் போய் விட்டாரே!

பாசுரம்26

தேமருவு பொழிலிடத்து மலர்ந்த போதைத்
    தேனதனை வாய் மடுத்துன் பெடையும் நீயும்
பூமருவி இனிதமர்ந்து பொறியிலார்ந்த
    அறுகால சிறுவண்டே! தொழுதேன் உன்னை
ஆமருவி நிரைமேய்த்த அமரர் கோமான்
    அணியழுந்தூர் நின்றானுக்கின்றே சென்று
நீமருவி அஞ்சாதே நின்றோர் மாது
    நின் நயந்தாள் என்று இறையே இயம்பிக்காணே.

பதவுரை:

தேன்மருவு: தேன் வெள்ளம் நிறைந்திருக்கப்பெற்ற

பொழில் இடத்து: சோலைப் புறத்திலே

மலர்ந்த போது: மலர்ந்த பூக்களிலுண்டான

தேன் அதனை: தேனை

வாய்மடுத்து: பருகி

உன் பெடையும் நீயும்: நீயும் உனது பேடையும்,

பூமருவி: பூவிலே பொருந்தி

இனிது அமர்ந்து: இனிமையாகப் புணர்ந்து.

பொறியின் ஆர்ந்த: புள்ளிமிகப் பெற்ற,

அறுகால சிறுவண்டே: ஆறுகால்களையுடைய சிறிய வண்டே

தொழுதேன் உன்னை: வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆநிரை: பசுக்கூட்டங்களை

மருவிமேய்த்த: விரும்பி மேய்த்தவரும்

அமரர் கோமான்: நித்ய சூரிகளுக்குத் தலைவனும்,

அணி அழுந்தூர் நின்றானுக்கு : அழகி திருஅழுந்தூரிலே நிற்பவனான எம்பெருமானுக்கு

இன்றே நீ சென்று : இப்போதே நீ போய்

அஞ்சாதே: பயப்படாமல்

மருவி நின்று: அருகில் போய்

ஓர்மாது நின்நயந்தாள்: ஒரு பெண் உன்மீது ஆசைப்படுகிறாள்

என்று இறையே: மெதுவாக

இயம்பிக் காண் : சொல்லிப்பார்.

பொழிப்புரை:

இரண்டாவது பத்துபாசுரங்களில் தாய் சொன்ன அறிவுரைகளைச் செவிமடுக்காமல் தன் நிறையழிந்து திருவரங்கத்திற்குச் சென்று அங்கு குடைந்து நீராடவும், அங்குச் செல்வதற்கு வழிதெரியாதவள் போல் திருக்குடந்தையையும் திருநீர்மலையையும் திருப்பேர் நகரும் செல்வோம் என்றுதோழியிடம் பேசுவதைக் கேட்ட தாய், இவள் வயப் பட்டிருப்பது எம்பெருமான் என்று அறிந்து மகிழ்ந்து, தலைவி

பிரிவாற்றாமையில் தவிப்பதைப் பார்த்து தோழியை அவளிடம் அனுப்பி என்ன நடந்தது என்று கேட்டுத் தெரிந்து கொள். என்னிடமும் ஊராரிடமும் பேசாத என் பெண், உன்னிடம் மனந்திறந்து பேசுவாள் என்று சொல்லவும், தோழி தலைவியைப் பார்த்து 'உனக்கும் தலைவனுக்கு மிடையே என்ன நடந்தது' என்று கேட்கத் தலைவி 21,22 பாசுரங்களில் எம்பெருமான் இளவலுடன் வில்லேந்தி வந்தது தன்னோடு கலந்து பிறகு 23 ஆம் பாசுரத்தில் பிரிவாற்றாமை என்னும் சிந்தை நோயை எனக்குக் கொடுத்து என்னுடைய வளையல் களையும் மாநிறத்தையும் எடுத்துக் கொண்டு சென்றான் என்றாள். நீ தடுக்க வில்லையா என்று தோழிகேட்டதற்கு கருடன் வந்து அழைத்து சென்றான் என்றாள். 24,25 பாசுரங் களில் வந்தவன் எம்பெருமான் என்று தான் உறுதியாக உணரும்படி சங்கு,சக்கரங்களோடும் நித்ய சூரிகள் சூழ வந்து நின்றான். அதனால், அவனைத் தடுக்க இயலவில்லை என்றாள். இருபத்தைந்தாம் பாட்டில் அவன் தன்னுடைய எல்லாவற்றையும் எடுத்துக் கொடுப்பவன் போல் வந்து என்னுடைய உடைமைகளை எல்லாவற்றையும் கொண்டு சென்றான். அவனுக்குத் தன் பிரிவாற்றாமை நோய் தெரியாதோ என்ற எண்ணத்தில் அடுத்த இரண்டு பாசுரங் களில் முறையே பொறி வண்டையும் செங்கால் நாரையை யும் தூது விடுகிறாள்.

விளக்கவுரை:

தேமருவு பொழிலிடத்து: தேன் என்றும் மாறாதிருக்கும் சோலைகளையுடைய தேசத்தில் மருவு என்னும் பதத்தாலே தேன், என்றும் உள்ளது என்பதையும், நிறைந்திருக்கிறது

என்பதையும் பொழில் என்பதாலே அப்படிப்பட்ட மரங்கள் நிறைந்த சோலை என்றும் சொல்லப்படுகிறது.

மலர்ந்த போதைத் தேனதனை வாய்மடுத்து: பூ மலர்ந்த உடன் உண்டான தேனாகையால், இனியதாகவும் மிகச்சுவை யுடையதாயும் இருக்கும். பூ மலர்ந்து நேரமாகி விட்டால், தேன் அளவு குறைவாகவும் பழையதாய் இருக்கும் அதனால் மலர்ந்த போது உண்டாகிற தேனைப் பருகி என்கிறது.

பூவிரிய மது நுகரும் என்று பெரியதிருமொழியிலும் (பெரிய திரு 3 6-1) இது சொல்லப்படுகிறது.

வாய் மடுத்து: கணவனும் மனைவியும்: ஒரே இலையில் உண்பது போல அத்தேனை வாயில் வைத்துக்கொண்டு ஆண்வண்டும் பெண் வண்டும் ஒன்றுக்கொன்று வாயில் ஊட்டி விடும்படியாக.

உன் பெடையும் நீயும்: உன் வசப்பட்டிருக்கும் பெண் வண்டும் அதன் வசப்பட்ட நீயும்.(உன் பெடையும் நீயும்) ஆணும் பெண்ணுமாகச் சேர்ந்திருக்கும் நீங்கள் தலைவனைப் பிரிந்திருக்கும் எனக்கு உதவ வேண்டுமல்லவா.

பூமருவி : பூவை அணைத்துக்கொண்டு, மென்மலராய் பள்ளி வெம்பள்ளியாலே (திருவாய் 9-9-4) மலர்ப்படுக்கை இவளுக்கு நெருப்புப் படுக்கை போலுள்ளதால், அவளுக்கு இது ஒரு சாகசச் செயலாகத் தோன்றுகிறது.

இனிதமர்ந்து: இனிதாக ஆணும் பெண்ணும் சேர்ந்து, தான் தலைவனோடு சேர்ந்து உடனே பிரிந்தது போல் அல்லாமல், ஆணும் பெண்ணும் சேர்ந்து அமர்ந்து

பொறியிலார்ந்த: பொறி என்று புள்ளியைக் குறிப்பிடப் படுகிறது. கணவன் என்பவன் அணிகலன்களுக்கு மேல் அணிகலனாகிப் பெண் ஒளிபெறக் காரணமானவன்

அறுகால சிறுவண்டே: ஆறுகால்களை உடைய சிறிய வண்டே! வண்டுக்கு ஆறுகால்கள் உள்ளது இயற்கை என்பதால் அதைப் பற்றி இங்குச் சொல்வானேன் என்றால் இரண்டு கால்களையுடைய மனிதர்களையும் நான்கு கால்களையுடைய குதிரை போன்ற மிருகங்களை விட ஆறுகால்கள் இருப்பதால் அதிவேகமாகச் செல்லும் என்பது ஒரு விளக்கம். ஆனால் வண்டு கால்களால் செல்லாமல் இறக்கையுடன் பறப்பதால் இந்த விளக்கம் அத்தனை ஏற்புடைத்தாக இல்லை.

பட்டர் அருளிச்செய்ததாவது, தொழுதேனுன்னை, என்று மேலே இருக்கிறபடியாலே என் தலையில் வைப்பதற்கு ஆறுகால்களைப் பெற்ற சிறிய அழகிய வண்டே. தூது சென்று திரும்பி வந்தால் அதனைத் தலைமேல் வைத்துக்கொண்டு கூத்தாட இருப்பதனால் வண்டு இங்கு ஆசார்யனைக் குறிப்ப தாகக் கொண்டால், ஆசார்யனிடத்தில் இருக்கும் மரியாதை போல் ஆசாரிய புத்திரனிடத்திலும், ஆசார்ய பத்தினி யிடத்திலும் பணி புரிய வேண்டும். அம் மூவர்கால்களும் சேர்ந்து ஆறுகால்கள் ஆகின்றன. திருவாய் மொழியில் (9-7-1) எங்கானம் அகங்கழி வாயிரை தேர்ந்து இங்கினிது அமரும் செங்கால மடநாராய்- திருமுழிக்களத்துறையும் கொங்கார் பூந்துழாய் முடியென் குடக்கூத்தற் கென்தூதாய் நுங்கால்கள் எந்தலை மேல் கெழுமீரோ நுமரோடே. என்ற பாசுரத்தின் கடைசி அடி இங்குக் குறிப்பிடத் தக்கது.

சிறுவண்டே: நீ முதலிலேயே சிறியதாய் இருப்பதால், அனுமன் இலங்கையில் தன் வடிவை சிறியதாக்கிக் கொண்டது போல் உனக்குச் செய்யத் தேவையில்லை. அனுமனைப் போல் சீதையிடம் எப்படிப் பேசுவது என்று ஆராய்ந்த அனுமனைப் போல் நீ சிந்திக்க வேண்டியதில்லை

தோளில் சாத்தப்பட்டிருக்கும் மாலையில் இருந்து எவரும் அறியாமல் பேசக்கூடிய பிறப்பல்லவா உன்னுடையது.

தொழுதேன் உன்னை: நீ ஆச்சார்யனிடத்தில் இருப்ப தால் (முன்பே குறிப்பிட்டது போல்) உன்காலில் விழுந்தேன். உன்னை வணங்கித் துதித்தால் தானே பிரிந்துபோன எங்களை எம்பெருமானுடன் சேர்த்துவைக்கப் போகிறாய் அதனால் உன்னைத் தொழுதேன்.

ஆளவந்தார் ஸ்தோத்ர இரத்தின இரண்டாவது பாசுரத்தில் குறிப்பிட்டது போல (மதுவை வென்ற விஷ்ணுவின் திருவடித் தாமரைகள் பற்றிய உண்மையான அறிவினுடைய பெருமைக்கும் பக்தியினுடைய பெருமைக்கும் எல்லை நிலமான எனக்கு நாதரான நாதமுனிகளை வணங்குகிறேன், அவருடைய திருவடிகளே எனக்கு இவ்வுலகிலும், வீட்டுல கிலும் அடைக்கலமாகவும் அடையத் தக்கனவாகவும் இருக்கின்றன.

என்னை நீ எதற்காகத் தொழவேண்டும் என்னிடம் உனக்குள்ள எதிர்பார்ப்பு என்னவென்று வண்டு கேட்கவும் அமரர்கோமான் : (அயர்வரும் அமரர்கள் அதிபதி (திருவாய் 1-1-1) ஆகிய, நித்ய சூரிகளுக்குத் தலைவனாகிய என் தலைவனிடம் சென்று என நாயகி சொல்லவும்,

அவனை நாங்கள் அணுக முடியுமோ என்று வண்டு கேட்க, 'அமரர்க்கு அறியானை தமர்கட்கு எளியானை (திருவாய் 10-5-8) என்றபடி

ஆமருவி நிரைமேய்த்த: அவன் அவ்வளவு பெரியவனாக இருந்தும் பசுக்களின் பின் சென்று அவற்றைக் காப்பாற்றும் எளிய குணமுடையவன். கறவைகள் பின்சென்று கானம் சேர்ந்துண்பவன் (திருப்பாவை -28) அவன் மிகவும் எளியவன் அவனைப்பார்ப்பது அப்படியொன்றும் முடியாத தல்ல.

அது முன்பு கிருஷ்ணாவதாரத்தில் அல்லவா நடந்தது என்று வண்டு கேட்க இல்லை அவன் இப்போது அர்ச்சாவ தாரத்தில் திருவழுந்தூரில் ஆமருவியப்பனாகக் கோயில் கொண்டு இப்போதும் அருள் செய்து கொண்டிருக்கிறான் என்று அணி அழுந்தூர் நின்றானுக்கு என்றாள். அவன் 'புனலரங்கம் நம்மூர்' என்று அல்லவா சொல்லிப் போனான். இவள் அணி அழுந்தூர் நின்றானுக்குத் தூது அனுப்புவதேன்? என்றால், என்னைப் போல் பிரிவாற்றாமை அவனுக்கும் போகும் வழியில் திருவழுந்தூரில் நின்றிருப்பான்.

நின்றானுக்கு: அல்லது திருவரங்கத்தில் நிலை கொளப் பெறாமல் திரும்பி வருகின்ற வழியில் திருவழுந்தூரில் என்னிடமிருந்து தூது வரட்டும் என நின்றிருப்பான் அவனிடம்

இன்றே சென்று: இப்பொழுதே புறப்பட்டுச் சென்று, நாளை என்பது சோம்பேறிகளின் வார்த்தை சுறுசுறுப்புக்குப் பேர்போன வண்டல்லாவா. அதனால் இன்றே இப்பொழுதே புறப்பட்டு சென்று

நீ மருவி: அவனிடம் சென்று அவனுடைய துளப மாலையில் அமர்ந்து

அஞ்சாதே நின்று: அவன் தேவனாக இருப்பானோ என்று அஞ்சாமல்,நீங்கள் என்னுடைய தூதுவர்களாகப் போவதால் அஞ்ச வேண்டியத் தேவையில்லை.

சரி செல்கிறோம் இருவராக செல்கிறோம், நீ அவனைப் பிரிந்து வருந்துவதுபோல் என் பேடை வருந்தக்கூடாது என்று நாங்கள் இருவரும் செல்கிறோம். அப்படி சென்று என்ன சொல்ல வேண்டும்?

ஓர் மாது: ஒப்பற்ற ஒருத்தி- ஒருத்தி என்று சொன்னாலே போதும் அவன் அறிவான். வேட்டையாடச்சென்ற வேடனிடம் மான் என்று சொன்னவுடன் தான் அம்பெய்து காயப்பட்ட மான் என்று நினைவுக்கு வருவதைப்போல், என் நலனும் என்னிறைவும், என் சிந்தனையும் என்வளையுங் கொண்டு போனவன் ஒருத்தி என்று சொன்னவுடன் அவனுக்குத்தெரியும்.

நின்னயந்தாள்: நீ சென்றாலே, அவன் நீ என்னிடமிருந்து வருகிறாய் என்று அறிந்துகொள்வான். ஒருத்தி என்று சொன்னவுடன் என்னிடமிருந்து வருகிறீர்கள் என்பதை அறிவான் இருந்தாலும் தூது சென்றவர்கள் ஏதாவது பேசினால்தானே சென்றவர்க்கும் பெருமை, அனுப்பிய வர்க்கும் பெருமை. அதனால் 'நின்னயந்தாள்' உன்னை ஆசைப்பட்டாள் என்று உடனே அறிந்து கொள்வான்.

பிரிந்தால் உயிர் தரிக்க முடியாத சிறப்புடைய உன்னை யன்றோ ஆசைப்பட்டாள்.

என்று இறையே இயம்பிக் காணே: என்று சிறிது சொல்லிப்பாரேன். உனக்குக் கிடைக்கும் மரியாதை யிலிருந்து நீயே தெரிந்து கொள்வாய்.சீதையைக் கண்டு வந்த அனுமனை, இராமன் கட்டித்தழுவி அவனுக்கு மரியாதை செய்ததைப்போல் உங்களுக்குத் தகுந்தமரியாதை கிடைக்கும் போது நீங்கள் அறீவீர்கள்.

பாசுரம் 27

செங்கால மட நாராய்! இன்றே சென்று
திருக்கண்ணபுரம் புக்கு என் செங்கண்மாலுக்கு
என்காதல் என் துணைவர்க்கு உணர்த்தியாகில்
இது வொப்பது எமக்கின்பம் இல்லை நாளும்
பைங்கான மீதெல்லாம் உனதே யாகப்
பழனமீன் கவர்ந்துண்ணத் தருவன். தந்தால்
இங்கே வந்து இனிதிருந்து உன்பெடையும் நீயும்
இரு நிலத்தில் இனிதின்பம் எய்தலாமே!

பதவுரை:

செங்கால மடநாராய்!: சிவந்த கால்களையுடைய நாரைப் பறவையே

இன்றே சென்று: இன்றைக்கே புறப்பட்டு

திருக்கண்ணபுரம் புக்கு: திருக்கண்ணபுரத்தில் புகுந்து என் செங்கண்மாலுக்கு: செந்தாமரைக்கண்ணராய் என்மீது காதல் கொண்டவருக்கு

என் காதல்: என்னுடைய விருப்பத்தை

என் துணைவர்க்கு; எனக்குத் துணைவரான சௌரிராஜப் பெருமாளிடம்

உரைத்தியாகில்: தெரியப்படுத்தினாய் ஆகில்.

எமக்கு: அவரைப்பிரிந்து தவிக்கின்ற எனக்கு

இது ஒப்பது இன்பம் இல்லை: இதற்கு இணையான மகிழ்ச்சி வேறு ஒன்றும் கிடையாது.

ஈது: இந்தப் பைங்கான மீதெல்லாம்:சோலைப்பரப்பு முழுவதும் நாளும் நீ உள்ள காலம் வரையும்

உனதே ஆக: உனக்குச் சொந்தமாகச் செய்து.

பழனமீன்: மீன்களை(வயலில் உள்ள மீன்களை) நீர் நிலங்களிலுள்ள மீன்களை

கவர்ந்து உண்ண: நீ கொத்தி உண்ணும் படியாக

தருவன்: கொடுப்பேன்

தந்தால்: அப்படி நான் கொடுத்தபின்

உன் பெடையும் நீயும்: உனது பெண்பறவையும், நீயும்

இனிது இருந்து: இனிமையுடன் இருந்து

இருநிலத்தில்: இப்பரந்த பூமியில்

இனிது இன்பம் எய்தலாம்: பெருமகிழ்ச்சியுடன் வாழலாம்.

பொழிப்புரை:

தூது இந்தப் பாசுரத்திலும் தொடர்கிறது. சென்ற பாட்டில் வண்டுகளைத் தூது விட்டாள். ஆனால், அது திரும்பச் செய்திகொண்டு வரும் வரை பொறுக்க முடியாதவளாய், வண்டை விட வேகமாகப் பறக்கக் கூடிய நாரைப்பறவை களை இந்தப் பாட்டில் தூதுவிடுகிறாள். திருக்கண்ணபுரத்தில் உள்ள சௌரிராஜப் பெருமாளுக்குத் தூது விடுகிறாள். திருக்கண்ணபுரத்திற்கும் நாச்சியார் கோவில் என்றழைக்கப் படும் திருநறையூருக்கும் 10 பதிகங்கள் பாடியவர் ஆழ்வார். ஆனால் திருநறையூரில் நாச்சியாருக்கு ஏற்றம். தவிரவும்,

நறையூர் நின்ற நம்பியிடம் பஞ்ச சமஸ்காரங்களைப் பெற்றதனால் ஆசாரியனிடம் காதல் செய்தி சொல்லக் கூடாது என்று சௌரிராஜப் பெருமாளுக்கு நாரையைத் தூது விடுகிறார்.

விளக்கவுரை:

செங்கால மடநாராய்: நாரையின் சிவப்புக் கால்களைக் கொண்டாடுகிறாள். அதனுடைய கால்கள் அவளுக்கு எம்பெருமானுடைய சிவந்தகால்களை நினைவூட்டுகின்றன.

(நீள் நிறத்தால் சோலை நிறம் பெயர, நீடியதன்
தாள் நிறத்தால் பொய்கைத் தலம் 'சிவப்ப')

நளவெண்பா 25

நாரையின் சிவந்த கால்கள் எம்பெருமானுக்குத் தன்னுடைய காலை நினைவுப் படுத்தும். அவளுக்குக் கால் பிடித்த வனல்லவா அவன். அதனால் நாரையின் சிவந்த கால்களே அவளுடைய நெஞ்சுக்கு உகந்தது. இந்தக் கால்களைப் பார்த்த உடனே அவனுக்கு இவள் நினைவு வரும்.

மடநாராய்:- மதிகெட்ட நாராய் என்று புகழ்ந்து கொண்டிருந்தாள். இப்பொழுது அவளைக் குறைத்து பேசுவது ஏன் என்றால் இந்நாரைப் பறவைகள் எந்நேரத்திலும் தன் பெடையுடன் கூடியிருக்கும். அதே நேரத்தில் காதல் பரிமாற்றத்தில் அவை திறமை படைத்தவையாய் இருக்கும் அல்லது இந்நாரைகள் அச்சம், நாணம், பயிர்ப்பு ஆகிய நற் குணங்களுடன் இளமை என்னும் குணத்தையும் குறிப்பதால் தூது செல்வதற்குத் தேவையானவைகளை, அந்நாரைப் பறவை பெற்றிருக்கிறது.

அவள் நாராய் என்று விளித்த உடனே தான் எம்பெருமானுடைய நாயகி என்பதால் நீ கைக்கூலி தந்து என் வேலையைச் செய்ய வேண்டுமென்றே என்க. நீ இதைக் கேட்கவும் வேணுமோ உனக்கு என்ன வேலை செய்ய வேண்டும் என்று சொன்னால் போதாதா என்று நாரைக் கேட்பதாகக் கொண்டு

இன்றே சென்று: நாளைக்கு என்று சொல்லக்கூடியதல்ல இந்த வேலை.

''திங்கள் ஒன்றின் என் செய்தவம்தீர்ந்ததால்
இங்கு வந்திலனே எனின் யாணர் நீர்க்
கங்கை யாற்றங்கரை, அடியேற்கும், தன்
செங்கையால் கடன் செய்க''என்று செப்புவாய்
(சுந்தரகாண்டம், சூடாமணிப்படலம்32)

ஒரு மாதத்தில் அவன் வராவிட்டால் என்னுடைய ஈமக்கடன்களை கங்கையாற்றங்கரையில் செய்யச் சொல்வாய் என்று சீதை அனுமனுக்குச் சொல்லவும் அதைக்

கேட்ட இராமன் சீதை ஒருமாதம் உயிர் வாழ்ந்தால் வெகு காலம் பிழைத்திருந்தவளாகிறாள். கறுத்த கண்ணை உடைய அவளைவிட்டு ஒருகண நேரமும் நான் பிழைத்திருக்க மாட்டேன் என்று இராமன் சொல்கிறான். *(வால்மிகி. யு.கா.66-10)* அதனால் இப்பொழுதே நீ புறப்பட்டு போய்

திருக்கண்ணபுரம் புக்கு: 'திருக்கண்ணபுரம்' என்று ஆழ்வார் சொல்லும் ஓசை அவருக்கே உரித்தானது. அது பராசரபட்டர் 'அழகிய மணவாளப் பெருமாள்' என்று நம்பெருமாளைச் சொல்வது போன்றதும், எம்பெருமானாரே சரணம் என்று சோமாசியாண்டான் சொல்வது போன்றதும் அது ஒரு

தனித்தன்மை பெற்றது. திருக்கண்ணபுரத்துக்குப் பத்துப் பதிகங்கள் பாடியவரல்லவா இவர்.

சென்ற பாசுரத்தில் வண்டுகளைத் திருவழுந்தூருக்கு தூது விட்டவர், நாரையை அங்குத் தூதுவிடாமல் திருக்கண்ண புரத்திற்கு விடுவானேன்? என்றால் வண்டுபோய் தூது சொன்னவுடன் அவனால் அங்கு ஒரு கணங்கூடத் தரிக்காமல் தானும் வேகமாக இந்நேரம் திருக்கண்ணபுரம் வந்திருப்பான். அங்கே காத்திருந்த,

என் செங்கண் மாலுக்கு: தம் கண்ணழகைக்காட்டி என்னை வெற்றிகொண்டு, தமக்கு அடங்கியிருக்கும் படி செய்தவற்கு "கரியவாகிப் புடைபரந்து செவ்வரியோடி நீண்ட அப்பெரியவாய கண்கள்" என்றாரல்லவா திருப்பாணாழ் வார். அப்படிப்பட்ட சிவந்த கண்களைஉடைய என்னுடைய அரங்கமாலுக்கு

என் காதல்: என்னுடைய காதல் அவருடைய காதலைப் போல் வெளியே காணமுடியாத காதல் அல்ல. என்னுடைய உடற்குறிகள், என்னுடைய அணிகலன்கள், என்னுடைய மேனிநிறம் என்று எல்லாம் தம் தன்மை மாறி, என்னுடைய நிறையழிந்த தன்மையை வெளி உலகிற்கு காட்டி விடுவதாய் இருக்க, அவர் தம் ஆபர்ணங்கள் தன்னோடு இருக்கும்படி 'ஒரு கையில்சங்கு ஒரு கை மற்று ஆழி ஏந்தி' அவருடைய சிறிதும் மாறாமல், மின்னிலங்கு திருஉருவும் பெரிய தோளும், கரி முனிந்த கைத்தலமும் கண்ணும் வாய் என்று உருக்குலையாமல் இருக்கிறார். இருகையில் சங்கிவை நில்லாமல் நான் உடல் இளைத்து, என் ஒளிவளையும் மாநிறமும் அவருக்கிழந்து எல்லாம் அவனுக்கிழந்த நிலையில் அவனுடைய காதல் மட்டும் அழியாமல் என் நெஞ்சு நிறைந்திருக்கிறது. இந்த அழியாத என்னுடைய காதலை.

என்துணைவர்க்கு: உடனிருப்பவனைத் துணைவன் என்று சொல்ல வேண்டியிருக்க, பிரிந்து சென்றவனைத் துணைவன் என்று எப்படிச் சொல்கிறாள்? என்றால், அவனுடைய உருவம் தான் பிரிந்து சென்றது அவனுடைய நினைவு அவளை விட்டு நீங்காது இருந்த படியால் என் துணைக்கு அவனது நினைவே எனக்குத் துணையாக இருக்கிறது. என்னுடைய பிரிவாற்றா மையைப் போக்கக்கூடிய ஒரே ஆளாகிய என் துணைவர்க்கு உரைத்தியாகில் சொல்லுவாயாகில் தூது செல்பவர்களைக் கட்டளையிட முடியாதாகையால், உனக்குத் திருஉள்ள மாகில் உரைத்தியாகில், நீயும் அவரது அழகில் ஈடுபட்டு சென்ற வேலையை மறந்துவிடாமல் என் நிலையை அவருக்குத் தெரிவிப்பாயாகில்

இது வொப்பது எமக்கின்பமில்லை: இதற்கு ஈடான இன்பம், மகிழ்ச்சி தரக்கூடியது, வேறு ஒன்றும் எனக்குக் கிடையாது. சொல்வதனாலே மட்டும் இன்பம் எப்படிக் கிட்டும் என்றால் என்னுடைய நிலைமையை அறியாமல் அவன் நித்திய சூரிகள் புடைசூழ இருக்கிறான். நீ சொன்ன உடன் அவனுக்கு அங்கு ஒரு நொடியும் தரிக்காமல் என்னைப்பார்க்க வந்து விடுவான் என்பதால் மகிழ்ச்சி. அப்படிச் சொன்னால் அதற்குக் கைம்மாறாக,

நாளும் : எப்போதும். உள்ளுறைப் பொருளில் நாரை ஆச்சாரியானை குறிப்பதால் ஆசாரியன் ஒருமுறை செய்ததை சீடன் ஆயுள் வரை மறக்கக்கூடாது என்பதனால்,

பைங்கானம் ஈதெல்லாம்: இங்குள்ள பசுமை நிறைந்த மரங்களை உடைய சோலை முழுவதும் ''பொன்னுல காளீரோ புவனி முழுதாளீரோ என்னலம் கொண்ட பிரான் தனக்கு என் நிலைமை உரைத்தே'' என்றாளல்லவோ பராங்குச நாயகி? என்னுடையதை

உனதேயாக: நீ அனுபவிக்கும் படி அல்லாமல், அது உன்னுடைய முழு உரிமையாகும்படி கொடுத்து விடுகிறேன். அது மட்டுமா?

பழனமீன் கவர்ந்து உண்ணத் தருவன்: உனக்குப் பிடித்தமான நன்னீரிலே வாழ்கின்ற மீன்களைப் பிடித்து உனக்கு உணவாகக் கொடுக்கிறேன். கடல் நீரில் துவர் நீரிலே மீன் பிடிக்க வெகுதூரம் கடலுக்குள் செல்ல வேண்டும் அப்படிக் கிடைக்கும் துவர் நீரில் கிடைக்கும் மீன்வகைகளை விட நன்னீர் மீன்கள் அவளுக்குச் சுவை அதிகமாகப் படுவதால் அதைப்பிடித்துத் தருகிறேன்'' என்று சொல்கிறாள்.

தந்தால்: இங்கே வந்து என்னுடைய கைம்மாற்றை ஏற்றுக்கொள்வதுமட்டுமின்றி நீங்கள் அதை என் கண் முன்னே அனுபவிக்கவேண்டும்.

உன் பெடையும் நீயும்: ஆண் நாரையாகிய நீ தனியே வந்தால் போதாது. அது உனக்கு இன்பமாக இருக்காது என்பதால் உனது பெண் நாரையோடு கூடவந்து நான் தலைவனைப் பிரிந்து அவதிப் படுவதைப் போல் உன் பெடை படாமல் அத்தோடும் வந்து, மகிழ்ச்சியாக இருந்து

இரு நிலத்தில் இனிதின்ப மெய்தலாமே: அளவற்ற துன்பமுடைய தான இந்த மண்ணுலகில் நீங்கள் இருவரும் நீங்காத செல்வங்களை எல்லாம் பெற்று நீண்டநாட்கள் வாழலாம். இப்படிப்பட்ட அனுபவம் பரமபதத்திலும் கிடைக்காது என்பதால் அதைவிட அதிக இன்பத்தைப் பெறலாம் என்று கருத்து.

பாசுரம் 28

தென்னிலங்கை அரண்சிதறி அவுணன் மாள
சென்றுலக மூன்றினையும் திரிந்தோர் தேரால்
மன்னிலங்கு பாரதத்தை மாள ஊர்ந்த
வரையுருவின் மாகளிற்றைத் தோழீ! என்றன்
பொன்னிலங்கு முலைக்கு வட்டிற்பூட்டிக்கொண்டு
போகாமை வல்லேனாய்ப் புலவி எய்தி
என்னிலங்க மெல்லாம்வந் தின்ப மெய்த
எப்பொழுதும் நினைந்துருகி யிருப்பன் நானே.

பதவுரை:

தோழீ : என்னுடைய அன்புத் தோழியே

தென் இலங்கை: தென்னிலங்கையிலுள்ள

அரண்: கோட்டைகள்,

சிதறி: அழிந்து

அவுணன் மாள: இராவணனும் இறக்கும்படியாக.

சென்று: அங்கு எழுந்தருளி வெற்றி பெற்றவரும்

உலகம் மூன்றினை திரிந்து: திருவிக்ரமாவதார காலத்தில், மூவுலகங்களையும் நடந்து அளந்தவரும்

மன் இலங்கு: அரசர்கள் நிறைந்த,

பாரதத்தை; மகாபாரதப் போரில் அனைவரும் மடியும்படியாக,

ஓர் தேரால் ஊர்ந்த ஒருதேரைக்கொண்டு நடத்திய கொண்ட

வரையுருவின் மாகளிற்றை: பெரிய யானைப் போன்றவருமான பெருமாளை

என்தன்: என்னுடைய

பொன்இலங்கு முலைக்கு வட்டில்: பொன்போல் அழகிய முலைகளாகிய கம்பத்தில்

பூட்டிக்கொண்டு: இணைத்துக் கொண்டு,

போகாமை வல்லேனாய்: அப்பால் போக ஒண்ணாதபடி தடுத்து வளைக்க வல்லவளாகி,

புலவி எய்தி: அவரைப் பிரிந்த துன்பமெல்லாம் அவரெதிரே பட்டு

என்னில் அங்கமெல்லாம் வந்து இன்பம் எய்த: என்னுடைய எல்லா அவயங்களும் என்னிடத்தில் வந்து சேர்ந்து மகிழ்ச்சி அடையும்படியாக

எப்பொழுதும்: எல்லாக் காலத்திலும்

நான் நினைந்து: அவரையே சிந்தித்து

உருகி இருப்பன்: மனமுருகி இருப்பேன்.

பொழிப்புரை: இருபத்தாறு மற்றும் இருபத்தேழாவது பாசுரங்களில் முறையே வண்டையும் நாரையையும் தூதுவிட்ட ஆழ்வார் இப்பாட்டில் ஊடலைக்காட்டுகிறார்.

நம்மைப் பிரிவாற்றாமையால் இந்த அளவுக்குத் தவிக்க விட்ட தலைவன் தன்னிடம் திரும்பி வருவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. அப்படி அவன் வந்தாலும் சிறிது காலம் நம்மோடு கூடியிருந்து நம்மை மறுபடியும்

தவிக்கவிட்டுப் போய் விடுவான். அதனால் அவன் வந்தால் அவனிடம் பேசக்கூடாது என்று எண்ணித் தான் துயரில் உழன்றதை அவன் அறியாதவாறு தன்னுடைய அணிகலன் களை அணிந்து கொண்டு பொட்டும் பூவுமாகச் சிரித்துக் கொண்டிருப்பதைப் போல், பாவனை செய்து கொண்டிருக் கிறாள். இதைப்பார்த்த அவள் தோழி, 'நீ உன் மனதில் என்னதான்நினைத்துக்கொண்டிருக்கிறாய்?' என்று கேட்கிறாள். அவன் திரும்பிவந்தால் அவனிடம் முன்போல் முகம் காட்டாமல் அவனெதிரில் உயிரை விடப் போகிறேன் என்று தலைவி சொல்கிறாள். அதைக்கேட்ட தோழி 'மலையை ஒத்த யானையைப் போல் இருக்கிறவனை, உன்னைப் போன்ற பெண் எதிர்க்க முடியுமோ' என்று கூறி இவளது எண்ணத்தை மாற்ற வேண்டுமென்று உறுதி பூண்டாள் ஆயினும் தலைவியை இப்படித் தவிக்க விடுபவன் மேல் அவளுக்குக் கோபம் அதிகமாயிருந்தது. 'அன்பே இல்லாத பிரபுக்களிடம் காதல் கொள்வதனால் ஒரு பயனும் இல்லை' என்கிறாள் தோழி. அவன் என்னிடம் படும்பாட்டை நீ பார்க்கத் தானே போகிறாய் என்று தலைவி சொல்லவும், எங்கே தலைவி உயிரை மாய்த்துக்கொள்வாளோ என்று அஞ்சி 'இது அவனுடைய வழக்கம். அதனால் நீ வருத்தப்படாதே' என்று சொல்லவும், அதற்குத் தலைவி அவனுடைய அன்பெல்லாம் வெறும் நாடகந்தான். அதனால் நான் உயிர் விடாமல் இருக்கமுடியாது என்கிறாள்.

விளக்கவுரை:

தென்னிலங்கைஅரண்சிதறி:இலங்கை,பெருங்கடலையே அகழியாகக் கொண்டது. உயர்ந்த மதில்களைக் கொண்டது. அனுமன் இந்த மதிலைக் கண்டகாட்சியை கம்பர்

ஆழி அகழ் ஆக அருகா அமரர் வாழும்
ஏழ் உலகின் மேலை வெளிகாறும் முகடு ஏறி
கேழ் அரிய பொன் கொடு சமைத்த கிளர்வெள்ளத்து
ஊழி திரி நாளும் உலையா மதிலை உற்றான்.

(க.ரா. சுந்தரகாண்டம், ஊர்தேடுபடலம் 62)

இலங்கை நகரம் தேவதச்சனான மயனால் நிர்மாணிக்கப் பட்ட நகர். அந்த நகருக்குப் பெருங்கடல் தான் அகழி. அந்த மதிள் தீங்கு செய்கின்ற தேவர்கள் அங்கு வராவண்ணம், அவர்தம் ஊரிலிருந்து வெளிவரும் வாயிலை அடைத்து, அதையும் கடந்து உயர்ந்த பெரிய மதில், பசும் பொன்னால் கட்டப்பட்டு ஒளியைப் பரப்புகின்ற மதிலை அனுமன் கண்டான். பார்த்த உடன் இந்த நகரில் நான் புகலாம், என் தந்தை வாயுதேவன் நுழையலாம், கருடன் புகலாம். மென்மை மிக்க அரசகுமாரர்களாகிய இராம இலக்குவர்கள் எப்படி புகுவார்கள் என்று அனுமன் கவலை கொண்டான். அப்படிப்பட்ட மதிள் சிதறி துள் தூளாகும்படி உடைத்து

அவுணன் மாளச் சென்று: அந்நகருக்கு அரசனாக இருந்த அரக்கன் இராவணன் அழியும்படி சென்று.

சதுரமாமதிள் இலங்கைக் கிறைவன் தலைபத்து உதிர ஓட்டி ஓர் வெங்கணை யுய்த்தவன் ஓதவண்ணன் (அமலனாதி பிரான்-4)

உலகம் மூன்றினையும் திரிந்து: வாமனாவதாரத்தில் ஓர் அடியினால் பூமியை அளந்து, மற்ற திருவடியினால் மற்றெல்லா உலகங்களையும் தன்னிரு கால்களுக்கிடையில் அகப்படுத்தி, அப்படிச் செய்கின்ற போது வேண்டியவர் வேண்டாதவர் என்றில்லாமல்,எல்லாருடைய தலையிலும்,

தன் திருவடிகளை வைத்து, அவர்களை ஆட்கொண்ட பெருமான்

ஓர் தேரால் மன்னிலங்கு பாரதத்தை மாள ஊர்ந்த: துரியோதனன் கண்ணனை தனக்கும் பாண்டவர்க்கும் இடையில் நடக்க இருக்கும் மகாபாரதப் போரில் எந்த ஒரு

போர்க்கருவியையும் எடுக்கக்கூடாது என்று கேட்ட வாக்கிற்கு இணங்க கண்ணன் நேரடியாகப் போர் செய்ய வில்லையே ஒழிய பார்த்தனுக்கு தேரோட்டியாய் இருந்து குதிரைகளின் கால்களிலும் தேர் சக்கரத்தின் கீழும் சிக்கி கௌரவ சேனையின் பெரும்பகுதி மாளும்படி செய்தான்.

கொல்லா மாக்கோல் கொலை செய்து பாரதப்போர் எல்லாச் சேனையும் இருநிலத்து அவித்த எந்தாய் (திருவாய் 8-2-3) என்று நம்மாழ்வாரும் இதையே பாடினார். தேர்க்கு திரையை நடத்தும் ஒரு கோலால் குதிரைகளை இங்கு மங்கும் ஓட்டி எதிரிகளை மடியச் செய்தான்.

மன்னிலங்கு பாரதத்தை: பீஷ்மர், துரோணர், கிருபர் கர்ணன் போன்ற மாபெரும் வீரர்கள் முன்னின்று நடத்திய பாரதப் போரில்

மாள ஊர்ந்த: இறந்தவர்கள் பிணமும் கண்ணால் பார்க்க முடியாத படி தேரைச் செலுத்திய

வரையுருவின் மாகளிற்றை: மலை போல பலத்தையும் செருக்கையும் யானை போலே இருப்பவனைத் தன்னுடைய அடியவர்கட்கு எதிரிகள் தம் எதிரிகள் என்று அவர்கள் அழிவதில் மகிழ்ந்தவன் அந்த மகிழ்ச்சியினாலே வந்த செருக்கையும் கொண்டவன்.

தோழீ :என்னுடைய அருமைத் தோழியே! என்னிடத்தில் அவன் படும் பாட்டை நீ இப்போது பார்க்கப்போகிறாய் என்று

எந்தன் பொன்னிலங்கு முலைக்கு வட்டில் பூட்டிக் கொண்டு: எந்தன் பொன்னிலங்கு முலை மற்ற பெண்களின் மார்பகங்கள் போன்றவை அல்லவே! எனது மார்பகங்கள்.

கடாஅக் களிற்றின்மேல் கட்படாம் மாதர்
படாஅ முலைமேல் துகில் (திருக்குறள் 109-7)

இவளுடைய முலைமேல் இட்ட ஆடை மதயானையின் மேலிடப்பட்ட முகபடாம் போன்றது என்ற அளவில் மதயானை போல் தான் அணிந்திருக்கும் துணிகளையும் மீறி வெளிவந்து காண்பவர்களை கள் வெறிக்கொள்ள வைக்கக் கூடியவை அல்லவா அவை. பொன்னிலங்கு முலை-அவனுடைய ஆண்மையைப் போல் அல்லாமல் அவனைப் பிரிந்ததால் நிறம் வெளுக்கின்ற பொன்னிற முலைகளல்லவா அவை. ஆனால் அவனுடைய மின்னிலங்கு திருவுரு (திரு.நெடு25) அவளோடு சேர்ந்திருக்குழ் போதும் பிரிந்திருக்கும் போதும் ஒன்றே போல் ஒளிவிடும் அவனுடைய திருமேனி போலல்லவே என் திருமேனி? அதனால் அவன் எனக்கு ஒப்பாகமாட்டான்.

முலைக்கு வட்டில் பூட்டிக்கொண்டு : என்னுடைய முலையாகிய தூணிலே கட்டிக்கொண்டு அதாவது என் பிரிவாற்றாமையை அவன் முன்பே வெளிப்படுத்தி

போகாமைவல்லேனாய்: நான் அவனுக்கு முகங் காட்டாமையால் அவன் என்னைவிட்டு விலகும்போது என்

பிரிவாற்றாமை முழுவதையும் வெளிப்படுத்தக் கடவேன். அவன்

வரையுருவின் மாகளிறு : மலை போன்ற ஒரு பெரிய யானையான அவனை என்னுடைய முலைகளாகிய மலைகளால் சேர்த்துக் கட்டப்பார்ப்பேன். (போகாமை வல்லேனாய்) செய்ய முடிந்தால் அவனை என்னைவிட்டு அப்பால் போக வொண்ணாமல் தடுக்க வல்லவளாகி, அப்படி வல்லமை எனக்கு ஏற்பட்டுவிட்டால் நான் இத்தனையும் செய்து விடுவேன் என்கிறாள். அவன் வந்து முகங் காட்டி னால் என் நெஞ்சு அவன் மேல் விழுந்துவிடும் அப்படிச் செய்யாமலிருந்தால் நீ நான் செய்வதைத் தடுக்காமல் துணைபுரிய வேண்டும் என்று தன்னுடைய நெருங்கிய தோழியாதலால் அவளிடம் இப்படி வேண்டுதல் செய்கிறாள்.

புலவி எய்தி: அவனைப்பிரிந்து படும் வேதனை எல்லாம் அவன் கண்முன்னே, படப்போகிறேன் அல்லது அவனைப் பிரிந்து நான் படும் பாட்டையெல்லாம் என்னை அடைய முடியாமல் அவன் படும்படி செய்யக் கடவேன் என்றும் கொள்ளலாம்.

என்னில் அங்கமெல்லாம் வந்து இன்பமெய்த: மேலெழுந்த வாரியாகப் பார்க்கும் போது இது இன்பமடை வதைப் பற்றிச் சொல்வதே யானாலும், உயிர் விடுவதைவிட எனக்கு இன்பமளிப்பது வேறு இல்லாமையால் நான் அவன் முன்னே என் உயிரை விடக்கடவேன். இன்னொரு பிரிவுக்கு இடம் கொடுக்காமல் மகிழ்ச்சியுடன் அவன் கண்முன்னே உயிர்விடக் கடவேன் என்னில் அங்கமெல்லாம் நாங்கள் கூடியிருந்த போது அவன் ‘உன்னுடைய கண்கள் எவ்வளவு அழகு. உன் முறுவல் எத்தனை அழகு இரு முலைகளும்

எவ்வளவு மேன்மையானவை' என்று அவன் கொண்டாடிய போது அவனால் விரும்பப் பட்ட எல்லா அவயவங்களும்

இன்பம் எய்த: பேரின்ப மடையும்படி, பஞ்சக் காலத்தில் பெரிய குடும்பத்தை உடையவன் குடும்பத்தில் உள்ளவர்கள் பசியையும் தன் பசியையும் பொறுக்க முடியாதவன் குடும்பத்தோடு மடிவதைப் போல், என் அவயவங்களோடு முடிந்து இன்புறக் கடவேன்.

இன்பம் எய்த: உயிர்விடப்போகிறேன் என்பதை இன்பம் எய்த என்று சொல்கிறாள். ஏனெனில் பிரிவாற்றாமை உச்சகட்டத்தில் இருக்கும் இவள் தான் முடிவதே பரமபதம் போல் பேரின்பமாக இருக்கும் என்று கருதுகிறாள்.

எப்பொழுதும்: எல்லா நிலையிலும் அவன் நேரில் வந்தாலும் என் முடிவு மாறாது. அவன் தான் உடையவன் நான் உடைமை என்றும் உறவைக் காட்டினாலும் மற்ற ஒரு பிரிவுக்கு இடம் கொடுக்காமல் உறுதியாக

நினைந்துருகியிருப்பன்: அவன் அருகில் வந்து முன்பு போல பசுப்பு வார்த்தைகள் சொல்வதற்கு இடம் கொடுக் காமல், அவனை நினைத்தவுடன் அழிந்து விடுவேன். திரு இந்தளூரில் மட்டையடி உத்சவத்தில் கதவை சாத்தி மஞ்சள் நீரையிட்டு தென்னை மட்டையால் அடித்து பரிமள ரெங்க நாதனை வராமல் பரிமள ரெங்கநாயகி செய்யவும், பெரு மாள் பல சமாதானங்கள் சொல்லிக் கதவை திறக்கும் வரை வெளியே நிற்பார். அப்படிப்பட்ட ஊடல்களுக்கு இடமே வைக்காமல் அவனை நினைத்த உடன் உயிரை விட்டுவிடுவேன்.

நாணே- இத்தனை மென்மையோடு கூடியிருப்பது எனக்கே உரியது என்கிறாள்.

பாசுரம்-29

அன்றாயர் குலமகளுக்கு அரையன் தன்னை
அலைகடலைக் கடைந்தடைத்த அம்மான் தன்னை
குன்றாத வலி அரக்கர் கோனை மாளக்
கொடுஞ் சிலைவாய்ச் சரந்துரந்து குலங்களைந்து
வென்றானை குன்றெடுத்த தோளினானை
விரிதிரைநீர் விண்ணகரம் மருவி நாளும்
நின்றானை தண்குடந்தைக் கிடந்த மாலை
நெடியானை அடிநாயேன் நினைந்திட்டேனே.

பதவுரை:

அன்று: *முன்பு ஒரு காலத்தில்*

ஆயர் குலமகளுக்கு: *இடையர் குலத்துச்சிறந்த மகளாகப் பிறந்த நப்பின்னைபிராட்டிக்கு*

அன்ரயன் தன்னை: *நாயகரானவரும்*

அலைகடலைக் கடைந்து: *அலை எறிகின்ற பாற்கடலைக் கடைந்தவரும்*

அடைத்த அம்மான் தன்னை: *கடலை அடைத்து இலங்கைக்குப் பாலம் கட்டிய சுவாமியானவரும்*

குன்றாத வலி அரக்கர் கோனை: *குறைவில்லாத வலிமையை உடைய அரக்கர்களின் தலைவனான இராவணன்.*

மாளக் கொடுஞ்சிலைவாய்ச் சரந்துரந்து: இறக்கும்படி கொடிய வில்லிலே அம்புகளைத் தொடுத்து எய்து

குலங்களைந்து வென்றானை: அவனது அரக்கர் குலம் முழுவதும் அழியும்படி தொலைத்து வெற்றிக்கொடி நாட்டிய இராமனை,

குன்றெடுத்த தோளினானை: கோவர்த்தன மலையைத் தூக்கிய வலிவுள்ள தோளினை உடைய கண்ணனை, **விரிதிரை நீர் விண்ணகரம் மருவி:** பரந்த அலைகளை உடைய பொய்கைகள் நிரம்பிய திருவிண்ணகரம் என்னும் திவ்யதேசத்தில் பொருந்தி

நாளும் நின்றானை: எப்பொழுதும் வாழ்பவரும்

தண்குடந்தை: குளிர்ந்த திருக்குடந்தையில் (கும்பகோணம் சாரங்கபாணி சந்நிதி)

கிடந்த மாலை: யோக நித்திரை செய்கின்ற விஷ்ணுவை

நெடியானை: அனைவரிலும் உயர்ந்த பெருமானை

நாய் அடியேன்: நாய் போல் தாழ்ந்த அடியவனாகிய நான்.

நினைந்திட்டேன்: நினைத்தேன் தியானம் செய்தேன்.

பொழிப்புரை:

இத்திரு நெடுந்தாண்டகத்தின் முதல் பத்து பாசுரங்களில் ஆழ்வார் தாமான நிலையில் 1) ஜீவாத்மா தன்னுடைய தன்மையையும் (ஸ்வருபம்) 2. பரமாத்மாவின் தன்மையையும் 3) தன்னுடைய தன்மைக்குப் பொருத்தமான புருஷார்த்தம் கைங்கர்யமே என்று நிர்ணயித்து 4) அதைப் பெறுவதற்குத் தடையாய் இருப்பவை உடல் தொடர்பு, வினைப்பயன் என்று உறுதி செய்து 5) இந்தத் தடைகள்

நீங்குவதற்கும், புருஷார்த்தம் கிடைப்பதற்கும் தக்க உபாயம் அந்த எம்பெருமானே என்று அறிந்து அர்த்த பஞ்சகம் என்னும் ஐந்தையும் தெரிவிக்கும் திருமந்திரத்தைப் பற்றிக் கொள்ள வேண்டும் என்று தன் நெஞ்சுக்கு உபதேசித்து மனத்தெளிவோடு பொழுது போக்குகிறார்.

அந்நிலையில் அவருக்கு எம்பெருமானைக் கண்ணால் கண்டு அனுபவிக்க வேண்டும் என்று ஆவல்கொண்டு அவன் முகங்காட்டாமையால் வந்த ஆற்றாமையைத் திருத்தாயார் பாசுரங்களாக இரண்டாவது பத்தில் வெளிப்படுத்தினார். மூன்றாவது பத்து பாசுரங்களில் தோழிக்கும் தலைவிக்கும் நடக்கும் கலந்துரையாடலாக சில பாசுரங்களும் அதற்குப் பிறகு பழைய ஆற்றாமையே மேலிட வண்டுகளையும் நாரைகளையும் தூதனுப்பி அதன் பின்பும் அவன் முகங் காட்டாமையால், நம்மாழ்வாரைப் போல் முனியே, நான் முகனே (திருவாய் 10-10-1) என்ற திருவாய் மொழியில் பெரும் பக்தி இவருக்குப்பிறந்து, தமக்கு வேறு புகலில்லை என்றும், குற்றங்கள் நிறைந்தவனாக இருப்பதால் வேறு கைம் முதல் இல்லாமல் இருப்பவன் என்று சொல்லிக்கொண்டு விபவ அவதாரங்களையும் அர்ச்சாவதாரங்களையும் முன்னிலைப் படுத்திக் கூப்பிடுகிறார்.

விளக்கவுரை

அன்றாயர் குலமகளுக்கு அரையன் தன்னை: அன்றாயர் குலமகளுக்கு என்று தொடங்கி பிராட்டிகளுக்கு அவன் செய்த அருஞ்செயல்களைச் சொல்கிறார். முதலில்

நப்பின்னைப் பிராட்டிக்குச் செய்த உதவிகளைப் பாடுகிறார்.

அன்று -நப்பின்னைக்குத் திருமண வயது வந்த அப்போது இவளுக்கு வரும் கணவன் பலமுள்ள வீரனாக இருக்க வேண்டும் என்று நினைத்த அவன்தந்தை ஏழு எருதுகளை முன்னிருத்தி இவைகளை ஒரே சமயத்தில் அடக்கியவனுக்கே இவளைத் திருமணம் செய்து கொடுப்பேன் என்று சங்கல் பிக்க, கண்ணன் அவற்றை அடக்குவதற்கு முன் நாம் வேறு எவர்க்காது என்று நப்பின்னை பிராட்டி அஞ்சியதைப்போல் பரகால நாயகியும்நடுங்குகிறாள்.

ஆயர்குலமகளுக்கு: நற்குலத்திலேபிறந்த நப்பின்னை பிராட்டிக்கு

அரையன் தன்னை: அவளுடைய திருமணத்திற்கு தடையாக இருந்த ஏழு எருதுகளையும் அடக்கி அவளைப் பெற்றது போல், நாயகிக்குத் தடையாக இருக்கும் தடைகளைப் போக்கி முகங்காட்ட வேண்டும் என்கிறாள்.

அலைகடலைக் கடைந்து அடைத்த அம்மான் தன்னை: இலக்குமி பிராட்டிக்கும் அவளுடைய அவதாரமான சீதா பிராட்டிக்கும் எம்பெருமான் செய்த உதவிகளைச் சொல்கிறார்.

தேவர்களுக்கு அமுதம் பெறுவதற்காக கூர்மாவதார காலத்தில் மந்திர மலையை மத்தாகவும் வாசுகி என்றும் ப்ாம்பைக் கயிறாகவும் கொண்டு தேவர்கள் ஒருபுறமும் அசுரர்கள் ஒருபுறமும் நின்று திருப்பாற்கடலைக் கடைந்த போது, மந்திரமலை நீரில் மூழ்கிவிடாமல் பார்த்துக் கொள் வதற்காக எம்பெருமான், பெரிய ஆமை உருவாகக் கடலுக்கு அடியிற் சென்று மலையைத் தன் முதுகோட்டினால் தாங்கிக்கொண்டு கடையும் போது கடலிலிருந்து பலபொருட்கள் வந்தன. அந்த நேரத்தில் இலக்குமி

பிராட்டியும் கடலிலிருந்து தோன்றி அசுரர்களும் தேவர்களும் பார்த்துக்கொண்டிருக்கும் போதே எம்பெருமானின் மார்பின் வலது பக்கத்தில் ஏறி (அகலகில்லேன் இறையுமென்று (திருவாய் 7-1-10) அமர்ந்து கொண்டான். அவள் சீதையாகப் பிறந்து இராவணனால் அசோகவனத்தில் சிறை வைக்கப்பட்ட போது அவளைச்சிறைமீட்பதற்காக கடலை அடைத்து அணைகட்டி இலங்கை சென்றான். அதையும் ஆழ்வார் அடைத்து என்றார். ''விண்ணவர் அமுதுண அமுதில் வரும் பெண்ணமு துண்ட எம்பெருமான்'' (பெரிய திரு. 6-1-2) என்று இவரே முன்பு அருளிச் செய்தாரன்றோ.

குன்றாத வலி: இராவணனுக்கு வரபலத்தால் ஏற்பட்ட

தோள்வலி ஆகையால் அது நாள்படக்குறையாமல் இருந்தது. அதைக் கம்பர்

உலகங்கள் இரண்டும் ஒன்றும் தன் அருந்தவம் உடைமையின், அளவு இல் ஆற்றலின் பொருந்திய இராவணன் (கம்பரா.-சூர்ப்பணகை சூட்சிப்படலம்-23) அவனுடைய தவத்தினால் பெறப்பெற்ற வலி ஆதலால் குறையாத வலி

அரக்கர் கோனை மாள: பிறரைத் துன்புறுத்தலேத் தொழிலாகக் கொண்ட அரக்க குலத்துக் கெல்லாம் தலைவனாயிருக்கும் இராவணன் அழியும்படியாக

கொடுஞ்சிலைவாய் சரந்துரந்து: 'முக்கோடி வாழ்நாளும் முயன்றுடைய பெருந்தவமும், முதல்வன்முன்நாள் 'எக்கோடி யாராலும் வெலப்படாய்' எனக்கொடுத்த வரமும் ஏனைத் திக்கோடும் உலகு அனைத்தும் செருக்கடந்த

புயவலியும் தின்று மார்பில் புக்கு ஓடி உயிர் பருகி புறம்போயிற்று இராகவன் தன் புனித வாளி' (கம்ப.ரா. யு.கா இராவணன் வதைப்படலம் 196) என்று கம்பர் அருளிச்செய்தது போல் அவன் பெற்ற தவ வலியும் புயவலியும் அழியும்படி இராகவனுடைய கோதண்டம் என்னும் வில்லிலிருந்து புறப்பட்ட அம்புகள் இராவணன் உயிரைப் பருகி, முதுகின் வழியாக வெளியே வந்தது.

குலங்களைந்து வென்றானை: இராவணனுடைய குலம் அத்தனையும் வீடணனைத் தவிர, அனைத்து அரக்கர்களும், கும்பகருணன் இந்திரசித்து, அட்சய குமாரன் ஆகிய நெருங்கிய உறவினர்களுடைய உயிர்களும், இந்த இலங்கைப் போரில்போயின. ஆனால் வீடணனைப் பார்த்து 'எம்முழை அன்பின் வந்த அகன் அமர் காதல் ஐய நின்னொடும் எழுவர் ஆனேம்,புகல் அருங் கானம் தந்து புதல்வரால் பொலிந்தான் நுந்தை' (கம்ப. இராமா யு.கா வீடணன் அடைக்கலப் படலம். 143) என்று இராமன் வீடணனைத் தன் தம்பியாக ஏற்றுக்கொள்வது மட்டுமின்றி தயரதனை 'நுந்தை' (உன் தந்தை) என்று அவனை நோக்கிக் கூறுவதாலே வீடணனை இராவணன் குலத்தில் சேர்க்காமல், மற்ற அனைத்து அரக்கர்களும் போரில் மடிந்தார்கள்.

குன்றெடுத்த தோளினானை: கோவர்த்தன மலையைத் தன்தோள்வலியாலே குடையாகப் பிடித்து ஐந்து இலட்சம் ஆயர்குடிப் பெண்கள் அனைவர்க்கும் தன்னை யொழிய உயிர் தரிக்கமுடியாதபடி ஆற்றாமையை விளைத்து அவர்களை அனுபவிக்கச் செய்தவனை, 'தன்னையும் அப்படியே அனுபவிக்கச் செய்யவேண்டாமோ' என்று ஆழ்வாரின் ஏக்கம் வெளிப்படுகிறது.

விரிதிரை நீர் விண்ணகரம் மருவி நாளும் நின்றானை: இதுவரை விபவ அவதாரங்களை மங்களாசாசனம் செய்த ஆழ்வார், மறுபடியும் தனக்குப் பிடித்தமான அர்ச்சாவ தாரங்களை மங்களாசாசனம் செய்கிறார். எம்பெரு மானுடைய மென்மைக்குப் பொருத்தமான நீர் நிறைந்து குளிர்ந்திருக்கும் திவ்யதேசமான திருவிண்ணகரில் அர்ச்சாவதார ரூபியாக அடியார்களிடத்தில் பேரன்பால் வந்து பொருந்தி நாளும் நின்றானை, ஊழிக்காலம் வரை நிற்பவனை.

தண்குடந்தைக் கிடந்த மாலை: காவிரி நீர் பாய்வதால் குளிர்ந்த வயல்களையுடைய திருக்குடந்தையில் (கிடந்த மாலை) பள்ளிக்கொண்டிருக்கும் சார்ங்க பாணியை

நெடியானை; அளவிட்டு பேசமுடியாத இவன் அடியார்க்குத் தன்னைக் கொடுத்துக் கொண்டிருக்கும், ஆனால் எனக்கு எட்டாத பழமாக இருப்பவனும் ஆன திருமாலை.

அடிநாயேன் நினைந்திட்டேனே: அவனுடைய பெருமைக்கு எல்லையில்லாதிருப்பதைப் போல என்னுடைய சிறுமைக்கும் ஒரு அளவில்லாதபடி, திறந்து கிடக்கும் வாசலிலெல்லாம் நுழைந்து வெளிவருவதையும், அடிபட்டு துரத்தப்படுவதையும் போன்ற சிறுமைகளைக் கொண்ட நாயைப் போன்றவன், அடிநாயேன், என்னை நீ உடையவனாதலால் அருள் செய்தால் உய்யவும், நீ முகம் பாராவிட்டால் அழிதலும் என்று வேறுகதி ஏதும் இல்லாதவன் என்று தன்னைக் கைம் முதல் இல்லாதவன் என்றும், ''பாவமே செய்து பாவியானேன்' (பெரியதிரு) என்றும், தன்னுடையக் குற்றங்களை விண்ணப்பிப்பதுமே இவ்வாழ்வாருக்குத் தனிசிறப்பு. 'நாயேன் வந்தடைந்தேன்.' (பெரிய திரு.1-9-1) அந்த வழியிலே இங்கும் அடி நாயேன்

என்றார்.நமக்குள்ள தாழ்வுகளெல்லாம் நீங்கி அவனை அடையப்போகும் இத்தருணத்திலும் இவர் இப்படிச் சொன்னதற்குப்பொருள் என்ன வென்றால் நமக்கு உண்டான நன்மைகள் அனைத்தும் தன்னை அனுபவிப் பதற்கு உறுப்பாக எம்பெருமானால் உண்டாக்கப்பட்டவை என்று இவர் நினைத்திருப்பதுவே ஆகும்.

'சேமமே வேண்டித் தீவினை பெருக்கித் தெரிவைமார் உருவமே மருவி' *(பெரிய திரு 1-1-3)* என்று இவர் முன்னமே அருளியபடி எம்பெருமான் அருள் கிடைக்கும் முன்பு சிறுமைகள்அனைத்தையும் கொண்டவராகையால், இறுதியிலும் இவர் 'அடிநாயேன் நினைந்திட்டேன்' என்று சொல்லும்படியாயிற்று.

தன்னைத் திருமணங்கொல்லையில் கைம் முதல் ஒன்றும் இல்லாதபோது ஆட்கொண்ட எம்பெருமானின் அருள் என் ஆன்மா உள்ளவரை மறக்க முடியாத ஒன்று என்றதனால் நினைந்திட்டேனே என்றார்.

பாசுரம்-30

மின்னுமா மழைதவழும் மேக வண்ணா
விண்ணவர்தம் பெருமானே அருளாயென்று
அன்னமாய் முனிவரோ டமரர் ஏத்த
அருமறையை வெளிப்படுத்த அம்மான் தன்னை
மன்னுமா மணிமாட மங்கைவேந்தன்
மானவேற் பரகாலன் கலியன் சென்ன
பன்னிய நூல் தமிழ்மாலை வல்லார் தொல்லைப்
பழவினையை முதலரிய வல்லார் தாமே!

பதஉரை:

முனிவரோடு அமரர் ஏத்த: முனிவர்களும் தேவர்களும் துதிபாட

அன்னமாய்: ஓர் அன்னப் பறவையின் வடிவத்தில் அவதாரம் செய்து

அருமறையை: பெருவதற்கரிய நான்மறைகளை

வெளிப்படுத்த: வெளிக்குக் கொணர்ந்த

அம்மான் தன்னை: எம்பெருமானை

மன்னுமா மணிமாடமங்கை வேந்தன்: நிலையான சிறந்த மணிமாடங்களையுடைய திருமங்கை நாட்டுக்குத் தலைவராகிய

மானம்வேல்: பெருமை உடைய வேற்படையை உடையவரும்

பரகாலன்: எதிரிகளுக்கு எமன் போன்ற வரும்

கலியன்: திருமங்கை ஆழ்வார்

மின்னுமா மழை தவழும் மேகவண்ணா: மின்னலோடு கூடி, மிகவும் குளிர்ந்து தவழ்ந்து வருகின்ற மேகம் போன்ற வடிவை உடையவனே!

விண்ணவர்தம் பெருமானே: நித்ய சூரிகளுக்குத் தலைவனே

அருளாய்: அருள்புரியக் கடவீராக

என்று சொன்ன: என்றுவேண்டி அருளிச்செய்த

தமிழ் மாலை: தமிழ் மறையாக இருக்கும் இச்சாத்திரத்தை

வல்லார்தாம்: ஓதவல்லவர்கள்

தொல்லை: மிகத் தொன்மையாகிய

பழவினையை: முன்னை வினைகளை

முதல்: வாசனையோடு

அரிய வல்லார்: போக்கிக் கொள்ள வல்லவராவர்.

பொழிப்புரை:

இந்தப் பிரபந்தத்தை மின்னுருவாய் என்று முதல் பாசுரத்தில் தொடங்கிய ஆழ்வார் கடைசிப் பாசுரத்தில் மின்னுமா மழை தவழும் மேகவண்ணா என்று தனக்கு அவன் கிடைத்ததைப் பாடுகிறார். இந்தப் பாசுரத் திலும் ஒரு விபவ அவதாரத்தைப் பற்றிப்பேசி இந்த

பிரபந்ததைத் தெரிந்தவர்கள் பூவுலகில் தங்களுக்கு உண்டாகும் எல்லாத் துன்பங்களையும் தாங்களே போக்கிக் கொள்ளும் வல்லமை பெறுவார்கள் என்கிறார்.

விளக்கவுரை:

மின்னுமா மழைதவழும் மேகவண்ணா!: மின்னலுடனும் நீருடன் கூடிய மழைபொழியும் காளமேகம் போல் இருக்கும் வடிவுடையவனே. மேகவண்ணா என்று தன் கண்முன்னே காட்சி கொடுக்கின்ற எம்பெருமானைப் பாடுவதால் சென்ற பாசுரத்தில் *(29)* அடி நாயேன் நினைந்திட்டேனே என்று வாட்டத்தோடு விண்ணப்பம் செய்தவருக்கு காளமேக சியாமள வண்ணனாகக் காட்சித் தந்தவுடன், மேகவண்ணா! என்று அவன் முகங்காட்டியமையைக் கூறுகிறார். 28வது, பாசுரத்தில் அன்பினால் விளையும் கோபத்துடன் 'எப்பொழுதும் நினைந்திருப்பன்' என்று பாடியபோது முகங் காட்டாத எம்பெருமான் அடிநாயேன் நினைத்திட்டேனே *(29)* என்று ஆழ்வார் தன்னுடைய தாழ்மையை முன்வைத்துப் பாடியவுடன் மேகவண்ணனாய் அவனுக்குக் காட்சி கொடுத்ததைச் சொல்கிறார்.

விண்ணவர்தம் பெருமானே: நித்யசூரிகளுக்குத் தலைவனாக இருப்பவனே என்று நம்மாழ்வார் 'அயர்வறும் அமரார்கள் அதிபதி' (திருவாய் *1-1-1*) எக்குறையுமில்லாத அவர்களுக்குக் காட்சி தருவது கடலில் மழை பெய்வதைப் போன்றது. ஆனால், என்னைப் போன்ற வாடிய பயிர்களிருக்கு மிடத்தில் மழை பெய்வதைப் போல் எனக்கு அருள் செய்து என்னுடைய இயற்கை வடிவைப் போக்கி, உன்னை எப்பொழுதும் பார்த்துக்கொண்டிருக்கும் படியான நிலையை எனக்கு அருள் செய்யவேண்டும் என்று

அருளாய்: என்பக்தியின் தலைநிலையிலே நின்று உன்னை வேறு எந்த சாதனுமுமின்றி அவனுடைய இரக்கமே அவனை அடைய சாதனம் என்று உன்னையே சாதனமாக, ''முன்பிருந்தே பாழியான் ஆழியான அருளே நன்று நானுய்ய'' (பெரியதிருமொழி 1-1-4)ல் அனுபவத்திற்கும். அந்தக் கருணைதான் காரணம் என்று சொல்வதாகக் கொள்ளவேண்டும்.

அன்னமாய் முனிவரோடு அருமறையை வெளிப் படுத்த அம்மான் தன்னை: என்று முதல்முதலில் அன்னப் பறவை வடிவில் வந்து பிரமனுக்கு பரம பிரமாணங்களாகிய வேதங்களை வெளியிட்டவனைத் தமக்கு அந்த வேதத்தால் அறியப்படும் தன்னை வெளியிட்டான் என்கிறார்.

முனிவரோடு அமரர் ஏத்த- இருடிகளும் பிரமன் முதலான தேவர்களும் 'எங்களுடைய கண்களைப் போன்ற வேதத்தை இழந்து விட்டோமே' என்று அவனை அடைந்து அவனிடம் வேண்டவும்

அன்னமாய்: தன் உருவில் வந்து சொன்னால் வேதம் எந்தப் புருஷனாலும் செய்யப்படாமல் 'தான்தோன்றி' என்ற பெருமை வேதங்களுக்குக் குறையாதபடி, ஒரு பறவை உருவத்தில் அவர்களுக்கு வேதத்தை வெளிப்படுத்தியது போல,

அருமறையை: எனக்கு எம்பெருமான் பெறுதற்கரியவனாக இருந்ததைப்போல் வேதம் தேவர்களுக்கும் பெறுதற்கரிய தாய் இருந்தது.

வெளிப்படுத்த: வேதம் தான் தோன்றி என்னும்படி அதை அவர்களுக்கு வெளிப்படுத்திய

அம்மான் தன்னை: அவர்களுக்கு அவன் வேதத்தை வெளிப்படுத்திய காரணம் அவன் இவர்களை உடையவன் என்று பொருள்.

மன்னுமா மணிமாட மங்கை வேந்தன்- நிலைத்து நிற்கின்ற சிறந்த மணிமாடங்களையுடைய திருமங்கை நாட்டுக்கு அரசர், முன்பாசுரத்தில் அடி நாயேன் என்று தன்னை அழைத்துக்கொண்டவர், இப்பொழுது எம்பெரு மானுடைய அருளைப் பெற்று உயிர் தரித்தவுடன் இவருடைய திருமங்கை நாடு சிறந்த மணிகளால் அலங்கரிக்கப்பட்ட மாடமாளிகைகள் நிறைந்ததாயிற்று. கண்ணன் குலேசரிடம் இருந்த அவலை ஒரு பிடி சாப்பிட்டவுடன் அவருடைய குடிசையும் மனைவியும் மக்களும் எப்படி மாற்றம் அடைந்தனரோ அதைப்போல எம்பெருமான் தரிசனத்தின் போது அவரது வலமார்பில் அமர்ந்திருக்கின்ற இலக்குமி பிராட்டியின் கடைக்கண் பார்வை ஆழ்வார் மீது பட்டது போலும்! மங்கை வேந்தன் அவனைப் பெறாதபோது நாரையின் காலிலும் வண்டுகளின் கால்களிலும் வீழ்ந்தவர் பெற்றவுடன் திருமங்கை நாட்டுக்கு அரசரானார்.

மானவேல்: பரகாலன் வேலெடுத்து அப்படையின் துணைகொண்டு பாகவத விரோதிகளை அழிக்கின்ற தொண்டையும் செய்ய வல்லவரானார். தான் பெருமாளுக்காக வேலெடுத்தவன் என்ற அபிமானமும் பெரியாழ்வார் செல்வ நம்பியைச் சொன்னது போல 'அபிமான துங்கன்' என்னும்படி

பரகாலன்: கையில் உள்ள வாளினாலும் ப்ரபந்தங்களால் மறைப்பொருட்களை விளக்குகையாலும் எதிரிகளுக்கு எமன் போன்றவர்

கலியன்: மிடுக்குடையவன்; நீ கலியனோ என்று வயலாலி மணவாளனால் அழைக்கப்பட்டாரன்றோ, கலிகாலத்தை அழித்தவர் என்றும் பொருள்பட கலிகன்றி என்றும் பெயரும் உடையவர் அல்லவா.

பன்னியநூல் தமிழ்மாலை வல்லார்: எம்பெரு மானுடைய குணநலன்கள் அனைத்தையும் தன்னுள் கொண்டிருப்பதாய்க் கொண்டிருக்கும் நூல்- ஒரு பிரபந்தத்திற்குரிய எல்லா இலக்கணங்களையும் உடையதாய் இருக்கை, இலக்கியம் கண்டு இலக்கணம் கூறுதல் என்னும் வகையில் பிற்காலத்தில் இலக்கணநூல் எழுதுவாருக்கும் இந்த நூல் வழிகாட்டியாக அமைந்திருக்கை (தமிழ்) வடமொழியைப் போல் சிலர் மட்டும் அறியலாம்படி இல்லாமல் எல்லாராலும் படிக்கக்கூடிய தமிழ் மொழியிலே எழுதப்பட்ட (மாலை) எம்பெருமானுக்கு மாலைபோலே தலையாலே போடும் படியான (வல்லார்) நல்லமுறையிலே இந்தத் திருநெடுந் தாண்டகம் என்னும் சாத்திரத்தை நன்கு கற்றுத் தேர்ந்தவர்கள்,

தொல்லைப் பழ வினையை: புண்ணிய பாபங்களால் பிறவிகள் தோறும் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்ற வினைப்பயன்களை தாங்களே அடியோடு நீக்குவதற்கான வல்லமையைப் பெறுவார்கள்.

'பூர்வாகம்' என்று அழைக்கப்படுகின்ற முன்வினைகளும் 'உத்தராகம்' என்று அழைக்கப்படுகின்ற பின் வினைகளும் அறிவு உண்டாகாமல் இருத்தல் (ஜ்நாநாநுதயம்) பொருளின் தன்மையை வேறுபட அறிதல், (அந்யதாஞாநம்) பொருளையே வேறுபட அறிதல் (வீபரித ஞாநம்) என்றும் அறிவின்மைக்கும் (அஞ்ஞானம்) ஸ்தூல சரீரமாகவும்

ஸூக்ஷ்ம சரீரமாக இருக்கும் ஜடத்தொடர்பிற்கும் இதன் மூலம் வருகின்ற குணங்களுக்கும் இவற்றில் ஏற்படுகின்ற ஈடுபாடுகள் இவையனைத்தும் ஜீவன் பரமாத்மாவை அடைவதற்குத் தடையாயிருப்பவை.

(தொல்லைப்பழவினை-2) என்று மிகவும் பழையதான வினை என்றும் பொருள் கொள்ளலாம், எப்பொழுது தொடங்கியது என்பது தெரியாமலிருக்கும் படியான வினை.

முதலரியவல்லார் தாமே: இந்தத் தடைகளை தாங்களே அடியோடு நீக்க வல்லவர்கள். இந்த பிரபந்தமாகிய திருநெடுந்தாண்டகத்தைக் கற்றதனாலேயே எம்பெரு மானுடைய அருளுக்குப் பாத்திரமாகிறோம் என்பதனாலே தொல்லைப் பழவினையை நீக்க, எம்பெருமானுடைய தனி அருளும் தேவை இல்லை என்றார்.

இந்தப் பாசுரத்தை, முனிவரோடு அமரர் ஏத்த அன்னமாய் அருமறையை வெளிப்படுத்த அம்மான் தன்னை மன்னுமா மணி மாட மங்கைவேந்தன் மானவேற் பரகாலன் கலியன் மின்னுமா மழைதவழும் மேக வண்ணா விண்ணவர்தம் பெருமானே அருளாய் என்று சொன்ன பன்னிய நூல் தமிழ் மாலை வல்லார் தொல்லைப் பழ வினையை முதலரிய வல்லார் தாமே என்று கூட்டிப்பொருள் கொள்வது சாலச்சிறந்தது ஆகும்.

பகுதி - 3

சாத்திரவிளக்க திருநெடுந்தாண்டகச் சான்றுகள்:

அ) முதல் பத்து பாசுரங்கள் ஆழ்வார் தாமான தன்மையில் பாடியது எப்படி விளக்குகிறது என்றால் 'தளிர்புரையும் திருவடி என் தலைமேலவே' (திருநெ-1) 'மலர்புரையும் திருவடியே வணங்கினேனே' (திருநெ-5) 'என்னறிவேன் ஏழையேன்' திருநெடு- 10 ஆகிய பாசுர பதங்கள் முதல் பத்து, பாசுரங்கள் ஆழ்வார் தாமான தன்மையிற் பாடியதற்கு எடுத்துக்காட்டு.

ஆ) இரண்டாவது 10 பாசுரங்கள் திருத்தாயார் கூற்றுபோல் 'என் குடங்கால் இருக்க கில்லாள்' (11) என்றும், (பெற்றேன் வாயச்சொல் இறையும் பேசக்கேளாள்' என்றும் (19) 'பேரோதும் பெண்ணை பெருந்தவத்தள் என்றல்லால் பேசலாமே'' (20) ஆகிய பதங்கள் புலப்படுத்து கின்றன.

இ) மூன்றாவது பத்து பாசுரங்கள் தலைவியின் கூற்றாக தலைவிக்கும் தோழிக்கும் நடக்கும் உரையாடல் வடிவில் அமைந்துள்ளன.

1. *''அவ்வண்ணத்து அவர் நிலமை கண்டுந்தோழீ அவரை நாம் தேவரென்று அஞ்சினோமே''* *(21)*
2. *''இப்பால் கைவளையும் மேகலையும் காணேன். கண்டேன் கனமகரக் குழையிரண்டும் நான்கு தோளும்''* *(22)*

3. *''என்றன் பொன்னிலங்கு முலைக்கு வட்டில் பூட்டிக் கொண்டு என்று பெண்பிள்ளை பாசுரமாக அருளிச் செய்கைப்பட்டுள்ளன.*

IIஅ.முதல் பத்து கீதா வாக்கியமாகிய ''மச்சித்தா மத்கதப் பிராணா போதயந்தகப் பரஸ்பரம். (கீதை 10-9) என்ற வாக்கியத்தில் அ) முதல் சொல்லாகிய என்னிடம் நெஞ்சு செலுத்தியவர்கள் (மச்சித்தா என்பதன் விளக்கம் எவ்வாறென்றால் இமையவர்தம் திருவுருவேறெண்ணும் போது(2) அந்தணனை அந்தணர் மாட்டு அந்திவைத்த மந்திரத்தை மறவாது என்றும் வாழலாம் மடநெஞ்சமே (4)என்று எம்பெருமானைத் தம் நெஞ்சிலே வைத்ததையே ஆழ்வார் அருளிச் செய்கிறார்.

ஆ) அடுத்து இரண்டாம் பத்து (' ங்கதப்பிராணா) என்னிடம் அமைந்த வாழ்வுடையவர்கள் என்பதை 'நெஞ்சுருகிக் கண்பனிப்ப நிற்குஞ் சோரும் (12) ''மாயன் மொய் அகலத்துள் இருப்பாள் அஃது கண்டும் அற்றாள்'' (19) என்று அவனிடமே வாழ்வமைந்தமையைப் பாடுகிறார்.

இ) மூன்றாம் பத்து (போதயந்த:பரஸ்பரம்) தங்களுக்குள் என்னைப் பற்றியே பேசி பொழுதைக் கழிப்பார் என்பதற்கும் 'அவ்வண்ணத்தவர் நிலமை கண்டும் தோழீ' (21) என்றும் வரையுருவின் மாகளிற்றைத் தோழீ (28) என்றும் அவனது குணாதிசயங்களைப் பேசி மகிழ்கிறார்கள்.

III அ) முதல்பத்தால் திருமந்திரத்தின் பொருள் எவ்வாறு சொல்லப்பட்டது 'என்னுருவில் நின்ற எந்தை (1) என்று முதல் பதமான பிரணவத்தின் பொருள் சொல்லப்பட்டது.

தளிர்புரையும் திருவடி என் தலை மேலவே (1) என்றும் மலர் புரையும் திருவடியே வணங்கினேன் (5) என்று

சொல்லுகையாலே உபாயம் எம்பெருமானின் திருவடிகளே என்று (நம:) என்ற சொல்லின் பொருள் சொல்லப்பட்டது.

முன்னுருவில் *(1)* என்றுதொடங்கி 'அனலுருவில் திகழும் சோதி*(1)* என்பது ஈறாக 'நாரயண' என்று சொல்விளக்கம் சொல்லப்பட்டது.

III ஆ) இரண்டாம் பத்தால் இரட்டைமந்திரத்தின் பொருள் எப்படி சொல்லப்பட்டது என்றால்:

1) "வில்லிருத்து மெல்லியள் தோள் தோய்ந்தாய்" *(13)* திருமாலைப்பாடக் கேட்டு *(14)* ஸ்ரீமத் பதத்தின் பொருள் சொல்லப்பட்டது.

2) கன்று மேய்த்து இனிதுகந்த காளாய் *(16)* என்றுதொடங்கி துன்று குழல் கரு நிறத்து என் துணையே" *(16)* என்பது வரை இரண்டாவது பதமான நாராயண சப்தத்தின் பொருள் சொல்லப்பட்டது.

3) அடியிணையும் கமலவண்ணம் *(18)* என்று மூன்றாவது சொல்லான 'சரண' என்பதன் பொருள் சொல்லப்பட்டது.

4) 'இது செய்தார்' என்றும், பேர்பாடி*(19)* என்றும் எம்பெருமானை உபாயம் என்றும் பொருள் சொல்லப் பட்டது.

5) "நீர் வண்ணன் நீர் மலைக்கே போவேன்" *(18)* என்றும் "நீராடப் போனாள்" என்றும் எம்பெருமானை அடைவதில் உள்ள உறுதி (பிரபத்தி) கூறப்பட்டது.

6) பாவை மாயன் மொய் அகலத்துள்ளிருப்பாள் *(19)* என்றும், பித்தர் பனிமலர் மேல் பாவைக்கு *(18)* என்று இரட்டை மந்திரத்தின் ஆறாவது பதமான உத்தரகாண்டத்தில்

ஸ்ரீமதே என்னும் சொல்லின் பொருளும் (இலக்குமியுடன் கூடிய) சொல்லப்பட்டது.

7) பாரையுண்டு (20) என்று தொடங்கி ஏழாவது சொல்லான நாராயண என்பதன் பொருள் சொல்லப்பட்டது.

8) பேர் பாடித் தன் குடந்தை நகரும்பாடி(19) என்று உகப்புக்காகப் பாடுவதைச் சொல்வதாலே. "நம:" என்ற சொல்லின் பொருள் கூறப்பட்டது.

இ) மூன்றாம் பத்தாலே சரணகாதி மந்திரத்தின் (சரமசுலோகத்தின்) பொருள் சொல்லப்பட்டது. எவ்வாறு என்றால்:

1) கைவளையும் மேகலையும் காணேன் என்றும்(22) இருகையில் சங்கிவை நில்லா (24) என்று தன்னுடைய எல்லா அணிகலன்களை விட்டது 'ஸர்வதர்மாந் பரித்யஜ்ய என்னும் உபாயத்தை சொல்லும் சரணாகதி மந்திரத்தின் பகுதியின் பொருள் சொல்லப்பட்டது.

2) 'ஒரு கையில் சங்கு ஒரு கை மற்று ஆழியேந்தி' என்றும் 'கருமுகிலே ஒப்பர்' என்றும் சொல்லுகையால் என் ஒருவனையே (மாம்ஏகம்) என்ற சொல்லின் பதம் சொல்லப்பட்டது.

3) எப்பொழுதும் நினைந்திருப்பன் நானே (28) என்றும் அன்றாயர் குலமகளுக்கு அரையன் தன்னை அடி நாயேன் நினைந்திட்டேன் என்று (29) எம்பெருமானையே தஞ்சமாக உறுதி பூண்டதைச் சொல்வதாலே சரணம் வ்ரஜ: என்னும் பகுதியின் பொருள் சொல்லப் பட்டது.

4) "மின்னுமாமழை தவழும் மேகவண்ணா விண்ணவர் தம் பெருமானே" (30) என்று அடியார்களின் விருப்பத்தை

மழை பொழியும் மேகத்தைப் போல் ''நிறைவேற்றித் தருபவன்'' என்று சொல்லுகையாலே அதற்குத் தேவையான குணங்களாகிய ஞானம் சக்தி முதலியவற்றை கூடிய எம்பெருமானைச் சொல்லும் 'அஹம்' என்ற சொல் விளக்கப்பட்டது.

5) அதே பாசுரத்தில் அருளாய் (30) என்னை அருளாய் சேர்த்துக்கொள்ள வேண்டியிருப்பதாலே 'த்வாம்' (உன்னை) என்ற பதத்தின் பொருள் சொல்லப்பட்டது.

6) அதே பாசுரத்தில் (30) ''தொல்லைப் பழவினையை முதலரிய வல்லார் தாமே'' என்று எல்லாபாபங்களையும் அறுப்பதைச் சொல்லுகையால் 'ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ் யாமி' என்ற பதங்கள் (எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுவிக் கின்றேன். என்றும் பொருள் சொல்லப்பட்டது.

7)'அருளாய்' என்னும் பதத்தாலே தான் வருந்தா மலிருப்பதை உணர்த்துகையால் 'வருந்தாதே' (மாஸுச:) என்னும் பதத்தின் பொருள் சொல்லப்பட்டது.

இவ்வாறாக முதல் பத்துக்களால் திருமந்திரார்த்தமும் இரண்டாவது 10 பாசுரங்களின் மூலம் இரட்டை (த்வயம்) மந்திரத்தின் பொருளும் மூன்றாவது 10 பாசுரங்களாலே சரணாகதி மந்திரமும் (சரமச்லோகம்) விளக்கப்பட்டது. இனி.

IV. அ) முதல் பத்தாலே பக்தியைச் சொன்னது எப்படி எனில் 'இந்திரனுக்கும் பிரமர்க்கும் முதல்வன்' (4) என்னும் பாட்டில் எம்பெருமான் காரணப் பொருள் என்று சொல்லுகையாலே, அப்பாட்டிலேயே 'மந்திரத்தால்மறவா தென்றும் வாழுதியேல்' (4) என்று எம்பெருமானை மறவாமல் நினைக்கின்ற பக்தி சொல்லப்பட்டது.

ஆ) இரண்டாம் பத்தாலே பரபக்தி சொல்லப்பட்டது எப்படி என்றால், 'அணியரங்கம் ஆடுதுமோ தோழி' என்று நாயகனோடு கூடுவதற்கான வழியைத் தோழியிடம் கேட்கவும் 'பொற்றாமரைக் கயம் நீராடப்போனாள்' என்று சிந்தித்த வழியைப் பின்பற்றுவதால் பரபக்தி சொல்லப் பட்டது.

இ) மூன்றாம் பத்தாலே புருஷகாரம் சொன்னது எப்படி என்றால் 'பெருந்தவத்து அருந்தவத்து முனிவர் சூழ' உலகுண்ட பெருவாயர் இங்கே வந்துபுலவி தந்து' (24) என்று எம்பெருமானடியார்களைப் புருஷகாரமாகக் கொண்டு அவனைக் கலந்தமை சொல்லப்பட்டது.

V. அ) முதல் பத்தாலே, திருமந்திரம், ''ஓம் நமோ நாராயணாய'' என்பதில் முதல். பதமான ஓம் எப்படி சொல்லப்பட்டது என்பதைப் பார்ப்போம்.

1) 'என்னுருவில் நின்ற எந்தை' என்று மகாரவாச்யனான எனக்கு அந்தர்யாமியாக அகாரவாக்யானான எம்பெருமான் இருந்ததைச் சொல்லிற்று.

2) 'மூவுருவும் கண்டபோது ஒன்றாம் சோதி' (2) என்று உடையவனைச் சொல்லும் அகாரமும் உடைமையைச் சொல்லும் மகாரமும் உடையவனோடு எப்பொழுதும் அகலகில்லேன் இறையுமென்று (திருவாய்) பிராட்டி அவனுடைய மார்பில் இருப்பதனால் அவனைச் சொன்ன போது அவளைக் குறிக்கின்ற உகாரத்தையும் குறிப்பதால் மூன்றும் சேர்ந்து ப்ரணவமாக ஒரெழுத்தாக இருப்பது சொல்லப்பட்டது.

ஆ) இரண்டாம் பத்தில் திருமந்திரத்தின் இரண்டாம் பதமான 'நம' வின் பொருள் சொல்லப்பட்டது. எவ்வாறு என்றால்

1) 'என் குடங்கால் இருக்ககில்லாள்' (11) என்றும் 'என் சிறகின் கீழ் அடங்காப் பெண்ணைப் பெற்றேன்' (12) என்று என்னுடையவள் என்னும் நிலைபோனதை 'நம' சப்தத்தால் சொல்லப்படும் 'மம' காரம் நீங்கியது சொல்லப்படுகிறது.

இ) மூன்றாம் பதத்தாலே திருமந்திரத்தின் மூன்றாவது பதமான, 'நாராயண' எப்படி விளக்கப்பட்டது எனில், 'மைவண்ணம்' (21) பாட்டிலும் "பெருந்தவத்தர் அருந்தவத்து மூனிவர் சூழ, ஒரு கையில் சங்கு ஒரு கை மற்றாழி யேந்தி" (24) ஆயுதங்கள் ஆபரணங்கள் திருமேனி, மேன்மையாகிற பரத்வம், எளிமையாகிற சௌலப்யம் ஆகிய 'நாராயண' பதத்தின் பொருள்கள் சொல்லப்பட்டன.

VI. இனி பிரணவார்த்தம் விவரிக்கப்பட்டது சொல்லப் படுகிறது.

அ) முதல்பத்து பிரணவத்தின் முதல் எழுத்தான அகாரத்தின் பொருளைச் சொன்னது எப்படி என்றால் 'வற்புடைய' என்னும் ஏழாம் பாட்டில் 'மன்னர்மாள வடிவாய மழுவேந்தி, வேள்முதலா வென்றானூர் என்று பகைகளை நீக்கி 'உலகமாண்டு' என்று உலகத்திற்குத் தேவையான பொருள்களைத் தந்ததைச் சொல்லுவதாலே காப்புத் தொழிலைச் சொல்வதால், கண்ணனாகிய விஷ்ணு எழுத்துக்களின் நான் 'அ'காரமாக இருக்கிறேன் என்றதாலும் அகாரத்தின் பொருள் விளக்கப்பட்டது.

ஆ) இரண்டாம் பத்தில் இரண்டாவது எழுத்தான உகாரம் எப்படி சொல்லப்பட்டது எனின், 'நெஞ்சுருகி' (12) என்கிற

பாட்டிலே 'நெஞ்சுருகிக் கண்பனிப்ப நிற்கும் சோரும், நெடிதுயிர்க்கும் உண்ட றியாள் உறக்கம் பேணாள்'' என்று மற்றவர்க்கு ஆட்படாமல் எம்பெருமானுக்கே ஆள் ஆகியிருப்பதைச் சொல்வதாலே அதைக் கூறும் இரண்டாம் எழுத்தான 'உ' காரத்தின் பொருள் சொல்லப் பட்டது.

இ) மூன்றாம் பத்தால் பிரணவத்தின் மூன்றாம் எழுத்தான மகரத்தின் பொருள் சொன்னது எப்படி எனில் 'அவர் நிலைமைகண்டும்' *(21)* என்றும் 'தேவரென்று அஞ்சினோம்,*(21)* என்றும் 'கண்டேன் கனமகரக் குழையிரண்டும் நான்கு தோளும்' *(22)* என்று தொடங்கி மகாரத்தின் பொருளின் (அறிபவனாயிருக்கை) (ஞாத்ருத்வம்) செயல் புரிபவனாய் இருக்கை. (கர்த்ருத்வம்), அநுபவிப்பவனாய் இருக்கை (போகத்ருத்வம்) முதலானவற்றால் மகாரத்தின் பொருளான ஜீவன் சொல்லப்பட்டான்.

ஆக திருநெடுந்தாண்டகம் என்னும் சாத்திரம்,

(1) மச்சிதா: என்று தொடங்கும் கீதை வாக்கியத்தின் விளக்கமாகவும்.

(2) திருமந்திரம், த்வயம் (இரட்டை) , சரமச்லோகம் ஆகியவற்றின் விளக்கங்களாகவும்

(3) பக்தி, பிரபத்தி, புருஷகாரம் ஆகியவற்றின் விளக்கங்களாகவும்


(4) திருமந்திரத்தில், ஓம், நமோ, நாராயணாய என்ற மூன்று பதங்களின் விளக்கமாகவும்

(5) ப்ரணவத்தின் மூன்று பகுதிகளில் அகார, உகார, மகாரங்களின் விளக்கங்களாகவும்

(6) ஆழ்வார் தாமான தன்மையிலும், திருத்தாயார் பாசுரங்களாகவும், தலைவி பாசுரங்களாகவும் விளக்கப் பட்டதையும் கலிகன்றிதாசர் 21 ஆம் பாட்டிற்கு அருளிச் செய்த முன்னுரை திருநெடுந்தாண்டகத்தின் மந்திரார்த்த விளக்கங்களாக நமக்குத் தரப்பட்டுள்ளன.

கலிகன்றி தாசர் திருவடிகளே சரணம்
பட்டர் திருவடிகளே சரணம்
ஆழ்வார் திருவடிகளே சரணம்.

குறிப்புக்காக:



பேராசிரியர் முனைவர் கலியன் எதிராசன் (க. எத்திராஜுலு), அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் வேதிப் பொறியியல் துறையில் பட்டம் பெற்று, சென்னை ஐ.ஐ.டி.-யில் அதே துறையில் மேற்பட்டப் படிப்பை முடித்து, குஜராத் மாநிலம் வடோதராப் பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டம் பெற்று, அப்பல்கலையில் 26 ஆண்டுகள் துறைத் தலைவர் உட்படப் பல நிலைகளில் பணிபுரிந்தார். அப்போது பரோடாத் தமிழ் மன்றத்தை நிறுவி அதன் தலைவராகவும், பின்பு பரோடாத் தமிழ்ச் சங்கத்தின் தலைவராகவும் பணிபுரிந்தார்.

1997ஆம் ஆண்டு புதுவைப் பொறியியற் கல்லூரியின் முதல்வராகப் பொறுப்பேற்று ஏழு ஆண்டுகள் செவ்வனேப் பணியாற்றிப் பின்பு திருச்சி பாரதிதாசன் பல்கலையில் புலத் தலைவர் மற்றும் இயக்குனராக மூன்று ஆண்டுகள் பணியாற்றி அதன் பின் கடலூர் கிருஷ்ணசாமிப் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் இயக்குனராக ஐந்து ஆண்டுகள் பணியாற்றி 2012-ல் பணி ஓய்வுப் பெற்றார்.

புதுவை ஆரோசிட்டி ரோட்டரி சங்கத்தின் தலைவராகவும், உறுப்பினராகவும் இருந்தார். புதுவைத் திருக்குறள் மன்றத்தின் நிறுவனத் தலைவராகவும், இந்தியப் பொறியாளர் கழகம் புதுவை மாநில மையத் தலைவராகவும் பணியாற்றி வருகிறார்.

இவர் எழுதிய "**திருப்பாவை**" – ஆங்கில மொழியாக்க நூல், பாரதீய வித்யா பவன் பல்கலைக்கழகப் பதிப்பாக 2008-ல் வெளிவந்தது. "**வைணவ இலக்கியம்**" என்ற நூல் வானதி வெளியீடாக 2010-லும், "**மகனுக்கு**" திருவரசு புத்தக வெளியீடாக 2012-லும் வெளிவந்தது. இந்த நூலுடன் "**ENGLISH FOR ENGINEERING STUDENTS – A QUICK LEARNER**" தமிழ் வழி ஆங்கில நூல் வானதி குழுமத்தால் வெளியிடப்படுகிறது.

கங்கை புத்தக நிலையம்